வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

மழைக்கான சாத்தியம் உண்டு.
30°C 28°C

பக்கம் 60 | சுடர்: 28 | கதிர்: 272 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆவணி 9, ஞாயிறு 25.08.2013

## தேர்தல் ஆணையாளரின் பணிப்பை மீறும் அதிகாரிகள்

### தேர்தல் காலத்தில் அரச நிகழ்வுகளில் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஓக. 25
தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தல்களை மீறி பிரதேச செயலாளர்கள் நான்கு பேர் இராணுவம் ஏற்பாடு செய்த மக்களுக்கான வீடு கையளிப்பு நிகழ்வில் கலந்து கொண்ட போதும் அது குறித்து யாழ். மாவட்டத் தேர்தல்கள் திணைக்களம் எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.
இராணுவத்தினரின் பயன்பாட்டிலிருந்த பொது மக்களின் வீடுகளை அவர்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சுன்னாகத்தில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வை இராணுவத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர். ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவும் அதில் பங்கு பற்றியிருந்தார். குறித்த நிகழ்வில் உடுவில் பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன், சங்கா

தொடர்ச்சி: பக்கம் 25

## எங்களின் வீடுகள், காணிகள் விடுவிக்கப்படுவது எப்போது?

### இடம்பெயர்ந்துள்ள வலி.வடக்கு மக்கள் கேள்வி

யாழ்ப்பாணம், ஓக. 25
'எங்கள் வீடுகள் எப்போது விடுவிக்கப்படும்' என்று வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் ஏக்கத்துடன் கேள்வி எழுப்பியுள்ளனர்.
இராணுவத்தினர் தாம் தங்கியிருந்த வீடுகளை வீட்டு உரிமையாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வுகள் கடந்த சில நாள்களாகத் தடல்புடலாக இடம்பெற்று வருகின்றன.
வடமாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டதில் இருந்து, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டதையடுத்தும் இந்த வீடுகள் கையளிக்கும் நிகழ்வுகள் வேகமாக இடம்பெறுகின்றன.
இவ்வாறு நகரப் பகுதியிலுள்ள இராணுவ முகாம்களைவிட்டு வெளியேறும் படையினர், வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தினுள் அமைக்கப்பட்டுவரும் நிரந்தர இராணுவ முகாம்களில் குடியேறி வருகின்றனர்.
இவ்வாறானதொரு நிலையில், வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து 23 வருடங்களாக நலன்புரி நிலையங்களில் தங்கி யுள்ள மக்கள், தங்கள் வீடுக ளைப் படையினர் எப்போது விடுவிப்பர் என்று கேள்வி எழுப்பியுள்ளனர்.
எதுவித அடிப்படை வசதிகளும் உரிய வகையில் கிடைக்காமல் 23 வருடங்களாக நலன்புரி நிலையங்களில் தாம்

தொடர்ச்சி: பக்கம் 25

## கூட்டமைப்பின் பரப்புரை இன்று யாழில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 25
வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலாவது மாபெரும் தேர்தல் பிரசாரக் கூட்டமும், வேட்பாளர் அறிமுக நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற வுள்ள

தொடர்ச்சி: பக்கம் 25

# இன்று வருகிறார் நவநீதம்பிள்ளை

## வடக்குக்கும் இரு நாள் பயணம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 25
இலங்கைக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை வருகை தரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வடக்குக்கு இரண்டு நாள் பயணத்தை மேற்கொள்கிறார்.
தனது வடக்குப் பயணத்தின் போது அவர் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்கள், யாழ்ப்பாணத்தின் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் ஆகியோரைச் சந்திக்கவுள்ளார்.
இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம், சமகால அரசியல் நிலைமைகள், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் முன்னேற்றம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து தனது பயணத்தின் போது விரிவாக ஆராயவுள்ள மனித உரிமைகள் ஆணையாளர், அதுதொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அறிக்கை ஒன்றையும் சமர்ப்பிக்கவுள்ளார்.
இதற்காக இலங்கைக்கு இன்று மாலை வருகை தரும் அவர் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை 6 நாள்கள் இங்கு தங்கியிருப்பார்.



இலங்கை வரும் அவர் இன்று எந்தவொரு உத்தியோகபூர்வ சந்திப்புக்களிலும் ஈடுபடமாட்டார்.
நாளை திங்கள்கிழமை அவர் மூன்று சந்திப்புகளில் ஈடுபடவுள்ளார். முதலில் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸையும் அதன் பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீமையும் தொடர்ந்து இடதுசாரி அமைச்சரான வாசுதேவ நாணயக்காரவையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.
நாளை மாலையே கொழும்பிலிருந்து விசேட விமானம் மூலம் பலாலிக்கு வருகை தரும் நவநீதம்பிள்ளை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வரை யாழ். மாவட்டத்தில் தங்கியிருப்பார்.
யாழ். மாவட்டத்தில் அவர் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி, யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோரைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

தொடர்ச்சி: பக்கம் 25

## வாக்காளர் அட்டைகள் செவ்வாயன்று கையளிப்பு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 25
வடமாகாண சபைத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தேர்தல்கள் திணைக்களத்தினால் தபால் திணைக்களத்திடம் கையளிக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.
வடமாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதற்குரிய ஏற்பாடுகள் தேர்தல்கள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
இந்த வகையில் வாக்காளர்களுக்கான வாக்காளர் அட்டைகள் மக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன. இதற்காகத் தேர் தல்கள் திணைக் களத்தினால், தபால் திணைக் களத்திடம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வாக்காளர் அட்டைகள் கையளிக்கப்படவுள்ளன. (த-5)

ஐந்தாம்தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்கு இன்று தோற்றும் மாணவச் செல்வங்கள், சிறந்த பெறுபேறுகள் பெற்று கல்வியில் உயர்ந்திட வாழ்த்துகின்றான் உதயன்.

## முல்லைத்தீவு வெடி விபத்தில் சிப்பாய் சாவு

யாழ்ப்பாணம், ஓக. 25
முல்லைத்தீவில் இராணுவப் பயிற்சி முகாம் ஒன்றில் இடம்பெற்ற வெடி விபத்தில் சிப்பாய் ஒருவர் உயிரிழந் துள்ளார். மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
வெடி பொருள்களை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பான செயல்முறைப் பயிற்சியைக் குறித்த சிப்பாய் பெற்றுக்கொண்டிருந்த போதே நேற்று முன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த இரண்டு சிப்பாய்க ளில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றவர் சிகிச்சை பெறுகிறார். (த-5)

## தமிழ் பேசும் அதிகாரிகளே வடக்கு தேர்தல் கடமையில்

### சுரேஷ் எம்.பிக்கு பிரதித் தேர்தல் ஆணையாளர் பதில்

யாழ்ப்பாணம், ஓக. 25
தமிழ் பேசத் தெரியாத சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் (SPO) ஒருபோதும் தமிழ்ப் பிரதேசங்களில் நியமிக்கப்பட மாட்டார்கள் என்று தெரிவித்துள்ள வடமாகாணப் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் அச்சுதன், தலைமை தாங்கும் அலுவலர்கள் நியமனம் தொடர்பான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கருத்தைத் தேர்தல்கள் திணைக்களத்துக்கு அனுப்பியுள்ளதாகவும் கூறினார்.
'எத்தனையோ தமிழ் அதிகாரிகள் இருக்கக்கூடியதாக வடமாகாண சபைத் தேர்தலில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக அம்பாறை மாவட்ட சிங்கள, முஸ்லிம் அதிகாரிகளைத் தேர்தல் திணைக்களம் ஏன் நியமிக்கின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வியெழுப்பியிருந்தார்.
இந்த விடயம் தொடர்பில் தேர்தல்கள் திணைக்களம் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்று வடமாகாண பிரதித் தேர்தல்கள்

தொடர்ச்சி: பக்கம் 25

## ரிஷாத்தின் வீட்டில் அதிரடிச் சோதனை

### ஒரே நேரத்தில் மூன்று இடங்களில் பொலிஸார் முற்றுகை

கொழும்பு, ஓக. 25
கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சரும் அ.இ.ம.கா. தலைவருமான ரிஷாத் பதியுதீனின் வீடுகள் மற்றும் அலு வலகங்களில் பொலிஸார் கடந்த 12 ஆம் திகதி திடீர் சோதனை நடத்தியுள்ளனர்.
அமைச்சர் வசம் உள்ள சொத்து விவரங்கள் குறித்தும் அவரிடம் உள்ள ஆயு தங்கள் குறித்தும் அவர்கள் அங்கிருந்த வர்களிடம் துருவித் துருவி விசாரணை நடத்தியுள்ளனர்.
முன்னறிவித்தல் ஏதுமின்றி அமைச் சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவரின் வீட்டில் நடத்தப்பட்ட இந்தச் சோதனை அரசியல் வட்டாரங் களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் கட்சி இம் முறை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து வடமா காணத் தேர்தலில் களமிறங்கியுள்ளது. அவரது தம்பி ரிப்கான் மன்னார் மாவட்டத்தில் போட்

தொடர்ச்சி: பக்கம் 25

## முள்ளிவாய்க்காலில் முகாம்களை அவசரமாக அகற்றிய படையினர்

### நவிப்பிள்ளை வருகையின் எதிரொலி?

கொழும்பு, ஓக. 25
இறுதிக்கட்டச் சமர் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் பகுதியில் போர் எச்சங்களை முற்றாக அகற்றும் பணிகள் கடந்த சில நாட்களாக மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், நேற்று 'மினி' இராணுவ முகாம்கள், சோதனைச் சாவடிகள், தூரப்பார்வைகண்காணிப்பு அரண்கள் (உயர மான காவலரண்) ஆகியவை அவசர அவசரமாக அகற்றப்பட்டன.
இராணுவத்தினர்போன்று உடையணிந்தவர்களே இந்த நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டனர் என்று மக்கள் கூறுகின்றனர்.
ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை முக்கியமாக இறுதிப்போர் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் பகுதிக்குச் செல்வதற்குத் திட்டமிட்டுள்ளார். இந்நிலையில் இதுவரை அகற்றப்படாதிருந்த போர் எச்சங்களும், இராணுவ முகாம்களும் தற்போது திடீரென அகற்றப்படுவது மக்கள் மத்தியில் பலத்த சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது.
இறுதிக்கட்டப் போரில் பாரிய அழிவுகள் இடம்பெறவில்லை என்ற மாயையை உருவாக்குவதற்காகவா அரசு இந்தத் திடீர் திட்டத்தை வகுத்துள்ளது என்றும் வன்னி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (த-சி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணைகளுக்கு அடிப்படையாக நவிப்பிள்ளையின் பயணம் அமையவேண்டும்

## பா.ம.க.நிறுவுநர் இராமதாஸ் வலியுறுத்து

சென்னை,ஓக.25

வடக்கு தமிழர்கள் சிறைக் கைதிகளைப் போலவே நடத்தப்படுகின்றனர். இந்த கொடுமையான மனித உரிமை மீறல் குறித்து நவநீதம்பிள்ளை விசாரணை நடத்துவதுடன், சர்வதேச விசாரணைக்கான அடிப்படையையும் இதன்போது அவர் ஏற்படுத்த வேண்டும். வடக்கிலிருந்து ராணுவத்தை வெளியேற்றவும், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை தடுத்துநிறுத்தவும் இலங்கை அரசுக்கு அவர் உத்தரவிட வேண்டும். இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் பா.ம.க.நிறுவுநர் இராமதாஸ்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் இறுதிப் போரின்போது ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்கள் வீடுகளை இழந்து அகதிகளாக்கப்பட்டனர். போர் முடிவடைந்து 4 ஆண்டுகள் கழிந்து விட்ட நிலையிலும், தமிழ் மக்களுக்கு இன்றுவரை நீதிகிடைக்கவில்லை.

இந்த நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து நம்பத்தகுந்த விசாரணை நடத்தும்படி இலங்கை அரசுக்கு காலக்கெடு விதிக்கப்பட்டது.

இந்தக் காலப்பகுதியில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்வதற்காக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை நாளை(இன்று) முதல் ஒரு வாரத்திற்கு இலங்கைக்கு சுற்றுப் பயணம் செய்து நிலைமைகளை ஆராயவுள்ளார். நவநீதம்பிள்ளையின் பயணத்தால் தமிழர்களுக்கு ஓரளவாவது விடிவு பிறக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

இலங்கைப் போரின் இறுதிக் கட்டத்தில் நடந்தவற்றையோ, தற்போதுள்ள நிலைமைகளையோ நவிப்பிள்ளை ஒருவார காலத்தில் விசாரிக்க முடியாது. அவர் ஓரளவு நிலைமையை அறிந்து சர்வதேச விசாரணைக்குழுவை இலங்கைக்கு அனுப்ப அழுத்தம்கொடுக்கவேண்டும். இதுதவிர, இலங்கையின் பொதுவான மனித உரிமைச் சூழல், போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வுப் பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் ஆகியவை குறித்தும் விசாரிக்க வேண்டும்.

உலகின் அதிகாரம் படைத்த நாடுகளின் துணையுடன் போர்க் குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பிக்க இலங்கை அரசு முயன்று வருகிறது. இத்தகைய சூழலில் ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நவநீதம்பிள்ளையால் மட்டுமே நீதி பெற்றுத்தர முடியும் - என்றுள்ளது. (ஐ)

# பசுப் பாலைக் குடியுங்கள் பால்மா வகை வேண்டாம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கூறுகிறது

யாழ்ப்பாணம், ஓக.25

பால் கட்டாயம் குடிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. பால் குடிக்காது விடுவதால் எந்தத் தீங்கும் ஏற்படப் போவதில்லை. அவ்வாறு பால் குடிப்பதாக இருந்தால் நேரடியாகப் பசுவிலிருந்து கறக்கப்பட்ட பாலையே குடியுங்கள்.

பெட்டிகளில், ரின்களில் விற்பனை செய்யப்படும் 'பால்மா'' வகைகளை வாங்கிக் குடிக்க வேண்டிய அவசியமேயில்லை என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

முன்னர் அனைவருமே தேநீரையே குடித்து வந்தனர். பிற்பட்ட காலத்திலேயே பால் குடிப்பதை ஒரு வழக்கமாகக் கொண்டனர். அதனை இன்று பல இடங்களிலும் காண முடிகிறது. பால்மா குடிப்பதை இன்று நாகரிக வளர்ச்சியாகவும் பலர் கருதுகின்றனர்.

ஆனால் உண்மையிலேயே பால் குடிக்க வேண்டும் என்பது கட்டாயமல்ல, அவசியமுமில்லை. அவ்வாறு குடிப்பதாக இருந்தால் நேரடியாக பசுவிலிருந்து கறந்த பாலையே குடியுங்கள். அது தவிர்ந்த பெட்டிகளிலும், ரின்களில் அடைக்கப்பட்ட பால்மா வகைகளைத் தவிருங்கள்.



> குடிப்பதாக இருந்தால் நேரடியாக பசுவிலிருந்து கறந்த பாலையே குடியுங்கள். அது தவிர்ந்த பெட்டிகளில் அடைக்கப் பட்ட, ரின்களில் அடைக்கப்பட்ட பால்மா வகைகளைத் தவிருங்கள்.

பிறந்த குழந்தைக்கு 6 மாதங்கள் வரை தாய்ப்பால் கட்டாய தேவை. அதன் பின்னர் தாய்ப் பாலுடன் சில உணவு வகைகளைக் கொடுக்கமுடியும். அவ்வாறான குழந்தைகளுக்கோ பெரியவர்களுக்கோ, பால்மா கொடுக்க வேண்டிய தேவையில்லை.

நாட்டில் தற்போது நேரடியாகப் பெறப்படும் பால் 40 வீதமான மக்களுக்கே போதுமானதாக உள்ளது. மிகுதிப் பேருக்கு பால் பற்றாக்குறை உள்ளது.

பால் குடிக்க வேணடும் என்று கருதுபவர்கள் பசு வளர்த்து அதனைப் பெற முடியும். அல்லது பால் நிலையங்களுக்குச் சென்று பெற முடியும்- என்றுள்ளது. (த-4)

# புலமைப் பரிசில் பரீட்சை இன்று

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகின்றது.

இந்தப் பரீட்சைக்கு இம்முறை தேசிய மட்டத்தில் 3 லட்சத்து 29 ஆயிரத்து 225 மாணவர்கள் தோற்றுகின்றார்கள்.

இவர்களில் சிங்கள மொழி மூலம் 2 லட்சத்து 49 ஆயிரத்து 396 மாணவர்களும், தமிழ் மொழி மூலம் 80 ஆயிரத்து 329 மாணவர்களும் தோற்றுகின்றார்கள்.

இதற்கென தேசிய மட்டத்தில் 2 ஆயிரத்து 836 பரீட்சை நிலையங்களும், 496 இணைப்பு நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 18 ஆயிரம் அதிகாரிகள் பரீட்சைக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

முதலாவது பாடத்துக்கான பரீட்சை 9.30 மணிமுதல் 10.15 மணி வரையும், இரண்டாவது பாடத்துக்கான பரீட்சை காலை 10.45 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும் நடைபெறவுள்ளன. (த-8)

A/L 2013 இல் தோற்றிய மாணவர்களுக்கு அதிரடியான கட்டணச் சலுகையுடன் வெளிநாட்டுக் கல்வி

- சைப்பிரஸில் படித்துக் கொண்டே இலட்ச ரூபாய் சம்பாதிக்கலாம்.
- நியூசிலாந்தில் 2 வருடங்கள் படித்து PR பெறலாம். PR பெற்றபின் ஆஸ்திரேலியா குடிபெயரலாம்.
- 2 இலட்சம் வேதனம், உணவு இருப்பிடம் இலவசம் டென்மார்க்கில் படிக்க, உழைக்க வாய்ப்பு.

விரைந்து வாருங்கள்.

ஏழு நாள்களும் திறந்திருக்கும்.



திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
(39162)(7.6)

கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரரின் நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை

| | | |
|---|---|---|
| புதியவரவு சல்வார் 1200/= தொடக்கம், | கொட்டன் சாறி 440/= தொடக்கம் | ஆண்களுக்கான சேட் -390/= தொடக்கம், |
| இந்தியன் ரொப்- 400/= தொடக்கம். | இன்னும் பல விதமான ஆடைகளையும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள | |



(39089)

114, நாவலர் றோட், யாழ்ப்பாணம். T.P:- 021 2219393

# இலங்கைத் தமிழரை நாடு கடத்த இடைக்காலத் தடை

> மனு மீதான விசாரணையை, நாளை மறுதினத்துக்கு ஒத்தி வைத்து, அதுவரை இந்த மூவரையும் நாடுகடத்தக்கூடாது என உத்தரவிடப்பட்டது.

சென்னை,ஓக.25

இலங்கை தமிழர் மூவரையும் நாடு கடத்த சென்னை உயர் நீதின்று இடைக்காலத் தடை விதித்துள்ளது. இது தொடர்பில் சென்னை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை அடுத்து, வழக்கு விசாரணை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சம்பவத்துடன் தொடர்புடைய செந்தூரான் என்பவர், தாக்கல் செய்த மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த அறிவிப்பை நீதிபதிகள் விடுத்தனர்.

இந்தியாவுக்குள் மனுதாரர் நுழைந்ததே சட்டவிரோதமானது; அவர், முகாமில் தங்கவில்லை; மாநில அரசு அளித்த அறிக்கையின் படி, மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மனுதாரரின் நடவடிக்கைகள், தொந்தரவு விளைவிப்பதாக உள்ளது என, மத்திய அரசு சார்பில், கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் வில்சன் கூறினார்.

மனுதாரர் சார்பில், முன்னிலையான வழக்கறிஞர் எஸ்.துரைசாமி அரசு அனுமதி பெற்றுத்தான், செந்தூதரன் வேலைக்குச் செல்கிறார். கியூ பிரிவு பொலிஸார் அவர்மீது விசாரணை நடத்துகின்றனர்.

அவரை, நாடு கடத்தக் கூடாது என்று மன்றில் கேட்டுக் கொண்டார். இதையடுத்து, மனு மீதான விசாரணையை, நாளை மறுதினத்துக்கு ஒத்திவைத்து, அதுவரை அந்த மூவரையும் நாடுகடத்தக்கூடாது என உத்தரவிடப்பட்டது. (ஐ)

# வெலிவேரிய தாக்குதல் சம்பவம்

## இராணுவ அறிக்கை இன்று வெளியாகும்

கொழும்பு,ஓக.25

வெலிவேரிய, ரதுபஸ்வலவில் பொதுமக்கள் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் தொடர்பான இராணுவ நீதிமன்றத்தின் முடிவுகள், இன்று திங்கட்கிழமை வெளியிடப்படும்என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் தயா ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் தலைமையிலான இராணுவ நீதிமன்றம், வெலிவேரிய சம்பவம் தொடர்பான அறிக்கையை, கடந்த புதன்கிழமை இராணுவத் தளபதியிடம் கையளித்திருந்தது. இந்த நிலையில் அறிக்கையின் விவரங்கள் இன்று வெளியாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே இந்த அறிக்கை இராணுவ சட்டப்பிரிவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இராணுவ சட்டப்பிரிவு, மேல் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்து அடுத்தவாரம் பதிலளிக்கவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)


# அநுராதபுரத்தில் கடதாசித் தொழிற்சாலை

அநுராதபுரத்தில் கடதாசி உற்பத்தித் தொழிற்சாலையொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

வட மத்திய மாகாணத்திலுள்ள விவசாய நிலங்களிலிருந்து பெறப்படும் வைக்கோலை மூலப்பொருளாகப் பயன்படுத்தி இந்தக் கடதாசித் தொழிற்சாலை அமைக்கப்படவுள்ளதாகவும், இதனூடாக அநேகமானோருக்கு மேலதிக வருமானமும் தொழில் வாய்ப்பும் கிடைக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

2 இலட்சம் வேதனத்துடன்

ஹொலண்டில் படிக்க, உழைக்க சட்ட ஆலோசனை



திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
(எல்லா நாள்களும் திறந்திருக்கும்)
(39163) (7.6)

அதிநவீன Pasteurized And Homogenized முறைப்படி தயாரிக்கப்பட்ட 100% சுகாதாரமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஐஸ்கிறீம் வகைகள் எமது அறிமுக விலையில் நல்லூர் விற்பனை நிலையத்தில் சுவைத்து மகிழலாம்.

பெறுமதிமிக்க பரிசில்கள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன.




ஷைலோ ஐஸ்கிறீம்

No.231, Temple Road, Nallur, Jaffna.
T.P. : 021 492 6003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட மாகாண சபைத் தேர்தல் - 2013

யாழ் மாவட்ட தமிழரசுக் கட்சி வேட்பாளர்

# இம்மானுவல் ஆனல்ட்

[B.A (Phil) Hons, MSS Limra International (USA)
AMTC Limra International (USA)



அரசியல் என்பது மக்கள் மீது ஆட்சியையும் அதிகாரத்தையும் செலுத்தும் விவகாரம் அல்ல. மாறாக மக்களின் நல்வாழ்வுக்காக சேவை செய்யும் ஒரு உன்னதமான பணி

X 5

(இலங்கை தமிழரசுக் கட்சி யாழ். தொகுதி கிளைச் செயலாளர், முன்னாள் யாழ் பல்கலை மாணவர் ஒன்றியத் தலைவரும்,விளையாட்டுப் பேரவைத் தலைவரும் அகில இலங்கை சமாதான நீதிவானும்)

www.emmanuvelarnold.blogsport.com

(c/11205)(10.3)

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**


# அற்ப சொற்ப சலுகைகள் தருவோர் நோக்கத்தைத் தகர்த்து எறியுங்கள்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. தமிழ் மக்களிடம் வேண்டுகோள்



வவுனியா, ஓக.25

அற்ப சொற்ப சலுகைகளை வழங்குபவர்களின் கபட நோக்கத்தைத் தகர்த்தெறியும் வகையில் எமது மக்கள் வட மாகாண சபைத் தேர்தல் வாக்களிப்பில் தவறாது பங்கெடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியினை உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

வவுனியா தரணிக்குளத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வவுனியாவில் மின்சாரம் வழங்குதல், வீதிகளைப் புனரமைத்தல், வேலை வாய்ப்புக்களை வழங்குவதாக வாக்குறுதிகளை வழங்குதல் ஆகிய நடவடிக்கைகள் கடந்த சில வாரங்களாக தீவிரம் பெற்றுள்ளன.

இதுவரை காலமும் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளாத குறித்த தரப்புகள் மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள இன்றைய நிலையில் இந்த நடவடிக்கைகளில் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றமைக்கான காரணத்தை எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். அற்ப சொற்ப சலுகைகளை வழங்குபவர்களின் கபட நோக்கத்தைத் தகர்த்தெறியும் வகையில் எமது மக்கள் வாக்களிப்பில் தவறாது பங்கெடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியை உறுதிப்படுத்த வேண்டும் என்றார்.

வவுனியாவிலுள்ள பின்தங்கிய கிராமங்களை இலக்கு வைத்து வாக்கு மோசடி மேற் கொள்வதற்குச் சில சக்திகள் முயற்சி செய்து வருகின்றன. இதனைத் தமிழ் மக்களாகிய நாம் ஒன்று சேர்ந்து முறி யடிப்போம். (க-400)

வவுனியாவில் மின்சாரம் வழங்குதல், வீதிக ளைப் புனரமைத் தல், வேலை வாய்ப்புக் களை வழங்குவதாக வாக்குறுதிகளை வழங்குதல் ஆகிய நடவடிக்கைகள் கடந்த சில வாரங்களாக தீவிரம் பெற்றுள்ளன.


## வட மாகாண சபை தேர்தல் - 2013

கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர்

Dr. கந்தசாமி திருலோகமூர்த்தி



X 3

உறுதி செய்யப்பட்ட வெற்றியை நோக்கி


உங்கள் தெரிவு இல.3

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**



## மாகாணசபைத் தேர்தல் - 2013

யாழ் மாவட்டம்




**தர்மலிங்கம் சித்தார்த்தன்**
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

X




**பாலச்சந்திரன் கஜதீபன்**
(ஆசிரியர், தலைவர் - இளைஞர் அணி)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |

(c/11201)
(6.3)

# தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013



தியாகராஜா மகேஸ்வரன்





ரணில் விக்கிரமசிங்க

# தியாகராஜா துவாரகேஸ்வரன்

- வடகிழக்கை தமிழர் தாயக பூமியாக இணைத்து வடகிழக்கு மாகாண சபைக்கு தேர்தலை நடத்தியது
- தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை அறிமுகப்படுத்தியது
- தமிழர் பிரச்சினையை உலக நாடுகள் முன்னிலையில் பேசித்தீர்க்க சர்வதேச மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது
- ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமாகிய மறைந்த தி.மகேஸ்வரன் தமிழ் மக்களுக்கு ஆற்றிய பணி
- 2005ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்கக் கூடிய ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்காமல் நாம் செய்த வரலாற்றுத் தவறுதான் இத்தனை துன்ப துயரங்களையும் சுமந்து தமிழ் மக்களை நிர்க்கதியாக்கியது.

## ஐக்கிய தேசியக் கட்சி

வடமாகாண சபை முதலமைச்சர் வேட்பாளரும்

முதன்மை வேட்பாளரும்

X 5

## பிரிந்த வடகிழக்கை தமிழர் தாயக பூமியாக மாற்ற

## 13வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயாளரைப் பார்வையிட வருவோரை மதித்து நடக்காத பாதுகாப்பு ஊழியர்

## யாழ்.போதனா வைத்தியசாலையில் தொடரும் அவலம்

யாழ்ப்பாணம், ஓக.25
யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர்களைப் பார்வையிடச் செல்வோருக்கும் அங்குள்ள பாதுகாப்பு ஊழியர்களுக்கும் இடையே முரண்பாடு, கைகலப்பு ஏற்படுவது தொடர்ந்து கொண்டிருக்கிறது.

விபத்தில் படுகாயமடைந்து ஒரு வார காலமாக அதிதீவிர சத்திர சிகிச்சைப் பிரிவிலுள்ளவருக்கு மருத்துவரின் அறிவுறுத்தலின்படி போத்தலில் எடுத்துச் சென்ற 'சூப்' பாதுகாப்பு ஊழியருடனான முரண்பாட்டினால் போத்தல் உடைந்து வீணாகியது.

பளையிலிருந்து பக்குவமாக எடுத்து வந்த அந்த 'சூப்' யாழ்.போதனா வைத்தியசாலையில் வீணாக்கப்பட்டமை தொடர்பில் அதனை எடுத்து வந்தவர் மிகவும் வேதனைப்பட்டார்.

பாதுகாப்பு ஊழியர்களின் இந்த அராஜகம் தொடர்பில் பாதிக்கப்பட்ட குறித்த இளைஞர் வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு முறையிட்டுள்ளார். அது தொடர்பில் பாதுகாப்பு ஊழியர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குவதாகக் கூறியதையடுத்து அவர் அங்கிருந்து சென்றார்.

கிளிநொச்சியில் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றையவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். மேலும் ஒருவர் ஒரு வார காலமாக

> **விபத்தில் படுகாயமடைந்து ஒருவார காலமாக அதிதீவிர சத்திரசிகிச்சைப் பிரிவிலுள்ளவருக்கு மருத்துவரின் அறிவுறுத்தலின்படி போத்தலில் எடுத்துச் சென்ற 'சூப்' பாதுகாப்பு ஊழியருடனான முரண்பாட்டினால் போத்தல் உடைந்து வீணாகியது.**


போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சத்திர சிகிச்சைப் பிரிவில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறார்.

கடந்த வியாழக்கிழமை அவருக்கு கோழி சூப் கொடுக்க வேண்டும் என்று மருத்துவர் அறிவுறுத்தியிருந்தார். இதனால் இங்குள்ள கடைகளில் அதனை வாங்குவதைவிட வீட்டில் தயாரிப்பது சிறப்பாக இருக்கும் என்று கருதி பளையிலுள்ள தனது வீட்டிலிருந்து கோழி 'சூப்' எடுத்துக் கொண்டு பஸ்ஸில் புறப்பட்டு மதியம் 11.50 மணி அளவில் வைத்தியசாலைக்குச் சென்றார் அந்த இளைஞர்.

இதன்போது பாதுகாப்பு ஊழியர்கள் அவரை உள்ளே அனுமதிக்க மறுத்துள்ளனர். தமது நிலைமையை அவர்களுக்கு எடுத்துக் கூறி உடனே செல்ல வேண்டும் என்று இளைஞர் கேட்ட போது பாதுகாப்பு ஊழியர்கள் அவரைத் தடுத்துள்ளனர். இதனால் முரண்பாடு ஏற்பட்டு பாதுகாப்பு ஊழியர்களால் இளைஞர் சுவருடன் சேர்த்துத் தள்ளப்பட்டார். இதனால் அவர் வாயில் சிறுகாயமடைந்ததோடு போத்தல் உடைந்து கோழி 'சூப்' வீணாகியது. இதனால் அவர் மீண்டும் பளைக்குச் சென்று கோழி 'சூப்' எடுத்து வரவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

பார்வையாளர் நேரம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பதில் தவறில்லை. ஆனால் அதிதீவிர சத்திர சிகிச்சைப் பிரிவிலுள்ள ஒரு நோயாளியின் நிலையைப் புரிந்துகொள்ள வேண்டும். அவ்வாறான நோயாளியைப் பார்வையிட வேண்டிய அவசியத்தை உறவுகள் நன்றாக உணருவர். அதன் தாற்பரியத்தை ஏனையோரும் புரிந்து கொள்ள வேண்டும்.

பாதுகாப்பு ஊழியர்கள் இவ்வாறு நடந்துகொண்டமை தொடர்பில் அந்த இளைஞர் மிகவும் வேதனைப்பட்டார். இது தொடர்பில் பணிப்பாளரிடம் கேட்ட போதே, அது பற்றி தாம் பாதுகாப்பு ஊழியர்களுக்கு அறிவுறுத்துவதாகத் தெரிவித்தார். (த-4)



நேற்றைய பதின்மூன்றாம் திருவிழாவின் போது நல்லைக் கந்தனின் திருவீதியுலாக் காட்சி.

## அலங்காரக் கந்தனாய் அருள்மழை பொழிபவனே

காவடிக் கந்தனாய்க் கதிர்காமத்திலமர்ந்து
பரிவுடனே வேண்டும் வரமருளும் -கந்தா
அபிஷேகக் கந்தனாய் மாவிட்டபுரமமர்ந்து
கருணையுடன் அருள்மழை பொழியும்-கடம்பா
அன்னதானக் கந்தனாய் சந்நிதியில் நீயமர்ந்து
அண்டினோர் பசிபோக்கும் -கார்த்திகேயா
அலங்காரக் கந்தனாக நல்லூரில் நீயமர்ந்து
நாடிவரும் பக்தர்கள் குறை தீர்க்கும் -கார்மயில்வாகனா
பாரினில் நாம் பட்ட துன்பம் போதும் எம்மவர்கள்
நலம் காக்க எழுந்தோடி வாராயோ-கதிர்வேலா

**மலர்விழி கனகசபை**
**சண்டிலிப்பாய்**

## நல்வாழ்வு வாழ வழி காட்டும் ஐயா!

பங்கயம் போன்ற பன்னிருகண்ணனே!
பழனி மலையுறும் பன்னிருகரத்தோனே!
நல்லடியார்கள் மனதில் விரும்பியுறைவோனே!
நல்லூரிலிருந்து அருள்பாலிக்கும் கந்தக்கடவுளே!

தமிழர்கள் வாழ்வில் தர்மம் காக்கவும்
தன்னிகரில்லா எம் பண்பாட்டைக் காக்கவும்
மதியருள் வேலும் மயிலுடனும் வந்து
அனுதினம் எம்மைக் காத்தருளாயோ!

**கார்த்திகா மணிவண்ணன்**
**வவுனியா**

## வற்றாத வல்லமையைத் தா

கற்றைச் சடையணிந்த கங்காதரன் மகனேகந்தா
பற்றிப் பிடித்தேனுன் பொற்பதத்தை -இற்றைவரை
சொற்கொண்டு பாமாலை சூடிவரும் எனக்கு
வற்றாத வல்லமையைத் தா

நல்லை நல்லை என்றால் பிறவி
இல்லை இல்லையென்று கூறும்-நல்லையம்பதிவாசா
தொல்லை தொல்லைதரு கொடுவினை தீர
எல்லையில்லாக் கிருபை நல்குவாயே!

**மு.தணிகாசலம்**
**கற்கோவளம்**

## கமநல மத்தியஸ்தர் சபைகள் விரைவில்

வடமராட்சி, ஓக.25
கமநல அபிவிருத்தித் திணைக்களம் கமநல மத்தியஸ்த சபைகளை உருவாக்கத் தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் நாடெங்கும் 25 கமநல மத்தியஸ்த சபைகளை உருவாக்குவதற்கும் இந்தச் சபைகளின் தலைவர்களாக ஓய்வுபெற்ற நீதிபதிகளை நியமிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 2010 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட கமநல சட்டத்தின் கீழ் இம்மத்தியஸ்த சபைகள் உருவாக்கப்படுவதாகவும், விவசாயிகள் மத்தியில் ஏற்படுகின்ற காணி சம்பந்தப்பட்ட அனைத்துக் காணிப் பிரச்சினைகளும் இச்சபைகள் ஊடாகத்தீர்த்து வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-8)

## அதிகஷ்டப் பிரதேச மாணவருக்கு காலணிகள்

வடமராட்சி, ஓக.25
நாட்டிலுள்ள கஷ்ட, அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இலவசமாக ஒரு சோடி பாதணிகளை அடுத்த ஆண்டு முதல் வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

தரம்-1 முதல், கல்வி பயிலும் சகல மாணவர்களுக்கும் இலவசமாக ஒரு சோடி பாதணி வழங்கப்படும். இதற்கென வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக மாணவர்களின் பாதத்தின் அளவுகள் பாடசாலை மட்டத்தில் சேகரிக்கப்படவுள்ளன. அளவுகள் கிடைக்கப் பெற்றதும் மாணவர்களுக்கான பாதணிகள் தயாரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு கறுப்பு நிற பாதணிகளும் மாணவிகளுக்கு வெள்ளை நிறப் பாதணிகளும் வழங்கப்படவுள்ளன. (த-8)



## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச அலுவலகம் தென்மராட்சியில்



தென்மராட்சி, ஓக. 25
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தென்மராட்சி பிரதேச அலுவலகமும் தமிழ் அரசுக் கட்சியின் தென்மராட்சிக் கிளை அலுவலகமும் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா ,ஈ. சரவணபவன் ஆகியோரால் இவை திறந்து வைக்கப்பட்டன.

கட்சியின் தென்மராட்சிப் பிரதேச அமைப்பாளர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான அ.விநாயகமூர்த்தி, சி.சிறிதரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் அறிமுக விழாவும் இடம் பெற்றன.

அங்கு நடைபெற்ற கூட்டத்தில் சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி, வேட்பாளர் ஜெ.செயசேகரன், குமரகுருபரன், பிரதேச வேட்பாளர் கே.சயந்தன், மாவை சேனாதிராசா ஆகியோர் உரை நிகழ்த்தினர். (த-9)

## உக்காத பொருள்களை அப்புறப்படுத்தக் கோரிக்கை

கொடிகாமம், ஓக.25
மாரி காலம் அண்மித்து வருவதால் வீதியோரங்களில் வைக்கப்பட்டுள்ள உக்காத பொருள்களை அப்புறப்படுத்தி டெங்கு நுளம்பு உற்பத்தியாகாமல் தடுக்குமாறு சாவகச்சேரி பிரதேச சபையை மக்கள் கோரியுள்ளனர்.

ஆறு மாதங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட டெங்கு நுளம்பு பரிசோதனைகளின் போது சுகாதாரப் பகுதியினரால் ஒலிபெருக்கி மூலம் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம், குடியிருப்புகளில் காணப்பட்ட பாவனைக்கு உதவாத குப்பைகள் உட்பட உக்காத பொருள்களை மக்கள் வீதியோரங்களில் வைத்தனர்.

ஆறு மாதங்களாக உரப்பைகளில் கட்டி வைக்கப்பட்டிருந்த குப்பைகள் கோழிகளால் கிளறப்பட்டதால் மக்கள் அவற்றை எடுத்துச் சென்று எரித்ததாகவும் உக்காத பொருள்கள் தொடர்ந்து அந்த இடங்களிலேயே அப்புறப்படுத்தப்படாத நிலையில் காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.

டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் ஆரம்பமாவதற்கு முன்னர் அவற்றை அப்புறப்படுத்தி டெங்கு நுளம்பு உற்பத்தியாவதைத் தடுத்து உதவுமாறும் பிரதேச சபையின் பல பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிவேரிய துப்பாக்கிச் சூட்டில் மூவர் உயிரிழந்த சம்பவம்;

## இராணுவத்தினருக்கு எதிராக சாட்சியங்கள்

## திரிசங்கு நிலையில் அண்ணனும் தம்பியும்




இராணுவ பிரிகேடியர் தேசப் பிரிய குணவர்தன எனக் கூறி வந்த ஒருவர்... பாதையிலிருந்து விலகுமாறு மக்களிடம் கூறினார். எங்களுக்குப் 10 நிமிடம் தாருங்கள் நாங்கள் பாதையிலிருந்து விலகுகிறோம் என அங்கிருந்த மக்கள் கூறினர். 10 நிமிடம் தரமாட்டேன்... இப்போதே விலகுங்கள்... இவனுங்களை அடியுங்கள்... (முன்ட காபியளா...) எனக் கூறினார். உடனே இராணுவத் தினரும், சிவில் உடையில் இருந்த இராணுவத்தின ரும் தடிகளால் எம்மைத் தாக்கத் தொடங்கினர்."

வெலிவேரியவில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மூவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கம்பஹா நீதிவான் டிகிரி கே.ஜயதிலக முன்னிலையில் கடந்த 22ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்ற விசாரணைகளின்போது சாட்சியமளித்த ஜூட் நிஷாந்த பெரேராவின் வாக்குமூலம் இது.

"மற்றுமொரு இராணுவக் குழுவினர் மின் வயர்களை நோக்கியும், மின் குமிழ்களை நோக்கியும் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இராணுவத்தின் தாக்குதலிலிருந்து தப்புவதற்காக வெலிவேரியாவிலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்திற்குள் நுழைய முற்பட்டபோது, தேவாலயத்திற்குள்ளும் இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்துகின்றனர் என இன்னுமொரு குழுவினர் கூறினர். அதனால் நான் தேவாலயத்துக்குள் செல்லாமல் வேறு பாதையூடாக வீட்டுக்குச் சென்றேன்" என்றும் ஜூட் நிஷாந்த பெரேரா வாக்குமூலத்தை தொடர்கிறார்.

வெலிவேரியாவில் சுத்தமான குடிதண்ணீர் கேட்டுப் போராட்டம் நடத்திய போது மேற்கொள்ளப்பட்ட துப் பாக்கிப் பிரயோகத்தில் அப்பிரதே சத்தைச் சேர்ந்த அகில தினேஷ், ரவி ஷான் பெரேரா என்ற மாணவர்கள் இருவரும், கம்பளையைச் சேர்ந்த நிலந்த புஷ்ப குமார என்பவரும் உயிரிழந்தனர்.

இது தொடர்பில் இடம்பெற்ற நீதிவான் விசாரணைகளின்போது முறைப்பாடு தொடர்பில் முன்னிலையாகியிருந்த கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவின் பிரதான பொலிஸ் பரிசோதகர் நெவில் சில்வா, சம்பவம் தொடர்பான முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பித்தார். அத்துடன், சம்பவம் தொடர்பில் 16 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்த நிலந்த புஷ்ப குமாரவின் மனைவி நிசன்ஸலா பிரசாதினி(வயது-29). ஒருகுழந்தையின் தாய். கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவின் உதவி பொலிஸ் அதகாரி நுவன் வெதிசிங்கவின் ஆலோசனைக்கமைய பிரதான பொலிஸ் பரிசோதகர் நெவில் சில்வாவின் வழிகாட்டலின் கீழ் நிசன்ஸலா பிரசாதினி வாக்குமூலம் அளித்தார்.

"எனது கணவ ரின் பெயர் நிலந்த புஷ்பகுமார. வெலிவேரிய - வெலிபென்ன பகுதியில் தங்கியிருந்தார். கடந்த முதலாம் திகதி இரவு வேலைக்குச் சென்றபோது இரவு 8.10 மணியளவில் தொலைபேசியூடாக என்னுடன் பேசினார். வெலிவேரியவில் இடம்பெற்ற போராட்டத்தின்மீது கண்ணீர்ப் புகைப்பிரயோகம் மேற்கொள்ளப்படுகிறது. அதனால்நான் தேவாலயத்திற்குள் செல்கிறேன் என்றார்.

பின்னர் 8.45 மணியளவில் நான் தொலைபேசியில் தொடர்புகொண்ட போது என்னுடன் பேசிய அவர், 8.45, 9.20 மணிக்கு அழைப்பை ஏற்படுத்தியபோது பேசவில்லை. பின் 9.30 மணிக்கு தொடர்புகொண்ட போது அவரது அழைப்பு துண்டிக் கப்பட்டிருந்தது. அடுத்த நாள் காலை வரை கணவருடன் நான் தொடர்பு கொள்ள முயற்சித்தபோதும் முயற்சி பயன ளிக்கவில்லை.

அடுத்தநாள் நண்பகல் 12 மணியளவில் எனது கணவர் தங்கியிருந்த விடுதிக்கு அழைப்பை ஏற் படுத்திய போது அங்கு அவர் வர வில்லை என்று கூறினர். இதை யடுத்து கணவரின் தாய், தந்தையுடன் அன்று மாலை 5 மணிக்கு வெலிவேரிய செல்ல புறப் பட்ட நாம் இரவு 10 மணிக்கு வெலி வேரியவைச் சென்றடைந்தோம். கண வர் தங்கியிருந்த விடுதியிலுள்ள மாமியுடன் பொலிஸ் நிலையத் துக்குச் சென்றோம். எனது கணவர் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சேர்க் கப்பட்டுள்ளார் என அப்போது தெரிந்து கொண்டோம்.

12 மணிக்கு கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குச் சென்றோம். ஆனால் அடுத்த நாள் காலை 6 மணிவரை எம்மால் அவரைப் பார்க்க முடியவில்லை. 6 மணியின் பின்னர் சென்று பார்த்தபோது அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்றுக்கொண்டிருந்தார். எனக்கு அவருடன் பேச முடியவில்லை. பின்னர் 4ஆம் திகதி எனது கணவர் இறந்துவிட்டார் என எனக்குத் தகவல் தரப்பட்டது. பின்னர் அவரது சடலத்தைப் பெற்று நாம் அடக்கம் செய்தோம்.

ஆயுதத்தால் தாக்கப்பட்டதால் எனது கணவர் உயிரிழந்துள்ளார் என இறப்பு விசாரணை மேற்கொண்டவர் கூறினார். அவருக்கு என்ன நடந்தது என்று எனக்குக் கூறத் தெரியாது. இறந்தவர் இறந்துவிட்டார். நான் குழந்தையுடன் தனியாகிவிட்டேன்..." - எனத் தெரிவித்துள்ளார்.

கம்பஹா நெதுன்கமுவைச் சேர்ந்த ஜனப்பிரிய சிந்தக்க பெரேரா அளித்த சாட்சி யத்தில் தெரிவித்ததாவது:-

"மாலை 6.30 மணியளவில் வெலிவேரிய சந்தியில் வைத்து என்மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அவ்விடத்தில் சாதாரண மக்க ளும் இராணுவத்தினரும் இருந்தனர். இரு தரப்பினரிடையேயும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இராணுச் சிப்பாய் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தினார். அப்பகுதியிலிருந்த சிப்பாய் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்துவதை நான் பார்த்தேன். தாக்குதல் இடம்பெற்றபோது அந்த இடத்தில் பொலிஸார் இருக்க வில்லை. பின்னர் அங்குள்ள பெற்றோல் நிரப்பும் நிலையம் அருகே இராணுவ யுத்த தாங்கி போன்ற இரண்டு டிரக் வண்டி களில் வந்தவர்களும் துப்பாக்கிச் சூடு நடத்தியதை நான் கண்டேன்" - எனத் தெரிவித்துள்ளார்.

நெதுன்கலுமுவைச் சேர்ந்த ஜூட் நிஷாந்த பெரேரா (வயது-45) தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:-

"போராட்டம் நடந்துகொண்டிருந் போது மாலை 5 மணியளவில் பெலும் மஹர பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்ட வர்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்துகின்றனர் எனத் தகவல் கிடைத் தது. பின்னர் 5.30 மணியளவில் சுமார் ஆயிரம் சிப்பாய்களை அழைத்துக் கொண்டு பிரிகேடியர் தேசப்பிரிய குண வர்தன எனக் கூறி ஒருவர் அங்கு வந்தார். அவர் அங்கு பேசிக்கொண் டிருந்த போது இராணுவத்தினர் ஊடகவியலாளர்களை இழுத்துக்கொண்டு சென்றதை நாம் கண்டோம்.

நான் பிரிகேடியர் அருகிலேயே இருந்தேன். பிரச்சினை தீர்க்கப்படும். பாதையிலிருந்துவிலகுங்கள் என்றார். அப்போது எம்முடன் இருந்த ஒருவர், எங்களுக்குப் 10 நிமிடம் தாருங்கள் நாங்கள் செல்கின்றோம் என்றார். அப்போது அவர் நேரம் தர முடியாது. அடியுங்கள் (காபியவ்...) என்றார். இராணுவத்தினரிடையே சிவில் உடையில் இருந்த சிப்பாய் ஒருவர் தடியால் எம்மைத் தாக்கினார்.

மற்றவர் தனது கையிலிருந்த துப்பாக்கியால் வயர்களுக்கும், மின் குமிழ்களுக்கும் சூடு நடத்தினார். நான் எம்புருலுவ பாதையிலுள்ள கட்டடமொன்றின் மீது ஏறிவிட்டேன். பிரச்சினை முடிவடைந்ததன் பின்னர் அந்தக் கட்டடத்திலிருந்து நான் கீழே இறங்கிவந்தபோது எனது வயிற்றில் துப்பாக்கி ரவை ஒன்று பாய்ந்தது. அப்போது முழுப்பகுதியும் இருள் சூழ்ந்திருந்தது. ஒரு மின்குமிழின் வெளிச்சம் மட்டுமே இருந்தது.

துப்பாக்கிச் சூடுபட்ட பின்னர், வெலிவேரிய தேவாலயத்துக்குள் செல்ல முயன்ற போது, அங்கு செல்ல வேண்டாம். தேவால யத்துக்குள்ளும் துப்பாக்கிச்சூடு நடத்தப் படுகிறது என்று அங்கிருந்தவர்கள் கூறினார்கள். பின்னர் நான் வேறு பாதையூடாக வீட்டுக்குச் சென்றேன். அந்த இரவில் சிகிச் சைபெற நான் தயாரானபோது, இராணுவத் தினர் கிராமத்தைச் சுற்றிவளைத்துள்ளனர். வெளியில் சென்றால் துப்பாக்கிச் சூடு நடத்துவர் என்று அருகிலிருந்தவர்கள் கூறினார்கள். அதனால் காயத்திற்கு மருந்து பூசி 'பண்டேஜ்' சுற்றியபடி காலைவரை இருந்தேன். அதுவரை அதிகமான இரத்தம் சென்றிருந்தது.

காலையிலே கம்பஹா வைத்திய சாலைக்குச் சென்றேன். இது தொடர்பில் வைத்தியசாலை பொலிஸாருக்கு வாக்கு மூலமொன்றையும் வழங்கினேன்" - எனத் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, பியகம வீதி வெலிவேரியவைச் சேர்ந்த பிரேமலால் பெரேரா (வயது-45) வின் சாட்சியத்தில் தெரிவிக் கப்பட்டதாவது;

"நான் வீட்டுக்குச் சென்றபோது எனக்கு முன்னால் இராணுவத்தினர் இருந்தனர். என்னைச் சுற்றி மக்கள் இருந்தனர். என் னைச் சுற்றி இருந்தவர்கள் இராணுவத்தின் மீது கற்களால் தாக்கினர். இராணுவத் தினரும் அவர்கள்மீது கற்களால் தாக்கினர். பின்னர் சிறிது நேரத்தில் அங்கிருந்தவர்கள் அருகிலிருந்த தேவாலயத்துக்குள் சென்றனர். நானும் அவர்களுடன் சென்றேன்.

அப்போது சுமார் 15 சிப்பாய்கள் தேவாலயக் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே பாய்ந்தனர். ஒரு சிப்பாய் துப்பாக்கியால் எனது முகத்தில் தாக்கியதால் எனது வாயிலிருந்து மூன்று பற்கள் கழன்று கீழே விழுந்தன. பின்னர் துப்பாக்கியாலும், தடியாலும் எனது இரு கால்களையும் தாக்கினர். பின் னர் என்னைப் பிடித்துக்கொண்டு தாக்கி பொலிஸுக்குக் கொண்டு சென்றனர். எனது தலையிலும், முகத்திலும், வயிற்றிலும், கால்களிலும் இரத்தம் வழிந் தோடியது.

பொலிஸார் இருந்தபோதே இராணுவத்தினர் எனது உடைகளைக் கழற்றி, உள்ளாடையுடன் சிறைக்கூடத்துக் குள் போட்டனர். சிறையின் உள்ளே 6 பேர் இருந்தனர். அவர்களுள் மூவரை எனக்குத் தெரியும். இந்தப் போராட்டத் திற்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. எம் ஆறு பேருக் கும் குடிக்கத் தண்ணீர்கூடக் கொடுக்கவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் அங்கு வந்து சிறைக்குள் இருந்த எம்மைப் பார்த் துவிட்டு, இவர்கள் மிருகங்களா? இவ்வளவு இரத்தம் பெருக்கெடுத் தோடியும் ஏன் சிகிச்சை அளிக்க வில்லை என்று கேட்டார். தேவாலய அருட்சகோதரருடன் நடத்திய பேச் சின் பின்னர் எம்மை வெளியில்விட்டனர். நான் வைத்தியசாலைக்குச் சென்று 4 நாள்கள் சிகிச்சைப் பெற் றேன்." என்றார்.

### கன்னியாஸ்திரியின் மார்பை நோக்கி துப்பாக்கியை நீட்டிய இராணுவத்தினர்

இராணுவத் தாக்குதலிலிருந்து உயிரைக் காத்துக் கொள்வதற்காக தேவாலயத் தின் கன்னியர் மடத்துள் தஞ்சம் புகுந்த அப்பாவி மக்களை வெளியேற்றுமாறு அச்சுறுத்தல் விடுத்த இராணுவத்தினர், தனது மார்பை நோக்கி துப்பாக்கியை நீட்டினர் என கன்னியாஸ்திரி ஒருவர் வாக்குமூலமளித்துள்ளார் என கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிவானிடம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற் கொண்ட கம்பஹா நீதிவான் டிகிரி கே.ஜயதிலக, வெலிவேரிய தேவாலயத்தின் கன்னியர் மடத்திற்குள் அத்துமீறி நுழைந்து, கன்னியாஸ்திரியின் மார்பை நோக்கித் துப்பாக் கியை நீட்டி அச்சுறுத்தல் விடுத்த சம்பவம் தொடர்பில் முழுமையான அறிக்கையை எதிர்வரும் 29ஆம் திகதி நீதிமன்றத்திடம்சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, வெலிவேரிய தாக்குதலுக்கு உத்தரவிட்டவர் எவரோ அவர் தான் சம்பவத்தின் பிரதான சந்தேக நபர் என சட்டத்தரணி உபுல் தேசப்பிரிய நீதிவான் முன்னிலையில் தெரிவித்துள்ளார்.

சுத்தமான குடிதண்ணீர் கோரிப் போராட்டம் நடத்திய வெலிவேரிய மக்கள் மீது தாக்குதல் நடத்த உத்தர விட்டவர் யார் என்பதை சம்பவம் இடம்பெற்று 25 நாள்கள் கடந்துள்ள நிலையிலும், அரசும், இராணுவத்தினரும் வெளிப்படுத்தவில்லை. அவரைக் கண்டுபிடித்தார்களா இல்லையா என்பதும் தெரியவில்லை.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் தயா ரத்நாயக்கவால் கடந்த 2ஆம் திகதி நியமிக்கப்பட்ட இராணுவ நீதிமன்ற விசாரணை அறிக்கை கடந்த 21ஆம் திகதி புதன்கிழமை அவரிடம் கையளிக்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பில் இராணுவத் தளபதி முழுமை யாக ஆராய்ந்த பின்னரே தீர்மானம் மேற்கொள்வார் என இராணுவத் தரப்பு கூறுகின்றது.

இராணுவ விசாரணையில் தமக்கு நம்பிக்கை இல்லாததால்தான் சர்வதேச சுயாதீன விசாரணை வேண்டுமென எதிர்க்கட்சிகள் கூட்டாக அரசிடம் வலியுறுத்துகின்றன.

இந்த விடயம் மஹிந்த அரசுக்குப் பெரும் தர்ம சங்கடமானது. ஏனெனில் வெலிவேரிய சம்பவத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களையும் அதற்கு உத்தரவிட்டவரையும் காட்டிக் கொடுத்தால் அரசுத் தலைவரும் பாதுகாப்புச் செயலாளரும் இராணுவத்தின் மத்தியில் நம்பிக்கையை இழந்துவிடுவர். மாறாக சுட்டவர்களைப் பிடித்துத் தண்டிக்காவிட்டால் அது மக்கள் மத்தியில் இவர்களின் நம்பிக் கைத் தன்மையைப் பறித்து விடும்.

இந்த இரண்டுக்கும் மத்தியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையும் இன்று இலங்கை வருகிறார். அத்துடன், பொதுநலவாய மாநாடும் இடம்பெற இருப்பதால், தான் நீதியாக நடந்து கொள்வதாக இந்த உலகுக்குக் காட்ட வேண்டிய நிர்ப்பந்தமும் அரசுக்கு உண்டு. எனவேதான் உடன டியான விசாரணைக் குழுக்கள், உயிரிழந் தவர்களின் குடும்பங்களுக்கு நட்ட ஈடுகள் என அரசு நடித்து வருகின்றது. எப்படி இருந்தபோதும் இந்த விடயத்திலும் அரசு இராணுவத்துக்குச் சார்பான முடிவுகளையே எடுக்கும் என்று அதனது வரலாற்றுப் போக்கில் இருந்து தெரிந்து கொள்ளலாம். ஏனெனில் இப்போதுள்ளது போன்ற இராணுவக் கட்டமைப்புப் பாதுகாப்பு இல்லாமல் இந்த அரசாட்சி யைத் தக்க வைக்க ராஜபக்ஷாக்களால் முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரிய தொழில் வாய்ப்பு

அமெரிக்காவிலுள்ள ஒரு தனியார் நிறுவனத்துடன் இணைந்து உங்கள் வீடுகளில் இருந்து கொண்டே தொழில் புரிய ஓர் அரிய சந்தர்ப்பம்.
பகுதி நேரமாகவோ முழுநேரமாகவோ வேலை செய்ய வாய்ப்பு உண்டு. 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்,பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம். தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இலவச பயிற்சி வழங்கப்படும்.
வாரா வாரம் உங்களது திறமைக்கு ஏற்ப எல்லையற்ற ஊதியத்தைப் பெற்று மகிழலாம்.
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்!

தொலைபேசி: 077 356 9796
sivasayan7@gmail.com
(சி/39156)(6.6.3)

## மலேசியாவில் வீட்டுப் பணிப்பெண்களுக்கான வெற்றிடம்

கட்டணம் அறவிடப்படாத வேலை வாய்ப்பு
அரியதொரு சந்தர்ப்பம்! தவற விடாதீர்கள்!

அளவு - 50 சம்பளம் 850 RM (1RM = ரூபா 41/=)
+ மேலதிக நேரக் கொடுப்பனவு

**சேவை ஒப்பந்தம்**
- சேவைக் காலம் 2 வருடம்
- உணவு, தங்குமிடம், வைத்திய வசதி மற்றும் போவதற்கும், வருவதற்குமான விமான டிக்கட்
- மற்றைய சட்ட திட்டங்கள் மலேசிய தொழிலாளர் சட்ட திட்டத்துக்கு அமைவானதாகும்.

**தயங்காமல் உடனடியாக அழைக்கவும்**

**ஜென்சி என்ரபிரைஸஸ்**
இல. 13 1/1, ஹட்சன் வீதி, கொள்ளுப்பிட்டி, (கொழும்பு - 03)
075 553 7752/077 902 4046/011 233 3236
L.L.No: 2799 (சி/11366)(7.6.3)

## வேலையாள்கள் தேவை
### சங்கென் கென்ஸ்ரெக்ஷன் யாழ் கிளைக்கு

பரந்தன், பளை, கொடிகாமம், ஆனையிறவு போன்ற இடங்களில் வேலை செய்வதற்கு மேசன், மாபிள் பதிக்கக் கூடியவர்கள் உடனடியாகத் தேவைப் படுகின்றார்கள்.
தங்குமிட வசதியுடன் தகுந்த வேலைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.
விவரங்களுக்கு:
077 229 3922, 071 864 3645
(சி/11602)(10.6.3)



## i Buy Computers



Laptop, Desktop கணினிகள் விற்பனை செய்யப்படும்.Toshiba, Dell Sony, Compaq, Acer போன்ற அனைத்து மடிக் கணினிகளும் திருத்திக் கொடுக்கப்படும். இவற்றுக்குரிய உதிரிப்பாகங்களும் மாற்றித் தரப்படும்.
பாதுகாப்புக் கமராக்களும் (Security Camera) பொருத்தித் தரப்படும்.
நாடவேண்டி ய இடம்:
**i Buy Computers**
75/10, முன்னொழுங்கை, பலாலி வீதி,
திருநெல்வேலி. 077 707 2092
(39151)(3.6.11)

## தொண்டமானாறு செல்வச் சந்நிதி கந்தன் கருணை அன்னதான மண்டபம்
## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

21.08.2013 அன்று செல்வச் சந்நிதி ஆலயத்தில் நடைபெற்ற கந்தன் கருணை அன்னதான மண்டப அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் விவரம்

முதலாம் பரிசு - 04780
2 ஆம் பரிசு - 21523
3 ஆம் பரிசு - 05785

ஆறுதல் பரிசில்களுக்குரிய இலக்கம் :
17045, 10543, 03623, 22143, 28696

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல:
077 369 7078, 077 758 2743

குறிப்பு: 14 நாள்களுக்குள் பொருள்களைப் பெற்றுக் கொள்ள[illegible]
* ஆதரவளித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்

**கந்தன் கருணை அன்னதான மண்டப நிர்வாகிகள்.**
(C/11482)(3.6.11)


## சமய சந்நிதிகளில்

வட்டுக்கோட்டை மேற்கு பிங்கள மோதக மாமரப் பிள்ளையார் ஆலய அலங்கார உற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகிறது. விநாயகர் சதுர்த்தி தினமான செப்ரெம்பர் ஒன்பதாம் திகதி திங்கட்கிழமை உற்சவம் பூர்த்தியாகும். திரு விழாக் காலத்தில் விசேட பூசைகளும், திரு வீதி உலாக்களும் இடம்பெறும்.

* * *

கோண்டாவில் மேற்கு குமாரத்தை ஞான வைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 9.27 மணிக்கு நடைபெறவுள்ளது. இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை அடியவர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம் பெறும்.

* * *


சங்குவேலி ஸ்ரீ சிவஞான பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை அடியார்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு நடைபெறும். (ந)

### முதியோருக்கு இலவச மருத்துவ முகாம்

வடமராட்சி லயன்ஸ் கழகம் நடத்தும் முதியோர்களுக்கான இலவச வைத்திய சிகிச்சை முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குபுலோலிமேற்கு தம்பசிட்டி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தச் சிகிச்சை முகாமில் நீரிழிவு, பல், சரும நோய், பொது மருத்துவம் ஆகிய சிகிச்சைகளுடன் இரத்தப் பரிசோதனை, கண் பரிசோதித்து கண்ணாடிகள் வழங்குதல் ஆகியன இடம்பெறும். கரவெட்டிப் பிரதேச பொது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுதோகுமார் தலைமை யிலான வைத்தியர்கள்குழு இச்சிகிச்சை முகாமில் சிகிச்சைகளை வழங்கும். (ஓ-8)

## இளைஞனின் சடலம் மீட்பு

கிளிநொச்சி கோணாவில் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞன் ஒருவரின் சடலம் கடந்த புதன்கிழமை மீட்கப் பட்டுள்ளது. கோணாவிலைச் சேர்ந்த செல்வக்குமார் ஜினோஜன் (வயது -17) என்பவருடைய சடலமே மீட்கப் பட்டது. இது தொடர்பான இறப்பு விசாரணைகளைகிளிநொச்சிமாவட்டதின் இறப்பு விசாரணை அதிகாரி தா. அரியரத்தினம் மேற் கொண்ட [illegible] படைக்குமாறும் உத்தரவிட்டார்.(கு-6-400)

## வெற்றிடங்கள்

**Sanken** வடமாகாண கிளைக்கு
கீழ்வரும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

| | |
|---|---|
| திட்ட முகாமையாளர்- (கட்டடங்கள்-Site Manager) | முன் அனுபவங்களுடன் 40 வயதுக்குக் குறைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம் |
| வேலைத்தள பொறியியலாளர்கள்- (Site Engineer) | முன் அனுபவங்களுடன் 35 வயதிற்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம் |
| உதவி பொறியியலாளர்கள்- (Asst. Engineers Buildings) | முன் அனுபவமில்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம் |
| அலுவலக உத்தியோகத்தர்கள் (Admin Officers) | Should be required -G.C.E (A/L) with some construction experience |
| களஞ்சிய உதவியாளர்கள் (Stores Assistant ) | Should be required- G.C.E (O/L) Qualification |
| பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (Safety Officers) | Should be familiar in ISO Safety regulations |

Apply to -
jeyanthi@sankenconstruction.lk
Fax-0212224840
(C/11603)(10.6.3)

## மணமகன் தேவை

| ஆண்டு | நட்சத்திரம் | செவ்வாய் உண்டு | செவ்வாய் இல்லை | [illegible] | தகைமை | எதிர்பார்ப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1988 | உத்தரட்டாதி | செவ்.சனி-07 | - | 40 ¼ | MSC | லண்டன் |
| 1989 | சித்திரை -1 ஆம் | - | ✓ | 13½ | BSC | கனடா |
| 1992 | அவிட்டம் -1 ஆம் | செ.சூரி-02 | - | 26¼ | A/L | பிரான்ஸ் |
| 1990 | உத்தரம் -4 ஆம் | - | ✓ | 05½ | A/L | லண்டன் |
| 1992 | உத்தராடம் -2 ஆம் | - | செவ்.சூரி ✓ | 14½ | A/L | லண்டன் |
| 1992 | பரணி | - | ✓செவ்.சனி | 10¼ | A/L | ஆசிரியர் |
| 1986 | மிருகசீரிடம் -2 ஆம் | - | ✓ | 27¼ | A/L | பிரான்ஸ் |
| 1982 | மகம் | - | ✓ | 32 | A/L | பிரான்ஸ் |
| 1992 | திருவாதிரை | - | ✓ | 23¼ | A/L | [illegible] |
| 1987 | ஆயிலியம் -4ஆம் | - | ✓ | 03¼ | BA | இஞ்சினியர் |
| 1986 | அவிட்டம் - 4ஆம் | - | ✓ | 11 | BA | இஞ்சினியர் |
| 1991 | திருவோணம் | செவ்.-04 | - | 39¾ | A/L | பிரான்ஸ் |
| 1987 | அத்தம் | - | ✓ | 40 | BA | கனடா |
| 1976 | மகம் | செவ்-08 | - | 74¼ | BSC | இஞ்சினியர் |
| 1977 | திருவாதிரை | - | ✓ | 33 | ஆசிரியர் | ஆசிரியர் |
| 1985 | உத்தராடம் - 2ஆம் | - | ✓செவ்.சூரி | 33 | PHD | இஞ்சினியர் |
| 1988 | அவிட்டம் - 2 ஆம் | செவ்-04 | - | 47 | A/L | பிரான்ஸ் |
| 1992 | உத்தரட்டாதி | - | ✓ | 10½ | A/L | பிரான்ஸ் |
| 1984 | புனர்பூசம் -3 ஆம் | செவ்.சனி-02 | - | 33 | A/L | பிரான்ஸ் |
| 1992 | அச்சுவினி -3 ஆம் | செவ் -12 | - | 19 | A/L | பிரான்ஸ் |
| 1988 | பூசம் | - | ✓ | 48 | CMA | லண்டன் |
| 1980 | திருவாதிரை -3 ஆம் | செவ்.சனி-7 | - | 77 | ஆசிரியர் | ஆசிரியர் |
| 1983 | சித்திரை- 2 ஆம் | செவ் -08 | - | 78¼ | BA | லண்டன் |
| 1980 | மகம்- 2 ஆம் | செவ்.ராகு -12 | - | 66½ | A/L | லண்டன், ஜேர்மன் |

மேற்குறிப்பிடப்பட்ட யாழ்.இந்து கௌரவ குடும்ப மணமக்களுக்கு தகுந்த மணமகன்மார் தேவை. அத்துடன் டொக்டர்,இஞ்சினியர், எக்கவுண்டன், ஆசிரியர்கள் வர்த்தகர்கள், சுயதொழில் புரிபவர்கள், வெளிநாட்டு பிரஜாவுரிமை பெற்ற மணமக்கள், தாரமிழந்த மணமகள், மணமகன் குறிப்புக்கள் மிகவும் துல்லியமான கணிப்பீட்டுடன் கோவைப்படுத்தப்பட்டுள்ளன. (சர்வதேச இணைப்புக் கொண்டது)

சந்திக்கும் நேரம்
காலை - 6.00 -8.00, மாலை - 4.00 -9.00
(தொலைபேசி மூலம் முற்பதிவு செய்து கொள்வதன் மூலம் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.)

தொ.பே.: 077 519 3493, 077 684 9017
077 973 2033, 077 918 4646
Fax: 021 225 9049
email: srinagapusany@gmail.com

இணைப்பாளர்: திருநிறைவாளன்,
ஸ்ரீநாகபூஷணி அம்பாள் திருமணசேவை
மாதாஜி லிங்கேஸ்வர ஆலயம் அருகில், கைதடி கிழக்கு, கைதடி.
(39117)(5.6.2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மாந்தை கிழக்கு பிரதேச இணைப் பாளரும் பிரதேச சபை உறுப்பினரும், சமூக சேவையாளருமாகிய
**பொன்னுச்சாமி பிருந்தாபன்**
அவர்கள் கடந்த 14.08.2013 அன்று சமாதான நீதிவானாக
**நீதிவான் மா.கணேசராசா**
முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.
இவரை வவுனிக்குளம் நண்பர்கள் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

**நண்பர்கள்-வவுனிக்குளம்.**

---

නෝත්සී ලිමිටඩ්
நோத்சீ லிமிடெட்
## NORTHSEA LTD

### VACANCY - Post of Accountant (Factory)

Location : Gurunagar Factory, Jaffna
Service category : MM 1-1 2006
Salary scale : Rs: 25,640 – 3 x 665 – 7 x 735 – 15 x 925 – 46,655

**Basic Educational/ Professional Qualification and Experience:**

**External:**

Intermediate level qualification of ICASL/ CIMA/ ACCA/ Full qualified of HNDA / Degree in Accountancy /Business Management/ Commerce / Auditing from a recognized Institution or Universities which approved by University Grant Commission of Sri Lanka.

**Age:**
The applicant should not be less than 22 years and not more than 45 years, the upper age limit will not apply to the internal candidates.

**And**
The applicant should have at least 03 years experience in accounting and finance in managerial capacity in a Government Department/ Corporation/ Board or in a reputed Mercantile Establishment after obtaining the first degree or equivalent qualifications.

**Internal:**

The applicant should have the same qualifications and experience of 05 years satisfactory service in a post of Junior Manager Category JM 1-1 applicable to the relevant field. Age limit will not be applicable to internal candidates.

**Nature of Appointment:**
The above post shall be on permanent basis subject to 3 years' probation period.

**Other benefits:**
The Northsea Ltd shall contribute Employee Provident Fund of 12% and Employee Trust Fund of 3% of monthly salary of the employee, and the employee shall contribute of 8% to Employee Provident Fund. And the Government approved allowances applicable to company shall be paid.

**Method of Recruitment:**
The selection will be made on the order of merit determined by the interview panel based on selection criteria specified in the scheme of the recruitment of the Company. Applicants should be sent their full Bio-data with contact details of two non-related referees along with copies of educational/ professional qualification with previous position and work experience. The application should be sent by registered post to be received by **Chairman, Northsea Ltd, No. 244, Galle Road, Colombo – 4** on or before 10/09/2013. Please mark the post applied for on top left corner of the envelope.
Applications from those in Government Service Sate Corporation / board/company should be forwarded through their respective Head of the Institution.

(C/11489)(10,6,3)

---

## வாகன உரிமையாளர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!!

உங்கள் வாகனங்களுக்கு !
* Hire இல்லையா?
* Leasing / Finance கட்டுப்பணம் கட்ட தடுமாற்றமா ?
* வேலை/ வியாபார பழுவால் உங்களது வாகனத்தால் எவ்வித வருமானமும் ஈட்ட முடியவில்லையா?
* வாடகைக்கு அமர்த்தப்பட்ட உங்கள் வாகனத்தின் பராமரிப்பு, பாதுகாப்பு ஒரு பிரச்சினையா?
* போட்டித்தன்மையால் சரியான வாடகை கிடைப்பதில்லையா?
* வாகனத்தில் முதலீடு செய்வதால் இலாபம் பெற முடியாமல் போய்விடும் என்ற பயமா?

கவலையை விடுங்கள் உங்கள் வாகனங்களை (CAR, VAN, BUS, PICKUP, LORRY, METER - AUTO) எங்களுடன் இலவசமாக பதிவு செய்துகொள்வதன் மூலம் வடமாகாணம் உட்பட நாடளாவிய ரீதியிலான வாடிக்கையாளர்களை உங்களுக்கு நாம் பெற்றுத்தருவோம்.

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு :
021-567-7-567, 0773 6262 30
E mail: ramdxn@gmail.com
**OOR CABS SERVICES** (39133)(3.6.11)

---

## கடை வாடகைக்கு

யாழ்.நகர் கே.கே.எஸ் வீதி முட்டாஸ் கடை சந்திக்கு அண்மையில் மேல் மாடிக் கடை வாடகைக்கு உண்டு. (800ச.அடி)
தொடர்பு: 078 503 0884 (39160) (7.6.3)

## கடை, அறைகள் வாடகைக்கு

கிளிநொச்சி கச்சேரிக்குப் பின்னால் நான்கு அறைகள் A/C வசதியுடன் சகல வசதிகளுடனும் வாடகைக்குண்டு. கடை ஒன்றும் வாடகைக்கு உண்டு. (ஒரு வருட ஒப்பந்தம்)
ANURAJH87_IT@YMAIL.COM
ANURAJHRAJU@GMAIL.COM (39140)
தொடர்பு: 072 390 3028 (7.6.3)

## முட்டை தேவை

சில்லறையாகவோ/ மொத்தமாகவோ முட்டை தேவை.
தொடர்பு: 077 880 6952 (29503) (11.6.3)

## விற்பனைக்கு

தென்மராட்சி மீசாலையில் China Super Cup- 90 மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு : 077 729 8031
(29629)(12. 6.3)

## விற்பனைக்கு

NPXP XXXX இலக்கம் கொண்ட நீலநிற Japan super cup மிகவும் நல்ல நிலையில் Full coolar Model விற்பனைக்குண்டு. (பார்வையிடும் நேரம் தினமும் 6.00am-5.00pm)
தொடர்பு: இல. 19, டச்சு வீதி, சாவகச்சேரி. (29626) (7.6.3)

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதிக்கும் சிவன்பண்ணைச் சந்திக்கும் (ரெலிக்கொம் சந்தி) இடையில் 60' நீளமும் 15' அகலமும் கொண்ட முதலாம் மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு.
(39138) (7.6.3) தொடர்பு:077 728 3811

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள அலியோன்(ALLION) சில்வர் கலர் 2007ஆம் ஆண்டு கார் விற்பனைக்கு உண்டு.
(33237)(12. 6.3)
தொடர்பு: 077 728 3811

## U.S.A, U.K. Wedding Services
## மணமகன், மணமகள் தேவை

யாழ்.இந்து உயர் கௌரவ குடும்பம் U.K. PR, 1977 அச்சுவினி, 2ஆம் பாதம், 7இல் செ.கி.பா 35, Super market உரிமையாளருக்கு ஓரளவு படித்த, குடும்பபாங்கான மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. 1990, சுவாதி 2ஆம் பாதம். கி.ப.25, U.S.A PR, U.S.A (அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கியில் கணக்காளராகப் பணியாற்றும் மணமகளுக்கு ஓரளவு படித்த மணமகன் தேவை. தொடர்பு - 077 147 9416
(39155)(12.6.3)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1987இல் பிறந்த அரசவங்கியில் பணிபுரியும் மணமகளுக்கு பெற்றோர் படித்த மணமகனை எதிர்பார்க்கின்றனர்.
(39155)(12.6.3)
தொடர்பு - 077 065 2501

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி, இல. 320/2, பருத்தித்துறை வீதியில் உள்ள ஒழுங்கையில் 2 பரப்பு 16 குளி காணி விற்பனைக்குண்டு.
(39156)(12.6.3) தொடர்பு : 072 932 4438

## பதவி வெற்றிடம்

A/L படித்த சிங்களம் நன்கு பேசக்கூடிய ஆங்கில அறிவுடன் கூடிய பெண், காரியாலயம் ஒன்றிற்கு அவசரமாகத் தேவை.
தொடர்பு: 071 598 0980
071 872 2353
(39129) (7.6.3)

## வீடு வாடகைக்கு


நல்லூர், கைலாசபிள்ளையார் கோயிலுக்கு முன்பாக நாவலர் வீதியில் சிறிய குடும்பத்திற்கேற்ற பகுதி வீடு ஒன்று உடனடியாக வாடகைக்கு உண்டு. பிரபல பாடசாலைகள், கோயில்கள், கடைகள் அருகில் இந்த வீடு அமைந்துள்ளது.
தொடர்பு: 077 795 2114
(39123)(11.3.6)

---

## சேவை நலன் பாராட்டும் பிறந்தநாள் நல்வாழ்த்துக்களும்

**திரு.தில்லையம்பலம் பரமானந்தர்**
(மருந்துக் கலவையாளர், பிரதேச வைத்தியசாலை,கோண்டாவில்

Best Wishes



யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்துக்குட்பட்ட
முள்ளியான் (P.M.C.U)
பருத்தித்துறை(P.M.C.U)
கொக்குவில் (P.M.C.U)
தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை (Base Hospital)
கோண்டாவில் பிரதேச வைத்தியசாலை (Divisional Hospital)

வைத்தியசாலைகளில் 26 வருட சேவையினைப் பூர்த்தி செய்து இன்று (25.08.2013 ) ஓய்வுபெறும் எமது அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய தில்லையம்பலம் பரமானந்தர் அவர்கள் தமது ஓய்வுக் காலத்தில் எல்லா நலன்களும் சிறப்புக்களும் பெற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு வாழ இந்தப் பிறந்த நாளில் நல்லைக்கந்தனின் அருளாசியை வேண்டி வாழ்த்தி நிற்கும்
வாழ்க! வளமுடன்!!

**அருளானந்தன் குடும்பத்தினர்.**
யாழ்ப்பாணம்.
(39068)(5.6)

---

## PIONEER HOUSE FOR PUBLISHING & DISTRIBUTION (PVT) LTD.
## JAFFNA & VAVUNIYA

**Sales & Marketing Executives (male/female)**

We offer exciting income potential and career opportunities. We are represented throughout 21 countries in Asia.

- Age 19-30 years
- Basic salary + Travelling + commission
- Comprehensive Training Provided
- Management Position within 9 Months
- Overseas travels for achievers
- Given Priority for after A/L's (School Leavers)
- The candidates form Jaffna, Kilinochchi and Vavuniya will be given priority.
- The candidates from Batticaloa, Trincomale & Kalmunai will be provided Accommodation free.

**No.100, 2nd Floor,**
**Manipay Road, Jaffna.**
**Contact : Manager - Mr.G.Anthany** Call for an interview
**077 356 6835, 021 567 1130** (39134) (7.6.3)

---

## Jaffna College Institute of Technology JCIT

Established in 1974 under the Management Council of the Board of Directors of Jaffna College.

### Courses commence in Sep 2nd week 2013

**Craft Certificate Courses** Six Months full time Tamil Medium
சுய தொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்பைப் பெறுவதற்குமான பாடநெறிகள்.

01. Air Condition & Refrigeration
குளிரூட்டுதல் பயிற்சி நெறி

02. Machine Shop Practice
லேத் வெல்டிங் பிற்றிங் பயிற்சிநெறி

03.Radio,TV& Serving Practice
இலத்திரனியல் சாதனங்கள் திருத்துதல்

**Diploma Courses-One Year Full time (two semesters)**

**Civil Draughtsmanship**
Building Construction, Construction Materials,Sanitary Engineering, Engineering Science Engineering Drawing , Draughtsmanship,Quantity Surveying, AutoCAD,, English, Maths

**Computer Certificate Courses 2/3/4 months Part time**

**Microsoft Office**
- Ms Word
- Ms Excel
- Ms Access
- Ms Power point

**Internet & E-Mail**
Introduction (Optional),
WAN – Network Portals and search Engines.
(Including Boolean algebra)
HTML – Introduction

**Computer Graphic Designer**
- Page Maker
- Corel Draw
- Photoshop

**Web Development**
HTML,
JAVA Script,PHP
Server Connected

**Computer Application Assistant**
1. Maintenance files Folder 2.Perform word processing
3.Prepare spread sheets 4.Prepare Presentation
5.Maintenance Data bases 6.Create electronic files
7.Apply IT for Communication 8.Perform General Maintenance

**More Information**
Director,
Jaffna College Institute of Technology
Vaddukoddai, Sri Lanka.
T.P No.021 321 3139 021 225 0975
E-Mail ejcit@sltnet.lk Web: www.jcit.lk

Why we are Special
- Unlimited computer practical hours are offered.
- Payments could be made in 2 installments.
- Individual attention by qualified Lecturers .
- The computer laboratory is opened for flexible practical hours.
- Facilities: Hostel , library & Sports etc.

(C/11490)(3,5,6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 130

# 'மற்றும் ஒரு கற்பகதரு ஜம்பு....'


**ஜம்புப்பழம் மறைமுகமாக மார்பகப் புற்று நோய் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறைக் குறைப்பதாக ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.ஜம்புப் பழச்சாறு மூளை, ஈரல்களுக்கு நன்மையளிப்பதாகவும், ஜம்புப் பூவிலிருந்து பெறப்படும் சாறு காய்ச்சலைக் குறைப்பதாகவும், இலைகளிலி ருந்து பெறப்படும் சாறு இருமல், மூட்டுவாதத்துக்கு பயன்படுவதாகவும் சிறுநீரின் அளவை அதிகரிக்கும் தன்மையைக் கொண்டிருப்பதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன.**

எளிமையும் எண்ணற்ற சத்துக் களையும் கொண்டது ஜம்பு. இது வேர் முதல் இலை வரை பயன் படக் கூடியதும் மருத்துவ குணங்க ளைக் கொண்டதும், கோடை கால தாகத்தையும், பசியையும் தீர்க்கும் அரு மருந்தும் ஆகும்.

ஜம்பு மரத்தினுடைய வரலாறு, பயன்கள் எப்படி நடுவது என்பவை பற்றிப் பார்ப்போம்:-

**ஜம்பு மரத்தின் வரலாறு:**

1. முதலில் ஜம்பு மரத்தின் பெயர்கள் பற்றிப் பார்ப்போம்.
தமிழிலே 'ஜம்பு' என்றழைப்பது போல் ஆங்கிலத்தில் இதனை றோஸ் அப்பிள் (Rose apple), பெல் பழம் (Bell fruit), றோயல் அப்பிள் (Royal apple), வாக்ஸ் பழம் (Wax furit) என்றழைப் பார்கள்.
2. அதிலும் தாய்வான் நாட்டைச் சேர்ந்தவர்கள் கருஞ்சிவப்பு நிற மான ஜம்புப் பழத்தை (Black pearl) அதாவது கறுப்பு முத்து என்று அழைப்பார்கள்.
3. இதனுடைய தாவரவியல் விஞ் ஞானப் பெயர் Syzygium samarangense ஆகும்.
4. ஜம்பு மரம் இந்தியா, இந்தோ னேஷியா நாடுகளினதும், அந்த மான், நிக்கோபார், மலேயா தீவுகளின் கடற்கரையோர காடு களினதும் சுதேச மரமாகும்.
5. அதன் பிறகு, வரலாற்றுக்கு முந் திய காலத்திலேயே பிலிப்பைன்ஸ் தீவுகளில் அறிமுகப்படுத்தப்பட் டுள்ளது.
6. அதன்பிறகு இலங்கை உட்பட தென்கிழக்காசிய நாடுகளில் அறி முகப்படுத்தப்பட்டது.
7. அசோகச் சக்கரவர்த்தியின் மகன் 'மகிந்த' என்ற மன்னன் ஜம்பு மரத்தை இந்தியாவில் இருந்து கொண்டு வந்து இலங்கை மன்னன் தேவநம்பிய தீசனிடம் கொடுத்ததாக மகாவம்ச வரலாறு கூறுகிறது.
8. ஜம்பு மரம் உயர் வெப்ப மண் டலத்தின் தாழ் நிலங்களில் மிகச் சிறப்பாக வளரக் கூடியது.
9. இலங்கையின் காலநிலையைப் பொறுத்தவரையில் இது மிகவும் சிறப்பாக வளரக் கூடியது. அது வும் பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்கள் ஜம்பு மரம் கனிகளைத் தரக் கூடிய காலமாகும்.
10. ஒரு மரத்தில் இருந்து 700 வரையான கனிகளைப் பெறமுடி யும்.
11. ஒரு மரம் 15 அடி முதல் 50 அடி வரையும் வளரக் கூடியது.
12. முன்னைய காலங்களில் ஜம்புப் பழமரங்களை வீட்டில் அழகுக் காக பயன்படுத்துவார்கள். ஆனால் ஜம்புப் பழங்களை உண்டு பார்த்த பின் இப்போது இந்த ஜம்பு மரத் துக்கும் எமது இந்து புராணக் கதைகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை அறிய முடிகிறது.
13. விஷ்ணு புராணத்தில் இந்தப் பிரபஞ்சம், 7 தீவு கண்டங்களா கவும் அதனைச் சூழவுள்ள 7 சமுத்திரங்களாகவும் பிரிக்கப்பட் டது. ஒரு கண்டத்தில் ஜம்பு மரங் கள் செறிந்து காணப் பட்டதால் ஜம்புத் தீவு அதாவது ஜம்பு மரங் களின் நாடு என்று அழைக்கப் பட்டது என்று விஷ்ணு புராணம் கூறப்படுகிறது.
எம் எல்லோருக்கும் தெரிந்த அயல் நாடான இந்தியாவே முன்பு ஜம்புத் தீவு என்றழைக் கப்பட்டது.
14. விஷ்ணு புராணத்தின் இன்னு மொரு பகுதியில் இந்த ஜம்புப் பழங்கள் மிகவும் பெரியன. அதா வது யானையளவு பெரியன எனவும் மலையொன்றின் உச்சி யிலே காணப்பட்ட ஜம்பு மரங் களில் இருந்து பழுத்து பழங்கள் மலை உச்சியில் இருந்து கீழே விழுந்து வெளிப்பட்ட பழச்சாறு கள் எல்லாம் ஒன்று சேர்ந்து நதியாக ஓடியது எனவும் அதுவே ஜம்பு நதி எனவும் கூறப்படுகிறது.
15. அதைவிட இன்று இந்தியாவின் திருச்சிராப்பள்ளியின் அருகி லுள்ள ஸ்ரீ ரங்கத்தில் ஜம்புகேஸ் வர கோயிலின் ஸ்தல புரா ணத்தில் இன்றும் கோயிலில் காணப்படுகின்ற ஜம்பு மரத்தின் கீழுள்ள சிவலிங்கம் பற்றி ஒரு கதை இருக்கிறது.
சிவபெருமான் ஒருநாள் மர மொன்றின் கீழ் இருந்து தியா னம் செய்து கொண்டிருக்கும் பொழுது, அருகில் உள்ள மர மொன்றிலிருந்து பழம் ஒன்று இவர் அருகில் விழுந்தது. சிவ பெருமான் அந்தப் பழத்தை எடுத்து உண்டு விட்டு, அதனு டைய வித்தை வெளியே துப்பி னார். அந்த வித்திலிருந்து முளைத்த மரமே ஜம்பு மரமாக வும் சிவபெருமானே சிவலிங்க மாகவும் அவ்விடத்தில் இன்றும் வழிபடப் படுகிறது.
16. இராமாயணத்தில் இராமர் 14 ஆண்டு கால வனவாசத்தின் போது காட்டிலுள்ள இந்த ஜம்புப் பழங்களை உண்டார் எனவும் இராமாயணக் கதைகள் கூறு கின்றன.
17. இந்த ஜம்பு மரம் பெரிய மரக் கொப்புகளைக் கொண்ட தும். பெரிய நிழல் தரக்கூடிய குளிர்ச் சியான மரம் என்பதால் பல ஞானி கள், யோகிகள் இந்த மரத்தின் கீழே அமர்ந்து தியானம் செய் தார்கள் என பல கதைகள் உண்டு.



**பழம்:**

உணவாகப் பயன்படுகிறது. நீர்த் தன்மை கூடிய பழம். உடலின் குளிர்மையைப் பேணுகிறது. பழத் தில் பழச்சாறு செய்து பருகலாம். ஒரு சலரோக நோயாளியைப் பார்த்து ஒரு துண்டு மாம்பழம் உண்ணுங்கள் என்போம். ஒரு துண்டு சுவைத்தவரால் மீதியை விட்டு வைக்க மனம் வராது. இவ்வாறு உண்டு, சலரோகம் கட்டுப்பாடு இழந்து வைத்திய சாலையே வாசம் என இருப்போர் மத்தியில் ஜம்புப் பழத்தின் அறிமுக மானது ஒரு கொடை. இந்தப் பழத்தை விரும்பிய அளவு உண் ணலாம் கெடுதல் இல்லை.

ஜம்புப் பழம், இலை, பூ, விதைகள், வேர், பட்டை என்பவற்றில் மருத் துவத் தன்மைகள் இருப்பதாக ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள் ளன. சில ஆய்வுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

ஜம்புப் பழம் விற்றமின் சி கூடிய உணவாகவும், நார்த்தன்மை கூடிய உணவாகவும் காணப்படு கிறது நார்த் தன்மை காரணமாக உடலின் கொழுப்புத் தன்மை அதா வது cholesterol குறைவடைவ தாக ஆய்வுகளிலிருந்து அறியப் படுகிறது. சதையின் தொழிற்பாடு குறை வடைவதால் ஏற்படும் சலரோக நோயா ளிகளில் மாச்சத்து வெல்லமாக மாறுவதைக் கட்டுப் படுத்துகிறது.

ஜம்புப்பழ வித்தில் jumboline என்ற இரசாயனப் பதார்த்தம் காணப் படுகிறது. இது சலத்தில் வெளி யேறும் வெல்லத்தின் அளவைக் குறைப்பதாக ஆய்வுகளில் கண்ட றியப்பட்டுள்ளது. ஜம்புப்பழம் மறை முகமாக மார்பகப் புற்று நோய் ஏற் படுவதற்கான சாத்தியக்கூறைக் குறைப்பதாக ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. ஜம்புப் பழச்சாறு மூளை, ஈரல்களுக்கு நன்மையளிப் பதாகவும், ஜம்புப் பூவிலிருந்து பெறப்படும் சாறு காய்ச்சலைக் குறைப்பதாகவும், இலைகளிலி ருந்து பெறப்படும் சாறு இருமல், மூட்டு வாதத்துக்கு பயன்படுவதா யும் சிறுநீரின் அளவை அதிகரிக் கும் (diuretic) தன்மையைக் கொண்டிருப்பதாயும் ஆய்வுகள் கூறுகின்றன. ஜம்புப்பழ விதை களில் உணர்வழியியல் தன்மை இருப்பதாகவும், வேரில் வலிப்பு நோயைக் குறைக்கும் தன்மை காணப்படுவதாகவும் நம்பப்படு கிறது. மருத்துவம் தவிர விதைகள் நீக்கப்பட்ட பழத்திலிருந்து - பன்னீர், இலைச் சாற்றிலிருந்து வாசனைத் திரவியம் -(perfume), மரத்திலிருந்து வயலின், கிற்றார் போன்ற இசைக்கருவிகளும் உரு வாக்கப்படுகின்றன.

**நடுவது எப்படி:**

கீழ்வருவனவற்றை கருத்தில் கொண்டு நட வேண்டும்
2 X 2 X 2 அடி நீளம், அகலம், ஆழம் கொண்ட குழி வெட்டவும்.
மரக்கன்றுகளை இயற்கை உரம் கொண்டு மூடவும்.
முதற்கிழமை ஒவ்வொரு நாளும் நீர் ஊற்றவும்.
இரண்டாவது கிழமை இரண்டு நாள் களுக்கு ஒரு முறை நீர் ஊற்றவும்.
மூன்றாவது கிழமை மூன்று நாள் களுக்கு ஒருமுறை நீரூற்றவும்.
மூன்று மாதங்கள் கடந்த பின் கீழ்ப் பகுதியில் உள்ள பக்க கிளைகளை கத்தரித்து விடுவதன் மூலம் நேராக வளர்க்க முடியும்.
சிறிய நிலப்பரப்புகள் உள்ள வீடு களிலும் வளர்க்க முடியும்.
வருடத்துக்கு இரு தடவைகள் பழங் களைத் தரக் கூடியது. வலை கொண்டு மரத்தை மூடுவதன் மூல மும், பைகள் கொண்டு பழங்களை மறைப்ப தன் மூலமும் பறவைக ளின் தாக்கத்திலிருந்து பழங்களை பாதுகாக்கலாம்.
வீட்டிற்கொரு ஜம்பு மரம் நடுவோம் பயன் பெறுவோம்.

நீரிழிவு சிகிச்சை நிலையம்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## CIMA~UK பெறுபேற்றில் MCS மாணவர்கள் சாதனை

PO-75%



S.Kanisdda

இம்முறை வெளியான **CIMA** பெறுபேற்றில் **MCS** நிறுவன மாணவர்கள் அனைவரும் சித்தி பெற்றுள்ளனர். இதன் மூலம் **Managerial/Operational** மாணவர்களும் **100 %** சாதனை சித்தியைப்பெற்றுள்ளனர். இவ்வெற்றியினை கொண்டாடும் முகமாக செப்ரெம்பர் 1ம் திகதிக்கு முன் பதிவு செய்யும் மாணவர்களிற்கு **CIMA_UK Reg Fee** 16000 ரூபா புலமைப்பரிசிலாக வழங்க உள்ளோம். புலமைப்பரிசிலிற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் உங்களது **<NAME> <CIMASC>** என **type** செய்து 772 395 895 க்கு **sms** செய்யவும். **AL 2013** பரீட்சைக்குத் தோற்றிய மாணவருக்கான விசேட பிரிவுகள் ஆரம்பமாகின்றன. மேலதிக விபரங்கள் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள **MCS** வளாகத்தில். (C/11605)(6.3)

PO-74%



T.Sanjeevan

---

## கட்டாரில் உள்ள அல் மீரா ஹைப்பர் சுப்பர் மார்க்கெட்டில்

# உடனடி வேலைவாய்ப்பு

| Job Category | Qty | Salary QR | Salary RS |
|---|---|---|---|
| சேல்ஸ்மன் | 100 | 800 + 200 | 36,000/= |
| ஹெவி வெயிக்கல் டிரைவர் ( GCC ) | 20 | 1300 + 200 | 54,000/= |
| ஹெல்பர்( ஏற்றுதல்/இறக்குதல்) | 20 | 700 + 200 | 32,400/= |

AL /2427/Advt/17/2013

**நிபந்தனைகள் & சலுகைகள் :** 1 QRS = Rs. 36.00

- தங்குமிடம்,மருத்துவம் வழங்கப்படும். • உணவுக் கொடுப்பனவு 200 QRS வழங்கப்படும்.
- வேலைநேரம் ஒரு நாளைக்கு 8 மணித்தியாலம். • 2 வருட ஒப்பந்த கால முடிவின் பின்னர் போக - வர விமான சீட்டு வழங்கப்படும். • ஏனைய நிபந்தனைகளும், விதிமுறைகளும் கட்டார் நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது.



max adz

பாஸ்போட் உடன் கீழ்க்காணும் முகவரிக்கு விரைந்து வரவும்

**நேர்முகப் பரீட்சை செப்ரெம்பர் 2 ம் திகதி வெளிநாட்டு பிரதிநிதிகள் மூலம் நடைபெறும்**


**முன் அனுபவம் தேவையில்லை**

• அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் மாத்திரம் அறவிடப்படும். • இவ் அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்

**RODNEY**
FOREIGN EMPLOYMENT AGENCY

**றொட்னி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்**
இல. 287-1/2, ஹவ்லொக் றோட், கொழும்பு - 06. (மயூரா அம்மன் கோயில் எதிராக)
E-mail : rodneyagency@hotmail.com | web : www.rodneyrec.com
LL.No. : 2427 (C/11363)(6.3) **Tel : 0112552598 | 0773074744 | 0718126094**

---



# Want Qualified / Experienced Visiting Lecturers Islandwide for Human Resource Management

IPM Sri Lanka, the Nations' leader in HRM, which is fast expanding to meet the current and emerging demands of the HR profession, requires self-motivated, results-oriented professionals / HR Practitioners to enhance their lecture panel in Kandy, Kurunegala, Gampaha, Matara, Negombo, Jaffna, Vavuniya & Batticaloa regions.

### BASIC REQUIREMENTS

- Should be willing to serve in regions applied (no provisions for transport)
- Sufficient professional qualifications in the related subject/s including postgraduate degree/s
- Over 3 years of teaching / training / practical experience
- Preference will be given to candidates having IPM qualifications

### SELECTIONS

Discussion with short listed applicants will be held at locations convenient to both parties.

### CERTIFICATION

After an orientation programme, selected candidates are certified by the institute as resource personnel / trainers for the particular subject area.

Interested candidates may forward their CVs to the following e-mail address: dsathula@ipmlk.org Addressed to "Director of Studies, IPM". Preferable region should be mentioned in the application.

Please send your CV to Director of Studies by e-mail with the contact details of two non-related referees, stating the post applied for on the top left corner of the envelope, to the address given below within 7 working days of this advertisement.

**INSTITUTE OF PERSONNEL MANAGEMENT SRI LANKA (INC.)**
"HR House", No. 43, Vijaya Kumaranathunga Mw,
Narahenpita, Colombo 5.
Tel: 011-2856844 E-mail: dsathula@ipmlk.org Web: www.ipmlk.org

**IPM** Sri Lanka

www.skillsads.com

(C/11377)(6.3)

---

## வீடு விற்பனைக்கு

நல்லூர் - பருத்தித்துறை வீதிக்கு அண்மையில் 01½ பரப்புக் காணியுள் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு : 077 937 1896/072 625 8947

---

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள ஐஸ்கிறீம் ஸ்தாபனத்திற்கு வேலை அனுபவமுள்ள ஆள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். சம்பளம் பேசித் தீர்மானித்துக்கொள்ளலாம்.

(E/11610)(3.6.11) தொடர்பு: 077 661 5973

---

## SB TRAVELS & TOURS

SPECIAL AIR FARES

| | | | |
|---|---|---|---|
| MADURAI | 15,800/- | LONDON | 96,000/- |
| TRICHI | 16,500/- | MALDIVES | 21,800/- |
| CHENNAI | 15,800/- | MILAN | 85,000/- |
| BOMBAY | 26,800/- | TORONTO | 158,500/- |
| BENGALURU | 17,800/- | NEW YORK | 118,500/- |
| KOCHI | 17,500/- | MELBOURNE | 105,000/- |
| DELHI | 41,400/- | PERTH | 75,800/- |
| MALAYSIA | 31,600/- | CANTON | 65,500/- |
| SINGAPORE | 26,600/- | NARITA | 68,000/- |
| BANGKOK | 29,500/- | | |

*Condition Apply

VISA MASTER American Express Card Accepted

ONEWAY: SHARJA - 23,800/-, DUBAI -23,800/-, DOHA - 26,500/-
விரும்பும் நாட்டுக்கு விமான டிக்கட் செய்து தரப்படும். டோகா கடார், துபாய்க்கு பியுரோ அரேங்மென்ட் செய்து தரப்படும்.
E-mail: sbtravels99@yahoo.com
Hotline: 077 1083481

**No: 132 Sri Kathirasan Street, Colomb13.**
Tel: 011 2333322, 2540111, 2334470, 2540280 Fax: 011 2334460

---

## "புலமைப் பரீட்சையில் தோற்றும் மாணவச் செல்வங்கள் உயர் புள்ளிகளைப் பெற வாழ்த்துகின்றோம்."

நல்லைக் கந்தன் பெருந் திருவிழாவை முன்னிட்டு...

- 10% - 50% வரையான விசேட விலைக் கழிவு
- சமய நூல்கள் விசேட விலையில்

நூல்களின் சமுத்திரம் என்றும் உங்கள் கல்வியில் முத்தெடுக்க வைக்கும் நிறுவனம்
விரையுங்கள்! தேடுங்கள்! வாங்குங்கள்.

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (C/11609) (7.6.3)

---

# STUDY & WORK IN CANADA

## UK, NEW ZEALAND, AUSTRALIA,

SWEDEN, GERMANY, FRANCE, INDIA, UKRAINE, DUBAI, CYPRUS, ITALY, CARIBIEN COUNTRIES, MALAYSIA, SINGAPORE & SCHENGAN COUNTRIES

**CANADA** we assist you for
- Student Visa
- Work Permit Visa
- Super Visa
- Skill Migration
- Federal Skill Workers

**UK** we assist you for
Student Visa
Minimum Qualification
O/L with IELTS 4.0
- Holiday Maker Visa
- Family Sponsor
- Tourist Visa

MBBS/ MD/ BDS/ NURSING/ PHARMACY
in Caribien Countries (America)
Ukraine, Russia, Belarus, Georgia
Minimum Qualification: A/L with 2B, 1C or Equivalent

Aug, Sep, Oct Intake in Progress

We Assist for New Zealand, Canada, Australia & Shengan Countries Work Permits
100% Legal Assistance
Work Permits Available

ALL EMBASSY FORM FILLING ONLINE
FORM FILLING AND DOCUMENTATION

# SIEG CONSULTANTS

(Representative for overseas Colleges & Universities)
111/2, Brown Road, Kokuvil East, Jaffna.
(Near Technical College)
(C/11386)(6.3) Mobile: 072 3502611

---



# டபிள் நந்தி கூரை ஓடுகள்

- உயர் தரத்தில் உருவாக்கப்பட்டது
- ஒரு கூரை ஓட்டின் நிறை2.7 கிலோ கிராம்
- நவீன தொழிநுட்பத்தில் தயாரிக்கப்பட்டது
- கூரை ஓட்டை உடைத்து சோதனை செய்தால், 100% சுடப்பட்டிருப்பதை உணரலாம்
- 10 வருடத்திற்கும் மேற்பட்ட உத்தரவாதம்
- வீடுகளுக்கு நேரில் வந்து தரம் குறைந்த கூரை ஓடுகளை விற்பவர்களிடம் ஏமாறாதீர்கள்
- இலங்கை முழுவதும் முகவர்கள் உள்ளனர்

**கஸ்தூரி கூரை ஓடு தொழிற்சாலை**
**0776859225 / 0773427843** சந்தலங்காவ
**0770257800 / 0776405622** (C/11374)(6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் சூடு பிடிக்கிறது தேர்தல் பிரசாரம்

வடமராட்சி, ஓக.25

வடமராட்சிப் பிரதேசத்தில் மாகாண சபைத் தேர்தல் பிரசாரம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் சுதந்திரக்கட்சி அலுவலகங்கள் துன்னாலை, நெல்லியடி ஆகிய இடங்களில் திறக்கப்பட்டுள்ளன. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அலுவலகம் பருத்தித்துறை வீதி நெல்லியடியில் திறக்கப்படவுள்ளது. ஈ.பி.டி.பி மந்திகையில் உள்ள தனது அலுவலகத்தை தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தி வருகின்றது.

வடமராட்சிப் பிரதேசத்திலிருந்து போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், வே.சிவயோகன், கே.தர்மலிங்கம், இ.ஜெயசேகரன், ஐ.ம.சு. முன்னணி வேட்பாளர்களான ஐ.ஶ்ரீரங்கேஸ்வரன், சி.அகிலதாஸ், ஆகியோர் பல இடங்களுக்கும் சென்று ஊர்ப் பிரமுகர்களைச் சந்தித்து ஆதரவு திரட்டும் முகமாக கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றனர்.

சுவரொட்டிகளைப் பொறுத்தவரை ஐ.ம.சு.முன்னணி வேட்பாளர் சி.அகிலதாஸ், ஐ.ஶ்ரீரங்கேஸ்வரன் ஆகியோருக்கு ஆதரவான சுவரொட்டி கள் அதிகமாகவும் காணப்படுகின்றன. இப்பிரதேசத்தில் திரும்பும் திசை எங்கும் சுவரொட்டிகளைக் காணக்கூடியதாக இருக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களின் சுவரொட்டிகள் மிக அரிதாகவே காணப்படுகின்றன.

ஆரம்பத்தில் சுவரொட்டிகள் பொலிஸாரினால் அகற்றப்பட்டபோதிலும், தற்போது சுவரொட்டிகள் குறித்து பொலிஸாரினால் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

வடமராட்சிப் பிரதேசத்திலிருந்து போட்டியிடும் வேட்பாளர்களைத் தவிர, வெளியிடத்து ஐ.ம.சு. முன்னணியின் பல வேட்பாளர்களதும், கூட்டமைப்பின்வேட்பாளரான கஜதீபனது சுவரொட்டி களும் வடமராட்சியில் காணப்படுகின்றன. (ஓ-8)

# நல்லூர் ஆலயச் சூழலில்

யாழ்ப்பாணம், ஓக. 25

நல்லூர் கந்தன் ஆலய பதினான்காம் திரு விழாவான இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில் சமயச் சொற்பொழிவும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் 'திருமுறையும் வாழ்வும்' என்ற பொருளில் சைவப் புலவர் கா.கமலநாதனின் சிறப்புச் சொற்பொழிவும், வடலியடைப்பு இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை, ஏழாலை களவாவோடை ஶ்ரீ நாகபூசணி அம்பாள் அறநெறிப் பாடசாலை மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெறும். விசேட நிகழ்வாக திருமதி. மாணிக்கராஜ சர்மா அனந்தலட்சுமியின் மாணவர்களின் இன்னிசை நடை பெறும்.

★ ★ ★

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.45 மணிக்கு தெய்வீக இசையரங்கம் நடைபெறவுள்ளது.

இசை அரங்கில் பாடல்களை திருமதி ஶ்ரீரஞ்சினி ரமணா வழங்க, அணிசேர் கலைஞர்களாக வயலின்-கே.குருபரன், மிருதங்கம்-பிரம்மஶ்ரீ வி. ரமணா, கெஞ்சிரா- ஆர்.சிவராமன் ஆகியோர் கலந்துகொள்வர்.

★ ★ ★

நல்லூர் கந்தனின் பெருந் திருவிழாவை முன்னிட்டு சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் நல்லை ஆதீனத்தில் நடத்தும் தெய்வீக இசைக் அரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு இசை கலா மாமணி வைஷ்ணவி ஜெயச்சந்திர வைரவமூர்த்திக் குருக்களின் பாட்டுக் கச்சேரி நடைபெறவுள்ளது.

★ ★ ★

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் நடைபெறும் மகாபாரத தெய்வீகத் தொடர் இசைப் பேருரை இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு ஆரம்பாகும். பிரம்மஶ்ரீ சிவ.வை. நித்தி யானந்த சர்மா 'அரங்கேற்றம்' பற்றி இசைப் பேருரை நிகழ்த்துவார்.

★ ★ ★

சின்மயாமிஷன் ஆச்சிரம வதி விட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்யா சுவாமிகள் 'உருவ வழிபாடு' என்னும் தலைப்பில் இன்று இரவு 7.15 மணிக்கு நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் சொற்பொழிவு ஆற்றுவார். (ரு-86-7-14)

# முதுகல்வி மாணி நேர்முகப் பரீட்சை செப்ரெம்பர் 2 இல்

யாழ்ப்பாணம் ஓக. 25

எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற இருந்த முதுகல்விமாணிப் பட்ட நேர்முகப் பரீட்சை செப்டெம்பர் 2 ஆம் திகதி இடம்பெறும் என்று யாழ்.பல்கலைக் கழகத்தின் உயர் பட்டப் படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார். பல்கலைக் கழக [illegible] உயர் பட்டப் படிப்புக்கள் பீடத்தினர் தெரிவித்தனர். (ஓ-50)

## கண்ணீர் அஞ்சலி



ஶ்ரீமதி
நகுலேஸ்வரி அம்மா
ஷண்முகநாதக் குருக்கள்
அவர்களின் சிவபதப்பேறு குறித்த
கண்ணீர் அஞ்சலி

மாவை முருகன் திருவடி பணிந்து மறைவழி தொடரும் பணிபல புரிந்தும்
தேவையுனது அருளே என்றும் தேடியே இருகை தொழுதநற் பேறால்
சிலைமகிழ் செல்வன் திருவடி அடைந்தீர் சீர்பணி யாலே அடிதொழும் பேறால்
சேவையிதுவே போதுமென்றும்மை தேடியே முருகன் அழைத்திட்டானோ?

அம்மா உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
மாவைக் கந்தன்
மாகேஸ்வரபூசைத் தொண்டர் சபையினர்

சி (11493)(12. 3-6)

## கண்ணீர் பூக்களால் அஞ்சலி



ஶ்ரீமதி
நகுலேஸ்வரி அம்மா
ஷண்முகநாதக்
குருக்கள்

நகுலேஸ்வரமெனும் புனித பூமியதில்
நகுலேஸ்வரர் சமேத நகுலேஸ்வரி அம்பாள் அருளால்
நகுலேஸ்வரியென்ற நாமம் சூடியிப்
புவிதனில் நகுலேஸ்வரக் குருக்களின் உடன் பிறப்பானவரே,

கீரிமலைத் தலமதனின் கீர்த்தியும் பெருமையும்
பார்புகழ் சேர் சிறப்பது கொண்டிலங்கிடவும்
மாவைக் கந்தனின் அருட்கடாட்சமதை
வேலவனின் அடியவர் பெற்றுய்ந்திடவும்

ஆதீன கர்த்தாவாம் ஷண்முகநாதக் குருக்கள் கரம் பற்றி
ஆறுமுகப் பெருமானுக்கு அல்லும் பகலும் பணி செய்தே
அவன் பாதம் சரண் புகும் பெரும்பேறு பெற்றீர் நீர்
ஆனாலும் உம் இழப்பு அவனிக்கே பேரிழப்பு

உம் இழப்பால் துயருறும் சுற்றத்தார் உற்றாருடன்
நும் ஆத்ம சாந்திக்காக வேலவனை வேண்டுகிறோம்
மாவையிலே அருளாட்சி செய்யும் வேல் முருகா,
அம்மாவின் ஆத்மா சாந்தி பெற அருள் செய்வாய்.

(C/11498)(10,6,3) நகுலேஸ்வர ஆதீனம், கீரிமலை.

## முதலாம் ஆண்டு நினைவுகள்

மண்ணுலகில்
10.11.1950

விண்ணுலகில்
25.08.2012



அமரர் கிருபைரட்ணம் பொன்னம்பலம்

வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் (மனிதருக்கல்ல)
ஆண்டவருக்கு உரியவர்கள். - ரோமர் 14: 8 -

தேவாலய வீதி,
[illegible]

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்கள்



### திருமதி சவுந்தரக்குமார் சாந்தி

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கனடா மிசிசாகாவை வசிப்பிடமாகவும் கொண்ட சாந்தி சவுந்தரக்குமார் 18-08-2013 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சிவபாக்கியம் தம்பதியரின் ஏக புதல்வியும், பேரம்பலம், காலஞ்சென்ற நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சவுந்தரக்குமாரின் (நில அளவையாளர், இலங்கை) அன்பு மனைவியும்,சுஜன், சித்ரா ஆகியோரின் அன்புத் தாயும்,சிவராஜா(ஆஸ்திரேலியா), லோகேஸ்வரன்(கனடா), கிருபாகரன்(கனடா), சர்வானந்தன் (ஆஸ்திரேலியா), நித்தி யானந்தன்(அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவபூரணி(மீனா), சாந்தரூபி(வசந்தி), உமா, ராகினி, லக்ஷி, சவுந்தரராஜன் - பாமா(லண்டன்), சவுந்தரதேவி - அருள்பரன் (கனடா), சவுந்தரநாதன்- யோகேஸ்வரி(கனடா) ஆகியோரின் மைத்துனியும்,ரஜீவ், ஜெனனி, யுதீஷ், வாகீஷ், ஷோபிகா, சகானா, நிவிதா, லவீஷ் ஆகியோரின் ஆசை அத்தையும், ஐங்கரன், செந்தூரன் ஆகியோரின் சிறியதாயும், அபிராமி, அருண் ஆகியோரின் அன்பு மாமியும், ஜெனனி, ரேவதி ஆகியோரின் பெரிய தாயும் ஆவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

பார்வைக்கு: வெள்ளிக்கிழமை : 23.08.2013 - 5 பி.ப - 9 பி.ப.
சனிக்கிழமை : 24.08.2013 - 5 பி.ப - 9 பி.ப.
கிரியை : ஞாயிற்றுக்கிழமை : 25.08.2013 - 9 மு.ப -11.45 மு.ப.

முகவரி: Scott Funeral Home Mississauga Chapel,
420 Dundas Street East, Mississauga,
ON L5A1X5, Canada.

தொடர்புகளுக்கு:
சவுந்தரக்குமார் (கணவர் - கனடா) - +19052759237,+14169399324
லோகேஸ்வரன் (அண்ணா - கனடா)- +1647 295 9260
கண்ணன் (மைத்துனன் - கனடா) - +14168939342

(சி/11376)
(45.6.3)

### அட்வகேட் சி.பஞ்சலிங்கம்



புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிரேஷ்ட அட்வகேட் சிவப்பிரகாசம் பஞ்சலிங்கம் நேற்று முன்தினம் (23.08.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான புறக்டர் சிவப்பிரகாசம் - தில்லை நாயகம் பிள்ளை தம்பதியரின் மகனும், ஶ்ரீஜெயதேவியின் அன்புக் கணவரும், மகாலிங்கம் (இளைப்பாறிய பொறியியலாளர்- இங்கிலாந்து), காலஞ்சென்ற அட்வகேட் எம்.எஸ்.சுந்தரலிங்கம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 8 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கியான்காடு இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கொடிகாமம் வீதி,
புலோலி.

தகவல்: மனைவி
T.P- 077 852 7779

(C/11601)(3.6.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கல்விக் கொள்கைத் திருத்தம் நடைமுறைச் சாத்தியமாக....

★ தமது பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பாத பெற்றோரைத் தண்டிக்கச் சட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

★ ஐந்து வயது முதல் பதினாறு வயது வரையான சகல பிள்ளைகளுக்கும் கல்வி கட்டாயமாக்கப்பட வேண்டும்.

கல்விச் செயற்பாடுகள் தொடர்பான, நாடாளுமன்ற விசேட செயற்குழு செய்துள்ள பல பரிந்துரைகளில் மேற்குறிப்பிட்ட இரண்டும் அடங்குகின்றன.

குறிப்பிட்ட, நாடாளுமன்ற ஆலோசனைக் குழுவின் அறிக்கையை கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனா கடந்த வாரம் நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றினார்.

பண்புசார், தரம்மிக்க, சமநிலையான கல்வியைப் பெறுவதற்கு, சகல பிள்ளைகளுக்கும் நியாயமான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். அது அரசின் முக்கிய பொறுப்பாகும்.

இலவசக் கல்வி சகல பிள்ளைகளுக்கும் கிடைப்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்குவது அரசின் பொறுப்பாகும்.

அதேபோன்று, இலவசக் கல்விக்கான சந்தர்ப்பத்தை உறுதி செய்வதும், பாதுகாப்பதும் அரசின் பொறுப்பே என்றும் நாடாளுமன்ற ஆலோசனைக் குழுவின் அறிக்கை வலியுறுத்துகிறது.

நாடாளுமன்ற விசேட செயற்குழு பல புதிய நல்ல கல்விசார் விடயங்களைப் பரிந்துரை செய்துள்ளது.

நாட்டின் எதிர்காலச் சந்ததியினரான இப்போதைய இளையவர்களுக்கு, மாணவர்களுக்கு கட்டாயக் கல்வி புகட்டப்பட வேண்டும் என்ற எடுகோள் மிகவும் வரவேற்கத்தக்கதே.

ஆனால் அதற்கான செயன்முறைத்திட்டம் வெற்றியளிக்க வல்லதாக இருக்க வேண்டும் என்பது பிரதான தேவையாகும்.

உயிர் வாழ்வதற்கு மிக முக்கியமான உணவைப் பெறுவதற்கு வசதியற்ற குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு உதவுவதற்கான, நடைமுறைச் சாத்தியமான நடைமுறைத் திட்டங்கள் அவசியம்.

அவற்றை இனங்கண்டு செயற்படுத்தும் வல்லமையும், அவற்றில் ஊழலுக்கு இடம் கொடுக்காத கட்டுப்பாடுகளும் தேவை.

இலவசக் கல்வி முறை எமது நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுச் சுமார் 7 தசாப்தங்கள் ஆகிய போதிலும், ஆரம்பக் கல்வி என்ன நிறம் என்று தெரியாத மிகப் பெரும் எண்ணிக்கையானோர் உள்ளனர் என்ற நிலை முற்றாக மாறவில்லை.

அரசாங்கங்கள் மாறும் போதெல்லாம் கல்விக் கொள்கைகள் முற்றாக மாற்றப்படாவிட்டாலும், அவை பல வகைகளில் சீண்டப்படுவது இந்த நாட்டில் ஒரு கைவந்த கலை எனலாம்.

கால மாற்றங்கள் கருதி கல்விக் கொள்கைகளைப் புதுப்பிப்பதும், திருத்திக்கொள்வதும் ஏற்புடையதே. அதனையும் தாண்டி அரசுகளும் அவற்றின் பங்காளிகளும் தமக்குச் சரியெனக் கொள்பவற்றை மட்டும் மேலோங்கி நிற்கச் செயற்படுவது இந்த நாட்டின் சாபக்கேடுகளில் ஒன்றாகி விட்டது.மாறி மாறிப் பதவிக்கு வரும் ஆட்சியாளர்களின் தூர நோக்கற்ற, செயன்முறை வளர்ச்சியோ அல்லது காலத்துக்கு ஏற்ற கல்விப் பரிமாணமோ இல்லாத திட்டங் களையும் வலிந்து பொருத்திவிடுவது வழமையாகி விட்டது.

இப்போது முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள கல்வி முறை மாற்றங்களுக்கும் அந்த நிலை ஏற்படாமல் பார்த்து எச்சரிக்கையுடன் செயற்படுவது பிரதானமானதும் அவசியமானதும் ஆகும்.

அரசாங்கங்கள் மாறும் போதெல்லாம் கல்விக் கொள்கைகள் மாற்றப்படுவதும், முந்தியவை முற்றாகவே மறக்கப்படுவதும் எங்கள் நாட்டைப் பிடித்த ஒருகையான பிணி எனலாம். அது நீக்கப்பட வேண்டும்.

இலவசக் கல்விக்கு வலுவூட்டுவதாகக் கூறியவாறே, அதனால் கிடைக்கவல்ல பெறுமானமுள்ள பயன்களைத் தடுக்க வழி செய்வது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல.

பாடசாலைகளுக்குத் தமது பிள்ளைகளை அனுப்பாதவர்களுக்கு, - அவர்களின் பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் சென்று படிக்காததே பெற்றோருக்கு ஒரு தண்டனை - என்று கூறப்பட்ட காலம் போலன்றி அரசும் அதன் அதிகாரிகளும் செயற்படுவார்களா? பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்....!

# வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்காக அபிவிருத்திப் பணிகள் துரிதமாகின்றனவா?

போர் இடம்பெற்ற வலயத்தில் தொடர்ந்தும் அமைதி நிலைத்து நிற்பதற்கு அரசியல் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என இலங்கையின் வடக்கில் செயற்படும் எதிர்க்கட்சித் தலைவர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இலங்கையின் வடக் கில் 2009இல் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட நிலையில் பல ஆண்டுகள் கால இடைவெளிக்குப் பின்னர் முதன் முதலாக செப்ரெம்பரில் நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்காக மக்கள் தம்மைத் தயார்ப்படுத்தி வருகின்றனர்.

அரச அதிகாரங்களை நாம் பெற்றுக் கொள்வதற்கு முன்னர், முதலில் எங்களை நாங்களே நிதி ரீதியாக பலப்படுத்திக் கொள்ளவேண்டிய தேவையுள்ளது என வடக்கு மாகா ணத்துக்கு உட்பட்ட கிளிநொச்சி நகரைச் சேர்ந்த வாக்காளரான ஜெயம் சுப்ர மணியம் தெரிவித்துள்ளார்.

### ஆடைத் தொழிற்சாலை திறப்பும் அதிவேக நெடுஞ்சாலை அமைப்பும்

திட்டமிடப்பட்ட இத்தேர்தல் காரணமாக இலங்கை அரசு, அபிவிருத்தித் திட்டங்களை மிகத் துரிதமாக மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது. இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் சீன உயர் மட்டப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடிய போது, இலங்கையின் தலைநகர் கொழும்பையும், வடக்கில் உள்ள யாழ்ப்பாணத்தையும் இணைப்பதற்கான கிட்டத்தட்ட 400 கிலோமீற்றர் வரையான அதிவேக நெடுஞ்சாலை ஒன்றை அமைப்பதற்காக பல பில்லியன்கள் செலவில் மேற்கொள்ளப்படும் திட்டத்தை துரிதப்படுத்துமாறு கோரியிருந்தார். இலங்கையின் வடக்கிலுள்ள வவுனியாவில் 150 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் அமைக்கப்பட்ட ஆடைத் தொழிற்சாலை ஒன்றைத் திறந்து வைத்த பின்னரே, இலங்கை ஜனாதிபதி அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தைத் துரிதப்படுத்துமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கு ஒரு வாரத்தின் பின்னர், கொழும் பில் இருந்து வடக்குக்கான தொடரூந்துப் பாதை அமைக்கும் பணி கிளிநொச்சி வரை பூர்த்தியாக்கப்பட் டுள்ளதாக இலங்கை அரசு அறிவித்தது. இந்திய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் இத்திட்டம் 23 ஆண்டுகளின் பின்னர் இலங்கையின் வடக்கில் முன்னெடுக்கப்படுகிறது.

செப்ரெம்பரில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு எந்தவொரு திட்டத்தைத்தானும் துரிதப்படுத்த வேண்டும் என அறிவித்தல் வழங்கப்படவில்லை என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

### அபிவிருத்தியின் வேகம் போதாது

நாங்கள் நிறையத் துன்பங்களை அனு பவித்து விட்டோம். போர் முடிவடைந்த பின்னரும் கூட, இங்கு அபிவிருத்திப் பணிகள் மிகமெது வாகவே மேற்கொள்ளப்படுகின்றன என போரால் அதிகம் பாதிக்கப்பட்ட கிளிநொச்சியைச் சேர்ந்த வடிவேல் சண்முகநாதன் என்கின்ற வாக்காளர் தெரிவித்துள்ளார்.

1.1 மில்லியன் வரையான மக்கள் வாழும் இலங்கையின் வடக்கு மாகாணத்தில் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் 460,000 வரையான மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறியுள்ளனர்.

போரின் போது அழிக்கப்பட்ட 145,000 வரையான வீடுகளில் 70,000 வரையான வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை. இலங்கையில் வேலையற்றோர் வீதமானது வடக்கிலேயே அதிகம் காணப்படுகிறது. அதாவது இந்த வீதமானது 5.2 சதவீதமாகக் காணப்படுவதாக அரச தகவல்கள் தெரிவிக்கின்றன. தேர்தலில் எந்தத் தரப்பினர் வெற்றி பெற்றாலும் அவர்கள் வீடமைப்பு மற்றும் வேலை வாய்ப்பை முதன்மைப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

### வடக்கு மக்களுக்கும் சம உரிமை வேண்டும்

வடக்கில் வாழும் மக்கள் சமஉரிமை பெற்று வாழவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். வீடமைப்பு, போக்குவரத்து, தொழில் மற்றும் விவசாயம் போன்றவை இங்கு அத்தியாவசியத் தேவைகளாகக் காணப்படுகின்றன. மக்கள் இந்தத் தேவைகளைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. இவற்றை மிக விரைவாகப் பூர்த்தி செய்ய வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடும் தம்பிராஜா குருகுலராஜா தெரிவித்துள்ளார்.

அதிகாரப் பகிர்வு என்கின்ற கோரிக்கை, தற்போது மக்கள் அடைந்து கொள்ள முடியாத தேவைகளை மூடி மறைப்பதாகவும், போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற சில அனைத்துலக நாடுகள் தொடர்ந்தும் அரசியல் அதி காரப் பகிர்வை மட்டும் முதன்மைப்படுத்துவதால் அடிப்படைத் தேவைகள் கவனிக்கப்படவில்லை எனவும் சில வாக்காளர்கள் அதிருப்தி வெளியிட் டுள்ளனர்.

1987இல் இந்திய -இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர், மாகாணங்களுக்கு அரசியல் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டதுடன் இதற்காக மாகாண சபைகளும் உருவாக்கப்பட்டன.இலங்கையில் உள்ள மொத்தம் ஒன்பது மாகாணங்களில் எட்டு மாகாணங்களுக்கான மாகாண சபைகள் ஏற்கனவே தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்டவை. ஆனால் வடக்கு மாகாணத்துக்கு மட்டும் மாகாண சபை உருவாக்கப்படாது, அரசால் நியமிக்கப்பட்ட ஆளுநரின் தலைமையில் பொது நிர்வாகம் முன்னெடுக்கப்படுகிறது.

### வடக்கில் அதிகாரங்களைப் பகிர ஜனாதிபதி முன்வரமாட்டார்

வடக்கு மாகாணம் தவிர ஏனைய எட்டு மாகாணங்களும் நாட்டை ஆட்சி செய்யும் கட்சியால் கட்டுப்படுத்தப்படுகிறது. இதனால் இந்த மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என எவரும் கோரிக்கை விடுக்கமாட்டார்கள். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செல்வாக்கு அதிகமுள்ள வடக்கு மாகாணத்தில் மாகாண சபை நிர்வாகம் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் போது இங்கு அதிகாரங்கள் பகிர்ந்து வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெறும்.

இவ்வாறான அதிகாரப் பகிர்வை இலங்கை அரசு ஒருபோதும் விரும்பவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் மிகவும் முதன்மைப்படுத்தப்படும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வடக்கு மாகாண சபையிடம் கையளிக்க இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ ஒருபோதும் விரும்ப மாட்டார். இவ்வாறான அரசியற் பின்னணியில் எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதியன்று வடக்குமாகாண சபைத் தேர்தல் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எது எவ்வாறிருப்பினும், இத்தேர்தல் மூலம் வடக்கு மாகாணத்தில் அபிவிருத்திப் பணிகள் மிகத் துரிதமாக மேற்கொள்ளப்படும் என வாக்காளரான சண்முகநாதன் நம்பிக்கை கொள்கிறார்.

மாகாணத்துக்கான தேவைகளை இனங்கண்டு பொறுப்புடன் செயற்படக் கூடிய மாகாண சபை ஒன்று தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் போது இது எமக்கு உதவியாக இருக்கும் எனவும் சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

(நன்றி: புதினப்பலகை)

**போரின் போது அழிக்கப்பட்ட 145,000 வரையான வீடுகளில் 70,000 வரையான வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி கமலாவதி சிவசுப்பிரமணியம்

காரைநகரைப் பிறப்பிடமாகவும் சிங்கப்பூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாவதி சிவசுப்பிரமணியம் (23.08.2013) வெள்ளிக்கிழமை சிங்கப்பூரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-இராசம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-மகேஷ்வரி தம்பதியினரின் மருமகளும் சிவசுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2013) ஞாயிற்றுக்கிழமை சிங்கப்பூரில் நடைபெறும் அதேவேளை அந்த நினைவு நிகழ்வுகள் அவரது காரைநகர் பயிரிக்கூடல் இல்லத்திலும் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பயிரிக்கூடல், காரைநகர். (39152)(7.6.3) ந. விஜயகுமார்

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



வையகத்தில் 17.01.1954
வானகத்துள் 26.07.2013

## திருமதி சந்திராதேவி (சந்திரா) செல்வலிங்கம்

என்றும் உங்கள் நினைவில்
துயருறும்
கணவர் செல்வலிங்கம்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

உடுவில் இலந்தையடி,
சுன்னாகம்.
(39101) (7.6.3)

# ஓராண்டு நினைவஞ்சலி



செல்வி
## சிவபாலன் கீர்த்திகா

மலர்வு 03.10.1999
உதிர்வு 25.08.2012

ஆண்டொன்று சென்றாலும்
ஆறாதம்மா உன் நினைவுகள்
ஆல விருட்சமாக நிழல் தருவாய்
என இருந்தோம்
ஆறாத துன்பத்தில் ஆழ்த்தி விட்டதேனம்மா
வேண்டுகின்றோம் உன் ஆத்ம சாந்திக்காக

வேப்பங்குளம்,
ஓமந்தை. குடும்பத்தினர்.

# வரத்தலம் கற்பக விநாயகருக்கு இன்று கொடி

தெல்லிப்பழை- பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய வருடாந்த பெருந் திரு விழா இன்று 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து பன்னிரு தினங்கள் நடைபெறும் திருவிழாவில், எதிர்வரும் 04 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ந)

## சிறுகதைத் தொகுதி நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 25
திருமதி சந்திரா தனபாலசிங்கம் எழுதிய பிறந்து விட்ட புது யுகத்தில் 'உருப்பெறும் உணர்வுகள்' சிறு கதைத் தொகுதி வெளி யீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறை விரிவுரையாளர் ஈஸ்வரநாதபிள்ளை குமரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன ஓய்வு நிலை தமிழ் நிகழ்ச்சிப் பணிப்பாளர் சி. வன்னியகுலம் கலந்துகொள்வார். (ந)

## கலந்துரையாடல்

தீவகக்கல்வி வலயத்துக்குட்பட்ட அதிபர்களுடனான கலந் துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு, வலய கணனிவள நிலையத்தில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோண் குயின்ரஸ் தெரிவித்துள்ளார். (ந)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னையா மன்மதராசா
(ஆசாரி)

ஆண்டுகள் இரண்டு ஆனதப்பா
ஆனால் உங்கள் நினைவுகள்
மட்டும் எம்மைவிட்டுப் போகவில்லையே!
வாழ்வுக்கோர் உதாரணமாய்
வாழ்ந்தவர் நீங்கள் - இன்று
எங்கள் பேச்சிலும் மூச்சிலும் நித்தம்
நீங்கள் வாழ்வீர்கள் தினம் தினம்

நாளைமறுதினம் (27.08.2013) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் இரண்டாம் ஆண்டு நினைவு நிகழ்விலும் மதியபோசனத்திலும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

4ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளை.
(39125)(45.3.6)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்

அமரர்
## வேலுப்பிள்ளை அன்னலிங்கம்



பிறப்பு 31.02.1954
இறப்பு 25.07.2013

25.07.2013 வியாழக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்அமரர் வேலுப்பிள்ளை அன்னலிங்கம் அவர்களது அந்தியேட்டிக் கிரியை நிகழ்வுகள் சதய நட்சத்திரமும், திருதியை திதியும் கூடிய 23.08.2013 வெள்ளிக்கிழமை கீரிமலை தீர்த்தக் கரையில் இடம்பெற்றன. இன்று (25.08.2013)ஞாயிற்றுக் கிழமை மன்னார், உப்புக்குளத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியையிலும், மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புதியதெரு,
இல.565, உப்புக்குளம்,மன்னார். (39120) (3.5.6) குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
## இந்திரா சபாரத்தினம்

அன்னையின் மடியில் 10.02.1950
ஆண்டவன் அடியில் 25.08.2012

திதி: பூர்வ பட்ச அட்டமி
(12.09.2013)



ஆண்டொன்று மறைந்தது
அக்கா உங்களை இழந்து!
ஆறவில்லை இன்னும்
எங்கள் மனத்துயரம்!
அக்கறையில் அன்னையாய்
பழகுவதில் குழந்தையாய்!
சிரிப்பதற்கு சிநேகிதியாய்
சிந்திப்பதில் சகோதரியாய்!
குலவிளக்காய் ஒளி வீசி
குலதெய்வம் ஆனவரே!
கும்பிட்டு நிற்கின்றோம்
குவிந்த கரங்களுடன்...!

என்றும் உங்கள் நினைவுடன்
சகோதரிகள், சகோதரன்,
மச்சான்மார், மச்சாள்,
பெறாமக்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர்.

"திலக வாசம்" (C/2741) (7.6.3)
தபாலக வீதி, சாவகச்சேரி.

இல. 5 கல்லடி வீதி,
சாவகச்சேரி.

# நீங்கா நினைவலைகள்

18ஆம் ஆண்டு



தோற்றம் 22.11.1939
மறைவு 12.09.1995

செல்லையா சிவராசா
அபரபக்க சதுர்த்தி

2ஆம் ஆண்டு



தோற்றம் 29.12.1942
மறைவு 19.08.2011

திருமதி லிங்கேஸ்வரி சிவராசா
அபரபக்க பஞ்சமி

திதி

குடும்பத்தின் ஒளிவிளக்காய் குவலயத்ததே மிளிர்ந்தோரே
கூரறிவு கொண்டோராய் எமையென்றும் வளர்த்தவரே
பாரினிலே பண்புயர் தெய்வங்களாய் திகழ்ந்தோரே
பல்லாண்டு சென்றிடினும் மறவோமே உம்மை
சாந்தி!

என்றும் நினைவில்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அமுதகராசி பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.
(39978)(12.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வான் விற்பனைக்கு

250-XXXX இலக்கமுடைய Town Ace (Loto) எஞ்சின் , பொடி மிகவும் நல்ல நிலையிலுள்ள வான் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 291 5823 (39136) (11.3.6)

## வாடகைக்கு

இல.79, குட்சைட் வீதி, கோண்டாவில் ரயில் நிலையத்துக்கு அருகில் சகல அடிப்படை வசதியும் கொண்ட கட்டடம் வாடகைக்குண்டு. (களஞ்சியமாகவும் (Store) தனியார் கல்வி அலுவலகத்துக்கும் உகந்தது).

தொடர்பு: 077 320 9292 (39157) (11.3.6)

## காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகில் ஒரு பரப்பு 15.50 குளி விஸ்தீரணம் கொண்ட 5 அறைகள் உள்ள வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 711 1400 (39126)(3.6.11)

## காணி விற்பனைக்கு

மிருசுவில் A-9 பாதையை முகப்பாகவும், படித்த மகளிர் குடியேற்றத்திட்டம் பாம் றோட்டை ஒரு பக்கமாகவும் கொண்ட 25 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பகுதி களாகவும் பிரித்துக்கொடுக்கப்படும்.

தொடர்பு: 077 607 9340 (39124) (45.3.6)

## விற்பனைக்கு

கடைச்சல் பட்டறை சகிதம் சகல வெல்டிங் பொருள்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு-
இல.370,மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்
077 448 5239

(39130) (6.3.11)

## கடை வாடகைக்கு

யாழ். கொக்குவில் பிறவுண் வீதியில் (Brown Road) கடை வாடகைக்கு. 300 Sq Feet (சதுர அடி) யாழ். பல்கலைக்கழகம், Technical College, மருத்துவபீடம், கொக்குவில் Rail way station அண்மையில்.

(39135) (7.3) தொடர்பு: 075 760 5071

## புதிய வீடு உடன் விற்பனைக்கு

யாழ் இந்துக் கல்லூரிக்கும் மனோகராத் தியேட்டர் சந்திக்கும் இடையில் கில்னர் லேனில் கிணறு, நீர்த்தாங்கி, மின்சாரம், சுற்றுமதில், பல்கனி, 5 ரூம், மாபிள் பதிக்கப் பட்ட சகல வசதிகளும் கொண்ட புதிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:077 908 8564, 077 307 8881 (39127)(3.6.11)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுண்டுக்குளியில் 1½ (ஒன்றரை) பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

(39113)(2.6.3)

தொடர்பு:- 077 712 0968

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

CD200, Honda Tu-xxxx 2007 Model இரண்டாவது உடைமையாளர்
தொடர்பு: ச்சமோட்டை றோட், யாழ்ப்பாணம்.
071 435 8578 (39076) (11.6.3)

## லொறி விற்பனைக்கு அல்லது வாடகைக்கு

கென்டெய்னர் பொடி பொருத்தப்பட்ட புத்தம் புதிய லொறி விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 071 845 2548 (36233) (11.6.3)

## நிச்சயமாக தொழிலை இலக்காகக் கொண்ட பாடநெறிகள்.

### After A/L Medical Laboratory Technology Assistant
### ஆய்வுகூட உதவியாளர் பாடநெறி

நாடு முழுவதிலும் அமைந்துள்ள ஆய்வுகூட உதவியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக
க.பொ.த. உ/த விஞ்ஞான பாடத்திற் தோற்றிய நீங்களும் இப்போது ஆய்வுகூட உதவியாளராக ஆகலாம்.



6 மாத நிறுவனத்தின் மூலமான பயிற்சியின் பின் சேவை இடங்களுக்கு சேர்க்கப்படுவார்கள்.

### O/L பின் School of Nursing IVA

### ஒரு வருட தாதியர் பயிற்சி பாடநெறி



உள்ளூர் , வெளியூர் தாதியர் தொழில் வாய்ப்புக்கள் பெருமளவிலே பெற்றுக் கொடுத்திருக்கின்ற ஒரே தாதியர் பாடசாலையில் பாடநெறிகளுக்கு தற்போது மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.
பாடநெறியினை சிறந்த முறையில் பூர்த்தி செய்கின்ற அனைத்து
* மாணவர்களுக்கும் நிறுவனத்தினால் தொழில் வாய்ப்புக்கள் பெற்றுத்தரப்படும்.

நுழைவுக்குத் தேவையான அடிப்படைத் தகைமைகள்
- க.பொ.த சா/த 6 பாடங்கள் சித்தி
- வயது: 16 - 30 இடைப்பட்டிருத்தல்
- உயரம் 4 அடி 10 அங்குலம்

இலவசமாக சீருடையும், தாதியர் பாடநெறிக்கு ஏற்ற ஆங்கில பாடநெறியும் , தூரப் பிரதேச மாணவர்களுக்காக பாதுகாப்பான தங்குமிட வசதிகளும் உண்டு.

### மருந்தாளர் டிப்ளோமா பாடநெறி

அரச வைத்திய வித்தியாலயத்தினால் நடாத்தப்படும் வெளிவாரி மருந்தாளர் பரீட்சைக்கு வகுப்புக்கள் நடைபெறும்.

தற்போது தனியார் துறைகளில் வைத்திய சேவையிலே மருந்து தொடர்பான சேவையில் ஈடுபட்டுள்ள [illegible] கல்வித் தகைமை இல்லாதவர்களுக்கு தொழிலுக்கு ஏற்ற செயன்முறைப் பயிற்சியுடன் சான்றிதழும் வழங்கப்படும்.

நடாத்துபவர் : வைத்தியர் ராஜவேலாயுதம் — ஞாயிறு தினங்களில் காலை 9.00 முதல் 4.00வரை

| மட்டக்களப்பு | யாழ்ப்பாணம் | வவுனியா | அனுராதபுரம் | பதுளை |
|---|---|---|---|---|
| இல. 61/1, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே.0718-722 352, 0718-722 353 | இல 323, கஸ்தூரியா வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.071-8722350, 0718-722 353 | இல. 109, மன்னார் வீதி, சாந்தி க்ளினிக், வவுனியா. தொ.பே. 0718-722 351, 0718-722 353 | இல 396/3, சுவசேவன வைத்தியசாலை, நீதிமன்ற பகுதி, கடதோளாஹ அனுராதபுரம். தொ.பே. 0718-722 355 | இல 20/1/1, ஹுணுகொடுவ வீதி, பதுளை. தொ.பே.0718-722 354 |
| **கண்டி** | **கம்பஹா** | **பானதுறை** | **தங்கல்ல** | **இரத்தினபுரி** |
| சிங்கர் நிறுவனம், டி.எஸ். சேனாநாயக்க ,வீதி, கண்டி. தொ.பே. 0711-980 980, 0710-336 329 | 77/1/4 யக்கல வீதி கம்பஹா. தொ.பே. 0718-657 775 | இல 36, சுவமெதுர வைத்தியசாலை, சுசந்த மாவத்தை, பானதுறை. தொ.பே. 0710-336 332 | ஆரோக்யா வைத்தியசாலை, முஹுது மாவத்தை, சம்பத் வங்கி அருகில், தங்கல்ல. தொ.பே. 0710-336 334 | இல 85, உள் சுற்று வீதி, இரத்தினபுரி. தொ.பே. 0715-980 980 |

இத்தாலி, பிரான்ஸ், கனடா, இங்கிலாந்து உற்பட மேற்கத்திய நாடுகள், மத்தியகிழக்கு நாடுகள், இந்தியாவிலும் வைத்தியத் துறையிலே வைத்தியசாலைகளில் பயிற்சி பெற்ற தாதியர்களுக்கு வேலைவாய்புகளும், வைத்தியத்துறையுடன் தொடர்புடைய இன்னும் பல துறைகளில் பெருமளவிலான வெற்றிடங்கள் நிழவுகின்றன.

Registered Education Institute in the republic of Sri Lanka

NTS P.V. 91973

பிரதான காரியாலயம்
### அய்வா
சர்வதேச தாதியர் பாடசாலை
இல 85, உள் கற்று வீதி, லிபர்டி கட்டிடம், இரத்தினபுரி.

ரூ 40/= பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் தெரிவு செய்த கிளையை குறிப்பிட்டு விண்ணப்பப்படிவத்தினை அருகிலுள்ள எமது கிளைக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

தொ.பே : 0454 980 980
0715 980 980 Fax : 045 2233000
E-mail : manojhewaduwa@yahoo.com

விண்ணப்பப்படிவ பிரதிகளை எமது இணையத்தளத்தினூடாகப் பெற்றுக் கொள்ளலாம். Web : schoolofnursingiva.laknet.lk

## ஐஸ்கிறீம் வான் விற்பனைக்கு

PZ-XXXX தொடரிலக்கமுடைய Body உடன் நல்ல நிலையிலுள்ள TATA Butta ஐஸ்கிறீம் வான் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 078 621 4616 (31447) (45.3)

## வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு

ஒழுவில் வீதி, கரம்பொன்கிழக்கு, ஊர்காவற்றுறையில் குடியிருப்பதற்கு உகந்த ஐந்து அறைகளுடன் கூடிய வீடு நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் விற்பனைக் குண்டு.

தொடர்பு : மாலை 3 மணிக்குப் பின்
011 252 0453/071 800 5676 (39006)(12. 6.6)

## வீடு வாடகைக்கு

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட நாயன்மார்கட்டில் மாடி வீடு வாடகைக்கு உண்டு. அலுவலகங்கள், நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

(39016) (12-6.3) தொடர்பு : 077 491 3114/077 970 2508

## காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை மாவடிச் சந்தியில் கால் நடை வளர்போர் சங்கத்துக்கு அருகில் உள்ள வியாபார நிலையம் அமைப்பதற்கு உகந்த 4 பரப்பும் 5 குளி காணி (புளிவளவு) விற்பனைக் குண்டு. (பரப்பு 9 இலட்சம் ரூபா)

தொடர்பு: 077 703 7058 (39060) (7.6.3)

## House For Rent

இலக்கம் 35, மருதடி வீதி, நல்லூரிலுள்ள 5 Room வீடு (உதவி இந்திய தூதரகத்திற்கு சமீபமாக) சகல வசதிகளுடன் நிறுவனங்களுக்கு/ குடும்பத்திற்கு உடன் வாடகைக்குண்டு.

தொடர்பு: 071 244 6926 (39097)(6.3.11)

## அறை வாடகைக்குத் தேவை

கிளிநொச்சி நகர்ப்பகுதியில் பெண் ஒருவர் தங்கி வேலைக்குச் செல்லக் கூடிய வகையில் அடிப்படை வசதிகள் உள்ள அறை தேவை.

(35236)(12-6.3) தொடர்பு : 077 416 6369

## இலவச தையல் பயிற்சி

புதிய பிரிவுக்கான இலவச தையல் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன. பயிற்சியினைப் பெறவிரும்புவோர் நேரடியாகச் சமுகமளிக்கவும்.

செயலாளர்
நவமங்கை நிவாஸம்,
ராசவீதி, கோப்பாய் மத்தி.

(2661) (16.6.14)

## வீடு வாடகைக்குண்டு

பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாக 1½ பரப்புக் காணியுடன் அதிநவீன வசதியுடன் (AC வசதி) புதிதாகக் கட்டப்பட்ட 6 அறைகள், 2 Halls, Attached bathroom, Kitchen உடன் வீடு முழுவதும் Tiles பதிக்கப்பட்ட 4 வாகன தரிப்பிட வசதியுடன் அமைந்த மேல் மாடி வீடு 5 வருட ஒப்பந்தத்துக்கு வாடகைக் குண்டு. (நல்லூர் முருகன் கோயில், இந்தியன் விசா நிறுவனம், கச்சேரி, பிரதான வைத்தியசாலை என்பன அருகில் அமைந்த சூழல்) அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 028 9212 (39053) (7.6.3)

## வீடு வாடகைக்கு

அம்மன் கோயிலடி, கோண்டாவில் (ஸ்ரேசனுக்கு) அருகிலுள்ள ஐந்து அறை கொண்ட சகல வசதிகளும் உள்ள வீடு வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: (39099)(6.3.11)
077 296 9638, 077 623 5793

## HOUSE FOR SALE

House at Chundikuli, Columbuthurai Road, (Adjoining "Adina Rest Inn") sited on Lms.V.C land. Completely renovated and painted, with 06 bed rooms, 03 attached baths and 03 toilets, pipe-borne water supply, boundary walls on 04 sids, space to park over 10 vehicles, with separate room for servants.

T.P: 077 615 4279 (39079) (10,6,3)

## உடனடி வேலை வாய்ப்பு

INNOVAGE INTERNATIONAL (PVT) Ltd.

சர்வதேச ரீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் அமெரிக்க நிறுவனத்தின் 5 புதிய கிளைகளில் நிரந்தர வேலைவாய்ப்பு



* Customer Service
* Marketing executive
* Managers
* Asst. Managers

குறைந்தபட்ச கல்வித் தகைமை O/L
தகைமைக்கேற்ப பயிற்சி வழங்கப்படும்.
பயிற்சியின் போது ரூபா. 12,000/= 15,000/=
பயிற்சியின் பின் ரூபா. 30,000/= -50,000/= சம்பளம்.
வெளிநாட்டில் தொழில் புரிய வாய்ப்பு வழங்கப்படும்.

NOTE
கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசத்தினர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தங்குமிட வசதி உண்டு
077 632 0962, 021 720 1521, 077 190 8997.

## STUDY MEDICINE IN RUSSIA

KRUSK STATE MEDICAL UNIVERSITY மற்றும் TVER STATE MEDICAL UNIVERSITY

- SLMC, WHO, UNESCO, AMC, US MEDICAL COUNCIL ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்ட முதற்தர பல்கலைக்கழகங்கள்
- இலங்கையிலிருந்து 700 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்கின்றனர்
- முற்றிலுமான ஆங்கில மொழிமூல கற்கைநெறி
- வருடத்திற்கு 4000 USD + Hostel வசதி இலவசம்
- மிகக்குறைந்த ஆரம்பக்கட்டணம்
- விண்ணப்பித்து இரண்டு மாதங்களில் ரஷ்யா செல்லலாம்
- VISA 100% உத்தரவாதம்
- விடுமுறை காலங்களில் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று வரக்கூடிய வாய்ப்பு

Russian Education Centre Sri Lanka

தொடர்புகளுக்கு :
Dr.Sivaraman Sanjey
Mob: 0773460324
Tel: 0114377388/0112769833
Email: snsanjey@yahoo.com

## YOGI'S

(Academy of Beauty Therapy, Hair Dressing & Home Science)

புதிய பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன 31.08.2013 சனிக்கிழமை.

★ அழகுக் கலை (Advanced Beauty Therapy & Hair Dressing) (Diploma Course)
★ AIR BRUSH மூலமாக நவீன ஒப்பனை முறைகளும் தலை அலங்காரங்களும் (Advanced Bridal Makeup & Hair Styles).
★ 10 வகை வித்தியாசமான சாறி கட்டும் முறைகள்.
★ கேக் ஐசிங் பயிற்சி வகுப்புகள் (Birthday Cakes, Fondant Structures & Sugar Flowers)

ஆசிரியை:
**Mrs.YOGINI SHANMUGANATHAN**
Dip. in. High.Tec.Aesthetics & Cosmetalogy (India)
Dip. in. Advanced Bridal Make Up & Charater Make Up (India)
Dip. in. Home Economics (Srilanka & India)
- 021 222 2796, 0777164923

75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(சீ 11450) (12-3-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஃபஷன் பக் நிறுவனத்தின் இணையத்தளத்துக்கு விருது



இலங்கையின் இணையப்பாவனை அதிகரித்து வரும் நிலையில், இணையத்தின் ஊடாக தமது வர்த்தக நடவடிக்கைகளை பிரச்சாரப்படுத்தி முன்னெடுப்பதற்கு ஒவ்வொரு வர்த்தக நிறுவனங்களும் தமது ஆர்வத்தை வெளிப்படுத்தி வரும் நிலையில், BestWeb.lk 2013விருது வழங்கல் நிகழ்வில் முன்னணி ஆடையலங்கார தொடரான ஃபஷன் பக் நிறுவனத்தின் இணையத்தளமான www.fashionbug.lk க்கு வெள்ளி விருது வழங்கப்பட்டது.

வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் இலங்கையின் சிறந்த இணையத்தளம் போட்டித்தொடர் அண்மையில் LK Domain பதிவு அமைப்பின் மூலம் முன்னெடுக்கப்பட்டது. 2009ஆம் ஆண்டு முதல் இந்த சிறந்த இணையத்தள தெரிவு போட்டி முன்னெடுக்கப்படுகின்றது. நாடு முழுவதிலும் இருந்து வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த பங்கு பற்றுநர்கள் இந்த விருதுகள் வழங்கும் போட்டியில் பங்கு பற்றி தமது ஆர்வத்தை வெளிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த விருது வழங்கலில் ஃபஷன் பக் நிறுவனத்தின் இணையத்தளம் வெள்ளி விருதை பெற்றுக் கொண்டமை குறித்து நிறுவனத்தின் பணிப்பாளர் ஷபீர் சுபியன் கருத்து தெரிவிக்கையில், இந்த ஆண்டின் BestWeb.lk போட்டியில் நாம் வெள்ளி விருதை வெற்றி கொண்டமையையிட்டு பெருமையடைகிறோம். எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கும் வகையில் நாம் சிந்தித்து முன்னெடுத்த அபிவிருத்தி நடவடிக்கைகள் எமக்கு வெற்றியை தேடித்தந்தது. புதிய டிஜிட்டல் கொள்கைக்கு அமைவாக, எமது இணையத்தளம் மீள் வடிவமைப்பு செய்யப்பட்டிருந்தது. தொடர்ந்தும் மாறுபட்டு வரும் சமூக கட்டமைப்புகளுக்கு அமைவாக எமது சேவைகளையும் வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள நாம் திட்டமிட்டுள்ளோம் என்றார்.

அடுத்த பெரிய நடவடிக்கையாக நாம் எமது Online Store ஐ அறிமுகம் செய்வது குறித்த நடவடிக்கைகளை அதிகளவு ஈடுபாட்டுடன் முன்னெடுத்து வருகிறோம் என மேலும் குறிப்பிட்டார்.

# 4 மாவட்டங்களுக்கு ஆதரவளித்த மஞ்சி

சிலோன் பிஸ்கட் நிறுவனத்தின் முதற்தர வர்த்தகநாமமான மஞ்சி அதன் சமூகப் பொறுப்புணர்வு திட்டங்களில் ஒன்றான மஞ்சி சமக கமட சரண திட்டத்தின் கீழ் நான்கு புதிய செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளது.

இத் திட்டங்கள் கடந்த ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் பேருவளை, பிபிலை, காலி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டது. இத் திட்டங்கள் ஊடாக கல்வி, சுகாதாரம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. மஞ்சி சமக கமட சரண சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் மூலம் நாடு பூராகவு முள்ள ஆயிரத்திற்கும் அதிகமானோர் பயனடைந்துள்ளனர். பிபிலை யசோதரா பெண்கள் வித்தியாலயத்தின் 400 மாணவிகளின் பன்முக தேவைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் மொனராகலை மாவட்டத்தில் 1200 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டடம் நன்கொடையாக கையளிக்கப்பட்டது. தென் மாகாணத்தின் பேருவளை கீரன்திடிய பாலர் பாடசாலையின் 300 மாணவர்களும், எதிர்காலத்தில் பல மாணவர்களும் பயனடையக்கூடிய வகையில் நன்கொடையாக வாசிகசாலை கையளிக்கப்பட்டது.

நாட்டின் வடக்கு மாகாணத்தின் புனர்வாழ்வு திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில், மஞ்சி ஆனது இராணுவத்தினருடன் இணைந்து யாழ்ப்பாணத்தின் மானிப்பாய் பிரதேசத்தில் 150 மாணவர்களுக்கு முழு வசதிகளுடனான முன்பள்ளியை நன்கொடையாக வழங்கியது. இதற்கு மேலதிகமாக மஞ்சி குழுவினர் மூலம் காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் காத்திருக்கும் அறை (waiting room) நிர்மாணிக்கப்பட்டது. இவ் வைத்தியசாலைக்கு தினசரி நோயாளிகளை பார்வையிட தூர இடங்களிலிருந்து வருகை தரும் 3,000 வருகையாளர்களின் நீண்டநாள் தேவையாக இந்தக் காத்திருக்கும் அறை அமைந்திருந்தது. (த)

# 21 வருட நிறைவில் செலான் டிக்கிரி




இலங்கையின் மிக விருப்பத்திற்குரிய சிறுவர் சேமிப்புக் கணக்கான செலான் டிக்கிரி ஆனது புதுப் பொலிவுடனும் அனுகூலங்களின் உலகம் (World of Benefits) எனும் வெகுமதித் திட்டத்தின் ஊடாகவும் தனது 21ஆவது ஆண்டு நிறைவை இவ்வருடம் கொண்டாடியது.

1992ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட செலான் டிக்கிரி கணக்கானது, ஒரு பரிசு வழங்கல் திட்டத்தை அறி முகப்படுத்திய இலங்கையின் முதலாவது சிறுவர் சேமிப்புக் கணக்காக திகழ்வதன் மூலம் சாதனைஒன்றை நிலைநாட்டியுள்ளது. இலங்கையின் அனைத்து பாகங்களையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான சிறுவர்களை செலான் டிக்கிரி கணக்கு விரைவாக தம்வசப்படுத்துவதற்கும் அதேபோல், வீடுகள் தோறும் பிரபலமான வர்த்தக நாமமாக வேகமாக வளர்ச்சி காண்பதற்கும் தொடர்ச்சியான சேமிப்புகளே முக்கிய காரணியாக அமைந்தது. கடந்த 21 வருடங்களாக செலான் டிக்கிரி சிறுவர் கணக்கு தனக்கு பெருமை சேர்க்கும் விதத்தில் பல அடைவுகளையும் புத்தாக்க மான விற்பனை ஊக்குவிப்புத் திட்டங் களையும் முன்னெடுத்துள்ளது.

டிக்கிரின்ஜா என்ற திட்டத்தின் ஊடாக அதிர்ஷ்டம் ஒன்றை கொண்டு வரத்தக்க முன் னெடுப்பை அறிமுகப்பத்திய வங்கியாக செலான் வங்கியே திகழ்கின்றது. இந்தத் திட்டத்தின் கீழ் ஹொங்கொங்கில் உள்ள டிஸ்னிலேண்ட், சிங்கப்பூரின் சென் ரோசா மற்றும் பாங்கொக்கில் உள்ள ட்ரீம் வேர்ல்ட ஆகிய இடங்களுக்கு சென்று திரும்புவதற்கான சுற்றுப் பயண வாய்ப்புக்கள் வெகுமதியாக வழங்கப்பட்டன.

இவற்றிற்கு மேலதிகமாக - டிக்கிரி லேண்ட் விளையாட்டுத் திடல், டிக்கிரி ரஷ்ய நடனமாடும் சிறுவர்கள், துவிச்சக்கரவண்டி ஊக்குவிப்பு மற்றும் டிக்கிரி ரசிகர் கழகம் போன்ற களிப்பூட்டல் வசதிகளையும் இந்த திட்டம் உள்ளடக்கியிருந்தது. விகாரமஹாதேவி பூங்காவில் இடம்பெற்ற செலான் டிக்கிரி கார்னிவல் களியாட்ட நிகழ்வானது நாள்காட்டியில் முக்கிய அவதானத்தைப் பெற்ற ஒன்றாக அமைந்துள்ளது.

அதுமட்டுமன்றி, வேடிக்கைகளும் கேளிக்கைகளும் நிறைந்திருந்த இந்த முழுநாள் நிகழ்வில் 5000 இற்கும் அதிகமான கணக்கு வைப்பாளர்கள் கலந்து கொண்டனர். ஒவ்வொரு மாதத்தின் இறுதி சனி மற்றும் ஞாயிறு தினங்களிலும் வேடிக்கைகள் மற்றும் வெகுமதிகளுடன் இடம்பெறுகின்ற செலான் வங்கியின் சிறுவர் வங்கியியல் தினம் என்பது, சேமிப்புப் பழக்கத்தை மேலும் முன்கொண்டு செல்ல வழிவகுக்கும் வெற்றிகரமான மற்றுமொரு உபாயப் பொறிமுறையாகும்.

சிறுவர்களுக்கு வெகுமதி அளிக்கும் மற்றும் சிறந்த சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வங்கியியல் சேவையின் 21ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடும் முகமாக செலான் டிக்கிரி சேமிப்புக் கணக்கானது அனுகூலங்களின் உலகத்தை வெகுமதியாக வழங்கும் வகையில் மேலும் பிரமாண்டமான்னதாக, சிறந்ததாக அதேநேரம் ஒளிமயமானதாக பயணத்தை ஆரம்பித்துள்ளது. (த)

# கையடக்க தொலைபேசி சந்தையில் தடம்பதிக்கவுள்ள ஒரெஞ்ச் நிறுவனம்



இலங்கையின் மின் உதிரிப்பாகம் மற்றும் கையடக்க தொலைபேசி ஆகிய துறைகளில் புதிய புரட்சியை ஏற்படுத்தும் நோக்கில் நாட்டின் முன்னிலை மின் உதிரிப்பாக நிறுவனமான ஒரெஞ்ச் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய இன்னும் இரண்டு மாதங்களில் கையடக்க தொலைபேசி துறையில் தடம்பதிக்க உள்ளதாகவும் இதற்கான உடன்படிக்கை ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் ஒரெல் கோப்பரேஷனின் முகாமைத்துவ பணிப்பாளர் குஷான் கொடிதுவக்கு தெரிவிக்கின்றார். இதன்மூலம் இலங்கையில் கையடக்க தொலைபேசி விற்பனை சந்தைக்கு வரும் முதலாவது மின் உதிரிப்பாக நிறுவனமாக ஒரெல் கோப்பரேஷன் முத்திரை பதிக்கவுள்ளது. கையடக்க தொலைபேசி சந்தைக்கு வருவதற்கு ஒரெஞ்ச் நிறுவனத்துக்கு இந்தியாவின் பி.கே.மோடி குழுமத்துக்கு சொந்தமான ஸ்பைஸ் மொபைல் நிறுவனம் உதவுகின்றது.

ஒரெல் கோப்பரேஷனின் முகாமைத்துவ பணிப்பாளர் குஷான் கொடிதுவக்கு கருத்து தெரிவிக்கையில் மின் உதிரிப்பாக துறையும் கையடக்க தொலைபேசி துறையும் எதிர்காலத்தில் இரண்டு துறைகள் அல்ல. இரண்டுமே ஒன்றாகும். இது தற்போது புலப்பட ஆரம்பித்துள்ளது. பலர் தமது வீடுகளிலுள்ள மின் உதிரிப்பாகங்களை தமது கையடக்க தொலைபேசியிலிருந்தே இயக்கும் காலம் வெகுவிரைவில் வரும். அதற்காக அவர்களுக்கு சிறந்த கையடக்க தொலைபேசிகள் தேவை.

கையடக்க தொலைபேசிகளையும் மின் உதிரிப்பாகங்களையும் ஒரே கூரையின் கீழ் கொள்வனவு செய்ய சந்தர்ப்பம் கிடைத்தால் அது பாவனையாளர்களுக்கு மிக நன்மை பயக்கும். அதற்கமையவே ஒரெஞ்ச் நிறுவனம் கையடக்க தொலைபேசி துறையில் தடம் பதிக்க தீர்மானம் எடுத்துள்ளது என கூறினார். (த)

## சிறந்த மருந்து விநியோகத்தராக சைடஸ் கெடிலா

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தால் (State Pharmaceuticals Corporation) வழங்கப்படும் வருடத்தின் சிறந்த மருந்து வழங்குனருக்கான விருதை இந்தியாவின் முன்னிலை மருந்து தயாரிப்பு நிறுவனமான சைடஸ் கெடிலா (ZCL) வென்றெடுத்துள்ளது.

2012 ஆம் ஆண்டுக்கான விருதை சைடஸ் கெடிலா (ZCL) நிறுவனம் வென்றெடுத்துள்ளதுடன் குறித்த நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகளாக சன்ஷைன் குழுமத்தின் (Sunshine Holdings) கிளை நிறுவனமான சுவிஸ் பயோஜீனிக்ஸ் LTD (SBL)) செயற்பட்டு வருகின்றது.

60 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவில் ஔடதப் பொருள் உற்பத்தியை மேற்கொண்டு வருகின்ற சைடஸ் கெடிலா (ZCL) நிறுவனம் அந்நாட்டின் நான்காவது மிகப் பெரிய மருந்து தயாரிப்பு நிறுவனமாக விளங்குகின்றது.

1985 ஆம் ஆண்டு முதல் சுவிஸ் LTD (SBL (ZCL) நிறுவனம் சைடஸ் கெடிலா (ZCL) நிறுவனத்தின் தயாரிப்புக்களை இலங்கையில் விநியோகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. தமது வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பில் கருத்து தெரிவித்த சைடஸ் கெடிலா (ZCL) நிறுவனத்தின் சர்வதேச வர்த்தகத்துக்கான தலைவர் அசோக் பாட்டியா, தமது நிறுவனத்தின் 40 சதவீதமான வருமானம் இந்தியாவிலிருந்தே கிடைக்கின்றது என்றும், ஏனைய 60 சதவீதமான வருமானம் சர்வதேச சந்தைகளிலிருந்து கிடைக்கின்றது என்றும் தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** குடும்பத்தினருடன் வீண் விவாதங்கள் வந்து போகும். விலை உயர்ந்த பொருள்களைக் கவனமாகக் கையாளுங்கள். வாகனம் பழுதாகும். யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். . உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் விவாதம் வந்து நீங்கும்.

**இடபம்:** நீங்கள் முன்பு செய்த உதவிகளுக்கு இப்பொழுது பாராட்டப் படுவீர்கள். உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். சகோதர வகையில் நன்மை பிறக்கும். உற்சாகமான பேச்சால் அனைவரையும் கவருவீர்கள்.

**மிதுனம்:** சோர்வாக இருந்த நீங்கள் சுறுசுறுப்படைவீர்கள். சிந்தனைத்திறன் அதிகரிக்கும். குடும்பத்தில் கலகலப் பான சூழல் ஏற்படும். பிள்ளைகளின் உடல் நலம் சீராக இருக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள்.

**கடகம்:** துடிப்புடன் காணப்படுவீர்கள். எதிரிகளின் கொட்டம் அடங்கும். கணவன் - மனைவிக்குள் மகிழ்ச்சியுண்டு. விருந்தினர்கள். நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும்.

**சிங்கம்:** அக்கம் பக்கம் இருப்பவர்களை அனுசரித்துப் போங்கள். சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விடயங்களை பகிர்ந்து கொள்ள வேண்டாம். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் சச்சரவு வரும். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் அதிக உரிமை எடுக்க வேண்டாம்.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு காரியங்களைச் சாதிப்பீர்கள். குடும்பத்தினருடன் இருந்து வந்த கசப்புணர்வு நீங்கும். கையில் காசுபணம் தேவையான அளவு இருக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஒத்துழைப்பு உண்டு. வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும்.

நாளை

ஆவணி-10 திங்கட்கிழமை 26.08.2013
திதி: ஷஷ்டி பி.இ.04.16 வரை
நட்சத்திரம்: அச்சுவினி பி.ப.01.03 வரை
சுபநேரம்: 12.05 - 01.35 வரை
இராகுகாலம்: 07.35 - 09.05வரை

**துலாம்:** பழைய நல்ல சம்பவங்களை நினைவு கூர்ந்து மகிழ்வீர்கள். கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் பெருகும்.

**விருச்சிகம்:** ஆரவாரமின்றி சில வேலைகளை முடிப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. அரச வேலைகளில் இருந்து வந்த தடைகள் நீங்கும்.

**தனுசு:** மனக்குழப்பங்கள் நீங்கும். நம்பிக்கைக்குரியவர்களின் ஆதரவு கிட்டும். தாய்வழி உறவினர்களால் ஆதாயம் உண்டு. பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். கோபம் குறையும்.

**மகரம்:** அதிரடியாக செயல்பட்டு சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். பணவரவு உண்டு. வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**கும்பம்:** இரண்டு மூன்று நாள்களாக முடியாமல் இழுத்தடித்த காரியங்களெல்லாம் இனி முடிவுக்கு வரும். கணவன் - மனைவிக்குள் அன்னியோன்னியம் பிறக்கும். பிள்ளைகளின் நீண்டாநாள் கோரிக்கைகளை பூர்த்தி செய்வீர்கள். அரச வேலைகளில் அனுகூலமான நிலை காணப்படும்.

**மீனம்:** உறவினர், நண்பர்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள். மற்றவர்களைச் சார்ந்து இருக்க வேண்டாம். நெருங்கியவரிடம் உங்களின் மனக்குறைகளை சொல்லி ஆதங்கப்படுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். உத்தியோகத்தில் மற்றவர்களை நம்பி எந்தப் பொறுப்புகளையும் ஒப்படைக்க வேண்டாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | 9 | | | 6 | 1 | | 5 |
| | 2 | | 3 | 5 | | | 8 | |
| | | 5 | | 8 | 7 | | 4 | |
| | | | | | | 7 | | 4 |
| 1 | | | | | | | | 6 |
| 2 | | 7 | | | | | | |
| | 6 | | 9 | 1 | | 4 | | |
| | 5 | | | 7 | 8 | | 6 | |
| 9 | | 4 | 5 | | | 8 | | 3 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 4 | 9 | 3 | 8 | 5 | 7 | 2 |
| 2 | 9 | 7 | 4 | 1 | 5 | 8 | 6 | 3 |
| 8 | 3 | 5 | 2 | 6 | 7 | 1 | 9 | 4 |
| 4 | 8 | 2 | 3 | 5 | 9 | 6 | 1 | 7 |
| 3 | 7 | 9 | 1 | 8 | 6 | 2 | 4 | 5 |
| 5 | 6 | 1 | 7 | 2 | 4 | 9 | 3 | 8 |
| 7 | 2 | 6 | 5 | 9 | 3 | 4 | 8 | 1 |
| 9 | 5 | 3 | 8 | 4 | 1 | 7 | 2 | 6 |
| 1 | 4 | 8 | 6 | 7 | 2 | 3 | 5 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## சிற்பவேலைகளில் புதிய அத்தியாயம்

இலங்கையில் முதன்முதலாக அறிமுகப்படுத்தியுள்ள **ROBO-X5** அதிநவீன டிஜிற்றல் இயந்திரத்தின் மூலம் முதிரை,வேம்பு,தேக்கு போன்ற வைரமான மரங்களில் யாழ் மக்களின் மனங்கவர்ந்த அன்னம், தீபநாயகி,மயில் போன்ற சிற்பங்களை மிகத்துல்லியமான வடிவமைப்புடன் மூன்று நாள்களில் உங்கள் கனவு இல்லங்களின் கதவுகள்,நிலைகள்,இல்லங்களின் பெயர்ப்பலகைகள் போன்றனவற்றை ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்தம் புதிய டிசைன்களில் பெற்றுக்கொள்ள

**மூர்த்தி டிஜிற்றல் சிற்பாலயம்**

62 20,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.0212219399



ETS TOEIC ஆங்கிலப் பயிற்சி நெறிகளுக்கான புலமைப்பரிசில்கள் - 2013

Know English. Know Success.

**English for Every one**

- சர்வதேச ரீதியான ஆங்கில தகைமையை நீங்களும் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு.
- 120 நாடுகளில் 10,000இற்கு மேற்பட்ட நிறுவனங்களினால் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கிலத் தகைமைகள்.

**Courses**

- TOEIC Bridge — Basic English with Spoken
- TOEIC Professional — English for work (Speaking, Writing, Reading, Listening)
- English for Visas (A1/B1/B2/C1)

**யாருக்கு?**

- பல்கலைக்கழக மாணவர்கள்
- அலுவலக உத்தியோகத்தர்கள்
- G.C.E (A/L) பரீட்சை எழுதியவர்கள்
- வெளிநாடு செல்ல விரும்புபவர்கள்.

இக் கற்கைநெறிகளுக்கான பதிவுகளை மேற்கொள்வதற்கு உங்களுடைய பெயர், கற்க விரும்பும் கற்கைநெறி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பவும்.

**Hot Line: 077 857 5406**

மேலதிக விவரங்களுக்கு:
**International Knowledge Pool.**
இல: 116, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.T.P: 021 221 7105
(39093) (7.8.3)

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

Discover 150cc (xm-xxxx) தனிப்பாவனை (6783 km ஓடியது)

தொடர்பு: 077 399 7096 (37898) (11.6.3)

### காணி விற்பனை

அளவெட்டி, நுநுக்கள் கிணற்று பிள்ளையார் கோயிலடி (ஏட்டாம் கட்டை வீதி)8½ பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது. பிரித்தும் கொடுக்கப்படும்.

தொடர்பு: 077 379 5291 (39067) (3.6.11)

## காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் வ-து

# மூடிய கூறுவிலை கோரல்

எமது சங்கத்திற்குச் சொந்தமான பின்வரும் பொருள்கள் மூடியகூறுவிலை கோரி விற்பனை செய்யப்படவுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 01 | பாரவூர்தி (26 சிறி 7541 Isuzu லொறி) | 12 | டீசல் ராங் |
| 02 | மோட்டார் சைக்கிள் (MD 90) | 13 | புடைவை ஸ்ராண்ட் |
| 03 | லான்ட்மாஸ்டர் கலப்பை (புதிது) | 14 | பட்டறை சில்லறை 2'x5' |
| 04 | மேடைத் தராசு (500Kg - 01,250Kg - 02) | 15 | புடைவை மேசை (10' நீளம், 2' அகலம்) |
| 05 | இரும்பு சுருக்குக் கேற் (ஒரு சோடி) | 16 | பழைய உடைந்த தளபாடங்கள் |
| 06 | இரும்புப்பெட்டி, இரும்புப்பெட்டித் தளம் | 17 | பழைய இரும்புகள் |
| 07 | ரெலிபோன் பூத் 6'x2½' 02 | 18 | பழைய மண்ணெண்ணை பம் |
| 08 | இறாக்கை 6'x4½' | 19 | சோளர் |
| 09 | லொறி கியபொக்ஸ் | 20 | தட்டெழுத்து மிசின் |
| 10 | அலுமாரி பெரியது 8'x6' | 21 | உடைந்த தளபாடங்கள் |
| 11 | கண்ணாடி அலுமாரி 2½' x4' | 22 | கதவு நிலை பெரிது |

**நிபந்தனைகள்:**

1. மூடிய கூறுவிலை மூலம் மேற்படி ஒன்றையோ அல்லது சிலவற்றையோ கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் ரூபா 100 ஐ செலுத்தி சங்கத்தினால் தயாரித்து வழங்கப்படும் விண்ணப்பப் பத்திரததைப் பெற்று பூர்த்தி செய்து 14.09.2013 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்பாக ''பொது முகாமையாளர், காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், காரைநகர்'' என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவு தபால் மூலமோ அனுப்பி வைக்கலாம்.
2. விண்ணப்பக் கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் ''கூறுவிலை விண்ணப்பம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
3. மேலே அட்டவணையில் 1 தொடக்கம் 03 வரை உள்ள பொருள்களை கொள்வனவு செய்பவர்கள் சங்கத்தில் மீளளிக்க கூடிய வைப்பாக ரூபா 5000ஐ வைப்பில் இடவேண்டும். ஏனைய பொருள்களுக்கு இவ் வைப்பு பணம் தேவையில்லை.
4. கொள்வனவு செய்யவுள்ள பொருள்களைப் பார்வையிட விரும்புவோர் சங்க தலைமையகத்தில் வேலை நாள்களில் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை பார்வையிடலாம்.
5. மேலதிக விவரங்களுக்கு சங்கத்தொலைபேசி இலக்கமான 021 321 2860 உடன் தொடர்பு கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்,
காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்.

(சி/11487) (45.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வவுனியா மாவட்டக் குளங்களில்

# 2 லட்சத்து 46 ஆயிரம் மீன்குஞ்சுகள் விடப்பட்டன

வவுனியா, ஒக.25

வவுனியா மாவட்டத்திலுள்ள குளங்களில் இம்மாதம் 2 லட்சத்து 46 ஆயிரம் மீன்குஞ்சுகள் விடப்பட்டதாக நன்னீர் மீன்பிடி அதிகாரசபையின் அதிகாரியான பா.நிருபராஜ் தெரிவித்தார்.

இரட்டைப்பெரியகுளத்தில் 81 ஆயிரம், பாவற்குளத்தில் 75ஆயிரம் என்ற அடிப்படையில் இறால் குஞ்சுகளும், கனகராயன்குளத்தில் 45 ஆயிரம் மீன் குஞ்சுகளும், மாமடுவகுளத்தில் 45 ஆயிரம் மீன் குஞ்சுகளும் இம்



மாதம் விடப்பட்டுள்ளன. இதேவேளை கடந்த பெப்ரவரி மாதத்தில் 3 லட்சத்து 25 ஆயிரம் மீன் குஞ்சுகளும், மார்ச் மாதத்தில் 3 லட்சத்து 60 ஆயிரம் மீன் குஞ்சுகளும், ஏப்ரல் மாதத்தில் ஒரு லட்சத்து 50 ஆயிரம், மே மாதத்தில் ஒரு லட்சத்து 80 ஆயிரம், ஜூன் மாதத்தில் ஒரு லட்சத்து 65 ஆயிரம் என்ற அடிப்படையில் மீன் குஞ்சுகள் விடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் மூலமாகச் சுமார் 5 ஆயிரம் மீனவர்கள் பயன் பெறுவர் என எதிர் பார்க்கப்படுகிறது. இங்குள்ள பொது மக்கள் நன்னீர் மீன்களைத் தமது முக்கிய உணவாக உட்கொள்கின்றனர். தற்போது காணப்படும் வறட்சி காரணமாக குறிப்பிட்ட அளவு மீன்கள் இறந்தபோதிலும் மீன் உணவுகளுக்கு தட்டுப்பாடு ஏற்படாது.


மேலும் வெளிநாடுகளில் இருந்து வரும் உல்லாசப் பயணிகளைக் கவரும் நன்னீர் மீன் உணவு வகைகளை அவர்கள் மிகவும் விரும்பி உண்கின்றனர். மேலும் இவர்கள் தற்போது குளங்களில் மீன் பிடித்து மகிழ்வதையும் குளக்கரைகளில் காற்று வாங் குவதையும் அவதானிக்கக் கூடியதாக வுள்ள தாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-402)

## வெளிச்சத்தை ஏற்படுத்துமாறு கோரிக்கை

அக்கராயன், ஒக. 25

கிளிநொச்சி டிப்போ சந்தியில் இரவு வேளையில் தெரு விளக்குகளை ஒளிர விட வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

அண்மைக் காலமாக கிளிநொச்சி நகரில் அடிக்கடி விபத்துச் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன. இரவு வேளைகளில் முக்கிய சந்திகள் இருளில் மூழ்கி இருப்பதன் காரணமாக விபத்துக்கள் நிகழ்வதாகத்



தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் கிளிநொச்சியில் முக்கிய சந்தியான டிப்போ சந்தி இரவில் இருளில் மூழ்கிக் காணப்படுகிறது.

எனவே இந்தச் சந்தியில் தெரு விளக்குகளை எரியச் செய்து ஒளி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

## வடிகால் அமைக்காவிட்டால் தொற்றுநோய்கள் பரவும்

**கிளிநொச்சியில் சுகாதார பகுதியினர் எச்சரிக்கை**

அக்கராயன், ஒக. 25

கிளிநொச்சி நகரில் சிறந்த வடிகால் திட்டங்களை உருவாக்காதுவிட்டால் இனிவரும் மழைக் காலங்களில் தொற்று நோய்கள் உருவாகு வதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்குமென சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர்.

> **கொங் கிறீட் வீதிகள் காரணமாகவும் மழை காலத்தில் வெள்ள நீர் தேங்கி நிற்பதை அவதானிக்க முடிகின்றது.**

கடந்த போரின்போது அமைக்கப்பட்ட பெருமளவு மண்ணணைகள் வெள்ள நீர் வழிந்தோடுவதில் தடைகளை ஏற்படுத்தி வருகின்றன.

இதனால் வெள்ள நீர் தேங்கி நிற்கும் ஆபத்து தோன்றியுள்ளது.

மேலும் கிளிநொச்சி நகரில் உருவாக்கப்பட்டுள்ள கொங்கிறீட் வீதிகள் காரணமாகவும் மழை காலத்தில் வெள்ள நீர் தேங்கி நிற்பதை அவதானிக்க முடிகின்றது.

மேலும் கிளிநொச்சி நகரில் அமைக்கப்படும் ரயில் பாதையும் உயரமாக இருப்பதன் காரணமாக மழை வெள்ளம் பல இடங்களில் தேங்கி நிற்பதற்கான சூழலும் உருவாகியுள்ளது.

இதனால் மாவட்டச் செயலக, பிரதேச செயலக மட்டங்களில் இடம்பெறும் கூட்டங்களில் வடிகால்களை அமைப்பது தொடர்பாக கோரிக்கை விடப்பட்டு வருகின்றது. (க-18)

## கிளாலியில் அமைக்கப்படுகின்றன மூன்று வெள்ள வாய்க்கால்கள்

அக்கராயன், ஒக. 25

கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப்பள்ளியிலுள்ள கிளாலிக் கிராமத்தில் மழை காலத்தில் வெள்ளம் தேங்கி நிற்காது கடலுக்குச் சென்றடையக் கூடிய வகையில் வெள்ள வாய்க்கால்கள் அமைக்கப் பட்டு வருகின்றன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் இந்த வாய்க்கால்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.



முன்னர் இங்கு நான்கு வாய்க்கால்கள் அமைப்பதெனத் திட்டமிடப்பட்டபோதிலும் மூன்று மட்டுமே அமைக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

மிதிவெடி அகற்றப்படாததால் ஒரு வாய்க்காலை அமைக்க முடியவில்லையெனத் தெரிய வருகின்றது.

சுமார் 236 குடும்பங்கள் தற்போது கிளாலிக் கிராமத்தில் மீளக்குடியமர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## குளப் புனரமைப்பு துரித கதியில்

அக்கராயன், ஒக. 25

கிளிநொச்சி புதுமுறிப்புக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் வேகமாக இடம்பெற்று வருகின்றன.

போர்ச் சூழல் காரணமாக நீண்ட காலமாகப் புனரமைப்புக்கு உட்படாதிருந்த இந்தக் குளம் தற்போது முழு அளவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை இரணைமடுக்குளப் புனரமைப்பின் ஓர் அங்கமாக இந்தக் குளத்தின் வாய்க்கால்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (க-18)

## வட மாகாண கலை இலக்கிய விழா இம்முறை முள்ளியவளையில்

இந்த ஆண்டுக்கான வட மாகாண கலை இலக்கிய விழா இம்முறை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் இடம்பெறவிருப்பதாகத் தெரிய வருகின்றது.

ஆண்டுதோறும் வட மாகாண கலை இலக்கிய விழா வெவ்வேறு மாவட்டங்களில் இடம் பெற்று வருகின்றது. இம்முறை முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த விழா இரண்டு நாள்கள் இடம்பெறவுள்ளது. அடுத்த மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளில் இடம்பெறும் இந்த விழாவில் முதல் நாள் 12 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப் படவுள்ளன. இரண்டாம் நாள் ஆளுநர் விருதுகள் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. ஆளுநர் விருதுக்கு வவுனியா மாவட்டத்தில் இருந்து சிற்பக் கலைமாணி பொ.கனகரத்தினம், கவிஞர் நவபால கோபால் மடு கந்த தலதா விகாரையின் விகாராதிபதி சிறிஆனந்ததேரர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ நித்தியானந்தன் தெரிவித்தார். (க-421)

## அக்கராயன் கிழக்கில் இரண்டு பாலங்கள்

அக்கராயன், ஒக.25

கிளிநொச்சி அக்கராயன் கிழக்குப் பகுதியில் இரண்டு பாலங்களை அமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன், கிளிநொச்சி மாவட்ட மீள் எழுச்சித் திட்டத்தினூடாக, அக்கராயன் கிராமிய அபிவிருத்தி அமைப்பின் மூலமாக இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அக்கராயன் கிழக்குப் பகுதி மக்கள் மழை காலங்களில் இடர்களை எதிர் கொண்டு வருகின்றமை வழக்க மாகும். இந்தப் பகுதி மக்கள் விடுத்த நீண்ட நாள் வேண்டுகோளின் பிரகாரம் இந்தப் பாலங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. (க-18)

> **அக்கராயன் கிழக்குப் பகுதி மக்கள் மழை காலங்களில் இடர்களை எதிர் கொண்டு வருகின்றமை வழக்கமாகும்.**



கிளிநொச்சி நகரில் அமைக்கப்பட்டு வரும் ரயில் நிலையக் கட்டடம் (க-18)

## மோதலில் ஈடுபடும் பஸ் ஊழியர்களால் மக்களுக்கு சிரமங்கள்

அக்கராயன், ஒக.25

கிளிநொச்சியிலிருந்து முழங்காவில்வரை சேவையில் ஈடுபடும் அரச, தனியார் பஸ்களின் ஊழியர்கள் தமக்குள்ளே அடிக்கடி மோதல்களில் ஈடுப டுவதால் பிரயாணிகள் சிரமங் களுக்குள்ளாவதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

கடந்த 12 ஆம் திகதி தொடக்கம் அரச பஸ் சேவையொன்று கிளிநொச்சியிலிருந்து முழங்காவில் வரை ஆரம் பித்து வைக்கப்பட்ட நிலையில் மேற்குறித்த இரு சாராருக்குமிடையில் மோதல்களும் ஆரம்பித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

நேர அட்டவணை தொடர்பாகவே இந்த இருசாராருக்குமிடையில் பிணக்குகள் ஏற்படுகின்றன.

இந்தப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்த நாளிலிருந்து தனியார் பஸ்களே சேவையில் ஈடுபட்டு வந்தன.

குன்றும் குழியுமான வீதியில் தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபட்டு வந்த நிலையில் கடந்த 12 ஆம்




திகதியிலிருந்தே அரச பஸ்கள் சேவையில் ஈடுபட்டுள்ளன. வடமாகாண சபைத் தேர்தல் இடம்பெறவிருக்கின்ற நிலையில் இந்த பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மக்களிடையே வியப்பை ஏற்படுத்தியுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது. (க-18)

## தனிநாயகம் அடிகளாரின் நூல் வெளியீடு

**அகளங்கன் தெரிவிப்பு**

தமிழுக்குப் பெரும் பங்காற்றிய தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் தொடர்பான நூல் வெளியீடு விரைவில் இடம்பெறுமென கலாநிதி அக ளங்கன் தெரிவித்துள்ளார்.

தனிநாய கம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவை வவுனியாவில் நடத்துவது தொடர்பாக வவுனியாவில் இடம்பெற்ற கலந்துரையாடல் நிகழ்வின் போது அதற்குத் தலைமை தாங்கி உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தனிநாயகம் அடிகளாரின் வாழ்க்கை, அவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டு ஆகியவற்றைப் பாடசாலை மாண வர்கள் முதல் பலருக்கும் வெளிப்படுத்தும் வகையில் அவரது வாழ்க்கை வரலாறு பற்றிய நூல் விரைவில் வவுனியாவில் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-421)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்கானை நிகரை வைரவர் ஆலய முன்றிலில் அண்மையில் லயன்ஸ் கழக புதிய நிர்வாகிகள் பதவியேற்பு வைபவம் ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் தலைவர் லயன் ப.திலீபன் மற்றும் முன்னாள் தலைவர் லயன் ஆ.குணசேகரம் உட்பட ஏனைய நிர்வாக உறுப்பினர்கள். (ஒ)



வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வட்டுக்கோட்டை உப - அலுவலகத்தில் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பொறுப்பதிகாரி பே.தபேஸ்வரன் தலைமையில் இலவச ஆயுள்வேத மருத்துவ முகாம் இடம்பெற்ற வேளையில்... (ஒ-50)



நீண்ட காலமாக மூடிக் கிடக்கும் அளவெட்டி முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையத்தை செயற்பட வைப்பதற்காக நலன் விரும்பிகளில் சிலர் சிரமதானத்தில் ஈடுபட்டிருந்த வேளையில்.. (ஒ-36)



அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் ஆலய புதிய தேர் வெள்ளோட்ட விழா அண்மையில் நடைபெற்றது. விஸ்வ பிரம்மஸ்ரீ சின்னத்தம்பி அமரசிங்கம் தலைமையில் விசேட வழிபாடு இடம்பெறுவதையும் அடியார் கூட்டத்தையும் காணலாம். (ஒ-41)




சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று வரும். வறுமைக் கோட் டின் கீழ் உள்ள மாணவர்களுக்கு சங்கானை லயன்ஸ் கழகத்தால் ஒரு தொகுதி காலணிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. பாடசாலை அதிபர் நோபேர்ட் உதயகுமாரிடம். தலைவர் லயன் ப.திலீபன் அவற்றைக் கையளிப்பதையும் காணலாம். (ஒ-29)



காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை ( அப்புத்துரை பள்ளிக்கூடம்) வருடாந்த பரிசளிப்பு விழாவில் மாணவர்களின் கலை நிகழ்வுகளைக் காணலாம். (ஒ-250)





காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயத்தின் 125 ஆவது ஆண்டு விழா நிகழ்வில் வரவேற்பு நடனத்தையும், 125 ஆவது ஆண்டு நிறைவு மலரான 'சயம்பு' மலரை வடமாகாண கல்வி அமைச்சின் பிரதி செயலாளர் ப.விக்னேஸ்வரன் வெளியிட முதற் பிரதியை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ...தை வைத்திய நிபுணர் எஸ்.விஜயரத்தினம் பெற்றுக் கொள்வதையும் காணலாம். (ஒ-250)





ஒஸ்திரிய நாட்டைச் சேர்ந்த கட்புலத்துறைக் கலைஞர் அனாஹோல்மன் தனது ஓவியங்களுடன் கூடிய பின்னல் ஓவியக் கண்காட்சிக் கூடத்தை யாழ். பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணத்துடன் திறந்து வைப்பதையும் கண்காட்சியை விரிவுரையாளர்கள் பார்வையிடுவதையும் காணலாம். (ஒ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புதுக்குடியிருப்பிலுள்ள சிவநகருக்குச் செல்லும் வீதியிலுள்ள மதகு உடைந்ததால் அதில் பெரிய குழியொன்று ஏற்பட்டு ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது. (க-6)



வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்தின் கல்வி கலாசார அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையுடன் நெடுங்கேணிக் கோட்டத்துக்கு உட்பட்ட புளியங்குளம் பிரதேசத்தை அண்மித்துள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும். இவ்வருடம் புலமைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தரம்-5 மாணவர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வு கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்றபோது... (க)



கிளிநொச்சி மாவட்டம் அக்கராயன் பகுதியில் மீள்குடியமர்வின்போது அமைக்கப்பட்ட குடும்பமொன்றின் தற்காலிக வீடு இன்று இந்த நிலையில் காணப்படுகின்றது. (க18)



ஒரு வருடத்துக்கு முன்னர் கற்கள் பரவப்பட்ட போதிலும் இதுவரை புனரமைப்பைக் காணாது மக்களுக்குத் துன்பத்தை ஏற்படுத்துவதெனக் கங்கணம் கட்டியவாறு காணப்படும் முல்லைத்தீவு சுதந்திரபுரம் முதலாம் குறுக்கு வீதி. (க-6)



கிளிநொச்சி ரயில் நிலையத்துக்கு அருகில் காணப்படும் மீள்குடியமர்ந்த குடும்பமொன்றின் சிறுகுடிசை இவ்வாறு காட்சியளிக்கின்றது. (க-18)



அக்கராயன் மருத்துவமனையில் அமெரிக்க நிதியுதவியுடன் அமைக்கப்பட்டு வரும் கட்டடம். (க-18)



போரினால் அழிவடைந்து அதன் வடுக்களை இன்னமும் சுமந்தவாறு பரிதாபகரமான நிலையில் காணப்படும் உடையார்கட்டு கமநல சேவை நிலையம். (க-6)



கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கிராமத்தில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற பெண்கள் தலைமை தாங்கும் வறிய குடும்பங்களுக்கு உதவிகளை வழங்குவது தொடர்பான கலந்துரையாடலின்போது அங்கு சமூகமளித்தவர்களின் ஒரு பகுதியினர். (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## M Sutha Beauty Care

335 1/1,(1st floor) Galle road,Wellawatte,Colombo - 06
( Sangeetha Jewellery Upstair )
E - Mail : sutha@suthasbeauty.com | Web : www.suthasbeauty.com
077 3213366 | 011 2363153

## காணி விற்பனைக்கு

மாவிட்டபுரம் தெற்கு, தெல்லிப்பழை பட்டி கடவையில் 5 பரப்புக் காணி பனைகளுடன் உடனடி விற்பனைக்குண்டு. தரகர் வேண்டாம்.

தொடர்பு:077 690 3287 (c11371) (3.6.11)

## காணிவிற்பனைக்கு

யாழ்ப்பாணம், நாவற்குழி -கைதடிக்கிடையில் A9 பிரதான வீதியில் நன்னீர் வசதியுடன் ஆறு (60 பேர்ச்) பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. நேரில் வரவும்.

தொடர்பு: 077 310 1274 (39143) (3.7.11)

## வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தையில் இன்னும் 3 மாதங்களில் குடிபுகும் நிலையில் 1600, 2200 Sqft. 3 Bedrooms, Pent House, Apartments விற்பனைக்குண்டு

மேலதிக விவரங்களுக்கு : 0777 786440

(சி/11369) (10,6,3)

## வீடு விற்பனைக்கு

கரவெட்டி சம்பந்தர் கடைக்கு அருகில் வீடு விற்பனைக்கு உண்டு. (4 பரப்புக் காணியுடன் பயன்தரு மரங்களும் உள்ளன)

தொடர்புகளுக்கு :

077 6122386

(சி/11370) (10,6,3)

## வீடு விற்பனைக்கு

உடுவில், முதலாம் கட்டையடியில் (உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில்) இரண்டு பரப்பில் சகல வசதிகளுடைய வீடு விற்பனைக்கு

தொடர்பு: 077 854 6124, 011 239 4811 (c/11372) (3.6.11)

## தையல் பயிற்சி வகுப்பு

கொழும்பில் பயிற்றுவிக்கும் தையல் ஆசிரியையினால் வயது வித்தியாசமின்றி சிறந்த விளக்கத்துடன் சாரி பிளவுஸ், சல்வார், ஸ்ரோயிட் பயிற்றப்படும். ஸ்ரோயிட் ருக்கு பொருள்கள் வழங்கப்படும்.

யாழ் நகர் மணிக்கூட்டு வீதி 077 929 7474 (C/11367) (7.6.3)

## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை, தும்பளை வீதி அருகில் அம்புலி ஓடை ஒழுங்கையில் 04 பரப்பில், 6 அறைகள், சமையலறை உள்ள கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :

072 3513120

(சி/11368) (10,6,3)

## வீடு விற்பனை

கல்வயல் சாவச்சேரியில் (கண்டி வீதியிலிருந்து 1km தூரத்தில்) 3Rooms, 2 Halls, Kitchen, Bathroom உடன் புதிய நிலையில் உள்ள வீடு 4½ பரப்பு காணியுடன் விற்பனைக்கு உண்டு

தொடர்புக்கு :

0777 724 469

## Engineers, AutoCAD Draughts Persons தேவை

யாழ்ப்பாணத்தில் பொறியியல் வடிவமைப்பில் பணிபுரிவதற்கு Engineers, AutoCAD Draught Persons உடன் தேவை. ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். ICE பட்டம் பெற்றவர்களுக்கான பயிற்சியும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு

Email: ksunth@gmail.com
Environment Engineering Consultants (Pvt) Ltd.
No. 05, Council Lane, Dehiwala

## தேவை

PINE AGRO LANKA COMPANY

### விநியோகஸ்தர்கள்/ களஞ்சியப்படுத்துபவர்கள்

மாம்பழம், விளாம்பழம், கொடித்தோடை மற்றும் பலதரப்பட்ட பழவகைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் பைன் பிரெஷ் என்ற பெயரிலான பழ இரச வகைகளைக் கையாளக்கூடிய விநியோகஸ்தர்கள்/களஞ்சியப்படுத்துபவர்கள் தேவை.

தொ.பே. ஆங்கிலத்தில்/சிங்களத்தில் :- 0777919498, 0722994242
தமிழில் :- 0777244337

மின்னஞ்சல் : sales@pineagrolanka.com

## காணி விற்பனைக்கு

சங்கரத்தை வீதி, 786 பஸ்லைன் றோட், வட்டு மத்திய கல்லூரிக்கு அருகில் 55 பேர்ச் (5 ½ பரப்பு) காணி கிணறு பனைகளுடன் விற்பனைக்குண்டு. இரு பக்கமும் றோட் உண்டு.

தொடர்புக்கு : 077 9128944 / 078 7835864

(சி/11382) (10,6,3)

## Business Investor Needed

ஏற்றுமதி கம்பனி ஒன்றுக்கு Investor தேவை. கொழும்பில் வீடு பொறுப்புத் தரப்படும். தேவைப்படும் Amount 8.5 million.

(சி/11380) (10,6,3) தொ.பேசி : 077 912 8944

## வாகனம், வளவு விற்பனைக்கு

MAZDA FAMILIA 323-FULL OPTION கார் H1.... உடனடி விற்பனைக்குண்டு. அத்துடன் வட்டுக்கோட்டை குளிப்பன் லேனில் அமைதியான சூழலில் 55 பேர்ச் (5½ பரப்பு) வீட்டுக் காணியும் விற்பனைக்குண்டு. உண்மையாக வாங்குபவர் மட்டும் தொடர்புகொள்ளவேண்டிய தொ.பே: 077-9128944

(சி/11378) (10,6,3)

## வாகனம் விற்பனைக்கு

Toyota Hiace Super GL Diesel, KDH 211, 2008 ஆம் ஆண்டு உறபத்தி, 2011 ஆம் ஆண்டு இலங்கையில் பதிவு, Full Option, ஓடோ கியர், சக்ஷன் கதவு, Full சீட், Dual A/C and More... விலை 54 இலட்சம், பேசித் தீர்மானிக்கலாம்.

(சி/11379) (10,6,3) தொ.பேசி : 077 747 9916

## English Class

English Classes by Foreign and Local Teachers: A/L முடிவுகள், வெளிநாடு செல்ல காத்திருப்போர் மற்றும் பகுதிநேர படிப்பு, வேலை செய்வோருக்குப் பொருத்தமான ஆங்கில முழுநேர வகுப்புக்கள் அனுபவமிக்க வெளிநாட்டு, உள்நாட்டு ஆசிரியர்களால் பிரித்தானிய கற்பித்தல் முறையில், CD/DVD உதவியுடன் மேற் கொள்ளப்படுகின்றது. சரளமாக ஆங்கிலம் பேச, விளங்க தேவையான உறுதியான அத்திவாரம் இடப்படும். செப்ரெம்பர் 16- டிசெம்பர் 13 வரை (மூன்று மாதங்கள்), திங்கள்-வெள்ளி, காலை 9.00-1.00 மணி வரை, கொழும்பு பெரிய ஆஸ்பத்திரிக்கு அருகில் வகுப்புக்கள் இடம்பெறும். மாதக் கட்டணம் ரூபா 12,000/=

மேலதிக விவரங்களுக்கு :

0771 047 759, (39141) (10,6,3)

www.colombolanguageschool.com

## காணி விற்பனைக்கு


ஆடியபாதம் வீதி, வாலையம்மன் கோயிலுக்கு முன்பாக காலிங்கராஜன் குள வீதியில் அழகான அமைதியான சூழலில் நான்கு பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக் குண்டு. 1பரப்பு 650000/-

தொடர்பு : 075 595 8285 / 077 284 0184

(39139)(12. 6.3)

---

# உயர்தர பரீட்சை முடிவுகள் வரும்வரை காத்திருக்கவேண்டுமா?



தொழில் பயிற்சிக்கான 100% உத்தரவாதம்

City & Guilds

# DIPLOMA IN ENGINEERING

- CIVIL ENGINEERING
- ELECTRICAL ENGINEERING
- QUANTITY SURVEYING
- MECHANICAL ENGINEERING
- MOTOR VEHICLE ENGINEERING
- REFRIGERATION & A/C
- ELECTRONIC ENGINEERING
- AUTOCAD


- சர்வதேச அங்கீகாரம் பெற்ற City & Guilds சான்றிதழ்
- அனுபவமும் திறமையும் வாய்ந்த ஆசிரியர் குழாம்
- உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதியுயர் சம்பளத்துடன் வேலை வாய்புக்கள்
- தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் விரிவுரைகள்
- இலகு தவணைக் கட்டண முறைமை.
- IESL இனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொறியியல் கற்கை நெறி

CERTIFICATE - 6 MONTHS - GCE O/L, A/L COMMERCE OR ART
DIPLOMA - 8 MONTHS - GCE A/L MATHS OR SCIENCE
ADVANCED DIPLOMA - 1 YEAR - NCT, NCIT, C&G DIPLOMA OR EQUAL
GRADUATE DIPLOMA - 1 YEAR - NDT, HNDE, NDES, OUSL, HND
POST GRADUATE DIPLOMA - 1 YEAR - ENGINEERING DEGREE OR EQUAL

## Registrations are now on!

## Course commencement: September 2013

மேலதிக விபரங்களைப் பெற உங்கள்
{Name} {Address} {Course}
போன்ற விபரங்களை
0777 762 283 க்கு
SMS செய்யுங்கள்



## Call us for more information!

JAFFNA
021 4 666 699

(C/11362)

City & Guilds APPROVED CENTRE

SKILLS COLLEGE OF TECHNOLOGY

**SKILLS COLLEGE OF TECHNOLOGY**
Jaffna Campus
No. 207, Navalar Road, Jaffna
jaffna@skillsinternational.lk

TVEC Reg. No. : P01/0414

---

நிதியியலில் சர்வதேச அங்கீகாரமுடைய பிரித்தானியத் தராதரம் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கான அரிய சந்தர்ப்பம்

CISI
CHARTERED INSTITUTE FOR SECURITIES & INVESTMENT

ADB EKSP

கல்வி அமைச்சின் EKSP செயற்றிட்டத்தின் கீழ் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் புலமைப்பரிசில்கள் பற்றிய விபரங்களுக்கு அழையுங்கள்....

நெல்லியடி 021 567 7606
சாவகச்சேரி 021 567 8444
கிளிநொச்சி 021 567 4433

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மெட்ராஸ் கஃபே' யை எதிர்த்து ரொறண்டோவில் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஓக.25
தமிழீழ விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தும் நோக்குடன் உருவாக்கப்பட்டதாக கூறப்படும் "மெட்ராஸ் கஃபே' திரைப்படத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று கனேடியத் தமிழர்கள் ரொறண்டோவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
தமிழர்களை இழிவுபடுத்துவதாகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்தத் திரைப்படத்தை வெளியீடு செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கனேடியத் தமிழர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
ஆதார பூர்வமான சனல்-4 திரைப்படத்தை எதிர் கொள்ள முடியாத இலங்கை அரசு புனைகதைகளுடன் கூடியதாக மும்மொழிகளிலும் திரைப்படத்தை தயாரித்து தமிழ் மக்களது போராட்டத்தை இழிவு படுத்தி தமிழர்கள் மத்தியில் இந்தத் திரைப் படத்தை வெளியிட நினைத்துள்ளது.
இதனைக்கண்டித்து கனேடியத் தமிழர் தேசிய அவையின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (ந-14)

# வாகனம் மோதி ஒருவர் காயம்

தென்மராட்சி, ஓக.25
வட மாகாண சபைத் தேர்தல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் ஆதரவாளர்களால் தென்மராட்சிப் பகுதியில் பிரசார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேளையில் அவர்கள் வந்த வாகனம் நுணாவில் பகுதியில் ஏ-9 வீதியில் மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் ஒருவர் படுகாயமடைந்தார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
காயமடைந்தவர் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
சங்கானை வைத்தியசாலை வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி சிறிபாஸ்கரன் (வயது-47) என்பவரே காயமடைந்தவராவார்.
வீதி போக்குவரத்து பொலிஸார் சோதனைக்காக மறித்தபோது நிறுத்தாமல் வாகனம் சென்றதால் பொலிஸார் துரத்திவந்த வேளை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தை அண்மித்த பகுதியில் சங்கானையில் இருந்து எழுதுமட்டுவாழுக்கு சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியது.
வாகனத்தைப் பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

# நல்லூரில் உள்ளூர் உற்பத்தி கண்காட்சிக் கூடம் திறப்பு



யாழ்ப்பாணம், ஓக.25
நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் சங்கிலியன் தோப்பு மகளிர் விவகாரக் குழுவின் ஏற்பாட்டில் உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கான கண்காட்சிக்கூடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
கிராமிய மகளிர்களினால் தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருள்களுக்கு சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் மகளிர் விவகாரக் குழு இந்த விற்பனைக் கூடத்தை அமைத்துள்ளது. நல்லூர் பிரதேச செயலகத்தின் பதில் பிரதேச செயலர் திருமதி மதியழகன் சுபாஜினி சம்பிரதாய பூர்வமாக கண்காட்சிக் கூடத்தைத் திறந்து வைத்தார். ஆலய முன் வீதியில் அமைக்கப்பட்டுள்ள இந்த விற்பனைக் கூடத்தில் உள்ளூர் உற்பத்திப் பொருள்களை ஆலயத்துக்கு வருகை தருவோர் பெற்றுக் கொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ந-14)

# வாழ்த்துமடல் தயாரிக்கும் பயிற்சிநெறி

வலி.வடக்கு, ஓக.25
மல்லாகம் சந்தியில் கடந்த ஒரு நாள் இடம்பெற்ற மூன்று விபத்துக்களில் ஐவர் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
நேற்றுமுன்தினம் பிற்பகல் 4 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இருவர் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.
அதனைத் தொடர்ந்து நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவுடன் பின்புறமாக வந்து மோட்டார் சைக்கிளில் மோதியதில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் சிறு காயத்துக்கு உள்ளாகினார்.(வ-86)

## 3 விபத்துக்களில் 5 பேர் காயம்

வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கி வரும் விதாதாவள நிலையத்தில், வாழ்த்து மடல் தயாரிக்கும் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இந்தப் பயிற்சி நெறியைப் பின்பற்ற விரும்புவோர் சித்தன்கேணியில் அமைந்துள்ள மேற்படி நிலையத்தின், விதாதா வள நிலையகளக் கூட்டுணைப்பாளருடன்தொடர்புகொள்ளலாம். (ந-29)

## எரிபொருள் நிலையத்தில் 3 லட்சம் சூறை

அம்பாறை மாவட்டவம், கல்முனை நகரில் உள்ள அலியார் எரிபொருள் நிலையம் உடைக்கப்பட்டு அங்கிருந்த 3 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா பணம் சூறையாடப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் இடம்பெற்ற தினமான வெள்ளிக்கிழமை இரவு காவலாளி ஒருவரும் கடமையில் இருந்தார் என்றும் பொலிஸார் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-10)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
ads@uthayan.com
0215671111


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
09.04.1925

மறைவு
27.07.2013

திருமதி
கெங்கநாயகி
உமாபதிராசா

கடந்த 27.07.2013இல் சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தாயாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (26.08.2013) திங்கட்கிழமை அவரது பிறப்பிடமான வல்வெட்டித் துறையில் உள்ள இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காவற்கோட்டை,
வல்வெட்டித்துறை.
குடும்பத்தினர்.
077 177 7585

## மரண அறிவித்தல்

### மு. சிவராசா (Accountant)



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு தெமட்ட கொடையில் வதித்து பின், இலண்டன் Newbury park ஐ வதிவிடமாகவும் கொண்டிருந்த முன்னாள் இளைப்பாறிய இலங்கை அரசாங்கக் கணக்காளர் முத்துத்தம்பி சிவராசா 21.08.2013 புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி -சிவகொழுந்து தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-நேசம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பூமகளின் அன்புக் கணவரும் தியாகராசா(Retired Station Master- இலங்கை), காலஞ்சென்றவர்களான நடராசா (Majini Stores Colombo), ஏகாம்பரம் கருணகடாட்சி, சிவஞானம் நீலாயதாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகேஸ்வரி, நகுலேஸ்வரி, நாமகள், சிவராசா, காலஞ் சென்றவர்களான ஏகாம்பரம், சிவஞானம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவஅசோகன் (இலண்டன்), சிவவிசாகன்(கோலாலம்பூர்) ஆகியோரின் அருமைத் தந்தையும், யோகராணி (இலண்டன்), பரமேஸ்வரி (கோலாலம்பூர்) ஆகியோரின் மாமனாரும் அமரேஷ் (இலண்டன்), ரத்தீஷ் (இலண்டன்), உமேஷ் (இலண்டன்), நிதீஸ்வர் (கோலாலம்பூர்), சரண்யா (கோலாலம்பூர்) ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.08.2013) ஞாயிற்றுக் கிழமை காலை 7.00 மணி முதல் 2 Ramsgill Drive Newbury Park Ilford 1G2 7TR என்ற விலாச இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியை முற்பகல் 11.00 மணிக்கு (City of London Crematoriumத்தில் (Aldersbrook Road, Manor Park, London E12 5DQ) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| சிவஅசோகன் (லண்டன்) | 0208 2206393/077 303 13379 |
| சிவவிசாகன் (மலேசியா) | 0060 105267511 |
| பேரமகன் முரளீதரன் (லண்டன்) | 0208 5991127 |
| சகோதரன் தியாகராசா (கொழும்பு) | 0094 114333707 |
| மருமகன் பாஸ்கரன் (கொழும்பு) | 0094 777871617 |
| மருமகன் சிவபாலன் (யாழ்ப்பாணம்) | 0094 772002589 |

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 26 . 04 . 1930
இறப்பு 26 . 07 . 2013

### சரவணமுத்து முத்ததம்பி

(முன்னாள் வர்த்தகர், சிறுப்பிட்டி கிழக்கு, ஞானவைரவர் கோயில் தர்மகர்த்தா)

பார் போற்ற வாழ்ந்தீர்கள் ஐயா
பார்த்த இடம் எல்லாம் உங்கள் முகம் தோன்றுது ஐயா
எங்களுடன் வாழ்ந்த காலம் கனவாகி போச்சுது ஐயா
பாசத்தை கொட்டி எம்மை வளர்த்தீர்கள் ஐயா
ஏழு ஏழு ஜென்மம் எடுத்தாலும் உங்களை மறவோம் ஐயா

கடந்த 26.07.2013 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்ப விளக்கின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் தெரிவித்தோருக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், மலர் வளையம் வைத்து, துண்டுப் பிரசுரம் வெளியிட்டோருக்கும், அன்னாரின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டோருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி சபீண்டிகரண கிரியைகள் இன்று (25.08.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணியளவில் நடைபெறும், இந்த நிகழ்வில் தாங்களும் கலந்து கொண்டு ஆத்ம சாந்திப் பூசையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

யோகநாதன் தவமணிதேவி
நாகபூஷணி இல்லம், சிறுப்பிட்டி.
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(39149)(10.6.3)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் பொன்னையா
செல்லையா
(திதி: அபரபக்க பஞ்சமி)



மண்ணில்
16.03.1942

விண்ணில்
30.08.2010

எம் குல விளக்கே! ஆண்டு மூன்று ஆனதப்பா!
ஆறவில்லை எம் சோகம் ஒன்றல்ல
ஓராயிரம் ஆண்டுகளானாலும் நீங்காது உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சை விட்டு வானுலகம் சென்றாலும்
அரனடியில் இருந்து ஆசிகள் கூறுங்கள் அப்பா!
எங்களுக்கு எம் குடும்ப விளக்கின் ஆத்மசாந்திக்காய்
விழிநீர் சிந்துகின்றோம் இறைவனிடம்.

[illegible]ம்பலம் வீதி,
[illegible] கிழக்கு, மீசாலை.
குடும்பத்தினர்.
021 733 3666, 077 733 4374

(c / 11604)(45.3.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.மேற்கில் வீடு வீடாகச் சென்று பிரசாரம்

வடமாகாண சபைத் தேர்தல் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் களம் இறங்கியுள்ள வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் என்.ஐங்கரன் தலைமையிலான ஆளும் கட்சி உறுப்பினர்கள் வீடு வீடாகச் சென்று பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களின் போது வாக்களிப்பு வீதம் குறைந்ததினால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து மக்களுக்கு விரிவாக விளக்கி வரும் உறுப்பினர்கள் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வாக்கு வீதத்தை அதிகரிக்க வேண்டிய அவசியம் குறித்தும் அதனால் எமது பிரதேசத்துக்கும் மக்களுக்கும் ஏற்படும் நன்மை குறித்தும் விரிவாக எடுத்துக் கூறி வருகிறார்கள். தற்பொழுது அராலி வடக்கு. கிழக்கு. மேற்கு ஆகிய பிரதேசங்களுக்குச் செல்லும் உறுப்பினர்கள் மக்களுடன் தேர்தல் பற்றிக் கலந்துரையாடி வருகிறார்கள். (ஒ-115)

**45 ஆவது ஆண்டு திருமண நினைவு நாள்**



இராசசிங்கம் இந்திராணி இராமலிங்கம் இராசசிங்கம்

[25.08.1968 இல்லறத்தில் இணைந்த நாள்]

தீவகமும் தென்மராட்சியும் இல்லறத்தில் இணைந்து
இன்புற்று வாழ்ந்து எல்லா வளமும் பெற்று
வாழ வைத்த நீங்கள் இன்னும் பல்லாண்டு
காலம் இன்புற்று வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

இ. பிரகாஸ்,
S.P.S FARM,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

வாழ்த்துவோர்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
077746254

## மீட்கப்பட்ட சைக்கிள் நீதிமன்றில்

யாழ்ப்பாணம். ஒக.25

கொடிகாமம் நகரப் பகுதி வீதியில் அநாதரவாகக் காணப்பட்ட சைக்கிள் ஒன்று கொடிகாமம் பொலிஸாரால் மீட்கப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் பாரப் படுத்தப்பட்டுள்ளது. இந்த சைக்கிள் உரிமை கோரப்படா விட்டால் ஏலத்தில் விற்கப்படும் என்று சாவகச்சேரி நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (ஒ-14)

**டோகா செல்லும் பயணிகளுக்கு**

யாழ் மக்களுக்காக
24 மணித்தியாலய சேவையை
விஸ்தரித்துள்ளோம்

கொழும்பு - டோகா 27600/=
Colombo-Doha
ONW (மாதாந்த கொடுப்பனவுமுறையில்) 2850/= HNB

Nation Popular Travels & Tours
#128, Brown Road, Jaffna
0214 920 920

**வீடு, காணி விற்பனைக்கு**

யாழ். மானிப்பாய் வீதியில் ஐந்து சந்தி பள்ளிவாசலுக்கு அருகில் உள்ள வீடு காணி (10 பேர்ச்) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 202 0339 (C/11366) (7.6.3)

**மணமகள் தேவை**

யாழ்.றோமன் கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்த 1979ஆம் ஆண்டு பிறந்த A/L படித்த மணமகனுக்கு மணமகள் தேவை.

(38116)(12.6.3) தொடர்பு - 071 305 6077

**வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013**

**யாழ்ப்பாண மாவட்டம்**



தமிழ் இன அழிப்பைச் செய்தோரைத் தோற்கடிப்போம்!
தமிழ் இனத்திற்கு நீதி கிடைக்க வாக்களிப்போம்!

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமையிலான ஐந்து கட்சிகளின் கூட்டணியாகிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெறச் செய்வோம்.

**எம்.கே.சிவாஜிலிங்கம்**

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

9

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |

(சி/11213) (23-14-16)

**விற்பனைக்கு**

நல்ல நிலையில், பெண் பாவனையிலிருந்த Super Cup 90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

காலை 6 மணி - 9 மணி வரை
மாலை 4 மணி - 7 மணி வரை
பார்வையிடலாம்.

தொடர்பு: 40/3, வைமன் வீதி, நல்லூர் (சென்றல் கிளினிக் லேன்)

(38115)(12.6.3)

லண்டன் / கனடா / அமெரிக்கா / சுவிஸ் / ஜேர்மனி பிரான்ஸ் / இத்தாலி / டென்மார்க் / அவுஸ்திரேலியா நியூஸிலாந்து மற்றும் ஏனைய நாடுகளுக்கு செல்ல இருப்பவர்களுக்கு

**வங்கியில் பணவைப்பு**

அரச வங்கியில் 3, 6, 12 மாதங்களுக்கான முன் பின் வங்கியில் பணவைப்பு

**Saving Book - FD - Statement**

For: Student | Business | Migration | PR | Visit Family | Dependant | Refused | Visas

**077 4789289**

விசா பெற்றுக்கொள்வதற்கு தேவையான சகல உதவிகளும் எம்பசி வேலைகளும் செய்து தரப்படும்

No.52, Davidson Road, Colombo -04.
நேரத்தை முன்கூட்டியே பதிவுசெய்துவிட்டு வரவும்.

**மணமகள் தேவை**

மணமகள் தேவையா? ஒரு sms இனூடான உங்களின் பதிவினை மேற்கொண்டு காத்திருங்கள். உங்களின் டயலொக் மொபைலில் (Dialog) REG bride என ரைப் செய்து 77000 இலக்கத்திற்கு sms பண்ணவும். மேலதிக தகவலிற்கு www.realmatrimony.com Call : 011 4380900 0114344230

**மணமகன் தேவை**

மணமகன் தேவையா? ஒரு sms இனூடான உங்களின் பதிவினை மேற்கொண்டு காத்திருங்கள். உங்களின் டயலொக் மொபைலில் (Dialog) REG groom என ரைப் செய்து 77000 இலக்கத்திதிற்கு sms பண்ணவும். மேலதிக தகவலிற்கு www.realmatrimony.com Call : 011 4380900 0114344230

**sms ஊடாக வரன் தேடல்**

sms இனூடாக Realmatrimony இல் பதிவதாயின். உங்களின் மொபைலில் <உங்களின் பெயர்>, <பிறந்த திகதி>, ரைப் செய்து 0777 111 786 என்ற இலக்கத்திற்கு sms பண்ணுங்கள். அதே நாள் இலவச சேவையினையும் பெறலாம். மேலதிக தகவலுக்கு அழையுங்கள் www.realmatrimony.com Call : 011 4380900 0114344230

MMW

**விசா பெற்றுக்கொள்ள இருப்பவர்கள்**

UK, Australia, Canada, USA, New Zealand, Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway Switzerland, Sweden etc... மற்றும் ஏனைய நாடுகளுக்கு எமது பல வருட அனுபவமுள்ள UK, USA, CANADA போன்ற நாடுகளில் பயிற்சி பெற்ற சட்டதரணிகளால் புதிய நிபந்தனைகளும், விதிமுறைக்கமைய விசா பெற்றுக் கொள்வதற்கான உதவிகள் செய்து கொடுக்கப்படும்.



**Student Visa**

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு சென்று படிப்பதற்கும் பகுதி நேர வேலைவாய்ப்பு மற்றும் அந்த நாட்டில் Settle ஆக விரும்புகின்றவர்களுக்காக:



- படிப்பதற்கு வயது எல்லை இல்லை. சரியான காரணமே போதுமானது.
- Minimum Qualification O/L மற்றும் ஏதாவது பாடநெறி படித்திருந்தால் நன்று இடைவெளி இருந்தால் கவலைப்பட தேவையில்லை.
- IELTS தகைமை தேவையில்லை, இருந்தால் மிக நன்று
- உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப மிகக் குறைவான செலவில் TOP University, A Grade College செல்வதற்கான வாயப்பு.
- உங்களுடன் உங்கள் உதவிக்கு யாராவது உறவினர்களை அழைத்து செல்ல விரும்புகின்றீர்களாயின் அதற்கான வசதிகள் செய்து தரப்படும்
- உங்கள் கல்வி செலவுக்கு போதுமான பணத்தை அரசவங்கியினூடாக கடன்காப் பெற்றுத்தரப்படும்.
- வங்கியில் பணவைப்பு, Airport Pickup, Accommodation, மற்றும் உங்கள் ஏனைய குறைபாடுகள், தேவைகள் நிவர்த்தி செய்யப்படும்.

**Visit Visa**

சுபகாரியங்களுக்கும், திருமணங்களுக்கும், மங்கள, அவமங்கள காரியங்களுக்கும் மற்றும் அவசரமாக செல்ல இருப்பவர்களுக்கும் விசேடமாக உடனே விசா பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

தாமதமாகிய விசாக்கள் - திரும்பிய விசாக்கள் உள்ளதா? விசா பெற்றுக் கொள்வதில் பிரச்சனை உள்ளதா?

*Refused? Rejected?*

- ✓ உங்கள் ஆவணங்களை சரியான முறையில் சமர்பிக்கத் தவறி விட்டீர்களா?
- ✓ உங்கள் வீசா முடிந்ததும் இலங்கைக்கு திரும்பி வருவீர்கள் என்ற சந்தேகமா?
- ✓ உங்கள் வங்கியில் சேமிப்பு பணம் பற்றாக்குறையா?
- ✓ உங்கள் ஆவணங்கள் திருப்தி தரக்கூடியதாக இல்லையா? மற்றும் ஏதாவது காரணங்கள் இருப்பின் இது நிவர்த்தி செய்து சரியான முறையில் VISA பெற்றுக் கொடுக்கப்படும்.



- ✓ விசா சம்பந்தமான சகல ஆலோசனைகள் வழங்கப்படும்.
- ✓ விசா விண்ணப்பபடிவம் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்.
- ✓ Embassy கடிதங்கள் மொழி பெயர்த்துத் தரப்படும்.
- ✓ Ticket, Hotel Booking, Travels Insurance செய்து தரப்படும்.
- ✓ வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் Sponsor கடிதங்களுக்கு விசா பெற்றுக் கொள்வதற்கு தேவையான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
- ✓ வெளிநாட்டில் உள்ள உறவினர்களிடம் செல்வதற்கான வசதிகள் செய்து தரப்படும்.



**வங்கியில் பணவைப்பு**

Saving book, Fixed Deposit, Statement
3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின் ) பணவைப்பு

Migration / Skill Migration / Work Permit / Visit Visas / Student Visas / Dependent / Family Visas / Business / Investment / Rejection Appeals / New Applications etc...

எவ்வித முற்பணம் இல்லாமல் எம்மிடம் வந்து கதைத்து உண்மையான, நேர்மையான, நம்பிக்கையான முறையில் ஆலொசனைகளை பெறலாம்.
(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).

FLEX Graphic

ஐரோப்பிய 25 நாடுகளில் (SENAGON COUNTRY) 5 வருட அல்லது 2வருடத்திற்கான வதிவிட விசா (RESIDENT VISA) தனியாக அல்லது முழுக்குடும்பத்துடன் குறுகிய காலத்திற்குள் செல்வதற்கு விசா பெற்றுக்கொள்வதற்கான உதவிகள் செய்து தரப்படும்.

SKYWALK Visa Solutions

ஸ்கைவோக் விசா சொலூஷன் 07777 11905

No. 1/1, Ga[illegible]d, Dehiwala. (Food City - 1st Floor)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்பாணம், ஒக.25
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகள்:

பி.ப. 4 மணி
விண்மீன் விளையாட்டுக் கழக 'ஏ' அணி எதிர் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி.

பி.ப.4.45 மணி
சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணி எதிர் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக 'பி' அணி. (ற-23-422)

---




யாழ்பாணம், ஒக.25
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

பி.ப.3.30 மணி
கருணாகரன் விளையாட்டுக்கழகம் எதிர் நக்கீரன் விளையாட்டுக்கழகம்.

பி.ப.4.30 மணி
கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் வீனஸ் விளையாட்டுக்கழகம்.(ற-23)

---

யாழ்பாணம், ஒக.25
யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுமதியுடன் இணுவில் அறிஞர் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தி வரும் தாச்சி சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று ஞாயிறு பிற்பகல் 3.30 மணிக்கு இணுவில் அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும். (ற-288)




வடமாகாண இலங்கை வங்கி பணியாளர்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழா நேற்று யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. அதில் இடம்பெற்ற 40 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் வேகமுடன் கலந்துகொண்ட வீர, வீராங்கனைகள். (ற-23)

# உடுவில் உதயசூரியனை சாய்த்தது முத்துத்தம்பி



யாழ்ப்பாணம், ஒக.25
இணுவில் கலைஒளி மன்றம் நடத்திய கணேஸ்வரியம் வெற்றிக் கிண்ண மென்பந்துச் சுற்றுத் தொடரில் திருநெல்வேலி முத்துத் தம்பி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.
தொடரின் இறுதியாட்டத்தில் திருநெல்வேலி முத்துத் தம்பி விளையாட்டுக் கழக அணியும், உடுவில் உதய சூரியன் விளையாட்டுக் கழக அணியும் பலப்பரீட்சையில் இறங்கின.
முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி முத்துத் தம்பி விளையாட்டுக் கழக அணி 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 40 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.
அதில் லவன் 15 ஓட்டங்களையும், கோபி 9 ஓட்டங்களையும், விதுன் 7 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் உடுவில் உதய சூரியன் விளையாட்டுக் கழக அணி சார்பில் கனிஸ்ரன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 6 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், பெஞ்ஜோய் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 4 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
41 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய உடுவில் உதய சூரியன் விளையாட்டுக் கழக அணி 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்கினை இழந்து 29 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் வெற்றிக் கிண்ணத்தைக் கோட்டை விட்டது.
அதில் பெஞ்ஜோய் 15 ஓட்டங்களையும் வெலிஸ்ரன் 6 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக அதிகபட்சமாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் திருநெல்வேலி முத்துத் தம்பி விளையாட்டுக் கழக அணி சார்பில் சுரேந்திரன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 4 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், கோபி 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 3 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
ஆட்ட நாயகனாக திருநெல்வேலி முத்துத் தம்பி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த லவனும், தொடர் ஆட்ட நாயகனாக அதே அணியைச் சேர்ந்த வாமணனும், சிறந்த துடுப் பாட்ட வீரராக உடுவில் உதய சூரி யன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பெஞ்ஜோயும், சிறந்த பந்து வீச்சாளராக திருநெல்வேலி முத்துத் தம்பி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சுரேந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர்.
நடைபெற்ற ஆட்டங்களில் அதிக ஆறு ஓட்டங்களை (சிக்ஸர்) விளாசிய வீரரராக கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பிரகாஸ் (13 சிக்ஸர்கள்) தெரிவானார். (ற-23)

## போட்டி முடிவுகள்

யாழ்பாணம், ஒக.25
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகம், பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம் ஆகியவை வெற்றி பெற்றுள்ளன.
முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக்கழக அணி மோதியது.
அதில் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. சிறந்த வீரனாக சுதாகர் தெரிவானார்.
இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டியுத் விளையாட்டுக்கழக அணி மோதியது.
அதில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. சிறந்த வீரனாக பொபி தெரிவானார். (ற-23)

---

யாழ்பாணம், ஒக.25
நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகம் நேசராஜா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகம், அண்ணா ஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஆகியவை வெற்றிபெற்றுள்ளன.
முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் நோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணி மோதியது.
அதில் சென்.மைக்கல் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
இரண்டாவது ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அண்ணா ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதியது.
அதில் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

# வடமாகாணத் தடகளப் போட்டிகள்: சாதனைகளின் விவரம்

யாழ்ப்பாணம், ஒக.25
வவுனியா நகர சபை மைதானத்தில் கடந்த 2 ஆம், 3 ஆம் திகதிகளில் நடைபெற்ற வட மாகாண தடகளப் போட்டிகளில் பதிவு செய்யப்பட்ட சாதனைகளின் நேற்றைய தொடர்ச்சி:

**ஆண்கள் பிரிவு**

சதீஸ்குமார் (வவுனியா மாவட்டம்)



2010 ஆம் ஆண்டு நடைபெற்ற வட மாகாணத் தடகளப் போட்டியில் ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பி.ஜி.சி.ஆர்.பன்னவெல்ல 1.59.8 செக்கன் என்ற நேரப்பெறுதியில் பதிவு செய்த சாதனையை இவ்வாண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த சதீஸ்குமார் 1 நிமிடம் 59.3 செக்கனில் ஓடி முடித்து புதிய சாதனையை பதிவு செய்தார்.

கேசவன் (வவுனியா மாவட்டம்)



2010 ஆம் ஆண்டு நடைபெற்ற வட மாகாண தடகளப் போட்டியில் ஆண்களுக்கான110 மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஐங்கரன் 16.7 செக்கன் என்ற நேரப் பெறுதியில் ஓடி முடித்து பதிவு செய்த சாதனையை இவ்வாண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கேசவன் 16.7 செக்கன்கள் என்ற நேரப் பெறுதியில் ஓடி முடித்து சாதனையைச் சமன் செய்தார்.

எச்.எ.பி.டிசநாயக (வவுனியா மாவட்டம்)



ஆண்களுக்கான 42.195 கிலோ மீற்றர் மரதன் ஓட்டத்தில்வவுனியாமாவட்டத்தைச் சேர்ந்த எச்.எ.பி.டிசநாயக 2 மணித்தியாலயம் 45 நிமிடம் 35 செக்கன்கள் என்ற நேரப்பெறுதியில் குறித்த தூரத்தை ஓடி முடித்து புதிய சாதனையை பதிவு செய்தார்.

சந்திரவதனன் (வவுனியா மாவட்டம்)



ஆண்களுக்கான 20 கிலோ மீற்றர் வேகநடைப் போட்டியில்வவுனியாமாவட்டத்தைச் சேர்ந்த சந்திரவதனன் 2 மணித்தியாலம் ஒரு நிமிடம் 2 செக்கன்கள் என்ற நேரப் பெறுதியில் குறித்த தூரத்தை அடைந்து புதிய சாதனையை பதிவு செய்தார்.

தேவரஞ்சன் (முல்லைதீவு மாவட்டம்)
2010 ஆம் ஆண்டு நடைபெற்ற வடமாகாணத் தடகளப் போட்டியில் ஆண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த றஜீகரன் 16.32.7செக்கன்கள் என்ற நேரப்பெறுதியில் ஓடி முடித்து பதிவு செய்த சாதனையை இம்மாதம் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த தேவராஜன் 16.19.6 செக்கன்கள் என்ற நேரப் பெறுதியில் ஓடி முடித்து புதிய சாதனையைப் பதிவு செய்தார்.



2010 ஆம் ஆண்டு நடைபெற்ற வட மாகாண தடகளப் போட்டியில் ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த றஜீகரன் 34.43.7 செக்கன்கள் என்ற நேரப்பெறுதியில் பதிவு செய்த சாதனையை இவ்வாண்டு முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த தேவராஜன் 34 நிமிடம் 04.06 செக்கன்கள் என்ற நேரப் பெறுதியில் ஓடி முடித்து புதிய சாதனையைப் பதிவு செய்தார்.

கிருஷ்ணன் (யாழ்.மாவட்டம்)



2012ஆம் ஆண்டு நடைபெற்ற வட மாகாண தடகளப் போட்டியில் ஆண்களுக்கான உயரம் பாய்தல் நிகழ்வில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தினேஷன் 1.87 மீற்றர் கடந்து பதிவு செய்த சாதனையை இவ்வாண்டு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த கிருஷணன் 1.88 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து புதிய சாதனையை பதிவு செய்துள்ளார்.

டபிள்யூ.சி.சி லிவிங்ரன் (யாழ்.மாவட்டம்)



2012 ஆம் ஆண்டு நடைபெற்ற வட மாகாண தடகளப் போட்டியில் ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் பதிவு செய்திருந்த தனது முன்னையசாதனையான 53.56 மீற்றர் தூரத்தை, இம்முறை யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த டபிள்யூ.சி.சி லிவிங்ரன் 59.23 மீற்றர் தூரம் எறிந்து தனது முன்னைய சாதனையை முறியடித்தார். (ற-23)

## கிரிக்கெட் சுற்றுத் தொடருக்கு விண்ணப்பிக்கலாம்



யாழ்பாணம், ஒக.25
திருநெல்வேலி முத்துத்தம்பி விளையாட்டுக்கழகம் 6 பேர் பங்குகொள்ளும் 5 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுத் தொடர் ஒன்றையும், 9 பேர் பங்குபற்றும் 12 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுத் தொடர் ஒன்றையும் நடத்தவுள்ளது.
இந்த இரு கிரிக்கெட் சுற்றுத் தொடர்களிலும் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாகப் பதிவு செய்ய வேண்டும் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.
கிரிக்கெட் சுற்றுப்போட்டி தொடர்பான விவரங்களுக்கு விளையாட்டுக் கழகத்தின் தலைவர் அல்லது செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
25/08/2013

# போராடுகின்றது இங்கிலாந்து



இங்கிலாந்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான ஆஷஷ் தொடரின் 5ஆவதும், இறுதியுமான ஆட்டத்தின் 3ஆம் நாள் முடிவில் இங்கிலாந்து அணி வெற்றிக்கான போராட்டத்தை வெளிப்படுத்தியது.

இலக்குகள் இழப்பின்றி 32 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 3ஆம் நாளை ஆரம்பித்த இங்கிலாந்து அணி 3ஆம் நாள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.


முதலாவது இலக்குக்காக 68 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, இரண்டாவது இலக்குக்காக 50 ஓட்டங்களையும், 3ஆவது இலக்குக்காக 58 ஓட்டங்களையும் பகிர்ந்தது.

சீரான இணைப்பாட்டங்கள் பகிரப்பட்ட போதிலும், அவ்வணியின் ஓட்டவேகம் மிக மெதுவாகவே காணப்பட்டது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஜோ றூட் 68 ஓட்டங்களையும், கெவின் பீற்றர்சன் 50 ஓட்டங்களையும், ஜொனதன் ட்ரொட் 40 ஓட்டங்களையும், இயன் பெல் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக மிற்சல் ஸ்ரார்க் 2 இலக்குகளையும், றயன் ஹரிஸ், நேதன் லையன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 9 இலக்குகளை இழந்து 492 ஓட்டங்களைப் பெற்றுத் தனது இனிங்ஸை இடைநிறுத்தியிருந்தது. (ற)



# சங்காவின் சிறப்பாட்டத்தால் 'ஜமாய்த்தது ஜமைக்கா'

இலங்கை அணியின் குமார் சங்கக்காரவின் சிறப்பான ஆட்டத்தின் காரணமாக ஜமைக்கா அணி கரீபியன் பிரிமியர் லீக் தொடரின் பார்படோஸ் அணியை 7 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது.

குயீன்ஸ் பார்க் ஓவல் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஜமைக்கா அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பார்படோஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது பந்துப்பரிமாற்றத்தில் ஓர் ஓட்டத்தை மாத்திரம் பெற்ற அவ்வணி, இரண்டாவது பந்துப்பரிமாற்றத்தின் முதற் பந்திலேயே முதலாவது இலக்கை இழந்ததோடு, 2.1 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்து தடுமாறியது.


அதன் பின்னர் மூன்றாவது இலக்குக்காக 15.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 102 ஓட்டங்கள் பகிரப்பட்டன.

இறுதி 3 பந்துப்பரிமாற்றங்களில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய அந்த அணி 40 ஓட்டங்களைக் குவித்தது. இறுதியில் 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 148 ஓட்டங்கள் பெறப்பட்டன.

**இறுதி நேரத்தில் அதிரடியாக ஆடிய அன்ட்ரே ரசல் 6 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்**

துடுப்பாட்டத்தில் பார்படோஸ் அணி சார்பாக சொய்ப் மலிக் 47 பந்துகளில் 49 ஓட்டங்களையும், றேமன் றெய்பர் 43 பந்துகளில் 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜமைக்கா அணி சார்பாக வேர்ணன் பிலாந்தர் 28 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், டேவிட் பேர்ணாட், கிறிஸ் கெயில் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். முத்தையா முரளிதரன் 3 பந்துப்பரிமாற்றங்களில் 26 ஓட்டங்களை விட்டுக் கொடுத்திருந்தபோதும் இலக்கு எதனையும் கைப்பற்றவில்லை.



149 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஜமைக்கா அணி 18.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

16 ஓட்டங்களுக்கே கிறிஸ் கெயிலை இழந்த ஜமைக்கா அணி சார்பாக அடுத்துக் களமிறங்கிய குமார் சங்கக்கார சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். அத்துடன் இறுதி நேரத்தில் அன்ட்ரே ரசல் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி ஜமைக்கா அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

துடுப்பாட்டத்தில் ஜமைக்கா அணி சார்பாக குமார் சங்கக்கார 38 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங்களையும், சட்விக் வோல்ற்றன் 40 பந்துகளில் 45 ஓட்டங்களையும், அன்ட்ரே ரசல் 6 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பார்படோஸ் அணி சார்பாக அஸார் மஹ்மூட் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

ஆட்ட நாயகனாக ஜமைக்காவின் குமார் சங்கக்கார தெரிவானார். (ற)

# பின்னடைவுக்கு காரணம் ஆஸி.கிரிக்கெட் சபையே

## ஹைடன் குற்றச்சாட்டு

ஆஸ்திரேலிய அணியின் பின்னடைவுக்குக் காரணம் அந்நாட்டுக் கிரிக்கெட் சபைதான் என்று கடுமையாகச் சாடியுள்ளார் முன்னாள் ஆஸி.கிரிக்கெட் வீரர் மத்யூ ஹைடன்.

இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஷ் டெஸ்ட் தொடரில் 5 டெஸ்ட் ஆட்டங்களில் 3 ஆட்டங்களில் தோல்வி அடைந்து ஆஸ்திரேலிய அணி தொடரை இழந்தது.

இந்த நிலையிலேயே ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அந்நாட்டு முன்னாள் வீரர் மத்யூ ஹைடன் கடுமையாக சாடியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்,

"ஆஸ்திரேலிய அணியின் தற்போதைய மோசமான நிலைக்கு ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையே காரணம். இதுவே ஆஸ்திரேலிய அணியில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

அணிக்கு மிகச் சிறந்த வலுவான தலைமையை உருவாக்க கிரிக்கெட் சபை தவறிவிட்டது. குறிப்பாக மைக்கேல் கிளார்க்கை அணித்தலைவராக்கியது மிகப்பெரிய தவறாகும்.

இந்திய சுற்றுப்பயணத்தின் போது வீரர்கள் இடையே ஏற்பட்ட மோதலுக்கும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் தவறான செயற்பாடுகள் தான் காரணம்" என்று தெரிவித்துள்ளார். (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளும் தரப்பின் வன்முறைகளை கண்டுகொள்ளாத அலுவலர்கள்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சீற்றம்

யாழ்ப்பாணம், ஒக.25

ஆளும் கட்சியினரால் மேற்கொள்ளப்படும் தேர்தல் வன்முறைகளுக்கு எதிராகவோ அல்லது தேர்தல் விதிமுறை மீறல்களுக்கு எதிராகவோ நடவடிக்கைகளை எடுக்காத தேர்தல்கள் திணைக்களம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல்கள் விதிமுறை மீறல்களுக்கு எதிராக மட்டும் நடவடிக்கை எடுப்பதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இது பாராபட்சமான செயற்பாடு எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

வட மாகாண சபைத் தேர்தலில், ஆளும் கட்சி உறுப் பினர்கள் தொடர்ச்சியாகத் தேர்தல் விதி முறைகளை மீறி வருகின்ற னர். சீருடையினரால் ஏற்பாடு செய்யப்படுகின்ற நிகழ்வுகளில் ஆளும் கட்சி வேட்பாளர்கள் கலந்து கொள்வது முதல் சீரு டையினரே பிரசார நடவடிக் கைகளிலும் ஈடுபட்டும் வரு கின்றனர் எனக் குற்றம் சாட்டப்படுகிறது.

மேலும் தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டுவது முதல் வீதிகளில் வேட்பாளர்களின் பெயர், இலக்கம் என்பவற்றை எழுதுதல் எனப் பல வகையிலும் அரச தரப்பினர் தேர்தல் விதிமுறை மீறல்களில் ஈடுபடுகின்றனர்.

இவற்றுக்கு எதிராகத் தேர்தல்கள் திணைக்களமோ, பொலிஸாரோ எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் வீடு வீடாக பிரசாரம் மேற்கொள்வது மற்றும் பிரதேச சபையில் வேட்பாளர்கள் கூட்டம் நடத்தியமை என்பவற்றுக்கு எதிராகத் தேர்தல் திணைக்களம் நடவடிக்கை முன்னெடுத்துள்ளது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் தேர்தல் திணைக்களத்தினால் எச்சரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# ஊடக சுதந்திரத்தையும் அரசிடம் வலியுறுத்துங்கள்

### நவிப்பிள்ளையிடம் ஊடக அமைப்புகள் கோரிக்கை

கொழும்பு, ஒக.25

இலங்கைக்கு இன்று வருகை தரும் நவநீதம்பிள்ளை, ஊடக சுதந்திரத்தின் பாதுகாப்புக் குறித்தும் இலங்கை அரசிடம் வற்புறுத்த வேண்டும் என்று ஊடக அமைப்புகள் கோரிக்கை முன்வைத்துள்ளன.

ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்புச் செயற்குழு மற்றும் நியூயோர்க்கைத் தளமா கக் கொண்டு இயங்கும் ஊடக சுதந்திரக் கண்காணிப்பகம் என்பன விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

'இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரம் கிடையாது. இலங்கை செல்லும் நவநீதம்பிள்ளை ஊடகவியலாளர்களையும், ஊடகக் கூட்டமைப்புகளை யும், ஊடக சுதந்திர ஆர்வலர் களையும் சந்திப்பார் என்று எதிர்ப்பார்க்கின்றோம்' எனக் குறிப்பிட்டுள்ள ஊடக சுதந்திரக் கண்காணிப்பகம், வெலி வேரியவில் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தின் போது செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் படையி னரால் தாக்கப்பட்டுள்ளனர்.

இது இலங்கையில் சுயாதீனமாகச் செய்தி சேகரிக்க காணப்படும் தடையையே கோடிட்டுக் காட்டுகிறது. எனவே இவை தொடர்பிலும் ஆணையாளர் தனது கண்டனத்தை வெளியிடுவார் என்றும் குறிப்பிட்டுள்ளது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட வழக்கு தொடர்பில் அரசு அக்கறை கொள்ளாதிருப்பதாகக் குற்றஞ்சாட்டியுள்ள ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்புச் செயற்குழு, பொதுநலவாய மாநாட்டின் போது உள்ளூர், சர்வதேச ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிக்க அனுமதிக் கப்படவேண்டும்என்பதைநவநீதம் பிள்ளை வலியுறுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

அவல நிலைக்கு உள்ளாகும் அனைவர் குறித்தும் தான் குரல் எழுப்புவேன் என்று நவநீதம் பிள்ளை பி.பி.சிக்கு தெரிவித்திருந்தார். எனவே பாதிக்கப்பட்டவர்கள் சுதந்திர ஊடகவியலாளர் கள். அதனால் நவநீதம் பிள்ளை ஆதரவுத் தலையீடு தேவை என்று ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்புச் செயற்குழு கோரியுள்ளது. (த-5)

# உயர்பாதுகாப்பு வலயங்கள் இருப்பது தவிர்க்கமுடியாதது

### அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக. 25

வடமாகாணத்தில் பாதுகாப் புக் காரணங்களுக்காக இராணுவத்தினர் உயர்பாதுகாப்பு வலயங்கள் வைத்திருப்பது தவிர்க்க முடியாததொன்று என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரிடம் இருந்த வீடுகளை வீட்டு உரிமையாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வு சுன்னாகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

தென்னிலங்கையைப் போன்று வட பகுதியிலும் உயர்பாதுகாப்பு வலயங்கள் இருக்க முடியாது ஆனாலும் பாதுகாப்புக் காரணங்களுக்காக வடபகுதியில் அவை இருப்பதும் தவிர்க்க முடியாதது.

மேலும், சர்வதேச நாடுகளோ, ஐ.நா. பிரதிநிதிகளோ எமது பிரச்சினைக்கு ஒரு போதும் உரிய தீர்வைப் பெற்றுத் தர முடியாது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரான நவநீதம் பிள்ளை இங்கு வந்து நிலைமைகளைப் பார்வையிடலாம். ஆனால் இங்கு குழப்பங்களை ஏற்படுத்தக் கூடாது என்றார். (த-5)

# துப்பாக்கிச் சூட்டில் கொள்ளையர் சாவு

கொழும்பு, ஒக. 25

பம்பலப்பிட்டியில் ஊடகவியலாளர் ஒருவர் வீட்டில் நேற்று அதிகாலை இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தின்போது பொலிஸாருக்கும் கொள்ளைக்கும்பலுக்கும் இடையே இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் கொள்ளையர் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஏனைய கொள்ளையர்கள் நால் வரும் காயமடைந்தனர்.

கொள்ளையர் மேற்கொண்ட கத்திவெட்டில் மூன்று பொலிஸாரும் காயமடைந்துள்ளனர். காயமடைந் தவர்கள் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (த-சி)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# எங்களின் வீடுகள், காணிகள் விடுவிக்கப்படுவது எப்போது?

வாழ்ந்து வருவதாகக் குறிப்பிடும் அந்த மக்கள், தம்மைச் சொந்த நிலத்துக்கு அனுமதிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

நகரப் பகுதியில் வீடுகளை விடுவிக்கும் படையினர், வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள வீடுகளையும் விடுவிக்கலாம் தானே என்று கூறியுள்ள அந்த மக்கள், நகரப் பகுதியிலிருந்து வெளியேறும் இராணுவத்தினர் வலி. வடக்குப் பகுதியில் நிரந்தர இராணுவ முகாம்களை அமைப்பது தமது இடங்கள் நிரந்தரமாகப் பறிபோகுமோ என்ற அச்சத்தை தோற்றுவித்துள்ளதாகவும் குறிப்பட்டுள்ளனர்.

வலி.வடக்கில் விடுவிக்கப் படாத 24 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் மீளக்குடியமர் வதற்காக 7 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 26 ஆயிரம் பேர் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் பதிவுகள் மேற் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# இன்று வருகிறார் நவநீதம்பிள்ளை

அத்துடன் பல்வேறு சிவில் அமைப்புக்கள், காணாமற்போனோரின் உறவுகள், மீளக் குடியமர்ந்த மக்கள், நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் ஆகியோரையும் நவநீதம் பிள்ளை சந்திக்கவுள்ளார்.

செவ்வாய்க்கிழமை மாலை கிளிநொச்சி மாவட்டத்துக்குச் செல்லும் ஆணையாளர் அங்கு மீள்குடியமர்த்தப்பட்ட மக்களைச் சந்திப்பதுடன் இறுதிக் கட்டப்போர் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் பகுதிக்கும் நேரில் சென்று பார்வையிடுவார். அத்துடன் வடக்குக்கான தனது பயணத்தை முடித்துக்கொள் ளும் அவர் 28 ஆம் திகதி புதன்கிழமை கிழக்கு மாகாணத்துக்குச்செல்லவுள்ளார்.

கிழக்கு மாகாணத்திலும் அரச அதிகாரிகளையும், சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் சந்திக்கும் ஆணையாளர், 29 ஆம் திகதி வியாழக்கிழமை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

30 ஆம் திகதி வெள்ளிக்கிழமையே முக்கிய தரப்புக்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அன்று முதலில் சந்திக்கும் நவநீதம் பிள்ளை அதன் பின்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக் ஷவையும் அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் இறுதியாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

அன்றைய தினம் அவர் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்திக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தச் சுற்றுப் பயணங்கள், சந்திப்புக்களை நிறைவு செய்த பின்னர் 30 ஆம் திகதி சனிக்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றையும் நடத்தவுள்ளார். அன்றையதினம் மாலையே இலங்கையை விட்டு அவர் வெளியேறவுள்ளார். (த-5)

# ரிஷாத்தின் வீட்டில் அதிரடிச் சோதனை

டியிடுகிறார். இந்த நிலையில் பொலிஸார் அவரது வவு னியா மற்றும் மன்னார் அலுவலகங்களிலும் சோதனை நடத்தியமை வட மாகாண தேர்தல் களத்தி லும் பெரும் புயலைக் கிளப்பி யுள்ளது.

**பொலிஸார் அதிரடி**

அமைச்சர் ரிஷாத்தின் குடும்பச் சொத்தான புத்தளத்தில் அவரது தாயார் வசித்து வரும் வீடு, வவுனியா மற்றும் மன்னாரில் உள்ள அமைச்சரின் அலுவலகங்கள் மற்றும் தங்குமிடங்கள் என்பவற்றிலேயே பொலி ஸார் திடீர் பாய்ச்சல் நடத்தினர்.

அனைத்து இடங்களிலும் ஒரே நேரத்தில் பாய்ந்த பொலிஸார் அங்கு தீவிர சோதனைகளை நடத்தியதுடன் அங்கிருந்தவர்களிடம் துருவித் துருவி விசாரணையும் நடத்தினர்.

அமைச்சரின் நடமாட்டங்கள், நடவடிக்கைகள் குறித்து அவர்கள் கேள்வி மேல் கேள்வி கேட்டனர் என்று அமைச்சரின் ஆதரவாளர்கள் கூறினர். அமைச் சரின் பாதுகாப்புக்கு வழங்கப் பட்டுள்ள பொலிஸாரின் எண் ணிக்கை, மேலதிகமாக யாரும் பாதுகாப்பு நடவடிக் கைகளில் ஈடுபடுகின்றனரா என்ற விவரம். அமைச்சர் அல்லது அவரது உதவியாளர்களிடம் ஆயுதங்கள் ஏதும் உள்ளனவா? போன்ற விவரங்களையும் பொலிஸார் துருவியுள்ளனர்.

"நீதிமன்ற உத்தரவு ஏதுமின்றியே பொலிஸார் இந்தச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்" என்று அமைச் சர் ரிஷாத் பதியுதீன் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

**ஜனாதிபதியிடம் முறையீடு**

பொலிஸாரின் இந்த அத்துமீறல் குறித்து, தான் உடனடியாக ஜனாதிபதியிடம் முறையிட்டார் என்றும் அதுதொடர்பில் பொலிஸ் மா அதிபரிடம் தான் விசாரிப்பார் என அவர் உறுதிமொழி அளித்தார் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சோதனை நடவடிக்கை குறித்து ஜனாதிபதிக்கு எந்தத் தகவலும் தெரிந்திருக்க வில்லை என்று அமைச்சர் கூறினார்.

இதற்கிடையே அமைச்சரின் வீடு மற்றும் அலுவலகங்கள் சோதனையிடப்பட்டமையை அவரது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உயர் பீடம் உடனடியாகக்கூடிக்கண்டித்துள்ளது.

அமைச்சரைத் தொடர்ந்து அவரது கட்சியினர் மீதும் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என்ற அச்சமும் அவர்களிடம் ஏற்பட்டுள்ளது.

**காரணம்**

அண்மையில் கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத் தப்பட்டபோது பொலிஸ் மா அதிபருக்கு எதிராக அமைச் சர் ரிஷாத் கடுமையான கருத்துக் களைத் தெரிவித்தமையே இந்தச் சோத னைகளுக்கான காரணம் என்று அவரது ஆதரவாளர்கள் கூறு கின்றனர்.

பள்ளிவாசல் மீது தாக்குதல் இடம்பெற்றபோது பொலிஸார் அதனை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனர் என்று குற்றஞ்சாட்டிய அமைச்சர் இவ்வாறான செயலற்ற பொலிஸாரை வைத்திருக்கும்பொலிஸ் மா அதிபர் அதற்குப் பொறுப் பேற் றுப் பதவி விலக வேண் டும் என்று வலியுறுத்தியி ருந்தார். இது தொடர்பில் அமைச்சருக்கும் பொலிஸ் மா அதிபருக்கும் இடையில் காரசாரமான வாக்குவாதம் இடம்பெற்றிருந்தது. எனினும், இந்தச் சோதனை நடவடிக்கை தொடர்பில் தனக்கு எந்தத் தகவல்களும் கிடைக்க வில்லை என்று பொலிஸ் பேச் சாளர் பொலிஸ் அத்தியட்சகர் புத்திக சிறிவர்த்தன தெரிவித்துள் ளார். (த-சி)

# கூட்டமைப்பின் பரப்புரை இன்று யாழில் ஆரம்பம்

தாகக் கட்சியின் துணைத் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் 51 வேட்பாளர்களும் இந்த நிகழ்வில் அறிமுகம் செய்யப்படவுள்ளதுடன் சிறப்பு உரைகளும் இடம்பெறவுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன், ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ. சுமந்திரன், பொன். செல்வராசா ஆகியோரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்தசங்கரி, தர்மலிங்கம் சித்தார்த்தன், ந.சிறீகாந்தா ஆகியோரும் முதன்மை வேட்பாளர் முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் [illegible] அஸ்மின் ஆகியோரும் இதில் உரையாற்றவுள்ளனர். (த-5-115)

# தமிழ் பேசும் அதிகாரிகளே வடக்கு தேர்தல் கடமையில்

ஆணையாளர் சி.அச்சுதனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேற்படி கருத்துத் தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளருக்குத் தெரியப்படுத்தியுள்ளேன். இன்னமும் இது தொடர்பில் பதில் கிடைக்கவில்லை.

இருப்பினும் இந்த முறை வடக்கிலிருந்து விண்ணப்பித்தவர்கள் குறைவு. வாக்குச் சாவடிகளில் கள்ளவாக்குகள் போடப் படலாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருந் தால் சகல வாக்களிப்பு நிலையங்களிலும் தங்கள் பிரதிநிதி களை நியமித்து தேர்தல் ஆரம்பத்திலிருந்து முடியும் வரை கண்காணிக்க முடியும் என்பதையும் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் அவர். (த-5)

# தேர்தல் ஆணையாளரின் பணிப்பை மீறும் அதிகாரிகள்

னைப் பிரதேச செயலாளர் எஸ். சோதிநாதன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சு.முரளிதரன் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன் ஆகியோர் கலந்து கொண்டு விருந்தினர் மேடையில் அமர்ந்திருந்தனர்.

யாழ். மாவட்டத்துக்குக் கடந்த 21 ஆம் திகதி வருகை தந்திருந்த தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது, அமைச்சர்கள் கலந்துகொள்ளும், உதவிகள் வழங்கும் நிகழ்வுகளில் அரச அதிகாரிகள் கலந்துகொள்ளக் கூடாது என்று அறிவுறுத்தியிருந்தார்.

ஆயினும் தேர்தல்கள் ஆணையாளரின் உத்தரவையும் மீறி நான்கு பிரதேச செயலர்கள் இராணுவ நிகழ்வில் கலந்து கொண்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் தொடர்ச்சியாக தேர்தல் விதிமுறைகள் மீறப்பட்டு வரும் நிலையில் அவற்றுக்கு எதிராகத் தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கை எடுக்கத் தயங்கி வருவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்கில் தொங்கிய நிலையில் ஆசிரியை சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஓக.25
பருத்தித்துறையில் உள்ள பாடசாலை ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியை கொழும்புத்துறை வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுச் சனிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டார்.

திருமணமாகி நான்கு மாதங்களான நிலையில் அவர் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். இதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும், குறித்த ஆசிரியை தற்கொலை செய்யுமளவுக்குச் சென்றிருக்கமாட்டார் என்றும் கூறும் அவரது உறவினர்கள் இது குறித்து உரிய விசாரணை வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

குறித்த ஆசிரியையைத் திருமணம் செய்த வரும் ஒரு ஆசிரியர். அவர் ஏற்கனவே சட்டரீதியாகத் திருமணம் செய்து மூன்று பிள்ளைகளின் தந்தை என்றும் அவர் தற்போது மனைவி, பிள்ளைகளைவிட்டுப் பிரிந்து அதனை மறைத்து குறித்த ஆசிரியையைத் திருமணம் செய்துள்ளதாகவும் ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் வள்ளிபுரம் புலோலியைச் சேர்ந்த கஜேந்திரன் ஜெனிவா (வயது-39) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:
கொழும்புத்துறை வில்வம் வீதியைச் சேர்ந்த ஆசிரியர் முன்னர் அரியாலையில் திருமணம் செய்து மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

2011இல் மனைவியை விட்டுப் பிரிந்த குறித்த ஆசிரியர் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பாடசாலையில் கற்பிக்கிறார். இவரும் தற்போது பதிவுத் திருமணம் செய்து கொண்ட ஆசிரியையும் யாழ். பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பட்டப் படிப்பு ஒன்றை முன்னெடுத்து வந்தனர். இதன்போது ஒருவருக்கு ஒருவர் அறிமுகமாகி ஒன்றரை வருடமாகக் காதலித்துள்ளனர். கடந்த ஏப்ரல் மாதம் இருவரும் பதிவுத் திருமணம் செய்து கொண்டனர்.

ஆனால் யாழ்.நகர் பாடசாலை ஆசிரியர் தான் முன்னர் திருமணம் செய்து கொண்ட விடயத்தை ஆசிரியைக்குத் தெரிவிக்கவில்லை என்று ஆசிரியையின் உறவினர்கள் விசாரணையில் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் பாடசாலை விடுமுறை என்பதனால் புலோலியிலிருந்து இரண்டு வாரங்களுக்கு முன்னர் கொழும்புத்துறையிலுள்ள ஆசிரியரின் வீட்டுக்கு வந்த மேற்படி ஆசிரியை அவருடன் சேர்ந்து வாழ்ந்துள்ளார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு ஆசிரியர் வெளியே சென்று இரவு 9.30 மணியளவில் வீடு திரும்பியபோதே ஆசிரியை தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. இரவு முழுவதும் தூக்கில் தொங்கிய நிலையிலேயே சடலம் காணப்பட்டது. நேற்று முற்பகல் சம்பவ இடத்துக்குச் சென்ற திடீர் இறப்பு விசாரணை அதிகாரி எம்.உதய சிறி விசாரணை முறைப்பாடு பதிவு செய்து பின்னர் சடலம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

உடற்கூற்றுப் பரிசோதனையின் போது கொலை செய்யப்பட்டமைக்கான சந்தேகத்துக்கிடமான எதுவும் இல்லாததனால் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-4)

# நவிப்பிள்ளையை வரவேற்கின்றோம்

## கூட்டமைப்புத் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.25
"அரச படைகளின் கொடுமைகளினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் இன்று இலங்கை வரும் நவநீதம்பிள்ளையை வரவேற்கின்றோம்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

மூன்று தசாப்த காலப் போர் முடிவடைந்துள்ள நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை முதல் முறையாக இன்று இலங்கை வருகின்றார். அவரின் வருகை தொடர்பில் நேற்று 'உதயன்' பத்திரிகையிடம் கருத்துத் தெரிவித்த கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் கூறியதாவது:-

தமிழ் மக்கள் இன்று ஐ.நா. முன்னிலையில் நீதி - நியாயம் - தீர்வு வேண்டி நிற்கின்றார்கள். அரச படைகளின் கொடுமைகளுக்குள்ளாகிய வடக்கு, கிழக்கு மக்கள், அரசு தமக்கு நீதி வழங்காது என்ற காரணத்தாலேயே சர்வதேசத்தை நாடியுள்ளனர். எனவே, இலங்கை வரும் நவநீதம்பிள்ளை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கிற்கு சென்று அரசின் அபிவிருத்தி மாயைகளைக் கண்டு மயங்காமல் நுணுக்கமான ஆய்வுகளை நடத்தி தனது நேர்மையான சுயாதீன அறிக்கையை ஐ.நாவில் சமர்ப்பிப்பார் என்று தமிழ்க் கூட்டமைப்பு நம்புகின்றது. இந்த அறிக்கை இலங்கை அரசு மீதான ஐ.நாவின் சர்வதேச போர்க் குற்ற விசாரணைக்குத் துணைபுரியும் எனவும் கூட்டமைப்பு எதிர்பார்க்கின்றது. இதைத்தான் படையினரின் தாக்குதலுக்குள்ளாகி தமது உறவுகளை இழந்த தமிழ் மக்கள், படையினரின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்கள், காணாமல் போனவர்களின் உறவினர்கள், சிறைச்சாலைகளில் தமது விடுதலையை எதிர்பார்த்திருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் ஆகியோரும் நம்பியுள்ளனர்- என்றார்.

# உணவகங்களில் சீர்கேடு 6 பேருக்கு எதிராக வழக்கு

யாழ்ப்பாணம், ஓக.25
சுகாதார சீர்கேடாக தேநீர்ச்சாலை நடத்திவந்த 6 பேருக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

காரைநகரில் வெவ்வேறு இடங்களில் இயங்கிவந்த 6 கடைகளின் உரிமையாளர்களுக்கு எதிராகவே பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுகாதாரமாகச் செயற்படாமை, வெற்றிலை சாப்பிட்டவாறு தேநீர்ச்சாலையில் பணியாளர்கள் வேலையில் ஈடுபட்டமை, துர்நாற்றம் வீசியமை, கழிவுகள் வெளியே அகற்றப்படாது இருந்தமை, கடையின் சுவர் வர்ணம் இல்லாது அலங்கோலமாகக் காட்சியளித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கு எதிர்வரும் புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளபடவுள்ளது.

# போர்க்குற்ற அறிக்கை சமர்ப்பிக்க கூட்டமைப்பு விசேட ஆணைக்குழு

## அமைச்சர் சம்பிக்க புதிய தகவல்



கொழும்பு, ஓக.25
"போர்க்குற்றங்கள் தொடர்பில் ஆராய்ந்து அனைத்துலக சமூகத்துக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விசேட ஆணைக் குழுவொன்றை நியமிக்க திட்டமிட்டுள்ளது என தகவல் கிடைத்துள்ளது."

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க.

வடக்கில் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் மாகாண சபையின்கீழ் இயங்கும் வகையில் இந்த ஆணைக் குழுவை கூட்டமைப்பு நியமிக்கவுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"போர்க்காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களைத் திரிபுபடுத்தி வெளிநாடுகளிடம் நாட்டை போட்டுக்கொடுக்க இதனூடாக கூட்டமைப்பு முயற்சிக்கும்.

இதன் காரணமாகவே 13 ஐ நீக்குமாறு நாம் கோரிக்கை விடுக்கின்றோம். இது தொடர்பில் எமது போராட்டம் ஓயப்போவதில்லை. எதிர்காலத்தில் அது மேலும் விரிவடையும்" என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கைப் பயணத்தையும் சம்பிக்க ரணவக்க கடுமையாக விமர்சித்துள்ளார்.

"இலங்கையின் உண்மை நிலை வரங்களை கண்டறிவதற்காக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இங்கு வரவில்லை. இதற்கு முன்னரும் இந்த விடயத்தை தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளோம்.

ஐ.நா. செயலாளர் நியமித்த தருஸ்மன் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு சாட்சியங்களை திரட்டும் நோக்கிலேயே அவரது பயணம் அமையப்போகின்றது" என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பொட்டம்மானின் சகோதரரின் சடலம் ஜேர்மனிக்கு

யாழ்ப்பாணம், ஓக.25
ஜேர்மனியில் இருந்து இலங்கைக்கு சுற்றுலா விசாவில் வந்தவேளை உயிரிழந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மானின் சகோதரரின் பூதவுடல் ஜேர்மனிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜேர்மனியிலிருந்து கடந்த மே மாதம் இலங்கைக்கு வந்த சண்முகநாதன் சிவஞானகுமார் (வயது-52) என்ற பொட்டம்மானின் சகோதரர் கடந்த புதன்கிழமை மாரடைப்பால் யாழ்ப்பாணத்தில் உயிரிழந்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் கொழும்புக்கு மறுநாள் அனுப்பிவைக்கப்பட்ட சடலம், ஜேர்மன் தூதரகத்தின் ஊடாக ஜேர்மனிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (த-5)

# நவி - கூட்டமைப்பு சந்திப்புக்கு எதிர்ப்பு கொழும்பில் போராட்டம்

கொழும்பு, ஓக.25
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை பேச்சு நடத்தக் கூடாது என வலியுறுத்தி நாளை காலை 9.30 மணியளவில் கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை ராவண பலய அமைப்பு செய்துள்ளது.

இதுதொடர்பாக உதயனிடம் கருத்து வெளியிட்ட ராவண பலய அமைப்பின் பொதுச் செயலாளர் வண.ஹித்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர், "ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை பயணத்துக்கு நாம் எதிர்ப்பை வெளியிடவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற போலி பிரசாரங்களை பரப்பும் கட்சிகளையும் அமைப் புகளையும் நவநீதம்பிள்ளை சந்தித்துப் பேச்சு நடத்தக் கூடாது என்றே வலியுறுத்துகிறோம். இதனை அவருக்கு உணர்த்தும் வகையில் திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளோம்" என்றார்.

**கடை வாடகைக்கு உண்டு**
கோண்டாவில் சந்தி, பலாலி வீதியில் கடை வாடகைக்குண்டு.
தொடர்பு:0777666045

**விற்பனைக்கு**
கொங்கிறீட் கல் அறுக்கும் மெசின் அதன் நான்கு விதஅச்சுக்களுடனும், தூண் அச்சுக்கள் 4 சோடியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 077 4366704

3மாதகால பயிற்சி நெறி **அக்ஷயா** பயிற்சிக் கட்டணம் ரூ20000/=
பேசியல், மேக்கப், கொயாஸ்ரைல், தலைமுடி அயன்பண்ணுதல், தலைமுடிசுருட்டுதல், கேளிங், சாறி பிளவுஸ் கட்டிங், சாறிவேக் மேற்படி பயிற்சிகள் நடைபெறுகின்றன. * ஒட்டிய கன்னங்களை குண்டு கன்னங்களாக மாற்றும் குளிசை, உடல் எடை கூட்டும் குளிசை * உடல் எடை குறைக்கும் பால்மா, குளிசை, கோப்பி * கருவளையம், நாட்பட்ட பருக்கள், இளநரை, முடி கொட்டுதல் அனைத்துக் குமான குளிசை, தலைமுடி வளரச்செய்யும் ஆயுர்வேத எண்ணெய் * கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, நாட்பட்ட வடுக்கள், பருக்கள், காயங்கள், மஞ்சள், வெள்ளைப் புள்ளிகள் அனைத்தையும் மாற்றும் ஒறியினல் வைத்நிங் கிறீம் விற்பனைக்குண்டு. *மூலிகை வைத்நிங் பேசியல் செய்துகொள்ளலாம். * இயற்கை மூலிகை அடங்கிய பேசியல் மேக்கப் செய்து கொள்ளலாம், * மேக்கப் ஓடர்கள் ஐசிங்கேக், ஐசிங்க பிளவர் ஓடர்கள், ரிச்கேக்- 50/- ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
பதிவு இல: 16168 T.P- 0772106155
அக்ஷயா- நாவலர் வீதி, பிறவுன்றோட் சந்தி, அருள் கொமினிகேசன் அருகில், யாழ்ப்பாணம்.

**வீடு, கட்டட புனர் நிர்மாண வேலைகள்**
மேசன், தச்சு, பெயின்ட், வார்னிஷ், வயரிங், மாபிள், பிளம்பிங், A/C, நீர்த்தடாக வேலைகள், நீர்க் கசிவுகளை தடுத்து திருத்துதல் உத்தரவாதத்துடனும் குறைந்த செலவிலும் செய்து கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.
பி.பிரதீபன் 0757442475

**விற்பனைக்கு**
பெரிய இன ஆடு, மாடுகள் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு கோண்டாவில். 0755113457

**விற்பனைக்கு**
நல்ல இன பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்புக்கு:
021 492 2950- 0750412670

**மிற்சுபி வாகனம் விற்பனைக்கு**
LG - XXXX எனும் இலக்கம் கொண்ட பெற்றோல் ரக வாகனம் விற்பனைக்குண்டு.
0776545116

**German Institute**
German Swiss மொழிகள் தமிழ்மொழி பெயர்ப்புடன் Goethe Institute Exam-க்கு ஏற்றவாறு நடைபெறுகிறது.
தொடர்புகளுக்கு: 10, பலாலி வீதி, யாழ்ப்பாணம். ஆரியகுளத்தடி.
Mrs.Kajenthini 0771604823

**கவர்ச்சியான விலைகளுடன்**
விரைவான வெளிநாட்டு பொதிகள் சேவை
DISH TV கட்டணங்கள்
உங்கள் வீட்டுவிழாக்களில் விருந்தினருக்கு வழங்கும் விதவிதமான அன்பளிப்பு பொருள்களை மொத்தமாகவும் குறைந்த விலையிலும் தெரிவுசெய்திட...
**பாரதி டொட் கொம்**
பலாலி வீதி, கோண்டாவில்.
(39166)
(23-14-16
கோப்பாய் வீதி, உரும்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாருக்கு எதிராக வேட்பாளர் போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக.25

தன்மீதான தாக்குதலுடன் தொடர்புடைய குற்றவாளிகள் 12 பேரையும் பொலிஸார் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் எனக்கோரி யாழ்.பொலிஸ் நிலையத்தின் முன்பாக நடு வீதியில் இருந்து போராட்டம் நடத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை வேட்பாளர் தம்பிராசா.

யாழ்.நகரில் வைத்து வேட்பாளர் தம்பிராசா மீது கடந்த செவ்வாய்க்கிழமை ஆளும் கட்சி வேட்பாளர் அங்கஜனின் தந்தையார் இராமநாதன் மற்றும் குழுவினரால் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.



இந்தச் சம்பவம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகவும் தேர்தல் விதிமுறைகளை மீறிய வேட்பாளர் அங்கஜனின் 'ஸ்ரிக்கர்' ஒட்டப்பட்ட 3 வாகனங்களையும் பறிப்பதாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்து கருணாரட்ண தனக்கு உறுதிமொழி வழங்கியதன் பேரிலேயே தான் பொலிஸில் முறைப்பாடு செய்ததாகத் தெரிவித்தார் தம்பிராசா.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய வாகனங்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனரா என்றும் சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்துள்ளீர்களா என்றும் யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் அதிகாரி சமன் சிகேராவிடம் நான் இன்று (நேற்று) கேட்ட போது என்னை வெளியே போ. அதைப் பற்றி உனக்கு சொல்லத் தேவையில்லை என்று கூறி அவர் என்னைத் துரத்தினார். அதனாலேயே நான் பொலிஸ்நிலையத்துக்கு முன்பாக நடு வீதியில் அமர்ந்து போராட்டம் நடத்துகிறேன் என்று தம்பிராசா மேலும் கூறினார்.

சம்பவத்துடன் தொடர்புடைய 12 பேரும் கைதுசெய்யப்படவேண்டும் என்பதுடன் குறித்த வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

(த-5-4)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க அங்கத்தவரும் எமது சங்க அங்கத்தவரான திருமதி க. சிவமலரின் அன்புத் தந்தையுமாகிய **மாதர் சுப்பிரமணியம்** அவர்கள் 23.08.2013 அன்று காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகத்தவர்கள், அங்கத்தவர்கள்,
மாவைக்கந்தன் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச்சங்கம்.

மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

## மரண அறிவித்தல்

### திருமதி ஜெனிவா கஜேந்திரன்

*(விஞ்ஞான ஆசிரியை, யா/ மெதடிஸ்த உயர்தரப் பெண்கள் பாடசாலை)*



வல்லிபுரக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கஜேந்திரன் ஜெனிவா (யா/ மெதடிஸ்த உயர்தரப் பெண்கள் பாடசாலையின் விஞ்ஞான ஆசிரியர்) நேற்றுமுன்தினம் (23.08.2013) அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லி சின்னராசா- புனிதவதி தம்பதியரின் அன்பு மகளும், வெனிசுலா(தூரிகை நுண்கலை வளாகம்), சதீஷா (aptech), பிரின்ஷா (வல்லிபுரக் குறிச்சி உப தபாலதிபர்), கபில்ராஜ், ரதீஷா, நகுல்ராஜ், வித்தியா, மயூரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சின்னப்பு- தனபாலசிங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் அவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.08.2013) ஞாயிற்றுக் கிழமை பி.ப. ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வல்லிபுரக்குறிச்சி,
புலோலிதெற்கு, புலோலி.

தகவல்;
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி சபீண்டிகரண அழைப்பும் நன்றி நவிலலும்



(39149)(10,6,3)

அன்னைமடியில்
30.06.1930

இறைவனடியில்
30.07.2013

### அமரர் ஸ்ரீமான் கதிரிப்பிள்ளை சிவக்கொழுந்து

(உடுப்பிட்டி பண்டகப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபைத் தலைவர், அகில இலங்கை சமாதான நீதிவான்(JP), ஓய்வு பெற்ற பிரதமதபால் அதிபர்)

கடந்த 30.07.2013 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவர் அமரர் கதிரிப்பிள்ளை சிவக்கொழுந்து அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் எதிர்வரும் 29.08.2013 வியாழக்கிழமை அதிகாலை 04.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். தாங்கள் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து அன்றையதினம் நடை பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அமரர் ஸ்ரீமான் கதிரிப்பிள்ளை சிவக்கொழுந்து அவர்கள் இறைபதம் அடைந்த வேளை ஆறுதலளித்த உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள், அனைவருக்கும் உடன் வந்து உதவியவர்களுக்கும் நேரில் வந்து கலந்து கொண்டவர்களுக்கும் தந்தி உள்நாட்டு வெளிநாட்டிலிருந்து தொலை பேசி மூலம் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் கடிதங்கள், பத்திரிகை, மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், மலர்வளையம், மலர்மாலை, கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் என்பதன் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் அஞ்சலி இரங்கலுரை யாற்றியவர்களுக்கும் பதாதைமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளிலும், இன்னும் பல உதவிகளையும் வழங்கிய அன்பர்களுக்கும் கிரியை சிறப்புற நடத்திய சிவாச்சாரியார்களுக்கும். எங்கள் உள்ளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சிவதேவி இல்லம்
உடுப்பிட்டி, 021 226 4734

குடும்பத்தினர்.

## மயங்கி வீழ்ந்த பெண் சாவு

ஆலய வழிபாட்டில் ஈடுபட்ட குடும்பப் பெண் ஒருவர் மயங்கி வீழ்ந்த நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார்.

கெற்பெலி வன்னியர் ஆலயத்தில் இடம் பெற்ற பூசையில் கலந்து கொண்டிருந்த வேளை அவர் மயக்க முற்று உயிரிழந்தார். மீசாலை கிழக்கைச் சேர்ந்த திருமதி சாம்பவசிவம் என்பவரே உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஜ-9)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி யோகாம்பிகை சாம்பசிவமூர்த்தி



மீசாலை கிழக்கைச் சேர்ந்த திருமதி யோகாம்பிகை சாம்பசிவமூர்த்தி நேற்று (24.08.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இளைப்பாறிய ஆசிரியர் சாம்ப சிவமூர்த்தியின் மனைவியும், சிவயோகம், சிவபாலன், சிவரூபன் ஆகியோரின் தாயும் கமலினி, பிரதீபா ஆகியோரின் மாமியும், பாவனா, சாதனா, சுவாதி, பிரவீன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.08.2013) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சமாதான வாசம்,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்;
வைத்திய கலாநிதி
சா. சிவயோகன்(மகன்)

### கந்தசாமி இளங்கீரன்

*(மேலதிக காணிப் பதிவாளர்-A.R.L)*



கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி இளங்கீரன் நேற்று (24.08.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அன்பரசன், வாகினி, கவிதாஞ்சலி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார் அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.08.2013) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேதக்கழி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''வாஷனி மாடம்''
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(39177)

தகவல்:
குடும்பத்தினர். 0772269909
021226 3390-0719024107

### திருமதி கந்தசாமி பஞ்சாட்சரம்மா (பவளம்)



கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பஞ்சாட்சரம்மா நேற்றுமுன்தினம் (23.08.2013) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கலாநிதி, இளங்கீரன் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.08.2013) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேதக்கழி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''வாஷனி மாடம்''
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(39176)
(23-14-16

தகவல்:
குடும்பத்தினர். 0772269909
021226 3390
0719024107

## கண்ணீர் அஞ்சலி



யாழ். போதானா வைத்தியசாலை
உளநலப்பிரிவு உள மருத்துவ
நிபுணர் சா. சிவயோகன் அவர்களின் அன்புத்
தாயார்

*யோகாம்பிகை சாம்பவசிவமூர்த்தி*

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உளநல சிகிச்சைப்பிரிவு,
யாழ். போதனா வைத்தியசாலை.

## கண்ணீர் அஞ்சலி



எனது குரு *சிவப்பிரகாசம் பஞ்சலிங்கம்* வழக்குரைஞர் அவர்களின் மறைவுச் செய்திகேட்டு துயரமடைகின்றேன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அன்னாரின் குடும்பத்தாரின் துன்ப துயரங்களில் நானும் பங்குகொள் கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

த. வேலாயுதம்(சட்டத்தரணி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

கேண்டாவில் இருபாலை வீதியின் சந்திக்கு மிக அண்மையில் இரண்டு குளிரூட்டிய அறைகள் உட்பட 5அறைகள், 2சாலைகள், வாகனத்தரிப்பிடம் இணைந்த குளியலறை, 3கழிப்பறைகள் அடங்கியது வாடகைக்கு உண்டு. அலுவலகம் மற்றும் வசிப்பிடப் பாவனைக்கு உகந்தவை. தரகர் தேவையில்லை. தொடர்பு:- 077 0554634

## AgoySoft

Always and Forever

**Develop High quality Software, Website and Mobile Applications**

- Free Installation Services
- Free Maintenance Services for ONE Year
- Life time Support & Bugs Fix.

**CCTV Camera to Monitor Home or Business**

- Professional Technical Support
- ONE Year Warrenty
- Free Maintenance Services for ONE Year

05, Temple Road,
Kokuvil East,
Jaffna.
+94 21 205 2393, +94 11 328 8569
info@agoysoft.com http://www.agoysoft.com

## Study in UK

உங்கள் London செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

நடைமுறைகள் மாறினாலும் எவ்வித மாற்றமும் இன்றி London செல்லுங்கள்

GCE (O/L) தகமை போதுமானது

September/ October நிரல் அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

நீங்கள் ஏன் EXPONET ஐ தெரிவுசெய்ய வேண்டும்

- 4 வருட visa உத்தரவாதம்
- இலவச IELTS மற்றும் City & Guilds வகுப்புக்கள்
- உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

**COLLEGES**
- Yearly Payment £3500
- IELTS overall: 4.5 or B1

**UNIVERSITIES**
- Yearly Payment £ 3950 - £ 6450
- IELTS overall band: Minimum 5.5

011 7 555511 /14/18
021 7538395 / 021 2227230

KARTHIGA KANAKARASA (JAFFNA)

THILLAINATHAN SUTHAKAN (JAFFNA)

EXPONET
379 - 1/2 Galle Road, Colombo 06.
197, Arasady Road, Jaffna.
E-mail: nimal@expogroup.lk
Web: www.expogroup.lk

## விற்பனைக்கு

அலுவலக உபயோகத்திற்குத் தேவையான Aluminium Fitting Structure உம் (அலுமாரி, மேசை, கதிரை) தளபாடங்களும் உடன் விற்பனைக் குண்டு. தொடர்புகளுக்கு : 078 326 7222

## வீடு வாடகைக்குண்டு

யாழ்.நகரில் முற்றிலும் ரைல்ஸ் பதிக்கப்பட்ட வாகனத் தரிப்பிடமும் தளபாடங்களுடனான வீடு வெளிநாட்டிலிருந்து வருவோர்க்கும் ஏனையோர்க்கும் மாத, கிழமை நாள் அடிப்படையில் வாடகைக் குண்டு. தொடர்பு:
(39105) (12.6.3) 077 868 8102

## PHYSICS

A/L -2015 (பிரிவு-II)
பொறியியல் (MECHANICS)
★ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்
★உரிய காலத்தில் பாடத்திட்டம் முடிக்கப்படும்.
ஆரம்பம்:26.08.2013 திங்கள் 4.30pm
ஆசிரியர்:Mr.M.ஸ்பெல்மன் (Bsc)
இடம்:10/10, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். (பெரிய கோயில் அருகாமை)
A/L -2015 பிரிவு அலைகளும் அதிர்வுகளும்
A/L -2014 வெப்பவியல்
A/L-2015, A/L-2014 வினா-விடை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
Personal Class ஆக எடுக்க விரும்பியவர்களும் நேரமாற்றம் தேவைப்படுவோரும் ஆசிரியரை தொடர்பு கொள்ளவும்.
0776116724

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

ஒரு நாள் நிரம்பிய அடைகிடவாத கோழி இனக் குஞ்சு (கிறி றாஷ்) விற்பனைக்குண்டு. முற்பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் காலை 7 மணி தொடக்கம் மு.ப. 10 மணி வரை விநியோகம் நடைபெறும்.
(39076)(12.6.3) தொடர்பு : 077 755 6244

## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## கடையும் வீடும் விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் மாநகர சபை பிரதேச எல்லைக்குள் (புகையிரத நிலையத்துக்கு அருகில்) அமைந்துள்ள கடையுடன் கூடிய வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு. 39096, 16.14
தொடர்பு: 071 8454025

## IELTS A1 B1 B2 KU Education

ஸ்போக்கன் இங்கிலீஷ் வகுப்பும் Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.
K.U Education,No 75,Temple Road,Jaffna. IELTS Centre

## காணியும் வீடும் விற்பனைக்குண்டு

கே.கே.எஸ் றோட் மருதனார்மடம், சபாபதிப் பிள்ளை வீதி (இராமநாதன் நுண்கலை வளாகம் அருகில்) 4½ பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
(37697)(12.6.3) தொடர்பு : 077 498 9723

## விநியோகஸ்தர் தேவை

எமது நிறுவனத்தின் பழச்சாறுப் போத்தல்களை விநியோகம் செய்யக்கூடிய விநியோகஸ்தர்கள் தேவை. 190 மி.லீ.கண்ணாடிப் போத்தல்கள் 200 - 500 - 1000 மி.லீ. பிளாஸ்ரிக் போத்தல்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் விநியோகிக்க நியாயமான கொமிஷன் மற்றும் தங்கள் இடத்திற்கு இலவசமாக விநியோகிக்கப்படும்.
தொடர்பு :
விற்பனை முகாமையாளர், பரடைஸ் பிவரேஜ் நிறுவனம்,
இல-35, 2ஆம் ஒழுங்கை இரத்மலானை.
(30227)(12.6.3) T.P : 077 456 3350

## ஆசனப்பதிவுகள்


(யாழ்-கதிர்காமம் பஸ் சேவை)
கதிர்காமம்- யாழ்ப்பாணம் தினமும் செல்லும் பேருந்துக்கான ஆசனப் பதிவுகள்.

பதிவுகளுக்கு அழையுங்கள்
வரணி ஆசனப் பதிவகம் 021 222 2868
174, சுபாஸ் கபே கட்டடம் 021 490 0955
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 077 6048 921

ஒரு வழிக் கட்டணம் 880/=

தினமும் எமது சேவைகள்
கதிர்காமத் தொடர்புகளுக்கு: 0728582140
யாழ்ப்பாணத்தில் இருந்து மாலை 5.45 மணி
கதிர்காமத்தில் இருந்து இரவு 11.00 மணி


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



ஏழாலையைப்பிறப் பிடமாகவும்
திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர் **நல்லதம்பி**
**மகாராசா**
திதி:அபரபஞ்சமி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த உங்களை
வானுறைந்த தெய்வமாய் வணங்கி
ஆண்டொன்று ஆனதல்லா
உரிமைகொள்ள உறவுகள்
ஆயிரம் இருந்தாலும்
உள்ளத்தை புரிந்துகொள்ள
உங்களைப் போல யாருமில்லை
நீங்கள் இன்றி
எங்கள் வீடு வெறுமையானது
எங்கள் வாழ்வு தனிமையானது
கனவுகள் கானல் நீரானது
உங்கள் நினைவுகள் மட்டுமே
எங்களுக்கு நிழலாகிறது
ஆண்டொன்று என்ன
ஆண்டொண்டு காலமானாலும்
உங்கள் நினைவுகளிலே நாங்கள்

தோற்றம்
23
12
1945

மறைவு
05
09
2012

லண்டன்

மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்
விகாஷ், கரிகாலன், பவன்னா.

(சி11457)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சூரியகாந்தி

ஞாயிறு சிறப்பம்சம் 25 08 2013






சரணடைவாளர்களின் சாகசப் புலம்பல் 4

சூழலை மாசுபடுத்தும் சத்தங்கள் 11

தடம்புரண்ட இடதுசாரிகள் 9






எனக்கு காதலன் முக்கியமில்லை. இத்தனை வருடங்களாக அன்பை ஊட்டி வளர்த்த என் அம்மாவுடனும் அப்பாவுடனுமே செல்ல விரும்புகின்றேன். என்று சேரனின் மகள் நீதி மன்றத்தில் சொன்ன அந்தக் கணத்தில் சேரன் ஓர் அப்பாக மறுபடியும் பிறந்தார். தாமினி பிறந்த போது இருந்த பதற்றத்தையும் பயத்தையும் அந்தக் கணத்தில் அவர் இன்னும் அதிகமாகவே உணர்ந்தார். காதலைப் பிரிக்கிறார் என்ற உணர்ச்சிமயப்பட்ட கண்டனங்களுக்கும் நடுவில் தன்னிலையை சமூகத்துக்கும் ஊடகங்களுக்கும் நிலைமையை விளக்கி சிறு கீறல்கூட இல்லாமல் தனது மகளைக் காப்பாற்றி மீட்டெடுத்தது சேரனின் அப்பா பாசம் மட்டும்தான் என்பதில் மறுகேள்வி கிடையாது.

எனினும் இந்தப் போராட்டத்திற்கு சேரன் கொடுத்த விலை மிகப் பெரியது. அதிலும் இதுவரை காலமும் ஊடகங்களின் வெளிச்சத்தில் இருந்து தனது மனைவியையும் குழந்தைகளையும் தூர வைத்திருந்த தனது குடும்பத்தின் தனிப்பட்ட சுதந்திரத்தை அவர் இழந்திருக்கிறார். இப்போது சேரனின் மனைவியும் இரண்டாவது மகளும் மொத்த உலகத்துக்கும் தெரிந்தவர்கள். இனிவரும் காலங்களில் இது அவர்களின் வாழ்வை எப்படிப் பாதிக்கப் போகிறது என்பது தர்மசங்கடமான கேள்வி.

# மகளுக்காக எதையும் செய்யலாம்

## ஒரு தந்தையின் பாசப் போராட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 25 08 2013 ஞாயிற்றுக்கிழமை

# சிங்களக் கட்சிகளின் சின்னங்களுடன் வந்து தமிழரின் வாக்குகளை கொள்ளையிட முடியாது

## தேர்தலும் நவிப்பிள்ளையின் வருகையும் ஆட்டிப் படைக்கிறது மஹிந்த அரசை

கந்தவனம்
கோணேஸ்வரன்

இலங்கை அரசு தன்னை நிலை நிறுத்திக்கொள்ளப் பல சோதனைத் தளங்களைக் கடந்தாகவேண்டிய நிலையில் இருக்கிறது. எதிர்வரும் வாரம் தொடக்கம் நவம்பர் மாதம் இறுதிவரை பல வியூகங் களை வகுத்து அவற்றின் மூலம் தன் னைப் பாதுகாத்துக் கொள்வதிலேயே அரசு அக்கறை செலுத்தப் போகிறது. தனித் தனியாகப் பல களங்களை எதிர்கொண்ட இலங்கை அரசுக்கு இனிவரும் மாதங்கள் தலையிடி மாதங்களாகவே அமையப் போகின்றன.

வடமாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மோதுவது இலங்கை அரசைப் பொறுத்தவரையில் சிரமமான காரியம்தான். என்னதான் அரசாக இருந்தாலும், எவ்வளவு வளங் களைக் கொண்டிருந்தாலும் வடமாகாண வாக்காளர்களைத் தம் வசம் வளைத்தெடுப்பது என்பது அரசுக்கு பகீரதப்பிரயத்தனமாகவே இருக்கி றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கொள்கைகளை முன்னிறுத்தி வடபகுதி மக்களைக் கட்டிப்போட முனைகிறது. அரசோ சலுகைகளையும், அபிவிருத்திகளையும் காட்டியேனும் அவர்களை மயக்கிவிட முடியாதா எனத் துடிக்கிறது. தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் வடக்கில் வாழ்ந்தாலும், கிழக்கில் வாழ்ந்தாலும் இன மீட்சி, நிலமீட்சி என்பவற்றைத்தாம் தம் இலட்சியமாகக் கொண்டிருக்கிறார்கள். சலு கைகளைக் கண்டு மயங்குவார்கள் என்றோ, அபிவிருத்திகளைக் கண்டு தன்னிலை இழப்பார்கள் என்றோ சொல்ல முடியாது.

2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் அவலத்தை 'தமிழர் மீட்புப்போர்' என்று அரசு திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டாலும் கூட அதனை தமிழின அழிப்புப்போராகவே கருதி அதன் பிறகு நடைபெற்ற தேர்தல்களி லுங்கூடத் தமிழர்கள் அரசுக்கு நெற்றியடியே கொடுத்திருக்கிறார்கள்.

இம்முறையாவது முடியாதா என்று ஒவ்வொரு தடவையும் தேர்தல் காலத்தின் போது வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களை அரசு மயக்க முயல்வதும், தேர்தலின்பின் தோல்வியுடன் தலை குனிவதும் வழக்கமான நிகழ்வுகளாகி விட்டன. கிழக்குமாகாண சபையில் முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து அரசு ஆட்சி அமைத்திருக்கின்ற போதிலும் அந்த ஆட்சிஅதிகாரத்தைப் பெறுவதற்குத் தமிழர்கள் எவரும் தமக்கு வாக்களிக்க வில்லை என்பது அரசுக்கு நன்றாகவே தெரியும். முன்னைய முதலமைச்சராக இருந்தவரை அணைத்த படி இறங்கியுங் கூடத் தமிழர் வாக்குகளைப் பெறமுடியாமல் போய்விட்டமை அரசுக்கு கவலையான ஒரு விடயம். கிழக்கு மாகாணத் தமிழர் வாக்குகளை ஒன்றுதிரட்டித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சி ஆசனத்தில் இருந்தாலுங் கூட தலை நிமிர்ந்தே நிற்கிறது. வடக்கில் தான் வெற்றியைப் பெறமுடியா விட்டாலும் தமிழ்த் தேசியக்கூட்டமைப் பின் வெற்றியை இழுத்துக் குறைத்துவிட முடி யாதா என்ற நப்பாசையுடன் அரசு செயற் படுகிறது. அரசசெலவில் கட்டுப் பணம் செலுத்தப்பட்டுப் பல சுயேச்சைக்குழுக்கள் ஆங் காங்கே தாராளமாக இறக்கி விடப்பட்டிருக் கின்றன. இக்குழுக்கள் எவையும் வெற்றியை நோக்காகக்கொண்டு இறக்கப்பட்டவை யல்ல. மாறாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் வெற்றியைச் சற்றேனும் குறைத்துவிட முடியாதா என்ற ஆதங்கத்துடனேயே இறக்கி விடப்பட்டவை.

அவர்களது உண் மையான நோக்கம் இனவிடுதலையோ, நாட்டின் அபிவிருத்தியோ அல்ல. அரசிடம் பெற்றுக் கொண்ட பணத்துக்கு இசைவா கத் தங்கள் கடமை யைச்செய்வது மட்டுந் தான். எவ்வளவு வாக்கு களைத் தம் பக்கம் இழுக்க முடியுமோ அதனைக் கச்சிதமாகச்செய்வதே அவர்கள்வேலை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வரவேண்டிய வாக்குகளைத்தான் இவர்கள் குழப்பியடிக்கக் காத்திருக்கி றார்கள். சுயேச்சைக்குழுக்களின் ஒவ்வொரு வேட்பாளரும் இருநூறு, முந்நூறு வாக்குக ளைக் கவர்ந்தாற் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வெற்றிப்பெறக் கூடிய உறுப்பி னர்களின் எண்ணிக்கையை குறைவடையச் செய்யும் என்பதையும் அதற்கு மாற்றாக அரசதரப்பு உறுப்பினர்கள் தொகை கூடுதற்கு வாய்ப்புண்டாகும் என்பதையும் வாக்காளர்கள் மறந்துவிடக்கூடாது. உறவுக்காரர், ஊர்க்காரர், நண்பன் என்பவற்றையெல்லாம்விட இனத் தின் மானமும் அதன் இருப்பும் முக்கிய மானவை என்பதை வாக்காளர்கள் மனதிலிருத் தல் அவசியமாகும்.

தமிழர்களை வதைப்பதில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலை மையிலான அரசுக்கும், ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான அரசுக்கும் எவ்வித வேறுபாடு களும் இருந்ததாகத் தெரிய வில்லை. 83 இனக்க லவரத்தை முன்னின்று நடத்தியவர்கள் இவர் கள் தாம். இஸ்ரேலிய உளவுப் பிரிவு களின் உத்திக ளைக் கைக் கொண்டு யாழ்ப்பாணத்து இளைஞர் களை வகைதொகையின்றி அழித்தொழித்தவர்களும் இவர்கள்தாம். எண்பத்துமூன்று தொடக்கம் ஆறு வருடங்களாகப் நாடாளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதித்துவம் அற்றுப்போகக் காரணமாக இருந்தவர்களும் இவர்கள்தாம்.

அரசுக்குத் தமிழர் கள் அளிக்கும் வாக்குகள் உடனடி அழிவுக்கு வழிவகுக்கும். ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு அளிக்கப்படும் தமிழர் வாக்குகள் சற்றுத் தாமத மான ஆபத்துக்கு வழி சமைக்கும். இது ஒன்றுதான் வித்தியாசம். தமிழர்கள் அபிவிருத்திக்காக இலங்கை அரசுடன் முரண்படவில்லை. ரயிலைக் கிளி நொச்சி வரையிலாவது கொண்டுவந்து எங்களுக் குக் காட்டுங்கள் என்று போராட்டத்தை ஆரம்பிக்க வில்லை. யாழ்ப்பாணம் வரையிலான போக்கு வரத்துச் சேவைகளைச் சீர்படுத்துங்கள் என் பதற்காக இளைஞர்கள் ஆயுதம் ஏந்தவில்லை. அவர்கள் தாங்கள் இனத்தின் ஒருபகுதியினர் குடியுரிமையை இழந்தபோது சினங்கொண்டார் கள். தங்கள் மொழி இரண்டாம் பட்சமாக்கப்பட்ட போது துடித்தெழுந்தார்கள். தங்கள் இனத்துக்கு எதிராக இனக்கலவரங்களைத் தூண்டி விட்ட அரசின்மேல் கோபங்கொண்டார்கள்.

வடக்குக் கிழக்கைச் சிங்களப்பூமியாக மாற்ற முனையும் அரசின் குடியேற்றத்திட்டங்களை எதிர்த்துப் போராடினார்கள். நிலத்தையும் மொழி யையும் இழக்கச் சம்மதியோம் என்று எழுச்சிக் கொண்டார்கள். தமிழர்களின் தாயக பூமியைச் சிங்களவர்களுக்கு விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று கிளர்ந்தெழுந்தார்கள். இவைதாம் போராட்டத்துக்கான காரணங்கள். இந்தக் காரணங்களால் எழுந்த இன்னல்களைப் பேச்சுகள்மூலம் களைந்து கொள்ள விழைந்தார்கள். முப்பதாண்டு காலமாக அஹிம்சை வழியில் தமது நியாயங்களை எடுத்து ரைத்தார்கள். அப்போதே அரசு அவற்றுக்குத் தீர்வு கண்டிருக்கலாம். ஆனால், செய்யவில்லை.

மாறாக, தமிழ் இளைஞர்களின் கல்வியில் கைவைத்தார்கள். கல்வியாற் பாதிக்கப்பட்ட இளைஞர்களை அரசியல் மயப்படுத்தியவர்கள், தென்னிலங்கை ஆளுங்கட்சி அரசியல்வாதிகளே யன்றித் தமிழ்மக்கள் அல் லர். அரசியல் மயப்பட்ட இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள். படைத்தரப் பின் செயற்பாடுகளைத் தமிழர் பகுதிகளில் முடக்கி வைத்தார்கள். முப்பதாண்டு காலமாக அரசுக்கு நிகரான ஒரு கட்டமைப்பை நடை முறைப்படுத்திக் காட்டி னார்கள். 2009 முள்ளிவாய்க்கால் அவலத்துடன் தமிழர் கட்டமைப்புத் தளர்ந்து போனது. ஆனால், தமிழர் போராட்டத்துக்கான காரணங்கள் எவையும் தளர்ந்துவிடவில்லை.




அவை இப்போதும் அதே முனைப்புடன் அரச தரப்புக்கு அச்சத்தைத் தந்து கொண்டிருக்கின்றன.

சிங்களக் கட்சிகளின் சின்னங்களை ஏந்திக் கொண்டு தமிழர் வாக்குகளைக் கொள்ளையடிக்க வருகின்ற எந்தவொரு வேட் பாளராவது தமிழர்கள் போராடத் தொடங்கியதற் கான காரணங்கள் அற்றுப் போய் விட்டனவென்று சொல்ல முடியுமா? அல்லது, சிங்களக் குடியேற்றங்க ளைத் தடுத்து நிறுத்துவோம் என்றோ, புத்த விகாரைகளை இனித் தமிழர் பகுதிகளில் அமைக்க விடமாட்டோம் என்றோ ஒரு வாக்குறுதியைத் தானும் தரமுடியுமா? தமிழர்கள் தமது தாயகப்பூமி யில் நிம்மதியாக வாழும் வகையில் தன்னாட்சி முறையொன்றைப் பெற்றுத்தர உழைப்போம் என்றாவது கூறமுடியுமா? ஆகக்குறைந்தது வடக் குக் கிழக்குத் தமிழர்களின் தாயகப்பூமி என்பதை அரசுக்கு உரத்துச்சொல்வோம் என்றாவது இவர்க ளால் கூறமுடியுமா? இவை எவற்றுக்கும் துணிச் சல் இல்லாதவர்கள் சிங்கள அரசி னதும், சிங்களக் கட்சிகளினதும் இனஒழிப்புக் கொள்கைகளைத் தோள்களில் காவிக் கொண்டு வடபகுதியில் மேலுங்குவிப் பதற் குத் தமிழர்களிடமே ஆதரவு கேட்கிறார்கள். முள்ளிவாய்க்கா லில் அரசு செய்தது சரியாயின் - அது தமிழர் மீட்புப் போராயின் - இப்போது நவநீதம்பிள்ளை வருகி றார் என்றவுடன், அரசு ஏன் மிரளத் தொடங்கியுள்ளது என்பதற் கான காரணங்களையாவது தமிழ்மக்களிடம் இவர்களால் கூறமுடியுமா? எரித்து அழிக்கப் பட்ட வாகனங்களை நவநீதம் பிள்ளை பார்த்துவிடக்கூடாது என் பதற்காக அவசர அவசரமாகக் கொண்டுபோய் ஒளிப்பதன் நியாயத்தையாவது கூற முடியுமா?

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் நவ நீதம்பிள்ளை இன்றையதினம் இலங்கையை வந்தடைவார் என எதிர்பார்க்கப்படுகிறது. 25ஆம் திகதி தொடக்கம் இம்மாத இறுதிவரை இலங்கையில் தங்கியிருக்கும் மனித உரிமைகள் ஆணையர், ஐ.நா.வின் பரிந்துரைகளில் இலங்கை எவ்வளவு தூரம் கவனம் செலுத்தியுள்ளது எனக் கண்டறி யவுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட இலங்கையின் பிரதான கட்சிகளுடனும் மனிதஉரிமைகள் ஆர்வலர்களுடனும் சந்திப்புகளைமேற் கொண்டுபோருக்குப் பின்னரான இலங்கையின் உண்மையான நிலைவரங்களை அறியவுள்ளார். போர் இடம்பெற்ற பகுதிகளை நேரிற்சென்று பார்வையிடுவாரெனவும் எதிர்பார்க்கப் படுகிறது.

இவரை எப்படிச் சமாளிக்கலாம் என்று இலங்கை அரசு திணறிக்கொண்டிருக் கிறது. நவநீதம்பிள்ளையின் வருகையிட்டு ஆளுந் தரப்பின் உதிரிகள் தங் கள் கோபத்தைக் கொட்டித் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அத்துரலிய ஞான தேரர், விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க போன்றோர் சிறுபிள்ளைத் தனமான சவால்களையும் விட்டுக்கொண்டிருக்கிறார் கள். இலங்கை அரசோ வன்னியில் போர்க் கொடூரத்தின் தடயங் களை அழிப்பதில் இரகசியமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

இலங்கையின் விருப்பம் எதுவாக இருந்தாலும் நவநீதம்பிள்ளையின் இலங்கைப் பற்றிய அறிக் கைதான் உலக அரங்கில் இலங்கையின் தலைவிதியை நிர்மாணிக்கப்போகிறது. இன்னொரு தடவை மனித உரிமைகள் மாநாட்டில் இலங் கைக்கு எதிராகக் கண்டனங்கள் எழும் சூழ்நிலை உருவாகுமானால் அது பாரதூரமான விளைவு களையே கொடுக்கும். காலங்காலமாக தமிழ் மக்களுக்குச் செய்த தீங்குகளுக்குக் கைகட்டிப் பதில் சொல்லவேண்டி வரும். இறுதிப் போரின் போது ஏழாயிரத்து நானூறு பேரே உயிரிழந்தார்கள்; இரண்டாயிரத்து அறுநூறு பேரே காணாமற் போனார்கள்; அதில் ஆயிரத்து அறுநூறு பேர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் காணாமற் போனார்கள்; நானூற்று முப்பத்தெட்டுப் பேர் மட்டுமே அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் காணாமற் போனார்கள். அதில் இருபத்தெட்டுப் பேர் காணாமற்போனமை தொடர்பாகவே இராணுவத்தரப்பின்மேல் குற்றச்சாட்டுகள் உள்ளன என்பவை போன்ற அரச புள்ளிவிவரங்களின் உண்மைத்தன்மை உலகக்குத் தெரியவரும்.

மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை யின் நிலைமை உலக அரங்கில் தாழ்ந்துபோய் இருக்கிறது. நியூஸிலாந்து நாட்டின் ஒக்லன்ட் நகரில் செப்டம்பர் 7ஆம் திகதி இடம் பெற விருக்கும் இராணுவ முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்குக்கு, இலங்கையின் பிரதிநிதிகளான மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ், ஜெனரல் சுந்தர ரணசிங்க ஆகிய இருவரையும் அமைப் புக்குழு நிராகரித்திருக்கிறது. அதற்கு அவர்கள் தெரிவித்த காரணம் இவர்கள் இருவர் மீதும் ஏராளமான போர்க் குற்றச் சாட்டுகள் இருக்கின்றன என்பது தான். இதுதான் இலங்கை அரசின் நிலை.

நவம்பர் 15 தொடக்கம் 17 ஆம் திகதி வரை யிலான நாள்களில் இலங் கையில் பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாடு நடைபெறவுள்ளது.

இந்த மாநாடு இலங்கையில் நடைபெறுவதால் ஜனாதிபதி அடுத்த இரண்டாண்டுகளுக்கு பொது நலவாய நாடுகளின் தலைவராக முடிசூட்டப்படுவார். ஆனால், மாநாடு வெற்றிகரமாக நடந்தேறுமா என்ற சந்தேகம் இலங்கை அரசுக்கு இருந்துவருகிறது. வெளியேற்பாடுகள் ஒருபுறம் நடந்துகொண்டிருப்பி னுங்கூட இந்தியப் பிரதமர் வருவாரா மாட்டாரா என்ற கவலை இலங்கை அரசை ஆட்டிக் கொண்டிருக்கிறது.

இலங்கையில் இடம் பெறும் பொது நலவாய மாநாட்டின் இந்தியா கலந்து கொள்ளக்கூடாது என்ற குரல்கள்தாம் இந்தியாவில் ஒலித்துக்கொண்டிருக் கின்றன. கடைசியாக வந்த செய்தி யின்படி இந்திய அரசு இதுபற்றி இன் னமும் முடிவெடுக்கவில்லை என்பது தெரியவருகிறது. இதனை மறுபுறமாகச் சொல்வோமானால் இலங் கையை இந்தியா அலட்சியமாக நோக்கு கிறது என்பதுதான் கருத்தாகிறது.

தமிழர் பிரச்சினை தொடர்பாகத் தனக்கு வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் ராஜபக்ஷ நிறைவேற்ற வில்லை என்ற கோபம் மன்மோகன் சிங்குக்கு. தமிழர்கள் மேல் புரியப் பட்ட மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக ஐ.நா. செய்த பரிந்துரைகள் எதனையும் நடைமுறைப்படுத்த வில்லை என்ற கோபம் நவநீதம் பிள்ளைக்கு. தமிழர்களைத் தொடர்ந்து ஏமாற்றிவிடலாம் என்ற கனவுலகில் இலங்கை அரசு மிதக்கிறது என்ற கோபம் தமிழர்களுக்கு.

இந்த இலட்சணத்தில் வெற்றிலையைத் தூக்கிக்கொண்டு வடபகுதித் தமிழர்களை ஏமாற்ற வருகிறார்கள் சில புல்லுருவிகள். இவர்களுக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் சரியான பாடமாக அமையும் என எதிர்பார்க் கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயம் பூசுதல்

ஔண்யன்




என்றாலும் யாரோ ஒரு அநாமதேய மனிதரின் அல்லது அமைப்பின் வதந்தியை மட்டும் நம்பிக் கொண்டு தமிழியல்' மாநாட்டுக்குச் சென்றவர்களை அதி பயங்கரவாதிகள்' என்ற கணக்கில் எடுத்த எடுப்பிலேயே அறிக்கையிடுவது ஒரு அரசுக்கு அழகல்ல. எதையும் ஆற, அமர சீர்தூக்கிப்பார்க்க வேண்டும்.

லண்டன் ஹீத்ரு விமான நிலையத்தில் கால்வைத்த போது அவரின் தலை அவரையும் அறியாமல் நிமிர்ந்து கொண்டது. தனக்குப் பின்னால் ஒரு ஒளிவட்டம் சுழல்வது போல பிரமை. கண்ணுக்குத் தெரியாத மணி முடி ஒன்று இருப்பது போல பாவனை செய்து கொண்டு பெருமிதத்தோடு தன்னை அழைத்துச் செல்ல வந்தவர்களை நோக்கி நடக்கத் தொடங்கினார். கைகளில் காகிதக் கட்டு கனத்தது. சும்மாவா? லண்டனில் நடக்கும் ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்படப் போகும் கட்டுரையல்லவா அது.

அவர் ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளர். இயல்பாகவே எல்லாத் துறைகள் மீதும் ஈடுபாடு கொண்டவர். தேமதுரத் தமிழை உலகெல்லாம் பரப்பும் விருப்பும் கொண்டவர். கூடவே தமிழின் புகழைவிட சற்று அதிகமாக தன்புகழும் பாரெங்கும் பரவிட ஏதாவது வழியுண்டா என்று அல்லும் பகலுமாக யோசித்துக் கொண்டிருப்பவர்.

அப்படியான தேடல் ஒன்றின் போதுதான் அவருக்கு அந்த ஆய்வரங்கு தொடர்பான அழைப்புக் கிடைத்தது. உலகத் தமிழியல் ஆய்வுநடுவம், தனிநாயகம் அடிகளார் நினைவாக தமிழியல் ஆய்வு மாநாடு ஒன்றை நடத்த தீர்மானித்திருந்தது. இதற்காக வெவ்வேறு துறைசார்ந்தோரிடமும் ஆய்வுக் கட்டுரைகள் கோரப்பட்டிருந்தன. விடுவாரா விரிவுரையாளர்? உள்ளூரில் ஆய்வரங்கென்றாலே அடித்துப் பிடித்து மூளையைக் கசக்கிப் பிழிந்து, நூலகங்களில் புத்தகங்களோடு நாள்கணக்கில் போராடி ஆய்வு செய்து கட்டுரை சமர்ப்பித்து தன் புகழையும், பெயரையும் எல்லோர் மனதிலும் பதியச் செய்ய முனைபவர் அல்லவா அவர். லண்டனுக்குப் போய் கட்டுரை வாசிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தால் அதைத் தவறவிட அவருக்கு எப்படி மனம் வரும்?

ஆய்வுத் தலைப்பையும், தான் அந்த மாநாட்டில் பங்குகொள்ள இருப்பதையும் குறித்த மாநாட்டை நடத்தும் நிறுவனத்துக்கு அறிவித்த கையோடே ஆய்வுக் கட்டுரை வேலையில் முழு மூச்சாக இறங்கினார். ஒரு வாரத்தில் கட்டுரை தயார். கணினியில் தட்டச்சு செய்து, அதை மின்னஞ்சலில் அனுப்பி இரு வாரங்கள் கூட கழியவில்லை.

அதற்கிடையில் விரிவுரையாளரின் ஆய்வுக் கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால், லண்டன் விசாவுக்கு விண்ணப்பிக்கச் சொல்லி கடிதம் வந்தது. விரிவுரையாளர் விண்ணுக்கும் மண்ணுக்கும் குதித்தார். என்றாலும் 'பிளைட் ரிக்கற்' காசு விரிவுரையாளருடையதுதான். லண்டனுக்குப் போவதா, காசா முக்கியம். உடனடியாகவே வீசாவுக்கு பதியும் வேலையில் குதித்தார் விரிவுரையாளர். யார் யாரிடமோவெல்லாம் கெஞ்சிக் கூத்தாடி தன்னுடைய வங்கிக் கணக்கில் லட்சக் கணக்கில் பணம் இருப்பதாகவும் காட்டி விட்டார். பிறகென்ன? அவரது பாஸ்போட்டில் இரு நாள்களுக்குப் பின்னர் லண்டன் வீசா குத்தப்பட்டு பளபளத்தது. தாமதிக்காமல் உடனடியாகவே ரிக்கற்றைப்போட்டு பறந்துபோய் ஹீத்ரு விமான நிலையத்தில் இப்போது இறங்கியும் விட்டார். ஓகஸ்ட் 14 ஆம் திகதி தான் மாநாடு. ஆனால் அதற்கு ஒரு வாரத்துக்கு முன்னரே இவர் லண்டன் போய் விட்டதால் லண்டனில் இருக்கும் தன்னுடைய உறவினர்கள் வீட்டுக்கு இந்த எஞ்சியிருந்த நாள்களில் 'விசிட்' பண்ணி, அங்கெல்லாம் "இவங்கள் நான் ஆய்வுக்கட்டுரை வாசிச்சாத்தான் நிகழ்வுக்கே ஒரு மரியாதை எண்டு கெஞ்சினபடியாலதான், போனாப் போகுதெண்டு வந்தனான் " என்று கதையளக்கவும் தவறவில்லை. நிகழ்வுக்கு இன்னும் இரு நாள்களே இருந்தன. அப்போது இலங்கையில் இருந்து விரிவுரையாளருக்கு ஒரு தொலைபேசி அழைப்பு. மறுமுனையில் பேசியது

விரிவுரையாளரின் மனைவிதான். வழமையைப் போலல்லாமல் உடைந்துபோன குரலில் அழத்தொடங்கினார் மனைவி.

"என்னப்பா? ஏன் அழுகிறீர்?" என்று கேட்ட விரிவுரையாளருக்கு மனைவி சொன்ன பதிலால் மயக்கமே வந்துவிட்டது.

"நீங்களெல்லாம் புலிகளின்ர தனிநாட்டு மாநாட்டுக்கு களவாய் போயிருக்கிறீங்களாம். உங்களையெல்லாம் எயார்போர்ட்டில வைச்சுப் பிடிக்க வரமுதல் எல்லாரும் சீ.ஐ.டிக்கு டிமிக்கி குடுத்திட்டு ஒளிச்சு ஓடிட்டிங்களாம். இனி இங்க திரும்பி வந்தால் உடன பிடிச்சுப் போடுவாங்களாம்."

மனைவி சொன்ன இந்த விடயத்தை விரிவுரையாளரால் நம்புவதா? விடுவதா? என்று தெரியவில்லை. என்றாலும் மனதில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு.

"உதெல்லாம் நான் லண்டனுக்கு கட்டுரை வாசிக்க வாறதைப் பிடிக்காதவங்கள் கட்டிவிட்ட வதந்தியாக இருக்கும். ஒண்டையும் நம்பி, பயப்பிடாதை." என்று நம்பிக்கையூட்டினார்.

"இல்லையப்பா. இதொண்டும் வதந்தியில்லை. அரசாங்கத்தின்ர ரீவியில கூட நியூஸ் போகுது. பேப்பரிலையும் வந்திருக்கு" என்று மனைவி சொல்லி முடிக்கும் முன்னரே விரிவுரையாளர், மூர்ச்சையுற்று கீழே வீழ்ந்திருந்தார்.

★ ★ ★

கடந்தவாரம் இலங்கையில் பரபரப்பாகப் பேசப்பட்ட விடயம் "இலங்கைப் புலனாய்வுப்பிரிவுக்கு டிமிக்கி கொடுத்த பேராசிரியர்கள்" என்பதுதான். இலங்கையில் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து லண்டனில் புலிகளால் நடத்தப்படும் மாநாடு ஒன்றில் கலந்துகொள்வதற்காகவே இந்தப் பேராசிரியர்கள் அங்கு சென்றுள்ளனர் என்றும், இது குறித்த தகவல் கிடைக்கப்பெற்று அவர்களை விசாரணை செய்வதற்கிடையில் அவர்கள் லண்டனுக்குச் சென்று விட்டதாகவும் அரசு அறிவித்திருந்தது.

ஆனால் உண்மையில் உலகத் தமிழியல் ஆய்வு நடுவகம் என்ற அமைப்பே இந்த நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தது. புலிகளுக்கும் இந்த மாநாட்டுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஒருவேளை 'தனிநாயகம் அடிகளார் நினைவு தமிழியல் மாநாடு' என்பதை 'தனிநாட்டை நிறுவும் தமிழீழ மாநாடு' எனத் தவறாக மொழிபெயர்த்ததால் தான் அரசு இவ்வளவுதூரம் பதறியடிக்கிறதோ தெரியவில்லை. இல்லாவிட்டால் தமிழியல் சார்ந்த இந்த மாநாடு நடைபெறுவதை விரும்பாதவர்கள் தான் அதற்குப் புலிச்சாயம் பூசியிருக்கவேண்டும். ஏனெனில் புலம் பெயர் நாடுகளில் நம்மவர்கள் குழுக்களாக கோஷ்டி பிரிந்து, மற்றவர்களை மாட்டிவிடுவதையே முழுநேரத் தொழிலாகக் கொண்டு இயங்கி வருகிறார்கள். இப்படியானவர்களில் யாரேனுக்கும் இந்த மாநாடு நடப்பது புகைச்சலை ஏற்படுத்தியிருக்கக் கூடும். உடனேயே இலங்கை அரசின் காதுகளுக்கு அது 'புலி மாநாடு' என சொல்லிவிட்டிருந்தாலும் இவ்வாறான தவறான முடிவுக்கு அரசு சென்றிருக்கக் கூடும்.

என்றாலும் யாரோ ஒரு அநாமதேய மனிதரின் அல்லது அமைப்பின் வதந்தியை மட்டும் நம்பிக் கொண்டு 'தமிழியல்' மாநாட்டுக்குச் சென்றவர்களை 'அதிபயங்கரவாதிகள்' என்ற கணக்கில் எடுத்த எடுப்பிலேயே அறிக்கையிடுவது ஒரு அரசுக்கு அழகல்ல. எதையும் ஆற, அமர சீர்தூக்கிப்பார்க்க வேண்டும்.

ஒரு மொழிசார் மாநாட்டில் பங்குகொள்ளச் சென்றவர்களை புலிகளின் மாநாட்டுக்கு எங்களை ஏமாற்றிவிட்டு சென்றுவிட்டதாக 'கண்டுபிடித்த' இலங்கைப்புலனாய்வுத் துறையின் ஆற்றலை எப்படிப்பாராட்டுவது? ஆனால் மாநாடு எப்படி நடந்தது, என்னென்ன விடயங்கள் பேசப்பட்டன என்பதை கொஞ்சமேனும் அறியமுற்பட்டிருந்தாலாவது உண்மை என்னவென்று புரிந்திருக்கும். ஆனால் அப்படி தோண்டித் துருவி ஆராய்வதற்கு புலனாய்வுப்பிரிவுக்கு நேரமோ, பொறுமையோ கிடையாது. அதனால்தான் இப்படி பேராசி ரியர்கள், விரிவுரையாளர்கள் மீது அவதூறொன்றை அவிழ்த்துவிட்டுள்ளது. இதைவிட குறித்த மாநாட்டுக்கு செல்லவென வீசாவுக்கு விண்ணப்பித்து, பின்னர் அங்கு செல்லாமல் இருந்தவர்கள் மீதும் விசாரணைகள் நடைபெற்று வருவதாக அறியமுடிகிறது. தாம் சொன்ன பொய்யை உண்மையென நம்பவைக்கவே இது போன்ற நடவடிக்கைகளில் படையினர் இறங்கியுள்ளனர். பாவம்! மாநாட்டுக்குச் சென்றவர்கள். தங்களுடைய சொந்தக்காசில் விமானச்சீட்டு எடுத்து, கட்டுரை வாசிக்கப்போன அவர்கள் நிகழ்வு முடிந்த பின்னரும் இலங்கைக்கு சென்றால் என்ன நடக்குமோ என்ற பயத்தில் தமது மீள்திரும்பலை தள்ளிப்போட்டுக் கொண்டே வருகின்றனர். போர் முடிந்த பின்னரும் புலிச்சாயம் பூசுவது மட்டும் முடியவேயில்லை.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஞாயிறு காரம்

# சரணடைவாளர்களின் சாகசப் புலம்பல்கள்...

சந்திரசேகர ஆஷாத்

வடக்கில் இது திருவிழாக் காலம். நல்லூர், செல்வச் சந்நிதி உட்படப் பல ஆலயங்களும் கொடியேறிவிட்டன. விரதங்கள், நேர்த்திக்கடன்கள், அங்கப்பிரதிஷ்டை, அடியழிப்பு, காவடி, கரகம் எனப் பலவித வழிபாடுகளும் தண் ணீர்ப் பந்தல், அன்னதானம் எனப் புண்ணிய காரியங்களும் கதாகாலட் சேபங்கள், சொற்பொழிவுகள், இசை நிகழ்வுகள் போன்றவையும் இடம் பெறும் நாள்கள் இவை. பக்தி வெள்ளம் ஒரு புறமும், கேளிக்கை அலை கள் இன்னொரு புறமுமாக வடக்கு ஒரு புதிய சூழலுக்குள் புகுந்து விடும்.

இந்த வருடம் இந்த ஆலயத் திருவிழா நாள்களில், இன்னொரு திருவிழாவும் ஆரம்பமாகிவிட்டது. அதுதான் தேர்தல் திருவிழா. ஆலயத் திருவிழாக்களில் மக்கள் ஆண்டவனின் அனுக்கிரகம் பெற வருவார்கள், தேர்தல் திருவிழாவிலோ ஆண்டவர்கள் மக்களிடம் அனுக்கிரகம் பெற வருவார்கள். அதே வேளையில் தேர்தல் திருவிழாவுக்கெனச் சில சிறப்பு அம்சங்கள் உண்டு. பொய் வாக்குறுதிகள், அலங்கார கட் அவுட்டுகள், அடிதடி, ஆள்கடத்தல், பணப்பரிமாற்றம், கள்ளவாக்கு எனத் திருவிழா அமர்க்களப்படும். இடையிடையே கொலைகள் விழுவது முண்டு.

வடமாகாண சபைக்கான தேர்தலில் ஆட்சியிலுள்ள ஐக்கிய சுதந்திர முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட பல உதிரிக் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. தேர்தல் பிரசாரங்கள் மெல்ல மெல்லச் சூடுபிடித்துவரும் இந்தச் சந்தர்ப்பத்தில், அரச தரப்பின் பிரசார நடவடிக்கைகள் உச்சக் கட்டத்தைத் தொட்டிருக்கின்றன. ஒருபுறம் அமைச்சர்களின் வருகை, அடிக்கல்நாட்டு விழாக்கள், திறப்பு விழாக்கள், சமூக நலத்திட்டங்கள், பற்பல வாக்குறுதிகள் என முனைப்புப் பெற அரச, அரசு சார்பு வானொலிச் சேவைகளின் முழக்கங்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பரப்புரைகளுக்கு தடையாக இருப்பது, வேட்பாளர்களை மிரட்டுவதுமாக இராணுவத்தினரும் தமது பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

வடக்கில் பிரசார வேலைகளுக்கென வந்துள்ள சில அமைச்சர்களும் அவர்களின் உரைகளும் மிகவும் முக்கியமானவை.

அமைச்சர்களான திஸ்ஸ விதாரண, டி.யூ.குணசேகர, சந்திரசிறி கஜதீர, ராஜித சேனரத்ன போன்றோர் எப்போதுமே சிங்கள இனவாதக் கருத்துக்களை நிராகரித்தவர்கள் அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தில் மாற்றம் மேற்கொள்வது அல்லது நீக்கிவிடுவதற்கும், 19 ஆவது திருத்தத்தைக் கொண்டு வருவதற்கும் எதிராகக் குரல் கொடுத்தவர்கள்.

அதாவது தாங்கள் தமிழ் மக்களுக்கு ஆதரவான, நியாயமான நிலைப்பாட்டை எடுப்பதாகக் காட்டிக் கொள்பவர்கள். ஆனாலும் தொடர்ந்து அமைச்சர்களாகப் பதவி வகித்து வருபவர்கள்.

இப்போது இவர்கள் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்புக்காகத் தேர்தல் பிரசாரங்களை வடபகுதியில் மேற்கொண்டு வருகின்றனர். இவர்களின் பிரசாரத்தின் முக்கிய கருத்தோட்டம் தமிழ்த் தேசியக் கட்டமைப்பு ஓர் இனவாதக் கட்சி எனவும், தமிழ் மக்கள் அதை நிராகரித்து ஐக்கிய சுதந்திரக் கூட்டணிக்கு வாக்களிப்பதன் மூலம் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற முடியும் என்பதே.

மன்னாருக்குப் பயணம் செய்த மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனரத்ன சில மீனவ நலத்திட்டங்களை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில், தமிழக மீனவர்களால் வடபகுதி மீனவர்கள் பாதிப்புக்கு உள்ளாவதாகவும், அதைத் தடுத்து நிறுத்தி வடபகுதி மீனவர்களைக் காப்பாற்றப் போவதாகச் சூளுரைத்துள்ளார்.

தென்னிந்திய மீனவர்களால் வடபகுதி மீனவர்கள் பாதிக்கப்படுவது உண்மைதான். இந்தப் பிரச்சினை தொடர் பான விடயங்களை இரு பகுதியி னரும் பேசி ஒரு முடிவுக்கு வரத் தயாராயுள்ளனர். அதற்கான ஏற்பாடுகளும் இடம் பெற்று வருகின்றன.

இது ஒரு சகோதர முரண்பாடு. அமைச்சர் இதை ஒரு பகை முரண்பாடாக்கி அதனால் பயன் பெற முயல்கிறார். அடிப்படையில் தமிழக மீனவர்களுக் கும் இலங்கை மீனவர்களுக்குமிடையே பகைமையையும் வெறுப்பையும் உருவாக்கி ஈழத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்கு தமிழக மக்கள் வழங்கும் ஆதரவைப் பலவீனப் படுத்துவதே அவரது அடிப்படை நோக்கமாகும்.

அப்படி அவர் உண்மையிலேயே வடபகுதி மீனவர்கள் மீது அக்கறை கொண்டவராயிருந்தால், வடக்கின் கிழக்குக் கரையில் தென்னிலங்கை மீனவர்கள் கடற்படையின் உதவியுடன் ஊடுருவி தடை செய்யப்பட்ட வலைகளைப் பாவித்து எமது கடல் வளங்களை அள்ளிச் செல்வதையும், அழிப்பதையும் தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும். ஆழ்கடலில் இலங்கைக் கொடியுடன் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்ட சீன மீன்பிடிக் கப்பல்கள் வடகடலில் புகுந்து மீன்பிடிப்பதையும், வலைகளை அறுப்பதையும் தடுத்து நிறுத்த வேண்டும்.

மன்னாரில் அந்தப் பிரச்சினைகள் பற்றி வாயே திறக்காத அவர், தென்னிந்திய மீனவர்களின் ஊடுருவல் பற்றி மனமுருகியுள்ளார். ஆடு நனைகிறதேயென்று ஓநாய் கண்ணீர் விட்ட பாணியில் அவர் வடபகுதி மீனவர்கள் தொடர்பாக அக்கறை காட்டுகிறார். அப்படியெல்லாம் உருகிவிட்டு ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்புக்கு வாக்களிக்கும்படி கேட்டுத் தன் நோக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அமைச்சர் ராஜித சேனரத்னா 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்க முயற்சி எடுத்தால், தான் பதவி விலகத் தயார் எனச் சவால் விட்டவர். அதாவது தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பது போல காட்டிக் கொண்டவர். ஆனால் இப்போது வந்து வடபகுதி மீனவர்களுக்காக துடிப்பது போல் காட்டி ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப் புக்கு வாக்களிக்கும்படி கேட்கிறார்.

அவர் தமிழ் மக்கள் மேல் காட்டும் கரிசனையின் உள்நோக்கத்தை இவற்றின் மூலம் புரிந்துகொள்ள முடிகிறதல்லவா? அடுத்து சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலரும், சிரேஷ்ட அமைச்சருமாகிய திஸ்ஸ விதாரண வெளியிட்ட கருத்துக்களையும் நாம் அலட்சியம் செய்துவிட முடியாது.

தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்துக் கோரி சமசமாஜக் கட்சி கோரிக்கை வைத்தபடியால்தான் அது தோற்க வேண்டி வந்ததென்றும், தனிச் சிங்களம் என்ற கொள்கையை முன் வைத்ததால் சுதந்திரக்கட்சி வெற்றி பெற்றதாகவும் கூறியுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழ் மக்கள் ஆதரித்தால் சிங்கள மக்கள் நாடு பிரிந்துவிடும் என அச்சப் படுவார்கள் எனவும், அதனால் தமிழ் மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

1956 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலின்போது தனிச் சிங்களக் கொள்கையை முன்வைத்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது உண்மை.

ஆனால் சம அந்தஸ்துக் கொள்கையை முன்வைத்துத் தேர்தலில் போட்டியிட்ட சமசமாஜக் கட்சி 14 ஆசனங்களைப் பெற்று எதிர்க் கட்சியாக வந்தது. அது முதலாவது தேர்தலில், அக்கட்சி பெற்ற ஆசனங்களைவிட அதிகமாகும்.

சம அந்தஸ்துக் கோரிக்கையை முன் வைத்தபடியால்தான் சமசமாஜக் கட்சி தோல்வியடைந்ததென்றால், 1972 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு நிறைவேற்றப்பட்ட பின்பு அமோக வெற்றி பெற்றிருக்க வேண்டுமல்லவா? 1972 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பை வரைந்தவர் சமசசமாஜக் கட்சித் தலைவர்களில் ஒருவரான கொல்வின் ஆர். டி சில்வா. இந்த யாப்பின் மூலம் சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கிய 27 ஆவது சரத்து நீக்கப்பட்டது. ஏற்கனவே சிங்கள மொழியும் பௌத்த மதமும் அரச அந்தஸ்துப் பெற்றிருந்தன. ஒட்டு மொத்தமாக தமிழ், முஸ்லிம் மக்கள் இலங்கை அரசமைப்பின் மூலம் இரண்டாம் தரப் பிரஜைகளாக்கப் பட்டனர்.

அப்படித் தமிழ் மக்களுக்கு அவர் பெரும் துரோகத்தை இழைத்த போதும், சிங்கள மக்கள் ஏன் சமசமாஜக் கட்சியை ஆதரிக்கவில்லை.

அடிப்படையில் சமசமாஜ, கம்யூனிஸ்ட் ஆகிய இடதுசாரிக் கட்சிகளுக்கு ஆதரவு வழங்கியவர்கள் தொழிலாளர் விவசாய மக்களே. தனித்தனியாக ஒன்றுடன் ஒன்று மோதிய இடதுசாரிக் கட்சிகள் 1960 மார்ச் தேர்தலில் படுதோல்வி அடைந்தன. எனவே 1960 ஜூலை மாதம் இடம்பெற்ற மறுதேர்தலில் சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி என மூன்று கட்சிகளும் ஒன்றிணைந்து இடதுசாரி முன்னணியாகப் போட்டியிட்டுப் பெரும் ஆதரவைப் பெற்றன. 1969இல் சமசமாஜக் கட்சி இடதுசாரி ஐக்கிய முன்னணியை உடைத்துக் கொண்டு வெளியேறி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து மந்திரி பதவியைப் பெற்றனர். இதன் காரணமாக இடதுசாரிகள் தமிழ் சிங்கள உழைக்கும் மக்களின் ஆதரவை இழக்க வேண்டி நேர்ந்தது. அந்த நிலையில் அவர்கள் தாங்களாகவே சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தங்களைக் கரைத்துக் கொண்டனர்.

எனவே அவர்களின் அழிவுக்கு அவர்கள் தொழிலாளி வர்க்கத்துக்கும் தமிழ் மக்களுக்கும் செய்த துரோகமே காரணமொழிய சம அந்தஸ்துக் கோரிக்கையல்ல.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட காலத்தில் அமைச்சர் டியூ.குணசேகர தெவித்தமை போன்று விடுதலைப் புலிகள் தான் பிரச்சினையென்றால், அவர்களின் தோல்வியுடன் பிரச்சினை தீர்ந்து விட்டிருக்க வேண்டும். ஆனால் தீரவில்லை. எனவே பிரச்சினையின் மூல காரணங்களைக் கண்டறிந்து ஒரு நல்ல முடிவுக்கு வர வேண்டும் எனக் கூறியவர். இது உண்மையாக மிகச் சரியான கருத்தே.

ஆனால் நான்கு வருடங்கள் கடந்தும், பிரச்சினையின் மூல காரணம் ஒன்று கூடக் களையப்படவில்லை. மாறாக 18 ஆவது திருத்தச் சட்டம், உள்ளூராட்சி சபைகள் சட்டமூலம், திவிநெகும சட்டம் என்பன மூலம் பிரச்சினை மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சட்டங்களுக்கு இவர்களும் தமது ஆதரவை வழங்கினர்.

இன்று அவர் முல்லை மாவட்டத்தில் வந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு ஆதரவு கோரியுள்ளார். அமைச்சர் சந்திரசிறி கஜதீரவும் அவருடன் வந்து தேர்தல் காரியாலயத்தைத் திறந்து வைத்ததுடன் பிரசாரங்களையும் மேற்கொண்டுள்ளார். ராஜித சேனரத்ன, திஸ்ஸ விதாரண, டியூ குணசேகர, சந்திரசிறி கஜதீர முதலியோர் இடையிடையே தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பது உண்மை. பின்பு அடங்கிப் போய் அரசின் விருப்பப்படியே செயற்படுவதும் உண்மை.

நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். அமைச்சர் ராஜித சேனரத்ன ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தன்னைத் தெரிவு செய்த மக்களுக்கும் துரோகம் செய்து அரசிடம் சரணடைந்தவர். அவ்வாறே அமைச்சர்கள் திஸ்ஸ விதாரண, டியூகுணசேகர, சந்திர சிறி கஜதீர ஆகியோரும் தங்கள் கொள்கைகளுக்கும் உழைக்கும் மக்களுக்கும் துரோகம் செய்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் தம்மைக் கரைத்துக் கொண்டவர்கள்.


மாமேதை லெனின் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக் கொள்கையைக் காற்றில் பறக்க விட்டவர்.

இன்று தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளை மறுத்து அடிமைகளாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் தம்மை கரைத்துக் கொள்ளும்படி கேட்டு வந்திருக்கின்றனர்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை தமிழர்கள் தமிழர்களாகவும், சிங்களவர்கள் சிங்களவராகவும் அவரவர் தமக்குரிய உரிமைகளுடன் ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஐக்கியமாக வாழவே விரும்புகிறோம்.

நாம் இன்னொரு இனத்துக்குள் எம்மையும் எமது தேசியத்தையும் கரைத்துக் கொள்ள முடியாது. எனவே தமிழ் மக்கள் தங்கள் தலைமையிலேயே ஐக்கியத்துடன் உறுதியாக நின்று எமது உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பதே நியாயமான வழி என்பது எப்போதோ உணரப்பட்டுவிட்டது என்பதை சரணடைந்து தம்மை இழந்துவிட்ட அரசியல்வாதிகளுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



● அதிரன்

# புதிய அமைச்சின் உள்நோக்கம் என்ன?

பொலிஸ்திணைக்களத்தை பாதுகாப்பு அமைச்சிலிருந்து பிரித்து புதிதாக சட்டம் மற்றும் ஒழுங்கு என்ற அமைச்சு ஒன்றை நேற்று முன்தினம் உருவாக்கியுள்ளார் ஜனாதிபதி.

இந்த அமைச்சில் ஜனாதிபதி வசமே இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த அமைச்சின் செயலாளராக ஓய்வுபெற்ற இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இன்று இலங்கைக்கான தனது பயணத்தை ஆரம்பிக்கவுள்ள நிலையில் ஜனாதிபதி இந்தப் புதிய அமைச்சை உருவாக்கியிருக்கிறார்.

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் மிகச் சரியாக நிலைநாட்டுவதற்கும் மக்களின் சட்ட ஒழுங்கு விவகாரங்களை சரியாகப் பேணுவதற்கும் பொலிஸ் துறையைப் பாதுகாப்பு அமைச்சில் இருந்து பிரிக்குமாறு நல்லிணக்க ஆணைக்குழு ஏற்கனவே தனது அறிக்கையில் பரிந்துரை செய்திருந்தது. எனினும் பொலிஸ் துறையை பாதுகாப்பு அமைச்சிலிருந்து தனியாகப் பிரிக்க முடியாது என்றும் அது தொடர்ந்தும் பாதுகாப்பு அமைச்சின் கீழேயே செயற்படும் என்றும் அரசு தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தது. இதேவேளை பொலிஸ் துறையைத் தனியாகப் பிரித்து சுயாதீனமாக இயங்கச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை பல்வேறு மட்டங்களில் இருந்தும் அரசுக்கு விடுக்கப்பட்டு வந்தது. அப்போதெல்லாம் அந்தக் கோரிக்கைகளை தட்டிக் கழித்துப் புறக்கணித்து வந்தது மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு.

ஆயினும் முன்னைய முடிவுகளையெல்லாம் தலைகீழாக மாற்றி இப்போது அதிரடியாகப் பொலிஸ் துறையை பாதுகாப்பு அமைச்சின் கீழிருந்து பிரித்தெடுத்து அதற்கென தனியான அமைச்சு ஒன்றை உருவாக்கி அதனைத் தன்வசமே வைத்திருக்கிறார் ஜனாதிப்தி. அப்போது நல்லிணக்க ஆணைக்குழு செய்த பரிந்துரையை ஏற்றுக் கொள்ளாத இந்த அரசு இப்போது விழுந்தடித்துக் கொண்டு பொலிஸ் துறையை பிரித்தெடுத்ததற்கு என்ன காரணம் என்று அரசியல் அவதானிகள் பலரும் தலையைப் பிய்த்துக் கொள்கிறார்கள். காதும் காதும் வைத்தாற்போல் மிக இரகசியமாக அரசில் அங்கம் வகிக்கும் மூத்த அமைச்சர்களுக்கே தெரியாமல் ஜனாதிபதி மேற்கொண்ட இந்த அதிரடி நடவடிக்கை குறித்துப் பல்வேறு மட்டங்களினும் பலவாறு பேச்சுக்கள் எழுந்துள்ளன. புதிய அமைச்சை உருவாக்கியது மட்டுமல்லாமல் அதனை தன் வசம் வைத்துள்ளமையும் பலருக்கும் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு இப்போது இரண்டு காரணங்கள் கூறப்பட்டு வருகின்றன. ஒன்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கான தனது பயணத்தை இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கிறார். எதிர்வரும் 30 ஆம் திகதி வரை அவர் இலங்கையில் தங்கியிருக்கிறார். அந்த நேரத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட அரசியல் கட்சிகளின் தலைவர்கள், வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள், காணாமற்போனோரின் உறவுகள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து கள நிலைமைகள் குறித்தும் இலங்கை அரசின் மீது சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுக்களின் உண்மைத் தன்மை குறித்தும் நேரில் ஆராயவுள்ளார். "எந்தவொரு விடயத்தையும் நான் முன்கூட்டியே கணிக்கவில்லை. விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் பல உள்ளன. சாதகமான அபிவிருத்தி குறித்து பேசவேண்டியுள்ளது. அதனால் நான் மிகவும் திறந்த மனதுடன் இலங்கைக்குச் செல்கிறேன். எனது சொந்த ஆராய்வின் மூலம் இலங்கை தொடர்பில் சீரான மதிப்பீடு ஒன்றை மேற்கொள்வதற்கு முடிவு செய்துள்ளேன்" என்று நவநீதம்பிள்ளை தனது இலங்கைப் பயணத்தின் நோக்கம் பற்றி குறிப்பிட்டுள்ளார். நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வருவதற்கு முன்னர் நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கான உறுதிப்பாட்டில் அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது என்பதை அவருக்கு வெளிப்படுத்துவதற்காகவும், பொலிஸ் துறையைப் பிரித்த தன் மூலம் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்து வருகிறது என்பதை வெளிக்காட்டுவதற்காகவுமே ஜனாதிபதி மஹிந்த அவசர அவசரமாக இந்த அமைச்சை நிறுவினார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. நவநீதம்பிள்ளைக்கு நல்ல பிள்ளையாக நடிப்பதற்காகவே அரசு இந்த நடவடிக்கையை மிக இரகசியமாக சரியான தருணத்தில் மேற்கொண்டிருக்கிறது என்றும் கூறப்படுகிறது. ஆயினும் இந்த அமைச்சை உருவாக்கியதற்கான நோக்கம் என்ன என்பது குறித்து ஜனாதிபதியோ அல்லது அரசதரப்பினரோ இதுவரை சரியான தகவல் எதனையும் வெளியிடவில்லை. புதிய அமைச்சை உருவாக்கியமைக்கான மற்றொர காரணம் வடக்கு மாகாண சபைத் தேர்தல் என்று சொல்லப்படுகிறது. எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி வடக்கு மாகாண சபைக்கு நடத்தப்படவுள்ள முதலாவது தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றியீட்டினால் வடக்கில் அரசின் செயற்பாடுகளை முன்னரைப் போன்று நினைத்தவாறு மேற்கொள்ள முடியாது என்பது ஜனாதிபதிக்கு நன்கு தெரியும். இப்போதே காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைக்கு வழங்க வேண்டும் என்று அழுத்தத்துக்கு மேல் அழுத்தம் கொடுத்து வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்குத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைத்தால் காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பயன்படுத்தி வடக்கில் ஒரு தனி அரசை உருவாக்கிவிடும் என்ற அச்சமும் அரசுக்கு இல்லாமல் இல்லை.

இதனால் சட்டம் மற்றும் ஒழுங்கு என்ற அமைச்சை உருவாக்கி அதனை தன் வசம் வைத்துக் கொண்டால் மாகாண சபைகளின் காணி, பொலிஸ் அதிகாரங்களை கட்டுப்படுத்துவதுடன் தான் நினைக்கும் நேரத்தில் அவைகளைப் பிடுங்கி எடுத்துக் கொண்டு ஒரு சில பயனற்ற அதிகாரங்களை மட்டும் மாகாண சபைகளுக்கு விட்டுவிடலாம். அதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல்பலத்தையும் செயற்றிறனையும் கட்டுப்படுத்தலாம். அவர்கள் வடக்கில் தனி ஆட்சிஅமைப்பதை தடுத்து நிறுத்தலாம் என்ற சில ரகசிய நோக்கங்களுக்காகவே ஜனாதிபதி இந்த நேரத்தில் இப்படி சாதுரியமாக நடந்துகொண்டார் என்றும் அரசியல் வட்டாரங்களில் இருந்து தகவல்கள் கசிந்துள்ளன.

எது எவ்வாறாயினும் ஜனாதிபதி இந்த நேரத்தில் புதிதாக ஒரு அமைச்சை திடீரென நிறுவுவதற்கு ஏதோவொரு உள்நோக்கம் இருந்திருக்கவே வேண்டும். அவ்வாறு ஒரு நோக்கம் இல்லாமல் இப்படி விழுந்தடித்துக் கொண்டு இரகசியமாக அமைச்சொன்றை உருவாக்கி அதற்கென ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் ஜெனரலை செயலாளர் ஆக்க வேண்டிய தேவை ஜனாதிபதிக்கு இல்லை. அமைச்சின் செயலாளராகவுள்ள மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி இராணுவத்துக்குள் ஒரு கடும் போக்காளர் என்று முன்னரே பல தடவைகள் விமர்ச்சிக்கப்பட்டவர். அவர் இந்தோனேஷியாவுக்கான இலங்கைத் தூதுவராகவும் ஏற்கனவே பணியாற்றியவர்.

இந்நிலையில் அவரை அமைச்சின் செயலாளராக நியமித்து தனக்கு வேண்டிய ஏதோவொன்றை கனகச்சிதமாக மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த என்பது மட்டும் உண்மை. அந்த திட்டம் என்ன என்பது போக போகத் தெரியவரும்.

**சட்டம் மற்றும் ஒழுங்கு என்ற அமைச்சை உருவாக்கி அதனை தன் வசம் வைத்துக் கொண்டால் மாகாண சபைகளின் காணி, பொலிஸ் அதிகாரங்களை கட்டுப்படுத் துவதுடன் தான் நினைக்கும் நேரத் தில் அவைகளைப் பிடுங்கி எடுத்துக் கொண்டு ஒரு சில பயனற்ற அதி காரங்களை மட்டும் மாகாண சபை களுக்கு விட்டுவிடலாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயம் 25 08 2013 ஞாயிற்றுக்கிழமை



# அரசின் முகத்திரையை கிழிப்பாரா நவிப்பிள்ளை?




கமுகன்

இலங்கையில் தற்போது மூன்று விடயங்கள் முக்கியத்துவம்மிக்கவையாகக் காணப்படுகின்றன.

வட மாகாணத்திற்கான தேர்தல், பொது நலவாய நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் உச்சி மாநாடு, சர்வதேச மனித உரிமை ஆணையாளரின் இலங்கை வருகை ஆகியவையே அந்த மூன்று அம்சங்கள். அரசியல்வட்டாரத்தில் மிகவும் நொந்து வெந்துபோன விடயங்களாக இவற் றைக் கூறலாம். இலங்கையின் அரசியல் தீர்வு விடயத்தில் வட மாகாணத்திற்கான தேர்தல் மிக முக்கியத்துவமிக்கதாக இருக்கின்றது. எதிர்வரும் காலங்களில் நீயா, நானா எனப்போட்டி போட்டுக் கொண்டு, சொல் அம்புகளால் அரசுக்கும் அதற்கு சவாலாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் கடும் சொற்போர் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, இந்தத் தேர்தல் ஊடாக எதனையும் சாதிக்கலாம் என்கிற கனவுடன் குதித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை எதிர்த்து சில பிரதேசங்களிலாவது தன்னுடைய கையை ஓங்கவைக்கும் திருகுதாளங்களை அரசியல் மட்டத்தில் மேற் கொள்ள சில தரப்புகளால் பகிரதப்பிரயத்தனம் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தேர்தல் வன்முறைகள் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளன என செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தத் தேர்தலுல் இலங்கை இராணுவத்தினரின் தலையீடுகள் அதிகரித்துள்ளன என கூறப்பட்டாலும் தேர்தல் நியாயமான முறையில் இராணுவத் தலையீடுகள் அற்ற சூழ்நிலையில் நடத்தப்படும் என்ற உறுதிமொழியை தேர்தல் ஆணையாளர் அண்மையில் யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்திருந்தார். அதேவேளை, தேர்தல் திணைக்களத்தினுடைய பணிகளுக்கு எவ்விதத்திலும் இராணுவத்தின் தலையீடுகளோ, குறுக்கீடுகளோ இருக்கா என்றும் வடமாகாண சபையில் நீதியானதும் நேர்மையானதுமான தேர்தலை நடத்துவது தொடர்பில் அரச அதிகாரிகள் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடப்பட்டது எனவும் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்திருந்தார்.

வடமாகாண சபைத் தேர்தல் குறித்து ஆராயும் நோக்கிலும் தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிக்கும் நோக்கிலும் தேர்தல்கள் ஆணையாளர் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு பயணம் மேற்கொண்டு யாழ். பொது நூலகத்தில் அரச அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் தேர்தலில் போட்டியிடும் தலைவர்கள், கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து கலந்துரையாடிய பின்னர் ஊடகவியலாளர்களிடம் தேர்தல் ஆணையாளர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இது இவ்வாறிருக்க பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் ஏற்படுத்தப்பட்ட மாகாண சபைகளை உருவாக்க உதவிய 13ஆவது சட்டத் திருத்தத்தை நடைமுறைப்படுத்த இந்தியா உறுதியோடு இருப்பதாகக் கூறப்பட்டாலும் அதன் நிச்சயத்தன்மைக்கு எவ்விதத்திலும் உறுதிமொழி வழங்க முடியாத நிலைக்கு இந்தியா தள்ளப்பட்டுள்ளது.

ஏனெனில் இலங்கையில் எதிர்வரும் செப்ரெம்பரில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் இந்தியாவின் நிலைப்பாடு மிகவும் இக்கட்டான நிலையில் காணப்படுவதற்கான சமிக்ஞைகளை அது வெளியிட்டுள்ளது.

கொழும்பில் நடக்கவுள்ள பொதுநலவாயத் தலைவர்களின் மாநாட்டில் இந்தியா எந்த மட்டத்தில் பங்கேற்பது என்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது. பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்ளக் கூடாது என்று தமிழகம் மற்றும் புதுச்சேரி மாநில முதல்வர்களும் பல்வேறு கட்சித் தலைவர்களும் மத்திய அரசை வலியுறுத்தி வருகின்றனர்.

இந்தப் பிரச்சினை குறித்து அண்மையில் இந்திய நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்த இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித், "இது குறித்து அரசு எவ்வித முடிவையும் இன்னும் எடுக்கவில்லை" என்று கூறியிருந்தார்.

இந்தியாவின் நிலைப்பாட்டில் சில வேளைகளில் மாற்றங்கள் காணப்படலாம். இருப்பினும் இலங்கையுடன் சீனாவின் நெருக்கம் மிக அதிகமாகக் காணப்படுகின்ற இக்கால கட்டத்தில் இந்தியாவின் பொருளாதா ரச் சந்தைக்குரிய ஒருதளத்தை மீண்டும் தக்கவைத்துக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை இந்தியா சிலவேளைகளில் நிறைவேற்றுவதற்காக இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்கான வாய்ப்புக்கள் நிறையவே காணப்படுகின்றன.

எது எவ்வாறிருப்பினும் இலங்கையின் பிராந்திய ரீதியில் நடைபெறப் போகின்ற தேர்தலில் முக்கியத்துவம் பெறுகின்ற வட மாகாணசபையின் ஆட்சியதிகாரத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பெற்றுக் கொள்வார்களாக இருந்தால் இந்தியா இலங்கை மீதான அணுகுமுறைகளில் பல மாற்றங்களை ஏற்படுத்த முனையும் என அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சிறிதரன், "முப்பதுக்கும் மேற்பட்ட ஆசனங்களை நிச்சயம் கைப்பற்றுவோம்" என்று உறுதியாகக் கூறியிருந்தார்.

மேலும் அவர், "வட மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் குறித்து இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் எதிர்பார்த்துள்ளன. அந்த நாடுகள் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தமது ஆதரவை வழங்க உள்ள நிலையில் தமிழ் மக்கள் அவற்றைப் புரிந்து கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்குத் தமது முழுமையான ஆதரவை வழங்க வேண்டும். இதன் மூலம் தமிழ் மக்களின் உணர்வுகளை சர்வதேசத்திற்கு எடுத்துக் கூறுவதுடன் மாகாணசபை மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு முழுமையாகத் தீர்வுகாண முடியும் என்பதல்ல. அதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும். அபிவிருத்திகளையும் மேற்கொள்ளக்டியதாக இருக்கும். சபையின் முதலமைச்சராக உலகமெல்லாம் திரும்பிப் பார்க்கும் ஒருவரைத் தெரிவு செய்துள்ளோம். அவர் இந்த மண்ணில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துவார். மக்கள் ஒரு அடக்கு முறையின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அராஜகத்தின் மத்தியிலும் துணிந்து வரவேற்கும் இறுமாப்பும் வீரமும் எமது கட்சிக்குண்டு" என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

அதேவேளை, இன்று இலங்கை வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் இக்காலகட்டத்தில் முக்கியத்துவம் பெறுகின்றார். ஏனெனில் இறுதி போரின் பின்னரான ஜெனிவாகக் களத்தில் இலங்கையை மிகவும் மிரளச் செய்து உலக நாடுகளின் முன்னிலையில் இலங்கையை வெகுவாக சாடியிருந்த ஓர் இரும்புப் பெண்மணி நவிப்பிள்ளை. இலங்கையில் முடிவுற்ற யுத்தத்தின்போது பொதுமக்கள் மீதான மனித உரிமைகள் விடயத்தில் இலங்கையின் ஆட்சியாளர்களை வெகுவாகக் கொதிப்பேற்றிய அந்தப் பெண்மணி இன்று வருகின்றார்.

அவரது அணுகுமுறைகள் எவ்வாறு இருக்கப்போகின்றன என்கிற கேள்விகளும் அவர் செல்லப்போகின்ற - பார்வையிடப்போகின்ற இடங்கள் மற்றும் சந்திக்கப் போகின்றவர்கள் பற்றியெல்லாம் பல்வேறு பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தவகையில் நவநீதம்பிள்ளையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்திப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அண்மையில் தெரிவித்திருந்தார்.

எதிர்வரும் 30ஆம் திகதி தமது கட்சிப் பிரதிநிதிகள் கட்சியின் தலைவர் சம்பந்தன் தலைமையில் நவநீதம்பிள்ளையைச் சந்திப்பார்கள் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

கூட்டமைப்பினர் நவநீதம்பிள் ளையை சந்திப்பதற்கான நேரம் ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் நிகழ்ச்சி நிரலில் இது உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்போது எதிர்வரும் வட மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் மனித உரிமை நிலைமைகள் குறித்து பேச்சு நடத் தப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். வடக்கு மக்கள் பற்றி சிந்திக்காவிட்டாலும் தென் பகுதி மக்கள் வெலிவேரிய ரத்துப்வல சம்பவங்களையாவது கருத்திற்கொண்டு நாடு இராணுவமயப்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

வெலிவேரிய ரத்துப்வல சம்பவத்துடன் தொடர்புபட்ட குடிதண்ணீர்ப் பிரச்சினை மாத்திரமன்றி, இலங்கையில் முஸ்லிம்கள் மீதும் அவர்களது வணக்கஸ்தலங்கள் மீதும் ஏவப்பட்டு வரும் பல்வேறுபட்ட எதிர்ப்பு நடவடிக்கைகள், அடக்குமுறைகள் குறித்தும் மனித உரிமை ஆணையாளரிடம், முஸ்லிம் தலைமைத்துவங்கள் எவ்வாறு பேசப்போகின்றன. இதுதொடர்பில் எந்த முஸ்லிம் கட்சிகளும் கருத்துத் தெரிவிக்கவில்லை. தங்களுடைய கட்சி மாகாணசபைத் தேர்தலில் வெற்றியடைய வேண்டுமென்கிற முஸ்தீபுகளையே மேற்கொண்டு வருகின்றனர். மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை அரசின் கொள்கைகள் ஒருபுறமிருந்தாலும், அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து கடந்த காலங்களில் மனித உரிமை ஆர்வலர்கள் சந்தேகம் தெரிவித்திருந்தனர். இதனை ஒருவாய்ப்பாகக் கொண்டு முஸ்லிம் கட்சிகள், ஆணையாளர் நவநீதம் பிள்ளையைச் சந்திக்கவேண்டியகட்டாயப்பாட்டை அவற்றின் தலைமைகள் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

அண்மையில் நாட்டின் ஜனாதிபதி கம்பளையில் தெரிவித்திருந்த கருத்துக்கள் பல்வேறு வினாக்களை தொடுக்கவைத்துள்ளதாக அவதானிகள் கருதுகின்றனர். ஏனெனில் எவரும் எந்தவொரு விடயத்தையும் பகிரங்கமாக தெரிவிப்பதற்கான உரிமை தற்போது இருப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

அவ்வாறு கருத்துக்களை தெரிவிப்பதாக இருந்தாலும் முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள் உடைக்கப்படுகின்றபோது உடைப்பவர்களையும் முஸ்லிம்களுக்கு எதிராக வசைபாடுகின்றவர்களையும் ஏன் கட்டுப்படுத்த முடியாமல் போகின்றது என மக்கள் கேட்கின்றனர்.

ஜனாதிபதி மேலும் கருத்துரைக்கையில், "இங்கு ஜனநாயகம் இல்லை என்று சிலர் கூறுகின்றனர். வெளிநாடுகளுக்குச் சென்று நான் சர்வாதிகாரி என்று கூறுகின்றனர். ஏன் சர்வாதிகாரி என்கின்றனர் என்று எனக்குத் தெரியவில்லை. இந்த 34 பேர் ஏன் சர்வாதிகாரி என்று கூறுகிறார்கள் என்று நானும் தேடிக் கொண்டிருக்கிறேன். மேடைகளில் இருந்து கொண்டு பகி ரங்கமாக அவர்கள் குறிப்பிடுகின்றனர். நாடு என்ற ரீதியில் தேசிய பிரச்சினை சமயப் பிரச்சினைகள் மற்றும் சமூகப் பிரச்சினைகள் அத்தனைக்கும் தீர்வு காணும் வல்லமை எமக்குள்ளது. இதனால் நாம் அனைவரும் இணைந்து மேற்கொண்டு எதிர்கால பரம்பரையைப் பாதுகாக்க வேண்டும். சகல இன மதங்களும் சமூகங்களும் ஒன்றாகக் கைகோர்த்து எதிர்காலத்தை சிறந்ததாகக் கட்டியெ ழுப்ப வேண்டும்" எனவும் ஜனாதிபதி அங்கு தெரிவித்திருந்தார்.

இத்தகைய கருத்துக்கள் எதிர்வரும் நாட்களில் நடைபெறப்போகும் தேர்தலை முன்னிறுத்திப் பேசப்பட்டாலும் இன்று வருகை தருகின்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கையில் கடந்த காலங்களில் ஏற்பட்ட அவலங்கள், அதன் பின்னரான அபிவிருத்திகள், அரசியல் வாதிகளின் விளக்கங்கள், மக்களின் கண்ணீர் துளிகள் அனைத்தினையும் ஒன்று சேர்ந்து சுதந்திரமாக கருத்துகளை வெளியிட்டால் இலங்கையின் முகத்திரையை கிழித்தெறியலாம்.


மேலும், இலங்கை அரசுக்கு நெருக்குதல் கொடுக்கும் வகையில் நாட்டின் மோசமான நிலைமைகளை தெரிவிப்பாராக இருந்தால் சர்வதேச நாடுகளும் விழிப்படையும். நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது மாநாட் டில் கலந்துகொள்வது குறித்து சர்வதேச நாடுகள் பரிசீலிக்கத் தொடங்கும்? இதனால், இலங்கைக்கு பெரும் நெருக்கடி ஏற்படும். மாநாடும் வெற்றி யளிக்குமா என்பது கேள்விக் குறியாகும். இவற்றை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து ஐந்து ஐந்து



## - திரைவிமர்சனம்



தலைவா பட வெளியீடு பத்து நாள்கள் தாமதமானதை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு திடீர் வரவாக திரைகளில் வந்திருக்கிறது ஐந்து ஐந்து ஐந்து திரைப்படம். தொடர்ந்து தோல்விப் படங்களையே தந்து கொண்டிருந்த பரத் பெரிதும் எதிர்பார்த்திருந்த படம் தான் இது. ஆனால் இந்த எதிர்பார்ப்பை படம் பூர்த்தி செய்திருக்கிறதா என்றால் எடுத்த எடுப்பிலேயே இல்லையென்று தலையாட்டத்தான் முடிகிறது.

ஒரு கார் விபத்தில் சிக்கி கொடூரமாய் அடிபடும் பரத் சுயநினைவை இழப்பது போன்று பரபரப்பாய் தொடங்குகிறது படம். வைத்தியசாலையில் கோமா நிலைக்கு சென்று சிகிச்சை பெற்று குணமாகி வரும் பரத், தன் காதலி மிருத்திகாவை நினைத்து, அவள் நினைவாலேயே வாழ்க் கொண்டிருக்கிறார். மிருத்திகாவை பார்த்துப்பழகிய ஞாபகங்களுக்கு ஆதாரமாக இவர் நினைத்திருந்த அனைத்துமே காணாமல் போய்விடுகின்றன.

“இவை எல்லாம் [illegible]ரமை. மிருத்திகா என்ற ஒரு பெண்ணே இல்லை. விபத்துக்கு பிறகு உன்னுடைய மூளையில் ஏற்[illegible]ங்களால் இப்படி கற்பனையான சில விஷயங்களை உருவாக்கியிருக்கின்றன” என பரத்துக்கு சிகிச்சை அளிக்கும் வைத்தியரும், பரத்தின் அண்ணனான சந்தானமும் சொன்னாலும் அதை பரத்தால் நம்ப முடியவில்லை.

மன உறுத்தல் அதிகரிக்க மிருத்திகா இருந்த இடத்துக்குச் சென்று பார்க்கிறார். அங்கு அவள் இருந்ததற்கான ஆதாரங்கள் [illegible]த்திற்கு கிடைக்கின்றன. கூடவே, ஒரு கொலைகாரக் கும்பலும் பரத்தை துரத்துகிறது. அவர்களிடம் பரத் சண்டை போடுகிறார். இந்தச் சண்டையில் சந்தானம் கொல்லப்படுகிறார்.

இறுதியில், பரத் தன்னை துரத்தும் கொலைகாரக் கும்பல் யார் என்பதை கண்டுபிடித்தாரா? தன்னுடைய காதலியாக நினைத்துக் கொண்டிருக்கும் மிருத்திகா இறந்தாளா? இல்லையா? என்பதே மீதிக்கதை.

இந்தப் படத்தின் ஒட்டுமொத்த வியாபாரமும் பரத்தின் உடற்கட்டை வைத்துத்தான் செய்யப்பட்டிருக்கிறது இவரது உடலில் புடைத்துக் கொண்டு நிற்கும் நரம்புகளும், செதில் செதிலாய் திரண்டு நிற்கும் சதைகளும், இதுவரை தமிழ் சினிமாவில் பார்த்த உடற்கட்டுகளையெல்லாம் மிகவும் சாதாரணமாக்கிவிட்டது. சண்டைக் காட்சிகளில் ஆக்ரோஷத்தையும், காதல் காட்சிகளில் மென்மையையும் மிகச் சரியாக வெளிப்படுத்தியிருக்கிறார் பரத்.

கதாநாயகி மிருத்திகா, இன்னொரு கேரள வரவு. இவருடைய சுவாரஸ்யமான முகமும், முகபாவங்களும் ரசிக்க வைக்கின்றன. இன்னொரு நாயகி எரிக்கா பெர்னாண்டஸ். ஒரு பாடலுக்கு நடனமாடிவிட்டு, அப்படியே சில காட்சிகளில் நடித்துவிட்டு இரண்டாவது நாயகிகளுக்கே உரித்தான இலக்கணத்துடன் இறந்து போகிறார்.

இயக்குனர் சசி, கஜினி மாதிரியான ஒரு படத்தை எடுக்க நினைத்திருப்பார் போல... அதனால்தானோ கஜினியைப் போலவே குறுநேர நினைவாற்றல் கொண்ட நாயகனைப் பற்றிய கதைக்கு தேவையான பல விஷயங்களை மறந்துவிட்டார். ஆங்காங்கே எதிர்பாராத திருப்பங்களை வைத்தால் படத்தை ரசிக்க வைத்துவிடலாம் என்று நினைத்துவிட்டார் போலும்.

படத்தில் சில காட்சிகள் ரசிக்கும்படியாய் இருந்தாலும், அதையே இழுத்தடித்து கடுப்பேத்தியிருக்கிறார்கள்., பரத்துக்கு உடலில் முறுக்கை ஏற்றுவதிலேயே குறிக்கோளாய் இருந்திருக்கிறார் இயக்குனர் சசி என்பது மட்டும் நன்றாக தெரிகிறது. அதற்காக எடுத்திருக்கும் அசாதாரண முயற்சியில் ஒரு பங்காவது கதை, திரைக்கதையில் கவனம் செலுத்தியிருந்தால் ஒரு வேளை நல்லதொரு அதிரடிப்படம் தமிழ் சினிமாவுக்குக் கிடைத்திருக்கும்.

அறிமுக இசையமைப்பாளர் சைமன் இசையில் 'எழவு' என்ற பாடல் மட்டும் கவனத்தை ஈர்க்கிறது. முதல் மழைக் காலம் என்ற பாடல் மெல்லிசையாக தாலாட்டுகிறது. மற்றப் பாடல்கள் சுமார் ரகம்தான். சரவணன் அபிமன்யு ஒளிப்பதிவில் படம் முழுக்க ஆங்காங்கே தன் தனித்திறமையை பதித்திருக்கிறார். நிறைய யதார்த்த மீறல்களுடன் பார்ப்போரின் காதுகளில் கூடைக்கணக்கில் பூச்சுற்ற முனைந்திருக்கிறது ஐந்து ஐந்து ஐந்து படம்.

# தலைமையேற்கும் எண்ணமில்லை



அரசியலுக்கு வரும் எண்ணம் எனக்கு எப்போதுமில்லை. இதையும் மீறி எனது ரசிகர்கள் அரசியலில் ஈடுபட்டால் ரசிகர் மன்றம் கலைக்கப்படும் என்று நடிகர் விஜய் திடீர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது ருவிட்டர் தளத்தில், எனக்கு அரசியலுக்கு வரும் எண்ணம் இல்லை, தயவு செய்து படம் சம்பந்தப்பட்ட கட் அவுட்'களில் அரசியல் சம்பந்தப்பட்ட வசனங்கள் எதையும் போட வேண்டாம். இதையும் மீறி ரசிகர்கள் அரசியலில் ஈடுபட்டால் குறித்த மன்றம் கலைக்கப்படும். இனி ரசிகர் மன்ற விஷயங்களில் நேரடியாக நானே சம்பந்தப்படுவேன். என் தந்தையோ வேறு யாரோ மன்ற விஷயங்களில் தலையிட மாட்டார்கள் என்று கூறியுள்ளார்.

விஜய்யின் சமீபத்திய 'தலைவா' திரைப்படம் தமிழகத்தில் வெளியாவதில் ஏற்பட்ட சிக்கலே அவரை இவ்வாறு கூற வைத்துள்ளதாக தெரிகிறது. 'தலைவா' படத்தின் விளம்பரத்தின் கீழ் 'Time to lead' (தலைமையேற்கும் தருணம்) என்று போடப்பட்ட வாசகமும், அப்படத்தில் விஜய் அரசியலுக்கு வர மக்கள் அழைப்பதுபோன்று இடம்பெற்ற சில காட்சிகளும் ஆளும் தரப்பை வெகுவாக ஆத்திரப்பட வைத்ததாகவும், அதன் காரணமாகத்தான் படத்திற்கு மறைமுக முட்டுக்கட்டைகள் விழுந்ததாகவும் கூறப்பட்டது.

இந்த நிலையில் படம் தமிழகத்தில் வெளியாவதில் ஏற்பட்ட தடங்கல், நடிகர் விஜய்க்கு கடும் நெருக்கடியையும், மன உளைச்சலையும் ஏற்படுத்தியதாகவும், இதனால் கடைசியில் ஆட்சி மேலிடத்திடம் சரணாகதி அடைந்ததாகவும், அதன் காரணமாவே படத்தின் விளம்பரத்தின் கீழ் 'Time to lead' (தலைமையேற்கும் தருணம்) என்று போடப்பட்ட வாசகம் நீக்கப்பட்டதோடு, முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆட்சியை புகழ்ந்து அறிக்கை ஒன்றும் விஜய்யிடமிருந்து பறந்து வந்ததாகவும் கூறப்பட்டது.

இதனிடையே தற்போது ஏற்பட்ட சிக்கல், இனி விஜய்யின் அடுத்த படங்களுக்கும் வராமல் இருக்க விஜய், தம் மீதான அரசியல் பிம்பம் குறித்து தெளிவான நிலையை அறிவிக்க வேண்டும் என்று தயாரிப்பாளர்கள் மற்றும் விநியோகத்தர்கள் தரப்பிலிருந்து மட்டுமல்லாது, ஆளும் தரப்பிலும் [illegible]றும், இதன் காரணமாகவே இத்[illegible] வெளியிட்டிருக்கலாம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித குலமும் தமிழ்த் தேசியமும்

## மதவாத தேசியம்

*பழநெடுமாறன் நீண்ட காலமாகத் தமிழ்த் தேசியத்துக்காகக் குரல் கொடுப்பவர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தீவிர ஆதரவாளர். விடுதலைப் புலிகள் இயக்கம் வன்னியில் போராட்டங்களை நடத்தியபோது தமிழகத்திலிருந்து வந்து தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்துச் சென்றவர். இன்று வரைக்கும் ஈழத் தமிழர்களின் விடுதலைக்காக தமிழகத்தில் இருந்தபடி தளர்வற்று தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருபவர். தமிழ்த் தேசியத்தை மனித குல வரலாற்றுடன் தொடர்புபடுத்தி அவர் எழுதும் புதிய தொடர் இது. பல நூல்களை, ஆய்வுக் கட்டுரைகளைப் படித்த பின்னர் அவர் இந்தத் தொடரை எழுதுகிறார். "தமிழினம் ஒரு தொல்லினம் மட்டுமல்ல செழுமையான பண்பாட்டுப் பரப்பை உருவாக்கி அதன் மீது ஒரு சீரிய நாகரிகத்தையும் உருவாக்கி உலகனைத்தும் தனது இருப்பை நிலை நிறுத்தி இருக்கும் ஓர் இனம் என்பதால் தமிழ்த் தேசியத்தை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இன்று தேசிய இனங்களின் வாழ்வும் சுயநிர்ணய உரிமையும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றன. இந்த நிலையில் தமிழினத்தின் தொன்மை குறித்தும், அது தேசிய இனமாக இயங்கி வந்திருப்பது குறித்தும் இந்தத் தொடர் விளக்குகிறது.*





இந்தியாவில் மதவாத தேசியம் பிறந்ததற்கான அடிப்படைக் காரணங்களையும் அதற்கு வித்திட்டவர்கள் யாரென்பதையும் இப்போது பார்க்கலாம்.

1923 ஆம் ஆண்டில் 'இந்துத்வா- இந்துயார்?' எனும் தலைப்பில் ஒரு சிறு நூலை வி.டி.சாவர்க்கார் வெளியிட்டார். இந்துத்வா கருத்து முதல் முதலாக அப்போதுதான் விதைக்கப் பட்டது.

இந்தக் கருத்து பிறந்ததற்குப் பிறகே 1925 ஆம் ஆண்டில் ஆர்-எஸ்-எஸ். இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1937 ஆம் ஆண்டு டிசெம்பர் 30 ஆம் திகதி நடைபெற்ற இந்து மகாசபை மாநாட்டில் தலைமை உரை ஆற்றும்போது சாவர்க்கார் பின்வருமாறு குறிப்பிட்டார். 'இந்தியாவில் இந்துக்கள், முஸ்லிம்கள் என இரு வெவ்வேறு தேசிய இனத்தவர் வாழ்கின்றன.

சாவர்க்கார் இவ்வாறு பிரகடனம் செய்த மூன்று ஆண்டுகள் கழித்து 1940 ஆம் ஆண்டில் முஸ்லிம் தலைவரான முகமது அலி ஜின்னா இரு இனக் கொள்கையை ஏற்று "முஸ்லிம்கள் தனித் தேசிய இனம்" என அறிவித்தார்.

ஆக மதவாத தேசியத்தை முன்மொழிந்தவர் சாவர்க்கார் என்பதும் வழி மொழிந்தவர் ஜின்னா என்பதும் வரலாற்றுப் பூர்வமான உண்மையாகும்.

1939 ஆம் ஆண்டில் ஆர்.எஸ்.எஸ். தலைவரான கோல்வால்கர் "நாம் அல்லது நமது தேசியத் தன்மையின் விளக்கம்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட பிரகடனம்தான் இந்து ராஷ்டிரா என்ற பாசிசத் தத்துவமாகும். இந்தநூல் இந்தியாவில் வாழும் இந்துக்களைத் தவிர மற்றவர்கள் அந்நியர்கள்" எனத் திட்டவட்டமாக வரையறை செய்தது. அதே நூலில் அவர் மேலும் குறிப்பிடுவதாவது "இந்தியாவில் வாழும் அந்நியர்களுக்கும் இருவழிகள் தான் உள்ளன. இந்து தேசிய இனத்துடனும் அதன் கலாசாரத்துடனும் இரண்டறக் கலந்து விடுவது (அ) இந்து தேசிய இனத்தின் கருணைக்கு உட்பட்டு அவர்கள் அனுமதிக்கிற காலம் வரையில் இங்கு வாழ்வது: இந்து தேசிய இனம் விரும்பாத போது நாட்டை விட்டு வெளியேறி விடுவது: இதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. நாம் மிகப் பழைமையான இனத்தைச் சேர்ந்தவர்கள். உலகின் மிகப் பழைமையான பிற இனத்தவர், அந்நிய இனங்கள் பற்றிய பிரச்சினையில் எத்தகைய தீர்வு கண்டிருக்கிறார்களோ? அதே மாதிரியான தீர்வை நமது நாட்டிலும் நாம் காண வேண்டும். ஜேர்மனியில் தங்கள் ஆரிய இனத்தின் தூய்மையையும், கலாசார மேன்மையையும் பாதுகாப்பதற்காக யூத இனத்தவர் திட்டமிட்டு ஒழிக்கப்பட்டார்கள். இந்துஸ்தானைச் சேர்ந்த நமக்கு இது முன்மாதிரியான படிப்பினையாகும். இதைப் பின்பற்றி நாம் ஆதாயமடைய வேண்டும்"

ஆர்.எஸ்.எஸ்.தலைவர் கோல்வால்கர் போற்றிப் பின்பற்றும் தலைவர் இட்லரே ஆவார். இந்து மகா சபையின் தலைவர் டாக்டர் மூஞ்சே முன்மாதிரியாகக் கொண்ட தலைவர் முசோலினியே அவர். 1920 ஆம் ஆண்டுகளில் ஆர்.எஸ்.எஸ்.இயக்கத்தை உருவாக்கியதில் முக்கியப் பங்காற்றியவர் மூஞ்சே. அந்த இயக்கத்தை அமைப்பு ரீதியாகக் கட்டி எழுப்பியவர் கோல்வால்கர். அந்த இயக்கத்தின் தத்துவ ஆசிரியர் சாவர்க்கார். கிட்லரையும், முசோலினியையும் முன் மாதிரியாகக் கொண்டு இந்து பாசிச இயக்கத்தை உருவாக்கியவர்கள் இந்த மூவருமே ஆவார்கள்.

ஜேர்மனியில் மிகப் பெரும்பான்மையான மக்கள் ஜேர்மானியர். ஜேர்மானிய இனம் உலகிலேயே மிக உயர்ந்த ஆரிய இனம் என்ற கற்பனை வாதத்தின் அடிப்படையில் அவர்களுக்கு வெறியூட்டி சிறுபான்மையினரான யூதர்களை ஒழித்துக் கட்டுவது சுலபமாக இருந்தது. அதைப் போல இந்தியாவில் பார்ப்பனிய மேலாதிக்கத்தை நிலை நிறுத்த சாவர்க்கார் விரும்பினார். ஆனால் இங்கு பார்ப்பனர்கள் சிறுபான்மையினர். பெரும்பாலான மக்கள் பார்ப்பனிய மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்ற காரணத்தினால் மிகத் தந்திரமாகச் செயற்பட்டார்.

மனுதர்ம சாத்திரத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பார்ப்பனியத் தத்துவத்துக்கு இந்துத்வா என்ற பெயரைச் சூட்டினார்.

ஒரு கலாசாரம், ஒரு நாடு, ஒரு தேசிய இனம் என்பதைக் குறிக்க கலாசார தேசியம் என்ற வார்த்தையை இந்துத்வா வாதிகள் கையாண்டனர்.


"பல கலாசாரம், பலமொழிகள், பல மதங்கள் கொண்ட பன்முகத்தன்மையும், மதச்சார்பற்ற தன்மையும் கொண்ட ஜனநாயகக் கூட்டரசு நாடே இந்தியாவாகும்" என்று நமது அரசியலமைப்புச் சட்டம் மிகத் தெளிவாகக் கூறுகிறது.

ஆனால் சங்கப் பரிவாரத்தின் கலாசாரத் தேசியம் இந்திய அரசியலமைப்புச் சட்டம் கூறும் கருத்தை அடியோடு அறுக்கிறது. அதற்கு முற்றிலும் எதிரானது. பல கலாசாரம், பல மொழிகள், பல மதங்கள் என்ற பன்முகத் தன்மையை மறுத்து 'இந்துத்வ கலாசாரம்' என்னும் ஒரு முகத் தன்மையை வலியுறுத்துகிறது. மதச் சார்பற்ற தன்மையை அடியோடு மறுத்து இந்து மதவாதத்தைப் புகுத்துகிறது. ஜனநாயகக் கூட்டாட்சிக்குப் பதிலாக இந்து சர்வாதிகார ஆட்சியை நிறுவ முற்படுகிறது. எனவே இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இந்துத்வா எதிரானது ஆகும்.

இந்துத்வ வாதிகளின் இந்தப் பிரசாரத்தை முறியடிக்க இந்திய தேசிய வாதிகள் முன்வரவில்லை. காங்கிரசுக் கட்சியின் தலைவர்களாக இருந்த திலகர், அரவிந்தர், லாலா லஜபதிராய், பண்டித மதன் மோகன மாளவியா போன்றவர்கள் இந்துப் பழைமைவாதக் கருத்தோட்டம் கொண்டவர்களாக இருந்தார்கள். மகாராஷ்டிரத்தில் முஸ்லிம்களின் மொகரம் பண்டிகைக்கு எதிராக விநாயகர் விழாவையும், சிவாஜி விழாவையும் கொண்டாட திலகர் வழிகாட்டினார். லாலாலஜபதி ராயும், பண்டித மதன் மோகனமாளவியாவும் அகில இந்தியக் காங்கிரஸுத் தலைவர்களாக மட்டும் இருக்கவில்லை. இந்து மகா சபைத் தலைவர்களாகவும் விளங்கினார்கள். மதவாத அரசியலுக்கும் இவர்களே வித்திட்டார்கள். இந்து முஸ்லிம் பிரச்சினையைப் பெரிதாக்கியவர்களும் இவர்களேயாவர்.

ஜின்னாவின் மதவாத அரசியலின் தொடக்கக் காலத்தில் பெரும்பாலான முஸ்லிம்களின் ஆதரவு அவருக்குக் கிடைக்கவில்லை. இது குறித்து வரலாறு கூறும் சில உண்மைகளை நாம் இப்போது பார்க்கலாம்.

"கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் புனித தலங்களாக விளங்கும் ஜெருசலேம், மெக்கா போன்றவை இந்தியாவிற்கு வெளியில் இருப்பதால் அவற்றை இந்திய கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் புறக்கணிக்க வேண்டும்" என ஆர்.எஸ்.எஸ். வற்புறுத்துகிறது. அந்நிய நாட்டிலுள்ள புனித பூமியை வழிபடுபவர்கள் அந்நியர்களே எனத் திட்ட வட்டமாக வரையறுக்கின்றது. இவ்வாறு வெறித்தனமாகக் கூறும் இந்து தத்துவா வாதிகள் ஒரு உண்மையை மறந்து விட் டார்கள். இந்துக்களின் பெரிய கடவுளான சிவபெருமான் உறையும் கைலாசம் இந்தியா வுக்கு வெளியே சீனாவில் உள்ளது. எனவே அந்நிய நாட்டில் புண்ணிய பூமியைக் கொண்ட இந்துக்களும் அந்நியர்களாகி விடுவார்கள் என்ற உண்மையை உணராது பிற மதத் தினரக்கு எதிரான வெறுப்பை வளர்க்கிறார்கள்.




## பிறந்தது என் குற்றம்


பையனுக்கு மூன்று வயதே வரவில்லை பாவம்
பிஞ்சுக்கும் ஒரு வகுப்பாம், படிப்பாம்
பத்து மாதம் சுமந்து பெற்ற பிள்ளைக்கு
பால்குடிக்கும்போதே உலகம் புரிகிறது:

தாயுனக்கு வளர்ந்து எல்லாம் தருவேன், அம்மா!
தயவு செய்து எனக்கு அன்பைக் காட்டுங்கள்,
தடுமாறி விழுந்திடுவேன், போல இருக்கு அம்மா
தக்க வயது வரட்டுமே நான் படிக்கிறேன்

வாயுனக்குக் கூடிப்போய்ச்சுது! வயதுனக்கு
வரவில்லை, உன்னைச் சமாளிக்க முடியாதடா!
வடிவான பள்ளி, வாகான ஆசிரியர்கள் பார்!
வீட்டிலே உங்களை வைத்திருக்க இயலாது

போயுனக்கு விளங்க வைக்க முடியாதம்மா!
பிறந்தது என் குற்றம், பிறக்கப்போகும் அடுத்த
[illegible]
[illegible]

சிவஞானராஜா, கொக்குவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிங்களவர்களால் தமிழர்களை ஒரு போதும் அடக்க முடியாது. அவர்கள் அடங்கிப் போகவும் மாட்டார்கள். சிங்களவர்களுக்குப் பயந்து ஓடி விடவும் மாட்டார்கள். அதிலும் யாழ்ப்பாணத் தமிழர்களை வெல்லவே முடி யாது. அதனால் தான் அவர்களை அடக்கி ஒடுக்க முனைகின்றார்கள். தமிழர்களுக்குத் தனி நாடே தீர்வாகும்." - சிங்கப்பூர் சிற்பி.

திஸ்ஸ விதாரண போன்றவர்களை நம்பித் தமிழினம் தனது நிலையைத் தமிழர் தரப்பிடமிருந்து மாற்றிக் கொண்டு சிங்களத் தலைமையை ஏற்றுக் கொள்ள வேண்டு மென்பது என்றுமே எடுபடாது என்பதே தமிழ் மக்களது நிலையாகும்

# தமிழ் மக்களும் தடம்புரண்ட இடதுசாரிகளும்



நப்பின்னை

தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிளையும் அரசு மொழிகளாக்க வேண்டும் என்று நாம் கோரியதால் எம்முடன் இருந்த சிங்கள மக்கள் சிங்களம் மட்டுமே அரசு மொழியாக்கப்படவேண்டும் எனத் தெரிவித்த சுதந்திரக்கட்சியுடன் இணைந்தனர் என்று கூறியுள்ளார் திஸ்ஸ விதாரண. மேலும், தமிழர்களுக்கு உரிமை வேண்டும் என்று குரல் கொடுத்தால்தான் சிங்கள மக்கள் இடதுசாரிகளை விட்டு விலகி தனிச் சிங்களச சட்டத்தைக் கொண்டு வந்த சு.கட்சியை ஆதரித்தார்கள் என்றும் கூறியுள்ளார் அவர். (ஆதாரம் 2013.08.14 சுடர்ஒளி நாளிதழ்)

இவரது இக்கூற்றிலே சில முரண்பாடுகளும் புதைந்துள்ளன. அதேபோன்று சில வினாக்களும் புதைந்துள்ளன. முதலாவது வினா தமிழ் மக்களுக்கு உரிமை வேண்டும் என்று கோரியது தவறு என்று தற்பொழுதுதான் தெரிகின்றதா? சமத்துவம், சம தர்மம் என்று பேசியவர்கள் தமிழ் மொழிக்குச் சம உரிமை கேட்டது பிழை என்று தற்பொழுதுதான் புரிந்து கொண்டனரா? அதனாற்றான் 1964இல் தாங்களும் சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஆட்சியில் பங்கு கொண்டார்களா? இது மட்டுமல்ல சாதாரண சட்டமாக இருந்த சிங்களம் மட்டும் என்றதை அரசமைப்பில் நிரந்தரச் சட்டமாக்கி சிங்கள பௌத்த நாடாக இலங்கைத் தீவை அரசமைப்பில் வரையறை செய்த பெருமையைக் காலம் சென்ற கொல்வின் ஆர்.டீ.சில்வா (ல.ச.ச.க) அரசமைப்பு அமைச்சராக இருந்து செய்து முடித்தார் என்று பெருமைப் படுகின்றாரா திஸ்ஸ விதாரண. இந்த வினாக்கள் ஒருபுறம் இருக்க வேறொரு வினா இதனை விட மேலோங்கி இருக்கிறது.

1964இல் தமிழர்கள் பற்றிய தங்கள் கொள்கையைக் கைவிட்ட பின்னர் இவர்கள் கக்கிய இனவாதம் இவர்களது வளர்ச்சியை அதிகரித்ததா?

லங்கா சமசமாசக் கட்சியின் தோல்விக்குத் தமிழ் மக்களின் கோரிக்கையை ஒரு கொள்கையாக ஏற்றது தான் காரணம் என்பது பொருத்தமற்ற கூற்றாகும். 1958இல் பண்டாரநாயக்காவால் கொண்டு வரப்பட்ட தமிழ் மொழிகள் விசேட சரத்துக்கள் சட்டத்துக்கு 1966இல் சில விதிகளை வகுத்து அதை அன்றைய அரசு நடைமுறைப் படுத்த நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறை வேற்றிய பொழுது அதை எதிர்த்துக் கொள்ளுப்பிட்டிச் சந்தியில் "தோசை, வடை, நல்லெண்ணெய்" என்று குரல் எழுப்பித் தமிழ் மக்களுக்கெதிரான பேரணி நடத்திய பின்பு ல.ச.ச.கட்சி வளர்ச்சி கண்டதா? 1970இல் தமிழ் மாணவர்களின் உயர் கல்வியைப் பாழடிக்கும் தரப்படுத்தலை ஆதரித்ததனால் ல.ச.ச. கட்சி வளர்ச்சி கண்டதா? 1972 குடியரசு அரசமைப்பைத் தயாரித்துத் தமிழ் மக்களை நிரந்தரமாக இரண்டாந்தரக் குடிமக்களாக அடிமைப்படுத்தியதனால் சிங்கள மக்கள் உங்களை ஆதரித்தார்களா? இல்லையே. அப்படியானால் உங்கள் கூற்று முற்றிலும் அடிபட்டல்லவா போய்விட்டது.

உண்மை என்னவெனில் தமிழர்கள் தங்கள் தாயகம் தவிர்ந்த இதர பகுதிகளில் ல.ச.ச. கட்சியை ஆதரித்தார்கள். அதனால்தான் பல தொகுதிகளில் ல.ச.ச.கட்சி வெற்றி பெற முடிந்தது. தமிழ் வாக்காளர்களின் ஆதரவால்தான் 1956இல் இரண்டாவது பெரிய கட்சியாக வந்து நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக கலாநிதி என்.எம்.பெரேரா வர முடிந்தது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்த கட்சி, சிங்களத்தை அரசு மொழியாகக் கொண்டு வருவேன் என்று வாக்குறுதியும் அளித்த கட்சி. ஆனால் அந்தத் தேர்தலில் அதனால் நான்காவது இடத்தைத்தான் பெற முடிந்தது. என்றால் திஸ்ஸவின் கருத்து போலி என்று தெரிகிறது அல்லவா?

லங்கா சமசமாசக் கட்சி , கொம்யூனிஸக் கட்சி, பிலிப் குணவர்த்தன வின் மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய மூன்றும் இணைந்து இடது சாரி ஐக்கிய முன்னணியைத் தோற்றுவிக்க இருந்த காலம் 1964இன் இறுதிப் பகுதியாகும். இந்த இடதுசாரி ஐக்கிய முன்னணி 1965இல் பொதுத் தேர்தலைச் சந்திக்கும். கணிசமான வெற்றி யடையும் எனப் பலரும் எதிர்பார்த் திருந்தனர். ஆனால் கண்டியில் அநு! பண்டாரநாயக்காவுடன் கலாநிதி என்.எம்.பெரேரா கிரிக்கெட் விளையாடியதுடன் அந்தக் கூட்டணிக்கு முற்றுப்புள்ளி வைத்து ஐக்கிய முன்னணி என்ற பெயருடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்தார். கொம்யூனிஸ்க் கட்சியும் இதில் இணைந்தது. ஆட்சியிலும் பங்கு கொண்டு அமைச்சரானார்கள்.

தொழிலாளர் வர்க்கத்துக்காக இருபத்தொரு கோரிக்கைகளை வைத்துப் போராடப் போவதாகக் கூறியவர்கள் அந்த இருபத்தொரு கோரிக்கைகளையும் கைவிட்டனர். இதிலிருந்து தொழிலாளர்களும் இவர்களைக் கைவிட்டனர்.

முதலில் தமிழினத்தால் கைவிடப் பட்டவர்கள். பின்னர் தொழிலாளர் வர்க்கத்தாலும் கைவிடப்பட்டனர். பெரும்பான்மைக் கட்சியுடன் சேர்ந்த சிறுபான்மை ஆதரவுக் கட்சி அப்படியே தன்னை அழித்துக் கொண்டது. பல இடதுசாரித் தலைவர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் உறுப்பினர்களாகி அமைச்சர்களானார்கள்.

யதார்த்த நிலை இவ்வாறு இருக்கும் பொழுது தமிழ் மக்களை ஆதரித்ததால்தான் சிங்கள மக்கள் தங்களை ஏற்கவில்லை என்று கூறுவது நகைப்புக்கு இடமானதாகும்.

கொள்கைகள், இலட்சியங்கள் மேல் உண்மையான பற்றும், உறுதியும் இருந்தால் அதை மக்கள் முன் தளராது எடுத்துச் சென்று பரப்புரை செய்ய வேண்டும். அதுதான் தூய்மையான இலட்சியங்களைக் கொண்டவர்களின் பண்பாகும். ல.ச.ச. கட்சியினர் மொழிக்குச் சம உரிமை கோரினார்களேயன்றி சுயநிர்ணய உரிமை பற்றியோ தாயகக் கோட்பாடு பற்றியோ திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற மண் பறிப்புப் பற்றியோ என்றும் கவலைப்பட்டது கிடையாது. மொழி பற்றிய கொள்கைகளையும் கைவிட்டவர்கள் இவர்கள். இவர்களது இந்த வகையான போக்கால் தான் சர்வதேச சோசலிஷ அமைப்பான 'நான்காவது அகிலத்தில்" இருந்தும் ல.ச.ச. கட்சியினர் நீக்கப்பட்டார்கள்.

இங்கே கவனிக்கப்பட வேண்டியவர் கலாநிதி விக்ரமபாகு கருணரத்தினாவாகும். எந்த இடர் வந்த போதும் தமிழ் மக்களின் தேசியத்தையும் சுயநிர்ணய உரிமையையும் வலியுறுத்தி இன்று வரை உறுதியாக நிற்கின்றார். தனக்கு ஆதரவு கிடைக்கவில்லை என்ற காரணத்தைக் காட்டி அவர் தனது இலட்சியத்திலிருந்து மாறிவிடவில்லை. உறுதியுடன் இருக்கிறார். இலட்சிய உறுதியும் கொள்கைத் தூய்மையும் இவரிடம் உள்ளது.

எனவே திஸ்ஸ விதாரண போன்றவர்களை நம்பித் தமிழினம் தனது நிலையைத் தமிழர் தரப்பிடமிருந்து மாற்றிக் கொண்டு சிங்களத் தலைமையை ஏற்றுப் பின் செல்ல வேண்டும் என்ற கருத்து என்றுமே எடுபடாது என்பதை அவர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இங்கே மேலும் ஒரு உண்மை தெளிவாகின்றது. தமிழரசுக் கட்சி அன்றைய விடுதலைக்கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பன தங்கள் கருத்துக்களைச் சிங்கள மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும். அவர்கள் மனங்களை மாற்றவேண்டும் என்று பலரும் கூறி வருகின்றனர். 1956 தொடக்கம் இன்று வரை பலரும் தமிழர் தரப்பின் மீது கூறும் குற்றச்சாட்டு இதுவாகும். இது உண்மையில் குற்றச்சாட்டல்ல. இது முழுக்க முழுக்கக் குறை [illegible] மான செல்வாக்குடன் மிளிர்ந்த கட்சியின் தலைவர்களான கலாநிதி என்.எம். பெரேரா, கலாநிதி கொல்வின் ஆர்.டீ சில்வா, பேர்னாட் சொய்சா அனில் முனசிங்கா பீற்றர் கெனமன் டொறிக் டீ சூசா போன்றவர்களாலேயே சிங்கள மக்களிடம் கருத்து மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை என்று திஸ்ஸ விதாரணவே ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்துள்ளார். இந்த நிலையில் தமிழர் தரப்பால் சிங்கள மக்களிடையே கருத்து மாற்றத்தை ஏற் படுத்த முடியுமா?

அதனாற்றான் தமிழினம் தனித்து நின்று தனது வாழ்வுரிமைக்காகப் போராடுகின்றது. உலக்கை தேய்ந்து உளிப்பிடியானது போன்று என்று கூடச் சொல்ல முடியாதளவு தேய்ந்து போன ல.ச.ச. கட்சி தனித்துத் தேர்தலில் போட்டியிட்டு ஒரு உறுப்பினரைக் கூட நாடாளுமன்றத்துக்கு அனுப்ப முடியாது. அப்படிப்பட்ட திஸ்ஸ விதாரணவின் கட்சி தமிழ் மக்கள் என்ன செய்ய வேண்டும் என்று கூறுவது மிகவும் நகைப்புக்குரியது. இவருக்குரிய பதிலைச் சிங்கப்பூரின் சிற்பியும், முன்னாள் பிரதமருமான லீ குவான் யூ மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார்.

"சிங்களவர்களால் தமிழர்களை ஒரு போதும் அடக்க முடியாது. அவர்கள் அடங்கிப் போகவும் மாட்டார்கள். சிங்களவர்களுக்குப் பயந்து ஓடி விடவும் மாட்டார்கள். அதிலும் யாழ்ப்பாணத் தமிழர்களை வெல்லவே முடியாது. அதனால்தான் அவர்களை அடக்கி ஒடுக்க முனைகின்றார்கள். தமிழர்களுக்குத் தனி நாடே தீர்வாகும்." (சுடர் ஒளி 2013 08 13)

உலகத்திலே வாழ்வுரிமைக்காகப் போராடிய, போராடும் இனங்கள் தமது உரிமைகளை வேறொரு இனம் மீட்டுத்தரும் அதுவும் ஆக்கிரமிக்கும் இனம் மீட்டுத்தரும் என்று நம்பியதாக வரலாற்றில்லை. எனவே தமிழினம் தனது உரிமையை நிலைநாட்ட ஆக்கிரமிப்பாளர்களை நாட வேண்டும் என்ற திஸ்ஸ விதாரணவின் கூற்று என்றுமே ஏற்கப்படமுடியாததாகும். 2009இல் ஏற்பட்ட பின்னடைவு தமிழ் மனங்களைப் பேதலிக்கச் செய்யாது என்பதையே லீ குவான் யூ வலியுறுத்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சந்துரு  சேரன்  தாமினி

# மூன்று பேர் ஒரு காதல்

## சேரனின் மகள் மீண்ட கதை

ஓளரீஷ்

ஒரு வழியாகத் தனது மகளை காதல் வலையில் இருந்து மீட்டெடுத திருக்கிறார் சேரன். தமிழகத்தில் சில வாரங்களுக்கு முன்னர் வரை தமிழகம் இளவரசன - திவ்வியா காதல் கதையால பற்றி எரிந்தது. இருவேறு சாதிக் குழுமங்களைச் சேர்ந்த திவவியாவையும் இளவரசனையும் பிரிக்க பெரும் சதியே நடந்தது. திவ்வியா உயர் சாதி என்பதால் அவரது உறவினர்கள் இளவரசனோடு இணைந்து வாழ திவ்வியாவை அனுமதிக்கவில்லை. என்றாலும் எதிர்ப்புகளை மீறி இளவரசனோடு திவ்வியா வாழச் சென்றதால் அவளது தந்தை தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

என்றாலும் அதன் பின்னர் நடந்தேறிய திருப்பங்களால் திவ்வியாவும் இளவரசனும் பிரிந்தார்கள்: பிரிக்கப்பட்டார்கள். கடையில் ரயிலில் மோதி தன்னை தானே இளவரசன் அழித்துக் கொண்டதோடு அந்தக் காதல் கதைக்கு கருமையான முற்றுப்புள்ளி விழுந்தது

இளவரசன் - திவ்வியா காதல் விவகாரம் பூதகாரமாக எழுந்த சமயத்தில் பல்வேறு ஊடகங்களிலும் தோன்றி அவர்களின் காதலுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தவர் சேரன்.

வெறுமனே கருத்துச் சொல்லல் என்ற நிலையில் மாத்திரமல்லாமல், தனது படைப்புகளிலும் காதலைப் பற்றி உயர்வாக வெளிப்படுத்தி வந்தவர் சேரன். அவரது முதலாவது திரைப்படமான பாரதிகண்ணம்மா முதல் கடைசியாக இயக்கிய பொக்கிஷம் வரை காதலின் பல்வேறு பரிமாணங்களையும் திரையில் காண்பித்தவர். அத்தோடு சாதி என்ற கொடுந்தீயால் காதல் எரியூட்டப்படுவதை வெறுத்தவர் இதனால் தான் சாதி வெறியில் வளர்ந்த பா.ம.க. உள்ளிட்ட கட்சிகளின் சுயநல அரசியலில் சிக்கி, இளவரசன் - திவ்வியா காதல் கருகக் கூடாது என்பதற்காக ஊடகங்கள் மூலம் கருத்துச்சொன்ன சேரனுக்கு இதேபோன்ற ஒரு நிலை தனது வாழ்விலும் ஏற்படும் என்று தெரிந்திருக்கவில்லை.

தாமினி. சேரனின் செல்லப்பிள்ளை. அதுவும் அப்பா என்றால் அவளுக்கு உயிர். சேரனும் அப்படித் தான். வீட்டில இருக்கும் சமயங்களில் எல்லாம் மகள் மீது பாசத்தை பொழிந்து தள்ளி விடுவார். இப்படிப்பட்ட தந்தை - மகள் பாசப் பிணைப்பை அறுக்க எழுந்தது ஒரு காதல்.

சந்துரு என்ற இளைஞனை தாமினி காதலிக்கத் தொடங்கினாள். எனினும் இந்த விவகாரம் சேரனின் காதுகளுக்கும் எட்டியது. ஆனால் சந்துருவைப் பற்றி விசாரித்த சேரனுக்கு அதிர்ச்சியே மிஞ்சியது. தாமினி நினைப்பது போன்று சந்துரு பத்தரைமாற்றுத் தங்கம் அல்ல. அவன் ஒரு துருப்பிடித்த தகரம் தான். என்ற விடயம் சேரனுக்குத் தெரிய வந்தது.

அப்படி என்னதான் சந்துருவைப் பற்றி சேரன அறிந்து கொண்டார்? என்பதை ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் வெளிச்சம் போட்டுக் காட்டினார் சேரனின் நண்பரும் இயக்குநருமான அமீர்.

"சந்துருவின் குடும்பம் முழுக்க முழுக்க பணம் பறிக்கும் கும்பல். இதையே அவர்கள் வாடிக்கையாக வைத்திருக்கிறார்கள். சந்துருவின் அக்காவான பத்மா என்பவர் ராமநாதபுரத்தை சேர்ந்த ஏற்கனவே திருமணமாகியிருந்த இலியாஸ் என்பவரோடு ரகசியமாக குடும்பம் நடத்தி வந்துள்ளார். பின்னர் ஒரு கட்டத்தில் அவரை ஏமாற்றி அவரிடமிருந்து 200 பவுணுக்கும் அதிகமான நகை, ஆந்திராவில் வீடு, லட்சக்கணக்கில் பணம் என்பவற்றை சுருட்டிக் கொண்டு அவரைக் கைகழுவி விட்டார்.

இலியாஸை தமது வலையில் வீழ்த்தி பத்மாவை அவர் திருமணம் செய்வதற்காக சந்துருவின் குடும்பத்தைச் சேர்ந்த எல்லோரும் முஸ்லிம்களாக சிறிது காலம் மதம் மாறி இருந்தனர். தாங்கள் நினைத்தபடி இலியாஸை ஏமாற்றி அவரின் சொத்தை கைக்குள் போட்டுக் கொண்டதும் பழைய படி இந்துக்களாக மாறிவிட்டனர்.


மேலும் சந்துரு மானாமதுரையில் ஒரு பணக்கார பெண் ஒருவரை முதலில் காதலிப்பது போல் நடித்து ஏமாற்றி பணம் பறிக்கும் செயலில் ஈடுபட்டிருந்தார். இதையறிந்த அந்தப் பெண்ணின் உறவினர்கள் சந்துருவைத் துரத்தியடித்து விட்டனர். சந்துருவின் குடும்பமே ஒரு மோசடிக் கும்பல் தான். சந்துருவினதும் அக்காவினதும் லீலைகள் சில வருடங்களுக்கு முன் புலனாய்வு இதழ் ஒன்றில் வெளியாகி இருந்தன." இதுவே அமீர் வெளிப்படுத்திய தகவல்கள்.

என்ன தான் காதலின் காவலனாக இருந்தாலும் கடைந்தெடுத்த ஒரு கயவன் கையில் தன் மகளை தாரை வார்த்துக்கொடுக்க எந்தத் தந்தைக்குத் தான் மனம்வரும். இதனால் தாமினியின் காதலை பிரிக்க சேரன் முடிவெடுத்தார். அடியாள்களை வைத்து சந்துரு மிரட்டப்பட்டான். இதனால் கோபமுற்ற சந்துரு தாமினிக்கு தொல்லைகள் கொடுக்கத் தொடங்கினான். அவனது தொல்லைகள் எல்லை மீறவே ஒரு கட்டத்தில் சந்துரு மீது தாமினியே முறைப்பாடு செய்தாள். ஆனால் திடீரென்று தாமினியின் நடத்தையில் மாற்றம் ஏற்பட்டது. எந்தத் தாமினி சந்துருவுக்கு எதிராக முறைப்பாடு செய்தாளோ அவளே பொலிஸ் நிலையம் சென்று " எங்கள் காதலைப் பிரிக்க அப்பா சதி செய்கிறார். எங்களைச் சேர்த்து வையுங்கள்." என்று சேரன் மீதும் அம்பு தொடுத்தாள். மீண்டும் தமிழகம் இன்னொரு காதல் அலையில் பரபரப்பானது.

"நான் காதலுக்கு எதிரியல்ல. ஒரு நல்லவன் கையில் என் மகளை கட்டிக் கொடுக்க வேண்டும் என்பதே என் விருப்பம். தெரிந்துகொண்டே படு குழியில் தள்ளமாட்டேன். தாமினி ஒரு நல்லவனைக் காதலித்திருந்தால் நானே முன்னின்று நடத்தி வைத்திருப்பேன்" என்று கண்ணீரோடு சொன்னார் சேரன். இந்த நிலையில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய தாமினி அவளின் கல்லூரி அதிபர் வீட்டில் தங்க வைக்கப்பட்டாள். அவளுக்கு உளவள ஆலோசனைகள் வழங்கப்பட்டு சுயமாகச் சிந்தித்து நல்ல முடிவை எடுக்க வழி காட்டப்பட்டது.

இந்த நிலையில் தான் கடந்த 21 ஆம் திகதி மீண்டும் தாமினி தந்தையோடு போகும் விருப்பத்தை வெளியிட்டுள்ளாள். இப்போது மீண்டும் தந்தை - மகள் பாச இணைப்பு இறுக்கமடைந்து விட்டது. ஆனாலும் "மற்றவர்கள் காதலுக்கு ஆதரவு தெரிவித்த சேரன் தன் மகள் காதலித்த போதுமட்டும் அதனைப் பிரித்தது எந்த வகையில் நியாயம்? அவர் வடிகட்டிய ஒரு சுயநலவாதி" என்று விமர்சனங்களும் எழாமல் இல்லை. சேரன் செய்தது சரியா, பிழையா என்பதை கால நீட்சியே விளக்கும்.

### மகளுக்காக மற்றவர் காலில்.....



"எனக்கு காதலன் முக்கியமில்லை. இத்தனை வருடங்களாக அன்பை ஊட்டி வளர்த்த என் அப்பாவுடனும் அம்மாவுடனும் செல்லவே விரும்புகிறேன்." நீதிமன்றத்தில் கடந்த 21 ஆம் திகதி சேரனின் மகளான தாமினி இந்த வார்த்தைகளை உதிர்த்தார். இதைக் கேட்ட மாத்திரத்திலேயே சேரனின் கண்களில் ஆனந்தக் கண்ணீர். தனது மகள் மீண்டும் தன்னோடு வந்து விடுவாள் என்று அவர் நம்பிக்கொண்டு தான் இருந்தார். நீதிமன்றத்துக்குச் செல்ல முன்னர் கூட தனது முகப் புத்தகத்தில் "இன்று எனக்கு இன்னொரு மகிழ்ச்சியான நாளாக இருக்கும் என்று நம்புகிறேன். அந்த மகிழ்வுக்காக நீங்களும் பிரார்த்தியுங்கள். தாமினி பிறந்த போது இருந்த பதற்றத்தையும் பயத்தையும் இன்னும் அதிகமாக இன்று உணர்கிறேன். எப்படியும் என் பிள்ளை என்னோடு வந்து விடுவாள்." என்று பதிவிட்டிருந்தார்.

கிட்டத்தட்ட 3 வார காலமாக மகளுக்காக நடத்திய போராட்டத்தில் சேரன் வெற்றி பெற்று விட்டார். அவருடைய மகள் மீட்பு நடவடிக்கையில் கூடவே இருந்தவர்களை தன் மகள் கிடைத்த சந்தோசத்தில் சேரன் மறந்துவிடவில்லை.

நீதிமன்றத்தில் பெற்றோரோடு செல்ல விரும்புவதாக தாமினி சொன்ன பின்னர் சேரனின் கருத்தை அறிய ஊடகவியலாளர்கள் கமெராக்களோடும், ஒலிவாங்கிக் கருவிகளோடும் அவரைச் சூழ்ந்து கொண்டனர். இந்த நேரத்தில் எவரும் எதிர்பார்க்காத வகையில் தடாலடியாக தரையில் வீழ்ந்து அவர்கள் எல்லோரையும் வணங்கினார் சேரன். தரையில் கிடந்தபடியே " என் மகளை மீட்பதற்கு துணை நின்ற ஊடகவியலாளர்களுக்கும், நண்பர்களுக்கும் வேறு வகையில் எனக்கு நன்றி சொல்லத் தெரியவில்லை." என்று விழிநீர் மண்ணில் சொரிய ஆனந்தத்தோடு திக்கித் திணறியபடி சொல்லி முடித்தார் சேரன். மகளுக்காக பிறரின் காலில் வீழும் வகையில் பாசம் கொண்டதால் தான் தன் மகளை சேரன் மீட்க முடிந்திருக்கிறது.



சிறு வயதில் தாமினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுற்றாடலை மாசுபடுத்தும் சத்தங்கள்

ரம்யன்

- சத்தம், இரைச்சலைக் கட்டுப்படுத்த புதிய சட்டவிதிகள்
- கட்டுப்படுத்தும் அதிகாரம் பொலிஸாருக்கு உண்டு
- முறையிட்டு பரிகாரம் தேடுவது மக்களின் உரிமை
- புதிய ஒழுங்கு விதிகள் இரண்டு மாதங்களில் நடைமுறைக்கு

சுற்றாடலை மாசடையச் செய்யும் விடயங்களில் அளவுக்கு மீறிய சத்தமும் (இரைச்சல்) ஒன்று என்பது சொல்ல வேண்டியதில்லை.

நவநாகரிகம் வாழ்க்கையின் எல்லா வித அம்சங்களிலும் தடையின்றி புகுந்து வருவதால் சத்தமும் புதுப் புதுவகைகளில் மனித வாழ்க்கையில் ஓர் அம்சமாக ஊடுருவி விட்டது.

வீதியில் நடந்து சென்றால் என்ன, வாகனமொன்றில் பிரயாணம் செய்து கொண்டிருந்தாலென்ன, கோயிலில் தம்பிடச் சென்றால் என்ன, ஏன் வீட்டில் அமைதியாக ஏதாகிலும் வாசிக்கலாம் என்று ஒரு நூலை கையில் எடுத்தாலென்ன, சத்தங்கள் வந்து நம் காதுகளை துளைத்தெடுக்கின்றன. பொதுவாக கிராமப் பகுதிகளில் இது குறைவு என்பதை ஒப்புக் கொள்ளலாம். ஆனால் நகர்ப் பகுதிகளில் வாழ்பவர்கள் இந்தச் சத்தங்களின்- இரைச்சல்களின் - கொடுமையில் இருந்து தப்பிவிட முடியாது.

வாகனங்களின் இரைச்சல், ஹோர்ன் ஒலிகள், நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டால் சங்கீதம் என்ற பெயரில் வரும் இரைச்சல்கள். ஒலி பெருக்கிகளின் அலறல்கள் என்று சொல்லிமாளாது. இந்த இரைச்சல்களை ஏற்படுத்துகிறவர்கள் ஏனையவர்களுக்கு ஏற்படும் இன்னல்களைப் பற்றி சற்றும் கவலைப்படுவதாகத் தெரிவதில்லை.

### கோயில்களின் இரைச்சல்

கோயில்களில் இருந்து வரும் இரைச்சல்களைச் சொல்லவேண்டாம். நம் முன்னோர்கள் இன்றுபோல் ஒலிபெருக்கிகள் மூலம்தானா சுவாமிக்கான வேத மந்திரங்களை ஓதினார்கள்? தேவார திருவாசகங்களை ஒப்புவித்தார்கள்? சில கோயில்களில் திருப்பள்ளி எழுச்சியென்று விடியற்காலையிலேயே ஒலிபெருக்கி மூலம் இரைச்சல் செய்கிறார்கள். அந்த இரைச் சலை கேட்டு சுவாமியே கோயிலை விட்டு போய் விடக் கூடும் என்ற அளவுக்கு ஒலிபெருக்கிகளின் ஓசை இருக்கிறது.

மாணவர்கள் பரீட்சைக்காக ஆயத்தம் செய்யும் காலம், அதற்காகவாவது ஒலி பெருக்கிகளின் சத்தத்தை குறிப்பிட்ட நேரங்களில் குறைத்துக் கொள்ளும்படி பல பெரியோர்கள் கூறிப் பார்த்துவிட்டார்கள். பத்திரிகைகள் எழுதியுள்ளன. ஏன் இந்துமாமன்றம் கூட மன்றாட்டமாக கேட்டுப் பார்த்து விட்டது. எவரும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. சத்தமும் இரைச்சலும் ஒலிபெருக்கிகளில் ஒலித்தபடி தான் இருக்கின்றன.

கோயில்களில் இறைவனுக்கென ஓதப்படும் மந்திரங்கள், பாடல்கள் மற்றும் பிராத்தனைகளையாவது குறைந்த சத்தத்தில் வைக்க இவர்கள் முன்வரலாகாதா என்று கேட்கத் தோன்றுகிறது. பக்தர்களுக்கென்று வழாங்கப்படும் அறிவித்தல்கள், பிரசங்கங்கள் போன்றவற்றை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பெரிதாக வைத்துக் கொள்ளலாம். ஆனால் இதைப் பற்றி யார் சிந்திக்கிறார்கள்?

சத்தத்தினால் ஏற்படும் கெடுதியானது மனித உடலை காதின் வழியாக ஒரு வகையில் பாதிப்பது ஒருபுறமிருக்க உளரீதியாகவும் பாதிப்புகளை ஏற்படுத்துவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

வடக்கு, கிழக்கில் இப்பொழுது வீதி திருத்தங்களின் காரணமாக சுற்றாடல் பெருமளவில் புழுதியினாலும் வாகனப் பெருக்கத்தினாலும் வீதிக்கு உதவாத வாகனங்களாலும் அவை வெளியிடும் கடும் புகையினாலும் பாதிப்புள்ளாகி வருகிறது.

வேகக் கட்டுப்பாடுகளின்றி வாகனங்கள் ஓடுவதால் வீதி விபத்துகளும் தினமும் அதிகரித்து வருகின்றன. இந்த நிலை யில் ஒலிபெருக்கிகளின் இரைச்சல் வேறு மக்களை இடையூறுகளுக்குள்ளாக்கி வருகின்றன.

இரைச்சல் இடையூறு இங்கு மட்டும் தான் உண்டு என்பதில்லை. கொழும்பு போன்ற பெருநகர்களிலும் பொது மக்களை இரைச்சல் வருத்தவே செய்கின்றது.

### சத்தக் கட்டுப்பாடு சட்ட ஒழுங்கு

சத்தக் கட்டுப்பாடு தொடர்பான சில சட்ட விதிகளைக் கொண்டு வருவதற்கு கடந்த காலங்களில் உயர் நீதிமன்றத்தின் பணிப்புரையின் மீது சில ஒழுங்குவிதிகளைக் கொண்டு வருவதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சத்த இடையூறு தொடர்பான பிரிவு சில முயற்சிகளை எடுத்திருந்தது. ஆனால் அவை இன்னமும் சட்டமா அதிபரின் திணைக்களத்தின் ஆய்விலேயே இருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

காற்று மற்றும் சத்தம் தொடர்பான சபையின் பிரதிப் பணிப்பாளர் ஆர்.எம். குலசேன பின்வரும் தகவல்களை அண்மையில் வெளியிட்டிருந்தார். அவர் கூறியதாவது:

2005 ஆம் ஆண்டு உயர் நீதிமன்றம் விடுத்த பணிப்புரையை அடுத்து மத்திய சுற்றாடல் துறை அதிகார சபை சில ஒழுங்குவிதிகளை தயாரித்து உயர் நீதிமன்றத்துக்குத் தாக்கல் செய்திருந்தது. அதற்கு மாறாக வேறு சில அமைப்புகள் மனுக்களையும் சத்தியக் கடதாசிகளையும் உயர் நீதிமன்றுக்கு அனுப்பியிருந்தன. இவை அனைத்தையும் பரிசீலனை செய்து ஒழுங்கு விதிகளை தயாரிப்பதற்கு கணிசமான தாமதம் எடுத்தது. பின்னர் 2010 ஆம் ஆண்டு உயர்நீதிமன்றம் இறுதியாக விசாரணையொன்றை நடத்தியதன் பின்னர் இந்த சட்டவிதிகள் ஆய்வு செய்வதற்காக சட்டவரைஞர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டு இன்னமும் முடிவு எதுவும் எடுக்கப்படாமல் இருந்து வருகின்றன.

இந்தச் சட்டவிதிகள் நடைமுறைக்கு வரும்போது சத்தங்களினால் சமூகத்துக்கு ஏற்படும் இடையூறுகள் தடுக்கப் படுவதாய் இருக்கும்.

இசை நிகழ்ச்சிகள் மற்றும் சமூக அரசியல் நிகழ்ச்சிகள் திங்கள் முதல் வியாழக்கிழமை வரையில் இரவு 10 மணிக்குப் பின் தடை செய்யப் படும். வெள்ளி, சனி நாள்களில் காலை 1 மணியிலிருந்தும் ஞாயிற்றுக் கிழமைகளில் இரவு 12.30 மணியிலிருந்தும் தடை செய்யப்படும் . மேலும் இந்த நிகழ்வுகளில் ஒலிபெருக் கிப் பாவனைக்கு மாவட்ட நீதிமன்றங்களிடம் அனுமதி பெறவேண்டியிருக்கும்.

இவைகளுக்கான சட்டங்கள் இன்னமும் நிறைவேற்றப்படாமல் இருந்தாலும் உயர் நீதிமன்றத் தீர்மானத்துக்கமைவாக நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இப்பொழுது செயற்பாட்டிலுள்ள சட்டவிதிகளின்படி பொதுமக் கள் தமக்கு ஒரு நிகழ்ச்சியினால் அதன் இரைச்சலினால் இடையூறு ஏற்படுவதாக இருக்கும் பட்சத்தில் அதுபற்றி பொலிஸாருக்கு முறையிடுவது அவசியம்.

இசை நிகழ்ச்சிகள் மற்றும் அது போன்ற நிகழ்வுகளிலிருந்து வெளிப்படும் சத்தம் மற்றும் இரைச்சல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கான சட்டமோ விதிகளோ இப்போது நடைமுறையில் இல்லாது போனாலும் பொலிஸாருக்கு அதிகாரம் அளிக்கும் சட்டவிதிகள் இருக்கவே செய்கின்றன.

இருந்தபோதிலும் சமய நிகழ்வுகளில் இருந்து சத்தங்கள் தொடர்பாக இந்த விதிகள் குறைந்த கட்டுப்பாடுக ளையே ஏற்படுத்துவதாய் இருக்கின்றன. மத்திய மாசுக் கட்டுப்பாட்டு அதிகார சபை [illegible] இவைக்கான பரிந்துரைகளை வழங்கியிருந்தாலும் சட்டம் இன்னமும் நிறைவேற்றப்படாமல் இருப்பதால் இறுக்கமான நடவடிக்கை எதுவும் சமய நிறுவனங்கள் மீது எடுக்க முடியாமல் இருக்கிறது.

சத்தம் இரைச்சல் என்பது இன்று சமூகத்தைப் பாதிக்கும் மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இதனைக் கட்டுப்படுத்தும் வகையில் சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் நிறைவேற்றிக் கொள்வதற்கு பொதுமக்கள் ஆதரவு தர வேண்டும் என்றார் திருகுலசேன.

இந்த சட்டவிதிகள் இன்னும் இரண்டு மாத காலத்துக்குள் நிறைவேற்றப் பட்டுவிடும் என்று மத்திய மாசு கட்டுப்பாட்டு அதிகார சபையின் தலைவர் விமால் ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

### பொதுமக்கள் வலியுறுத்த வேண்டும்

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா விடுத்துள்ள ஒரு செய்தியில் இந்தியா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் சத்தத்தினால் சுற்றாடல் மாசு அடைவதைத் தடுப்பதற்கான சட்டங்கள் கடுமையாக நடை முறைப் படுத்தப்படுகின்றன. எமது நாட்டிலும் அதுபோன்ற சட்டங்கள் கொண்டு வரப்படுவதை பொதுமக்கள் வலியுறுத்த வேண்டும் என்று குறிப்பிட் டுள்ளார்.

அசை போட ஒரு விடயம் 91

சத்தங்களால் சுற்றாடல் மாசடைவது குறித்து கொழும்பு தேசிய மருத்துவமனையின் ஆலோசகர் காது, தொண்டை, மூக்கு அறுவைச்சிகிச்சை நிபுணர் சந்திராஜயசூரிய பின்வரும் கருத்தை வெளியிட்டுள்ளார்.

80-90 டெசிபெல்ஸ் இற்கு அதிகமான சத்தங்களைக் கேட்டால் காதுகள் பழுதடைந்துபோகும் வாய்ப்பு இருக்கின்றது. காதுகளில் காணப்படும் நுண்ணிய மயிரிழைகள் சத்தங்களை கிரகிப்பதில் பெரும் பணியாற்றுகின்றன. பேரிரைச்சலான சத்தங்கள் இவைகளை பழுதடையச் செய்து விடக் கூடும். பேரிரைச்சல்களை இரண்டு நிமிடங்களுக்கு மேல் கேட்க நேர்ந்தாலும் காதுகள் பழுதடைந்து விடக் கூடும். பேர் இரைச்சல்கள் நரம்புத் தொகுதிகளையும் பாதிக்கும் வாய்ப்புண்டு என்று தெரிவித்தார்.

### மக்கள் உரிமைகளில் ஒன்று

சுற்றாடல் துறை சிரேஷ்ட வழக்கறிஞரான ஜகாத் குணவர்தன பின் வரும் கருத்தை வெளியிட்டார். "சத்தத்தினால் சுற்றாடல் மாசடைவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது பொது மக்களின் உரிமைகளில் ஒன்று.

சுற்றாடலுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் ஒலிபெருக்கி ஓசைகளை உரக்க ஒலிக்கச் செய்பவர்களுக்கு எதிராக பொலிஸ் ஒழுக்க சட்டவிதிகள் 80 இன் கீழ் பொலிஸார் நடவடிக்கை எடுக்க முடியும்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்கன
# விற்றுத்
# ஓவியம

"சகோதரனைப் புதைக்
குழியை வெட்டும் பணி
உன்னிடமே தந்து, அ
குழியில் உன்னையும்
துப் புதைக்கும்" பிரித்த
தந்திரத்தின் மங்கு சனி
'ஏழரை' யாகி உயிரை
முன் விழித்துக் கொள்
வேண்டும் முழு இனமு

பிரியாணி சாப்பிட்ட பின், வாழை இலை மடித்து எழும்ப முன், இலையின் கீழ் வைக்கப்பட்டிருக்கும் ஐநூறு ரூபாத் தாளை மறக்கமல் எடுத்துச் சட்டைப் பையில் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்" மதுரை மாவட்டத்தின் திருமங்கலம் தேர்தல் தொகுதியின் இடைத்தேர்தல் ஒன்றின்போது அஞ்ஞா நெஞ்சனும் பெரியண்ணனுமாகிய மு.க. அழகிரி அறிமுகப்படுத்திய இந்த விளையாட்டை நன்கு ரசித்தனர் உடன்பிறப்புக்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற மாற்றுத் தேர்தலொன்றில்தேர்தல்கள் ஆணையத்தின் 'கண்ணில் மண்ணைத் தூவி' பணம் விநியோகிக்க அழகிரி கையாண்ட இந்தப் புது யுக்தி இன்றைக்கு நான்கு வருடங்களுக்கு முன் தமிழக மக்களை இலவசங்களின் உச்சபட்ச அடிமைத்தனத்துக்கு இட்டுச் சென்றது. அடுத்த மாநில சட்டசபைத் தேர்தலில் எதிர்க் கட்சியாகக் கூட அமர முடியாமல் அதே மக்களால் தீர்ப்பெழுதப்பட்டு துரத்தப்பட்டனர் முத்து வேலர் கருணாநிதியும் குடும்பத்தினரும். காசைக் கொட்டியும், வாக்குரிமையின் கசையடியினால் அடித்துத் துரத்தப்பட்ட ஆகப் பிந்திய அண்மித்த உதாரணமாக இவர்களையே சுட்டமுடியும்.

தமிழகத்தின் மக்களை இலவசங்களுக்கு ஏங்கும் ஆழ்மனோ நிலை நோயாளிகளாக்கி ஆட்சியைப் பிடிக்கும் பெருங்கனவோடு தமது வாக்கு வேட்டையை தொடங்கியவர்களுக்கு அந்த மக்கள் கொடுத்த அதே பதிலை இன்னுமொருசமசந்தர்ப்பத்தில் கொடுக்கும் வாய்ப்பும்- வரமும் வடமாகாணத்து மக்களுக்கு எல்லாம் வல்ல 'ராஜபக்ஷ'க்களின் அருளால் வாய்த்திருக்கின்றது. தையல் மிஷின், லேடீஸ் சைக்கிள், மறியாடு, பீயோன் வேலை, பின்னேர விருந்துகள் என்று இன்றைய வடமாகாணத்து இளைஞர் பட்டாளத்தின் மத்தியில் கட்டற்று வீசப்படும் கையூட்டுக்கள் யாவற்றுக்குமான காரண - காரியங்களை இயலுமளவு பூரணத்துவத்துடன் சந்திக்கு இழுத்துப் பேசுவதே இந்தப் பந்தியின் ஏக நோக்கம். முந்தைநாள் வரை நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் என்ற பாடலை கழிப்பறை வாசல் கடந்தும் உச்சரித்து திரிந்து நேற்று ஞாயிற்றுக்கிழமையென்றும் பாராது கச்சேரி வாசலில் கடும் வெயிலில் கற்பூரச் சட்டிகளும் மண்ணெண்ணெய் கலன்களுமாய் ஆர்ப்பரித்த கொள்கைக் குன்றுகள் எவரேனும் இதற்கு மேலும் இவ்விருபக்கங்களிலும் 'மினக்கெடாமல்' அடுத்தடுத்த பக்கங்களுக்கு அவசரமாய்ஒழிவிடுவதுஉங்களுக்கேநன்மைதரும்.

**எறியப்படும் காசு எங்கிருந்து பிறக்கின்றது**

அரச அதிகாரியொருவரை விட மக்கள் பிரதிநிதியொருவர் இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் பதவி வழியாக பலமானவர். எளிமைப்படுத்திச் சொல்வதானால் மாவட்ட அரச அதிபர் ஒருவரிலும் பார்க்க நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சல்லித்தராதரம், வயது, அனுபவம் எனும் எதனையும் சார்ந்திராமல் பலமானவராவார். காரணம் - 'மக்களால் மக்களுக்காக தெரிவு செய்யப்படுபவர் எனும் ஜனநாயகக் கொள்கை. இதன் வழியாக பா.உ ஒருவருக்கான சலுகைகள், பாதுகாப்பு, வசதிகள், சம்பளம், பிறபடிகள் என்பன யாவையும் உயர்நிலை அரச நியமன அதிகாரியொருவரில் பார்க்க மடங்கு கணக்கில் அதிகமானதேயாகும். இன்னமும் தெளிவாக உரைப்பின் நாடாளுமன்றத்து உணவுக்கூடம் ஒன்றில் பகலுணவு கூட பத்து ரூபாக்குள் முடிந்துவிடும். இவையெல்லாம் சேர்த்தே பெரும்பாலான மக்கள் பிரதிநிதிகளின் இடுப்புச் சுற்றளவை பெருக்கல் விருத்தியில் பெருகச் செய்வதும் மிகப் பலர் 'ப்ரீ' அளவுத் திட்டத்தின் அற்புத ஆடையாகிய 'வேட்டி'க்கு மாறிவிடுவதும் காலப் பரிணாமத்தில் நிகழ்ந்து கிடக்கின்றது. இலங்கையில் மக்கள் பிரதிநிதிகளை பெரும் மூன்று வகுதிகளாக சொல்லலாம். நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை (மாநகர, நகர, பிரதேச) உறுப்பினர்கள் என்போரே. இறங்கு வரிசையில் இவர்களுக்கான கிடைப்பனவுகளின் தொகை அதே இறங்குவரிசையில் குறைந்தே வரிசைப்படுத்தப்படும். மேலதிகமாக இவர்கள் மூன்று வகையினரையும் விட மேலான அதிகாரங்களையுடைய ஜனாதிபதியும் தனி வகைக்குரிய மக்கள் பிரதிநிதியே. இவர்களுக்கான ஒற்றுமை என்னவெனில் இவர்கள் யாவரையும் தெரிவு செய்கின்ற மக்களே இவர்களுக்கான சம்பளத்துக்குமான கர்த்தாக்கள். மக்கள் பிரதிநிதிகள், அரச ஊழியர்கள் எனும் வெவ்வேறு அரசின் அங்கங்களை மக்கள் சேவகர்கள் யாவருக்குமான பண ஊற்று- அத்தேசத்தின் மக்களிடமிருந்து பெறப்படுகின்ற வரிப்பணம். பாராளுமன்ற ஒதுக்கீடுகள் மூலம் அவர்களுக்கான எவ்வித கொடுப்பனவையும் தான்தோன்றாமல் செய்பவர்கள் மக்களே எனும் தெளிவு எம்பலரிடம் இல்லை. அரச பணியாளன் சார்ந்துள்ள துறையொன்றுக்கான மேம்பாட்டுக்காக அரசு ஒதுக்கீடு செய்யும் வரவு- செலவுத் திட்ட வரையின் பகுதியில் அந்தத் துறையின் முழுப் பணியாளர்களுக்குமான சம்பளமும் உள்ளடக்கப்படுகின்றது. கல்வித்துறை ஒதுக்கீட்டின் மூலம் ஆசிரியர்களுக்கான செலவீனங்களும் சுகாதாரத் துறை ஒதுக்கீட்டின் மூலம் மருத்துவர்களுக்கான செலவீனங்களும் ஒதுக்கப்படுவது போலவே பொதுநிர்வாகத் துறை மூலம் நாடாளுமன்றம் ஒதுக்கும் நிதியையே நிர்வாகத் தரப்பில் உள்ள மேற்கூறிய மக்கள் பிரதிநிதிகள் செலவிடுகின்றார்கள். இன்னொரு வழியில் சர்வதேச நிறுவனங்கள், நேசநாடுகள், கூட்டிணைவுகள் மூலம் கிடைக்கும் நிதிகூட "மக்களின் நலிவு" எனும் காரணத்தை மேற்கோள் காட்டி கௌரவப் பிச்சையாக அந்தந்த நாடுகளிடம் கைநீட்டி வாங்கப்பட்டதே. ஆக, மக்கள் பிரதிநிதியொருவர்- அல்லது மக்கள் பிரதிநிதியாக தன்னை தெரிவு செய்யக் கேட்டு மக்கள் முன் வேட்பாளராக பணிந்து குனிகின்ற நபரொருவர் செலவழிக்கின்றார்? இப்படி இறைக்கின்றார். என்னமாய் கொடுக்கிறார்? என்று ஆச்சர்யப்பட ஏதுமேயில்லை. அவர் அமுதசுரபிக் கரங்களால் அள்ளியிறைக்கின்ற ஒவ்வொரு சதமும் ஏற்கனவே உங்களிடமிருந்து பெறப்பட்டது அல்லது இனிமேல் பெறப்படப் போவது.

தொலைபேசி மீள்நிரப்பும் அட்டை முதல் தொடங்கி வாகனத்துக்கான எரிபொருள், ஆட்களுக்கான எரிபொருள், புகைவிடும் வெண்குழல் என நீண்டு குடிதண்ணீர் வரை கொஞ்சம் கொஞ்சமாக மக்களிடம் இருந்து வறுகப்படுகின்ற வரியே திரண்டு பொது நீதியாகி நாடாளுமன்றம் போய் திறைசேரிக்கு வடிந்து தொகுதிகளுக்குப் பிரிந்து திரும்பியும் அபிவிருத்தி எனும் பெயரில் 'காப்பெற் வீதியாக', யாழ்.தேவியின் தண்டவாளமாக, கழிவு ஒயில் ஊற்றப்படும் கட்டடங்களாக, எம்மை வந்து சேர்கின்றன. ஆக அமைச்சர் கொடுத்தார் என்பதற்கும் ஐயாத்துரை கொடுத்தார் என்பதற்கும் பெயர்ச்சொல் தவிர வேறெதும் வேறுபாடில்லை என்சனமே. இதற்குப் பிறகும் உதவி தருவதாக சொல்லிக் கூப்பிடப் படுகின்ற தேர்தல் கூட்டமொன்றில் கௌரவ அமைச்சரின் அனுக்கிரகத்தினால் கௌரவ ஆளுநரின் வழிகாட்டலினால், மாண்புமிகு மண்விழுங்கிகளின் மனத் தயவினால் போன்ற வார்த்தைகளை இறுக்கி உரத்துக் கேட்க நேர்ந்தால் "புளுகாதே புலவா" என்று மனத்துக்குள்ளாவது மறுதலித்துச் சொல்லுங்கள். வாய்ப்புக் கிடைத்தால் விடயத் தெளிவின்றி பிரசும் ஒட்டுகின்ற கொடி கட்டுகின்ற தோரணம் நிறுவுகின்ற அப்பாவிப் பிள்ளைகளுக்கும் ஆற அமரத் தெளிவு படுத்துங்கள் பக்கம் பார்த்து.

இவ்வளவு நாளும் எம்மால் தெரிவு செய்யப்பட்டவர்கள் ஏன் இதெல்லாம் தரவில்லை? தன் குடும்பத்தின் சராசரி முன்னேற்றத்தையாவது மனக்கண்ணில் சுமந்து கொண்டு ஓயாது உழைக்கும் சாமானியனின் மனத்தில் சுலபமானதொரு சபலத்தை ஏற்படுத்திவிடும் இந்தக் கேள்விதான் உங்கள் முன்னிலையில் அபிவிருத்தி முகமூடியோடு நிற்கின்ற ஆபத்தான மனிதர்களின் முதலாவது அஸ்திரம் பச்சைப் பாம்புக்குக் கூட ஒப்ப முடியாத இவ் வெற்றுக் கேள்வியை பயங்கர நாகம் என்று நம்பும் உங்கள் முகபாவமே நீங்கள் அவர்களிடம் மண்டியிட்டதற்கு சமனாகும். இவ்வளவு நாளும் உங்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்ற சொற்றொடரால் சுட்டப்படுகின்ற தமிழ்த் தேசியம் சார்ந்தவர்களை கையாலாகாதவர்கள் எனும் கருத்துடன் கையாளப்படுகின்ற இவ்வினாவுக்குள் நாம் ஏன் இணக்க அரசியலை தெரிவு செய்தோம் என் பதற்கான இன்னொரு கேள்வியும் அடக்கம். சமகால உதாரணம் ஒன்றின் உதவியினால் இம்முடிச்சை அவிழ்க்கலாம். வெலிவேரியாவில் தன்னுடைய அதே இன மக்களின் அடிப்படைத் தேவையான குடிதண்ணீரில், தொழிற்சாலை இரசாயனம் கலந்ததை கேள்வி கேட்டதற்கு இதே அரசு கொடுத்த எளிய பதில் மூன்று சாவுகள். இருக்க, கிட்டத்தட்ட நான்கரை லட்சம் சாவுகள் விலையாக கொடுத்து இந்த நாட்டின் பாதிக்கு அதிகமான கடற்கரைகளை உள்ளடக்கிய தனித் தேசமொன்றை சிவப்பு மையினால் பிரித்து தரக் கேட்டவர்களையும் அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்ட கொள்கைகளை கொண்டவர்களுமான இன்னொரு இன மக்களும் இவ்வரசின் பதில் எவ்வாறு இருக்கும்? தனி ஈழக் கோரிக்கையை இன்னமும் கைவிடாதவர்கள் எனும் கடும் பழிவாங்கல் நோக்கோடு ஊன்றிக் கவனிக்கப்படுகின்ற தமிழ்த் தேசிய வாதிகள் இணக்க அரசியல் எனும் மாயைக்குள் வரவழைக்கப்படவே அரசினாலும் பேரினவாதிகளாலும் விரும்பப்படுகின்றார்கள். கையைக் கட்டிப் போட்டுவிட்டு கைத்தொழில் அமைச்சராகவும் பள்ளிவாசலை உடைத்து விவேகானந்தர் சிலையை வீழ்த்தியும் மதவிவகார அமைச்சராகவும் உப்புச்சப்பற்ற மந்திரிப் பதவியொன்றுக்கு தலையாட்டுவதன் மூலம் அமைச்சின் கீழான ஒதுக்கீடுகளை தேவையானளவு உறுஞ்சிக் கொண்டு மீதியென்று எஞ்சுவதை மக்களிடம் வீசியெறிய முடியும்.

ஆனால் ஆயிரம் ஆண்டுகளானாலும் அடங்காத தாயகக் கனவை தாரை வார்க்க வேண்டுமென்ற ஏக நிபந்தனையை விட்டுக் கொடுத்து விடலாமா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சியில் இருக்கும் பிரதேச சபைகளின் புதுக்கட்டடங்களை திறந்து மக்கள் பாவனைக்கு விடுவதன் மூலம் அவர்களின் செல்வாக்கு அதிகரித்து விடலாம் எனும் அச்சத்தை முன்னிட்டு ஆயுத முனையில் அடாவடி செய்பவர்களின் விஸ்வரூபம், எல்லாவற்றிலும் பெரிய மக்கள் சபையான நாடாளுமன்றத்தில் எப்படி இருக்கும். நாடாளுமன்ற உறுப்பினர் எனும் வகுதியினால் கிடைக்கின்ற சாதாரண நிதி ஒதுக்கீட்டில் கூட சர்வமயப்படுத்தப்பட்ட பாகுபாடு சந்தேகத்துக்கு இடமின்றி இருக்கின்றது. ஆளும் கட்சியின்

வெலிவேரியாவில் தன்னுடைய அதே இன மக்களின் அடிப்படைத் தேவையான குடிதண்ணீரில், தொழிற்சாலை இரசாயனம் கலந்ததை கேள்வி கேட்டதற்கு இதே அரசு கொடுத்த எளிய பதில் மூன்று சாவுகள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ளை
# ...த்தான்
# ...மா...?

...தைக்கும்
... பணியை
..., அதே
...யும் சேர்த்
...ரித்தாளும்
... சனிகள்-
...ிரை எடுக்கு
...காள்ள
...னமும்!!

செந்தூரி




நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆயிரமென்றால் எதிர்கட்சியில் அதுவும் தமிழ்க் கட்சியின் உறுப்பினருக்கான ஒதுக்கீடு பத்தாக இருப்பது ஐயமே.

அமைச்சு ஒன்றின் கீழான மாகாண அமைச்சுக்கள், மாகாணத் திணைக்களங்கள், உப அலுவலகங்கள் என ஒதுக்கீட்டுக்கான படிநிலை வழங்கு கருவிகளினூடாக எவ்வித ஊழலும் பிடித்தமும் செய்யப்படாமல் உத்தேசிக்கப்பட்ட அதே தரத்தில் கிடைக்கும் வசதியொன்றின் பத்தின் ஒரு பங்கு கூட தற்போதைய நிகழ்ச்சித் திட்டங்களினால் மக்களுக்கு கிடைப்பதில்லை. சுருக்கமாக விரித்துரைப்பதானால் வீதி திருத்தும் பணியில் ஈடுபடுகின்ற தனியார் நிறுவனமொன்றின் பிராந்திய பிரதேச திட்டமுகாமையாளர் ஒருவரினால் கையாடல் செய்யப்படுகின்ற வளங்களின் அல்லது நிதியின் அளவை எம்மால் அனுமானித்துணர முடிகின்றதாயின் இலங்கை பூராகவும் வீதிகளின் அபிவிருத்திக்கு பொறுப்பான அமைச்சில் முடக்கப்படுகின்ற தொகையை கற்பனை செய்ய முடிகின்றதா? அங்ஙனம் கையாடப்படுகின்ற நிதிவளத்தின் எச்சமே இத்துணை அபிவிருத்தியை செய்ய முடியுமென்றால் ஊழலில்லாத சுத்தமான வளப் பாய்ச்சல் நடைமுறைப்படுத்தப்படுமானால் மக்களுக்கான வசதிகளின் தரம் இன்னும் எத்தனை மடங்காக உயரும்?

கோடிகளில் சுருட்டுகின்ற பொறுப்பில் இருப்பவர்களின் வருமானங்களின் அற்ப விகிதத்தின் மூலம் மக்களை கவர பயன்படுத்தப்படுகின்ற சுயவிளம்பர திட்டங்களின் முன்னால் அதிகாரத்தை வாங்க இயலாத இணக்க அரசியல் எனும் அமையத்தனத்துக்கு விலைபோகாத கொள்கைப் பிடிப்போடு இருப்பவர்கள்தான் இவ்வளவு நாளும் எம்மால் தெரிவு செய்யப்பட்டவர்கள் எனும் பெயர்ச் சுட்டியோடு காசை வீசி வாக்கு வாங்க முடியாதவர்கள் என்பதற்கு இன்னும் விளக்கம் வேண்டுமோ? இலங்கையின் அரச பங்காளியாக அமர வேண்டுமெனில் இரண்டில் ஏதாவது ஒரு பேயுடன் தான் வாழ்க்கைப்பட வேண்டும் எனும் தற்கால அரசியலில் எதிர்த்தரப்பு அரசியல் மூலம் உரிமைகளுக்காக குரல் கொடுப்பவர்களாக நீடிப்பவர்களை அதே உரிமைகளுக்கான தீரான தாகத்துடன் ஏங்கிக் கிடக்கும் மக்கள் ஊக்கப்படுத்தியாகவே வேண்டும்.

இப்பொழுதே சிறிதாய் செய்கின்றார்கள். இனிமேல் பெரிதாய் செய்வார்கள்- இவர்களுக்கே போட்டால் என்ன?

கூடாது அல்லது இல்லை என்ற தனிச் சொல்லால் உடனடியாக மறுத்தேயுரைக்க முடியுமாயினும் போருக்குப் பின்னைய அபிவிருத்தி மழையில் அற நனைந்த படித்தவர்களும் கூட சற்றே தடுமாறும் புள்ளிகளில் இதுவும் ஒன்று. உன்னைப் போல் அயலானையும் நேசி என்பது பெத்லஹேமில் பிறந்து கல்வாரி மலையில் காட்டிக் கொடுக்கப்பட்ட மனுகுல மைந்தனின் மகாவாக்கியம். தனி மனிதனின் விருப்பு வெறுப்புக்களை மட்டும் எய்தச் செய்யப்படுவதில்லை சமூகத்தின் அபிவிருத்தி. யாழ்ப்பாணத்தின் குச்சொழுங்கை ஒன்றுக்கு தார் போடப்படுகின்றது. தண்டவாளங்கள் கிளிநொச்சியை கடந்து முன்னேறுகின்றன. இந்திய வீட்டுத் திட்டங்களுக்கு ஆள் சேர்க்கப்படுகின்றன. முதலீட்டாளர்கள் வருகையால் தொழில்வாய்ப்புக்கள் பெருகியுள்ளன. கட்டடங்கள் வேகமாக எழுகின்றன என எமது சமூகத்தின் மிகச் சிறு பகுதியினரால் அனுபவிக்கப்படும். அபிவிருத்தி எனும் பெயரிலான வெளிப்பூச்சுக்குப் பின்னால் அரிக்கப்படுகின்ற பெருந்தொகை மக்கள் கண்ணீரோடு காத்திருக்கிறார்கள்.

வலி.வடக்கில் நிரந்தர இராணுவ வேலி அமைக்கப்படுகின்றது. இருபது வருடங்களாக சொந்தக் காணியின் முற்றத்தில் கால் மிதிக்க முடியாதவர்கள் இருக்கின்றார்கள். பனங்குற்றிகளும் பச்சை நிற உரப்பைகளும் தூக்கி வீசப்பட்டு குளிர்பதனம் செய்யப்பட்ட கொங்கிறீட் கட்டடங்களாக இராணுவ நிரந்தர முகாம்கள் எங்கனும் அமைக்கப்படுகின்றன. முல்லைத்தீவில் இன்னமும் மீள்குடியேறும் நிலைக்குத் திரும்பாத கிராமங்கள் இருக்கின்றன. வன்னிப் பெண்களில் பலர் தலைவனில்லாத குடும்பங்களை கட்டக் கூலி வேலைசெய்து காப்பாற்றும் பொறுப்பைச் சுமக்கின்றார்கள். வடமாகாணத்[illegible] மத்திய கிழக்கு நாடுக[illegible] வீட்டுப் பணிப் பெண்ணாக விமானமேறும் அவலங்கள் சாதாரணமாக நிகழ்கின்றன. இப்படியாக அரச மற்றும் அரச அடிவருடிகளால் யதார்த்தத்தின் புலப்படாத புள்ளியில் நின்று அரங்கேற்றப்படும் தமிழின விரோத செயற்பாடுகளுக்கு மக்களின் அங்கீகாரத்தைப் பெறும் நோக்கம் இவ்வகை கேள்விகளுக்கு உண்டு.

ஒரு வரம்பு. ஓரிரு அடிகள் தள்ளி தற்காலிகமாக கட்டப்படுவதைப் பார்த்தாலே எவ்வளவு சினமடைபவர்களான விவசாயப் பெருமக்கள், நாவற்குழியில் சிங்கள கிராமமே அமைக்கப்பட்டிருப்பதை தெரிந்து கொண்டிருக்கிறார்களா? தெரிந்தால் அதே குணங்குன்றாத சினமெனும் தீயெடுத்துச் சுடுவார்களா?

"இனிமேல் செய்வார்கள்" என்ற வார்த்தைக்குள் எம்மால் இன்னதென்று கண்டுணர முன்னரே இனத்தை சிறிது சிறிதாய்த் தின்னும் இன்னமும் பலவற்றை செய்யும், கபடத்தனமும் காத்திருக்கின்றது. "போதை மருந்துகளின் அறிமுகம்", "நகர்ப்புற விடுதிகளில் விபச்சாரம்", "பரீட்சை நாளில் மின்சாரம் வெட்டுதல்", "ஆள்கடத்தல்" போன்ற அண்மைச் செய்திகளில்-வடபுலத்து தமிழ் மக்களின் வாழ்வோடு இயல்பாக கலந்து நிற்கும் பேரினத்து சமூகக் கிருமிகளின் தாக்கம் ஆங்காங்கே தெரிகின்றது. தொழிலாளிகளாக உருமறைந்த-ராணுவப் புலனாய்வாளர்கள் வீட்டுக்கு வீடு கண்காணிக்கும் இருள் சூழ்ந்த அந்தகாரத்தில் தினமும் நாள்களை நகர்த்தும் முல்லைத்தீவும் எம் முப்பாட்டனின் பூமிதான்.

"ஒரு கண்ணில் சுண்ணாம்பும், ஒரு கண்ணில் வெண்ணையும் வைக்கும்" அரச ஆசீர்வாதத் திட்டங்களுக்கு ஆமாம் போடுவதன் மூலம், எமது தமிழ்ச் சமூகத்தின் பெரும் பிறபங்கினர் அனுபவித்த, அனுபவிக்கின்ற துன்பங்களுக்கு தாமும் ஏதோவொரு வகையில் காரணமாகிப் போகின்றோம். எம்மையொத்த இன்னொரு குடும்பம்-எம்மையொத்த இன்னொரு கிராமம்-எம்மையொத்த இன்னொரு சமூகம் நசுக்கப்படுவதை கண்கொண்டு கண்டும், எதிர்ப்புக் குரலெழுப்பாமல் மௌனமாக கடந்து போவ[illegible] கொடுக்கப்படுகின்ற பாவச் சம்பவமே இந்த "அபிவிருத்தி" வகையறாக்களையாவையும்!! "சகோதரனைப் புதைக்கும் குழியை வெட்டும் பணியை உன்னிடமே தந்து, அதே குழியில் உன்னையும் சேர்த்துப் புதைக்கும்" பிரித்தாளும் தந்திரத்தின் மாங்கு சனிகள்- 'ஏழரை' யாகி உயிரை எடுக்குமுன் விழித்துக் கொள்ள வேண்டும் முழு இனமும்!!

**நாம் நினைப்பதை விட,**
**பேய் பயங்கரக் கடுப்பானதா?**

நிச்சயமாக, "ஓமோம்"! 'வாங்குவதை வாங்குவோம்-வாக்கினை மாற்றிப் போடுவோம்' என்று குரங்காக மாறிவிட்ட பிள்ளையார்கள் பலரை இன்னாளில் காணலாம். முதல் பத்து வருடங்களும் புலி விசுவாசியாகவும், அடுத்த ஐந்து வருடங்களும் வீணை இயக்குநராகவும், அடுத்து வரும் வருடங்கள் வெற்றிலை விரும்பியாகவும் அடுத்தடுத்து மாற்றம் காணுகின்ற சமூகப் பெரியவர்களை பார்த்து வளருகின்ற இளம் தலைமுறையின் வாழ்-சூழலியல் அனுபவங்கள் எங்ஙனம் ஆரோக்கியமானதாக இருக்க முடியும்?

95-96 ஆம் ஆண்டுக்கிடையில் பிறந்தவர்களான இன்றைய இளம் சமூகத்தினரில் பலர், போரின் சிறு அதிர்வைக்கூட தெரிந்திராத சொகுசுக் குழந்தைகளாகவே வளர்ந்திருக்கின்றனர். இருக்க -அவர்களின் மனதிலும், அடிமைத்தனத்தின் விஷவித்துக்களை கட்டாயப்படுத்தி பயிர் செய்யும் அசிங்க அரசியலில் பெரியவர்களே ஈடுபடுவதன் மூலம், "தனி மனித நலனுக்காய்-எதையும் செய்யத் துணிந்த" இடர்ச் சமூக பிறழ்வுக்குள் எம் பிள்ளைகளை தள்ளி வீழ்த்துவதாகாதா?

"இன்றைக்கு இழக்கப்படும் ஏதோவொன்றுதான், நாளைக்கும் எம் உறுதியான இருப்பினை சாத்தியமாக்கும்" எனும் பொருள்படும் கவிஞர் மு.மேத்தாவின் பின்வரும் வரிகளில் மொத்தத் தமிழ்த்தேசியத்தின் ஆத்மாவும் இணைந்து கலந்து இழையோடுகின்றது.

"......மறைகின்ற சூரியன் இரத்தம் சிந்துவதால் தான், மறுநாளும் வாழ்கின்றது!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 25 08 2013 ஞாயிற்றுக்கிழமை

# பில்கேட்ஸ்

## உலகப் பணக்காரன் உருவான கதை



எம்.ஐ.ரி.எஸ். நிறுவனத்தை பேர்டெக் வாங்கிக்கொண்ட பிறகு, பால் ஆலன் அங்கிருந்து விலகி மைக் ரோசாஃப்டில் தன்னை முழுமையாக இணைத்துக்கொண்டு பணியாற்றத் தொடங்கினார். சுதந்திரப் பறவைகளாகிவிட்ட பில்லும், ஆலனும் மைக்ரோசொஃப்டை அடுத்த தளத் துக்கு உயர்த்தும் நோக்கில் பணிகளில் சுறுசுறுப்புக் காட்டினார்கள்! அதே சமயம் தங்கள் வேலைகளையும் பிரித்துக் கொண்டார்கள்.

மென்பொருள் எழுதுவதைப் பால்ஆலன் கவனித்துக் கொள்வது. நிறுவனம் நிர்வாகம் மற்றும் விற்பனையைப் பில்கேட்ஸ் கவனித்துக் கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது. பேஸிக் மென்பொருளை விற்கும் பொருட்டு பெரிய கணினி நிறுவனங்களை நோக்கிப் பில்கேட்ஸின் படையெடுப்புத் தொடங்கியது!

பேஸிக்கை மற்ற நிறுவனங்களுக்கு விற்றாக வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் மைக்ரோசொஃப்ட் இருந்தது. ஆம் அதில் பணிபுரிந்தவர்களுக்குச் சம்பளம் கூடக் கொடுக்க முடியாமல் மைக்ரோசொஃப்ட் திணறியது! டெக்ஸாஸ்நகரில் ரேடியோஷாக் நிறுவனத்தின் துணைத் தலைவர்கள் ஜான் ரோச் அவர்களைச் சந்தித்த கேட்ஸ், அவர்களின் TRS-7880 கணினிகளுக்கு பேஸிக்கை விற்பது குறித்துப் பேசினார்.

முடிவில் பேஸிக்கின் விலை 50,000 டொலர்கள் என்று கேட்ஸ் சொன்னதும் ஜான் ரோச் கொதித்துப் போய், உன் பேஸிக்கைத் தூக்கிக் கொண்டு வந்த வழியே திரும்பிப் போகலாம் என்றார்.

கேட்ஸ் விடவில்லை. மைக்ரோசொஃப்ட் தயாரித்த பேஸிக்கின் உயர்வான விஷயங்களையும், அந்த பேஸிக்கின் காரணமாகவே அல்டெய்ர் கணினி வெற்றி பெற்றுள்ளது என்பதையும் எடுத்துக் கூறிய போது ஜான் ரோச்சால் பேஸிக்கை ஒதுக்கித் தள்ள முடியவில்லை. மறுபேச்சுப் பேசாமல் ரூபா 50,000 டொலர்களைக் கொடுத்துவிட்டுப் பேஸிக்கை வாங்கிக் கொண்டார். முதல் வியாபாரமே வெற்றிகரமாக முடிந்த மகிழ்ச்சியில் அடுத்தடுத்த நிறுவனங்களிடம் பேஸிக்கின் விலையை உயர்த்திக்கொண்டே போனார்!

பில்கேட்ஸ் என்ன தொகையைக் குறிப்பிடுகிறாரோ அதுதான் விலை! நிறுவனக்காரன் எப்படிப் பேரம் பேசினாலும் பில்கேட்ஸ் அதிலிருந்து இறங்குவதே இல்லை. தன் பேஸிக்கைப் பற்றியே மணிக்கணக்கில் பேசி அவர்களிடம் அந்தத் தொகையைக் கறந்து விடு வார்! அவருடைய பேச்சுச் சாமர்த்தியமும், பேஸிக்கின் தரமும் விலையை உயர்த்திக்கொண்டே போயின! பில்கேட்ஸ் கேட்ட பணம் கிடைத்தது! மொத்தத்தில் மைக்ரோசொஃப்ட் வங்கி இருப்பு உயர்ந்துகொண்டே போனது!

"டெக்ஸாஸ் இன்ஸ்ருமென்ட்ஸ்" நிறுவனத்துடன் பேச உட்கார்ந்த போது 100,000 டொலர்கள் என்று விலையைச் சொல்ல நினைத்தார். விலையைக் கேட்டதும் 'நம்மைத் துரத்தி விடுவார்களோ-" எனப் பயந்த பில்கேட்ஸ் கொஞ்சம் இறங்கி "90,000 டொலர்கள்" என்றார். அவர்களும் அந்தத் தொகையைக் கொடுத்துப் பேஸிக்கை வாங்கிக்கொண்டார்கள். மைக்ரோசொஃப்டின் பேஸிக் புகழ்தான் அமெரிக்கா முழுவதும் கொடிகட்டிப் பறக்கிறதே... பிறகு எப்படி விலையைக் குறைக்க முடியும்?

"எந்தத் தொகையை நிர்ணயித்தாலும் கொடுத்து விடுகிறார்களே... நம்முடைய பேஸிக்கின் உண்மையான மதிப்பு இப்போதுதானே தெரிகிறது" என்று புளகாங்கிதப்பட்ட பில்கேட்ஸ் மேலும் மேலும் விலையை உயர்த்திக்கொண்டே போனார்.

மைக்ரோசொஃப்டின் காட்டில் டொலர் மழை பொழிய ஆரம்பித்து விட்டது! அவர்கள் நினைத்ததெல்லாம் நடந்தது.

இது ஏதோ ஒரு குருட்டு அதிர்ஷ்டத்தால் வந்ததல்ல! ஆழ்ந்த அறிவும், கடுமையான உழைப்பும் கூட்டணி அமைத்துக் கொண்டதால் கிடைத்த வெற்றி! அப்போது மைக்ரோசொஃப்டில் கேட்ஸ், ஆலன் உட்பட 12 பேர்தான் பணிபுரிந்தனர்!

அவர்களின் வேலை சரியாகக் காலை 10 மணிக்குத் தொடங்கும். முடியும் போது நள்ளிரவைத் தாண்டி விடும். யாரும் வேலை செய்வதை நிறுத்துவது கிடையாது. ஆழ்ந்த களைப்பில் எல்லோரும் அவரவர் இருக்கையிலேயே தூங்கி விடுவார்கள். வேலை மும்முரத்தில் அவர்கள் பலநேரங்களில் சாப்பிடுவதைக் கூட மறந்து விடுவதுண்டு! சாப்பாட்டை மட்டுமல்ல, ஓய்வு, தூக்கம், சின்னச் சின்ன சந்தோஷங்கள், ஊர் சுற்றுதல் போன்றவற்றையும் கூட மறந்து விட்டிருந்தார்கள்!

இத்தனைக்கும் அவர்கள் வயதானவர்களோ, அல்லது நடுத்தர வயதுடையவர்களோ அல்ல! அத்தனை பேர்களும் இருபத்தைந்தைத் தாண்டாத இளைஞர்கள்!

ஆலன் தலைமையில் அத்தனை பேரும் புதிய புதிய கணினிகளுக்கு ஏற்ற வகையில் பேஸிக்கை மாற்றி மாற்றி எழுதிக் குவித்தார்கள். பில்கேட்ஸ் தனி ஓர் ஆளாக அவற்றை வெற்றிகரமாக விற்பனை செய்து கொண்டிருந்தார்!

ஊழியர்களின் கண்ணயராத கடும் உழைப்பிலும், பில்கேட்ஸின் விற்பனை மற்றும் நிர்வாகத் திறனிலும், மைக்ரோசொஃப்ட் நிறுவனம் கொஞ்சமாகத் தலை நிமிர ஆரம்பித்தது!

> பில்கேட்ஸ் என்ன தொகையைக் குறிப்பிடுகிறாரோ அதுதான் விலை! நிறுவனக்காரன் எப்படிப் பேரம் பேசினாலும் பில்கேட்ஸ் அதிலிருந்து இறங்குவதே இல்லை. தன் பேஸிக்கைப்பற்றியே மணிக்கணக்கில் பேசி அவர்களிடம் அந்தத்தொகையைக் கறந்து விடுவார்! அவருடைய பேச்சுச் சாமர்த்தியமும், பேஸிக்கின் தரமும் விலையைஉயர்த்திக் கொண்டே போயின!

## சமூகத் துரோகி



கண்களில் நீர் சொரிய
கார்கூந்தல் தான் கலைய
எண்ணமெல்லாம் எங்கோ அலைமோத
விண்ணவரைத் தொழுதழுது
ஓடுகிறாள் பாவையவள்


கோரமுகமும் கடுமையான பேச்சும்
வீரமான மூச்சும் விட்டுவிடா ஓட்டமும்
பாரை அழிக்கும் வேகமும்
பரிவில்லாப் பார்வையும்

தூரம் என்றும் எண்ணாமல்
ஓடுகிறான் அவன் பின்னே

கதறுகிறாள் கதறுகிறாள்
காண்பதற்கு யாருமில்லை
நெஞ்சு படபடக்க
கால்களும் கடுகடுக்க
தாங்கிய குறியும் ஓய
தடுமாறி நிலம் வீழ்ந்து
தானுமழிந்து சருகானாள் பாவை

சமூகத்தின் துரோகி சந்தர்ப்பவாதி
சந்தோஷத்தைக் கெடுப்பவன்
சந்தேகத்தைக் கொடுப்பவன்


இவனை இனங்கண்டு
துரத்துங்கள் துரத்துங்கள்
சமூகத்தால் ஒதுக்குங்கள்
சண்டாளனுக்கு பாடம் புகட்டுங்கள்



[illegible] பா.அனந்தராசன்.
அல்வாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் அழகு?



ஒரு காட்டில் எலி, முயல், குரங்கு, வெட்டுக்கிளி ஆகியவை ஒன்றுடன் ஒன்று நன்றாகப் பழகி வந்தன.

ஆனாலும் அவைகளுக்குள் அழகு குறித்து அடிக்கடி விவாதங்கள் எழும். ஒவ்வொன்றும் தன் பெருமையைப் பறைசாற்றும் விதத்தில் பேசும். முயல் மட்டும் மௌனமாக இருக்கும். "நம்நால்வரில் நான் தான் மிக அழகு! மனிதர்கள் கூட எங்கள் இனத்திலிருந்து தான் தோன்றிய தாகச் சொல்வார்கள்!" குதித்து குதித்து நடனமாடியபடி சொல்லியது குரங்கு. "நாங்கள் மனிதர்களின் வீட்டுக்குள்ளே புத்தி சாலித்தனமாக ஒளிந்தும் வாழ்கிறோம்! எங்களிடம் அழகும் அறிவும் இருக்கிறது. எனவே நான் தான் அழகு தேவதை" என்றது எலி. 'மனிதர்கள் திட்டும் போது குரங்கு முகம், எலிமுகம் என்று கூட உங்களைப் பற்றிக் கூறுவார்கள்! நான்சிறிய உருவமாக இருந்தாலும் கிளியின் நிறத்தில் அதைப் போன்றே அழகாக இருக்கிறேன்' பெருமிதம் பொங்கக் கூறியது வெட்டுக்கிளி. "நான் இந்த அழகுப் போட்டிக்கே வரவில்லை!" முயல் சொல்ல, மூன்றும் சேர்ந்து சிரித்தன. முயல் மெதுவாக அவ்விடத்தை விட்டு அகன்றது. 'என்ன இருந்தாலும் வெள்ளைவெளேரென்று முயல் ஓடி வரும் அழகே தனிதான்!' குரங்கு சொல்லியது. 'ஆமாம்...ஆமாம்...!' ஒப்புக்கொண்டது வெட்டுக்கிளி. 'நிறமும் அழகும் மட்டும் இருந்தால் போதுமா? அறிவு, புத்திசாலித்தனம் எல்லாம் இருக்க வேண்டும். அப்பொழுது தான் அழகியாக ஏற்றுக் கொள்ள முடியும்' என்றது எலி. 'எனக்கொரு யோசனை தோன்றுகிறது! நமக்குள்ளே ஓர் அழகிப் போட்டி நடத்தினால் என்ன?' கேட்டது வெட்டுக்கிளி. போட்டி நடத்தலாம். 'ஆனால் நடுவர் யார்?' சந்தேகம் எழுப்பியது எலி. 'நடுவராக நானிருக்கிறேன்!' திடீரென்று ஒரு சப்தம் கேட்டது.

அனைத்தும் மேலே பார்க்க, மரத்தின் மீது ஒரு காகம் இருந்தது. 'நீங்கள் எப்படி?' ஆச்சரியப்பட்டது குரங்கு. 'நீங்கள் மூவரும் பேசிக்கொண்டிருந்ததை நான் கேட்டேன். முயலையும் அழைத்துக் கொண்டு நாளை என் இருப்பிடம் தேடி வாருங்கள். ஆனால் நான் தேர்ந்தெடுப்பவரை அழகுராணியாக அனைவரும் ஒரு மனதாக ஏற்றுக்கொள்ள வேண்டும்! என்று காகம் தன் முகவரி கூறியது. 'அப்படியே செய்கிறோம்.' அனைத்தும் சேர்ந்து குரல் கொடுத்தன. மறுநாள் அனைத்தும் அழகிய அழகுராணிக் கனவில் மிதந்து காகத்தைத் தேடிப்போய்க் கொண்டு இருந்தன. அப்பொழுது குருவி ஒன்று வலியால் துடித்துக் கொண்டிருந்தது. அதன் கால்களில் காயம் தெரிந்தது. 'எனக்கு யாராவது ஒருவர் உதவி செய்யுங்களேன். ஒருசிறுவன் கல்லெடுத்து எறிந்து காலில் காயப்படுத்தி விட்டான்!' குருவி பலவீனமாக உதவி கேட்டது. 'நாங்கள் அழகிப் போட்டிக்குப் போய்க் கொண்டு இருக்கிறோம். அபசகுனமாக பேசாதே!' கடுமையாக கூறியது குரங்கு. குருவியைப் பார்த்த எலியும், வெட்டுக்கிளியும் முகம் திருப்பிச் சென்று விட்டன. முயல் குருவி அருகே தயங்கி நின்றது. பின்னர் அவசர அவசரமாக மருந்து தேடிக்காலில் வைத்து விட்டு அழகிப் போட்டிக்குச் சென்றது. அழகிப் போட்டி தொடங்கியது. குறித்த நேரத்திற்கு முயல்மட்டும் செல்லவில்லை. மீதி மூன்றும் மனசுக்குள் மகிழத் தொடங்கின. 'அழகுக்கும் அறிவுக்கும் மதிப் பெண் போட்டு விட்டேன். இனி உங்கள் நல்ல குணம் பார்த்து மதிப்பெண்கள் கொடுப்பேன்! இதற்குத்தான் அதிக மதிப் பெண்கள் ஒதுக்கி இருக்கிறேன்!' காகம் கூறியதும் குருவிக்கு உதவாத மூன்றும் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன. அப்பொழுது அரக்கப்பரக்க முயல் ஓடிவந்தது. முயல்தான் அழகுராணி! இதைஅழகுராணியாகத் தேர்வு செய்வதற்காக நான் பெருமைப்படுகிறேன்! குருவி என் நண்பன் தான்! ஓர் ஆபத்திலிருந்து முயல் காப்பாற்றியதாக சற்று முன்பு தான் குருவி கூறியது. அப்பொழுது மூவரும் உதவாமல் சென்றது பற்றியும் சொல்லி வருத்தப்பட்டது! உதவும் நல்ல மனசு உள்ளவர்கள் தான் உண்மையில் அழகானவர்கள்!" காகம் கூறியதும் எலி, வெட்டுக்கிளி, குரங்கு ஆகியன வெட்கத்தில் தலை குனிந்தன.

# தவறின் வடு

செல்வன் ஒரு குறும்புக்காரச் சிறுவன். தினமும் அவனது தந்தையிடம் அவனது குற்றங்கள், குறும்புச் செயல்கள் பற்றி ஊர் மக்கள், அயலவர்கள் சொல்லி வருத்தப்படுவார்கள். தந்தையும் மன வேதனையுடன் வாசற் கதவின் பின்பக்கமாக ஒவ்வொரு ஆணிகளை அடித்து வந்தார்.

ஒரு பிழைக்கு ஒரு ஆணி என்ற முறையில் ஆணிகள் அறையப்பட்டன. இதை அவதானித்த செல்வன் தந்தையிடம் காரணத்தை வினாவினான். தந்தையும் 'மகனே மக்கள் உன் குற்றங்களைக் கூறும்போது எனக்கு மனவேதனை உண்டாகின்றது. எனக்கு உன்னை அடிக்கவோ, தண்டிக்கவோ மனம் வரவில்லை. இதற்காக ஒவ்வொரு தவறிற்கும் ஒவ்வொரு ஆணி அடித்து வருகிறேன்' என்றார்.

மனவேதனைப்பட்ட செல்வன் அன்றிலிருந்து தனது குற்றங்களை, குறும்புகளைக் குறைத்து வந்தான். தினமும் ஊரவர்கள் செல்வனின் நல்ல குணங்களைப் பற்றி தந்தையிடம் கூறும் போது ஒவ்வொரு நற் செயலுக்கும் ஒவ்வொரு ஆணியாக அகற்றி வந்தார்.

ஒரு நாள் இறுதி ஆணி யும் அகற்றப்பட்டது. அப்போது



செல்வன் கதவின் பின்புறம் பார்த்து மகிழ்ந்தான். அவனது மகிழ்ச்சி நீடிக்கவில்லை. ஆணிகள்அறையப்பட்ட அடையாளங்கள் அப்படியே இருந்தன. தந்தையை வினவியபோது, 'தவறு செய்துவிட்டு பின் பரிகாரம் செய்தாலும் செய்த தவறின் வடு என்றும் நீங்காது' என்று கூறினார்.

ச.லக்சிகா,
தரம்- 9 'ஏ'
யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

## பொது அறிவு

மனிதன் இறக்கும் போது உடலில் இருந்து கடைசியாக விலகும் புலன் கேட்டல். முதலில் பிரிவது பார்வை.

ஸ்ரோபரி பழங்களில் விதைகள் பழத்துக்கு வெளியே முளைக்கும்.

ஆனைக் கொய்யாப் பழங்களில் அதிக கலோரி காணப்படும்.

ஆகாயப்பரப்பில் இருந்து விழும் தூசு துணிக்கையால் பூமியின் எடை ஆண்டொன்றுக்கு 100 ரொன்களால் அதிகரிக்கிறது.

புவியீர்ப்பு விசை காரணமாக பூமியில் உள்ள மலைகள் 15,000m மேல் உயரமாக இருக்கும்.

சி.சிந்து, சுதுமலை.



## மலர்கள்

வானை நோக்கி மலர்ந்திடும்
வாசமுள்ள பூக்களாம்
தேனை உண்ண வண்டுகள்
தேடி வரும் பூக்களாம்
பட்டுப்போல பூக்களே
பார்க்க அழகு தந்திடும்
மொட்டு அவிழும் பூவைப்போல்
முக மலர்ந்து இருப்போமா

இ.ஆராதனா, தரம்- 1 'ஏ'
யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.

## விடை தெரியுமா? 225

### உங்களுக்கும் பரிசுகள்

1. இலங்கையின் செய்தி நிறுவனத்தின் பெயர் என்ன?
2. பாலைவனக் கப்பல் என அழைக்கப்படும் மிருகம் எது?
3. பெண்களுக்கு முதல் முதல் வாக்குரிமை வளங்கிய நாடு?
4. இலங்கை எப்பொழுது குடியரசு நாடாகியது?
5. இலங்கையின் முதலாவது ஜனாதிபதியின் பெயர் என்ன?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 31.08.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 பெறுமதியானதும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 பெறுமதியான பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.


### விடைகள் 223

1. பேடன் பவல் பிரபு
2. கின்னஸ்
3. காளான்
4. பலா
5. ஜப்பான்

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

### வெற்றி பெற்றவர் விவரம் (222)

* ஞா. நெகேமியா, தரம்-9, யாழ். மன்/ தூய யோசவ்பாஸ் ம.வி.
* சி.ஆர்த்தியான், யா/ஹாட்லிக் கல்லூரி
* இ.கலைப்பருதி, தரம் -5, யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
* ஜெ.யூடினி, யாழ்ப்பாணம்.
* சு.ஆர்த்திகா, தரம் -9டி, யா/ வேம்படி உயர்தர பாடசாலை
* ஜே.அஜ்லின், கொ/பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி



கோ.சர்மிகா,
திருஞானசம்பந்தர் வித்தியாசாலை



இ.கேருயன், தரம்-2பி
சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தி



எஸ்.அட்சயா,
எலிம் முன்பள்ளி மானிப்பாய்



த.அனுஜிற்றா, தரம்-2
புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

25.08.2013 முதல் 31.08.2013 வரை

தருபவர் - வித்தியா

**மேடம்**- மனதில் சஞ்சலமும் செயல் நிறைவேறுவதில் தாமதமும் ஏற்படலாம். அறிமுகம் இல்லாதவரிடம், நிதானித்து பேசுவதால் சிரமத்தைத் தவிர்க்கலாம். இல்லறத்துணை, ஒற்றுமை குணத்துடன் நடந்து குடும்ப நலம் பாதுகாத்திடுவார். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் மதித்து நடப்பது நல்லது. மாணவர்கள் அக்கறையுடன் படிப்பதில் மட்டுமே சீரான தேர்ச்சி கிடைக்கும்.

**இடபம்**- எந்த விடயத்திலும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் செயற்படுவீர்கள். உங்களிடம் மோதல் போக்குடன் நடந்தவரும் அன்பு பாராட்டுக்கின்ற சூழ்நிலை உருவாகும். உறவினர் குடும்ப விவகாரங்களில், கருத்து சொல்வதைத் தவிர்ப்பதால் நற்பெயரைப் பாதுகாக்கும். புத்திரர் கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வர். பணியாளர்கள் எளிய முயற்சியால் சலுகைப்பயன் பெறலாம். மாணவர்கள் முயற்சியுடன் படித்து வியத்தகு அளவில் வெற்றி பெறுவர்.

**மிதுனம்**- பண வருமானம் கிடைக்கும். புதிய வாய்ப்புக்களை தவறாமல் பயன்படுத்துவீர்கள். அயல் வீட்டாரிடம் மனக்கிலேசம் விலகி உங்கள் மீதான மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். இல்லறத்துணை உங்களின் நற்குணங்களைப் பாராட்டுவார். தொழில் சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் கண்டிப்புக்கு உட்படாத வகையில் கவனத்துடன் பணிபுரிய வேண்டும். மாணவர்கள் விளையாட்டுகளில் சாகசத்தைத் தவிர்க்கவும்.

**கடகம்**- குடும்பத் தேவை நிறைவேற்றுவதில், தாமதம் குறுக்கிடும். தொடர்பில்லாத பணிகள் உருவாகி, நேரத்தை விரயமாக்கும். உடன் பிறந்தவர்களின் உதவி கிடைத்து மனதில் நம்பிக்கை பெறுவீர்கள். தொழிலில் சராசரி இலக்கை அடைய மாற்று உபாயம் பின்பற்றுவது அவசியம். பணியாளர்கள், பணி இலக்கு நிறைவேற்ற கூடுதல் கால அவகாசம் தேவைப்படும். மாணவர்கள், வெளியிடம் சுற்றுவதைக் குறைப்பதால் கல்வியில் கவனம் வளரும்.

**சிங்கம்**- சிலர் கூறும் அவதூறு வார்த்தையை பொருட்படுத்தாமல் விலகுவதால் பணிகள் திட்டமிட்ட படி எளிதாக நிறைவேறும். புத்திரரின் சொல் வேதங்களின் தத்துவம்போல அமைந்திடும். எதிரியால் வரும் கெடு செயலை முறியடித்திடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் அபிவிருத்தி. கடுமையாகப் பணிபுரிந்து கூடுதல் லாப விகிதம் பெறுவீர்கள். உத்தியோகத்தர்களுக்கு, எளிய முயற்சியால் சலுகைப்பயன் கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் தகுந்த கவனம் அவசியம்.

**கன்னி**-சூழ்நிலையை சமாளிக்க பணக்கடன் பெறுவதும், சேமிப்பை பயன்படுத்துவதுமான நடவடிக்கையை மேற்கொள்வீர்கள். நண்பர் உறவினர்களிடம் பேசுவதில் சூழ்நிலை உணர்ந்து நடந்து கொள்வது, நற்பெயரைப் பாதுகாக்க உதவும். விவகாரங்களில் சுமுகத்தீர்வு கிடைக்க கால தாமதமாகும். இல்லறத்துணை குடும்ப சிரமங்களை சரி செய்வதில் உங்களுக்கு உதவிகரமாக நடந்து கொள்வார். பணியாளர்கள் அக்கறையுடன் பணிபுரிந்து இலக்கை நிறைவேற்றுவர்.

**துலாம்**- மனதில் புதிய உத்வேகமும் பணிகளில் பரிமளிப்புத் தன்மையும் உருவாகும். கடந்த தினங்களில் நிறைவேற்ற தாமதமான செயல்களை அக்கறையுடன் பூர்த்தி செய்வீர்கள். பூர்வீக சொத்தில் கிடைக்கின்ற பணவரவுக்கேற்ப புதிய செலவுகளும் உருவாகும். இல்லறத்துணையின் ஆறுதல் வார்த்தை மனதில் ஊக்கம் தரும். தொழில், வியாபாரம் செழித்து வளர, கிடைக்கிற வாய்ப்பை பயன்படுத்தி முன்னேற்றம் காண்பீர்கள். பெண்கள், தாய்வீட்டு உதவி கிடைக்கப் பெறுவர். மாணவர்கள், நன்றாக படித்து ஆசிரியர், பெற்றோரிடம் நற்பெயர் அடைவர்.

**விருச்சிகம்**-பணவரவு அதிகம் பெற, சிலர் உங்களுக்கு தவறான ஆலோசனை சொல்வர். நேர்மை வழியில் நடந்து வாழ்வு முறையைச் சரி செய்வீர்கள். நிர்ப்பந்த பணக்கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத் தன்மைகளை உரிய கவனத்துடன் பாதுகாப்பது அவசியமாகும். பணியாளர்கள், குடும்ப பணச்செலவை சரிசெய்ய, கூடுதல் வேலை வாய்ப்பை ஏற்றுக் கொள்வர். மாணவர்கள் ஞாபகத்திறன் வளர்ந்து கல்வியில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

**தனுசு** -இனிய எண்ணங்களால் மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். ஓய்வு நேரத்தை குறைத்து பணியில் அதிக ஆர்வம் கொள்வீர்கள். முக்கியஸ்தரின் உதவி கிடைத்து செயல் இனிதாக நிறைவேறும். எதிரியிடம் விலகுவதால் நேரம் பணம் விரயம் ஆகாமல் தவிர்க்கலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் சக பணி சார்ந்தவர்களின் கருத்துக்கு உரிய மரியாதை தருவது நல்எண்ணத்தை வளர்க்கும்.

**மகரம்**-நல்ல விதமாக உங்களிடம் பழகியவர்களையும் நம்பகக் குறைவானவராக கருதுகிற மாறுபட்ட சூழ்நிலை ஏற்படலாம். நிறைவேற்ற வேண்டிய பணிகளை அக்கறையுடன் செயற்படுத்துவது உரிய பலனைப் பெற்றுத் தர உதவும். தொழிலில் எதிர்வரும் இடையூறை தாமதமின்றி சரி செய்வதால் உற்பத்தி, விற்பனை சீராகும். மாணவர்கள் ஆன்மிக நம்பிக்கை வளர்ப்பதால் மனம் தெளிந்த நீரோடை போல உருவாகும்.

**கும்பம்** - சமூகத்தில் பெற்ற நற்பெயரைப் பாதுகாப்பதில் அக்கறை கொள்வீர்கள். உடன்பிறந்தவர்களின் அன்பு, பாசம் அதிக அளவில் கிடைக்கும். எதிரியால் உருவாகிற தொந்தரவு விலகும். இல்லறத்துணையின் கூடுதல் அன்பு, பாசம் மனதுக்கு சந்தோஷம் தரும். தொழிலில் கூடுதல் மூலதனத்துடன் அபிவிருத்திப் பணி புரிவீர்கள். உத்தியோகத்தர் சிறப்பாகப் பணிபுரிந்து பாராட்டு, வெகுமதி பெறுவர். மாணவர்கள் கல்வியில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

**மீனம்**- தகுதிக்கு மீறிய செயல்களில் ஈடுபடக்கூடாது. எதிரியின் கெடு செயலை, மாற்று உபாயத்தால் சரி செய்ய வேண்டியதிருக்கும். இல்லறத்துணை, உங்களின் கருத்துகளை எதிர்மறையாக புரிந்து கொள்வார். தொழில் வியாபாரத்தில் கூடுதல் அக்கறையுடன் பணிபுரிவதால் மட்டுமே, சராசரி பணவரவு கிடைக்கும். பணியாளர்கள், ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்பட நேரிடலாம். கவனம் தேவை. மாணவர்கள் வெளியிடம் சுற்றுவதைக் குறைப்பதால் படிப்பில் கவனம் வளரும்.



# விதானம்

இரவின்
அந்தகாரத்தைப்பாடும்
ஒரு
இசையாளனுக்காய்
காத்திருக்கிறேன்

மார்போடு சிந்தும்
மௌனங்களை
நரம்பில் தேடும்
அவன் கைகள்
வலிமையாக இருக்கட்டும்

சபிக்கப்பட்ட
மரங்களில் செய்யப்பட்ட
பாகங்களால்
ஆக்கப்பட்டதால்
மீட்டுவாரின்றி
தவிக்கிறேன்

புதிய முரசறைந்து
பாவல விருத்தம்
பாடும்
அழகிய பாடலுக்காய்
என் மேனி
விறைக்கின்றது

எனக்காக
புறப்பட்ட குதிரைகள்
சகதியில்
இறங்கிவிட்டன
நீ
நம்பிக்கையின்
விதானத்தில்
ஏறி வருவாய்

யோகேஸ், நெடுந்தீவு

# பஞ்சுக்கரம்

ஒரு கவிஞனை
சந்திக்க காத்திருக்கும்
பொழுது உன்னதமானது

அது கன்னிப் பிரசவத்தின்
கறைகளற்ற
இன்பத்தைப் போன்றது


ஆயிரம் தோல்விகளில்
துவண்டு மீண்ட
துணிச்சலைப் போன்றது

மென்மையின்
பரிசத்தில் தழுவும்
பெண் தாதியின்
ஆறுதலைப் போன்றது

வீரமும் ஈரமும்
சேர்ந்து பிசைந்த
தாயின்
சோற்று உருண்டையின்
ருசியைப் போன்றது

அது
தாயகத்தின் ஏக்கத்தில்
தவிக்கும்
அந்தரிக்கும்
ஆன்மாவின்
சங்கீதம் போன்றது

அது கடவுள்கள் சந்திக்கும்
இராக்காலம் போன்றது
உண்மையானது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நூல்களில் பெண்ணியம்

தமிழ்நூல்களில் மிகப் பழைமை வாய்ந்ததாகக் கருதப்படுகின்ற தொல்காப்பியத்தின் நூற் பாக்கள் கூட பெண்ணடிமைக் கருத்துருவாக்கங்களைத்தான் காட்டி நிற்கின்றன. தொல்காப்பியம் ஆரியர் ஊடுருவலையும் காட்டி நிற்பது உண்மைதான் என்றாலும் தொல்காப்பியரின் வரைமுறைகள் ஆணாதிக்கத்தையும், பெண் அடிமைத்தனத்தையும் ஏற்றுக் கொண்டிருப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது. மேலைத்தேய ஆய்வுக்குச் சார்பாக மேலைத்தேய நாகரிக வாழ்வுக்கும் முந்தைய கீழைத்தேய நாகரிகமும் பெண் அடிமைத் தனத்தை சான்று பகருகின்றது.

உதாரணமாக தொல்காப்பியர் ஆண் மகனின் இயல்பைப் பற்றிக் கூறும்போது.

பெருமையும் ஊரனும் ஆடுஉ மேன
(தொல்காப்பியம்-பொருள்-களவு-7)

-என்று உயர்த்திக் கூறுவதை நாம் காணலாம். ஆனால் அதே தொல்காப்பியர் பெண்ணுக்குரிய இயல்பைப் பற்றிக் கூறும்போது.

அச்சமும் நாணமும் மடமும் முந்துறல்
நிச்சமும் பெண்பாற் குரிய

- என்ற கோடு கீறி வரையறை செய்கின்றார். தமிழில் பழமை வாய்ந்ததாகக் கருதப்படும் தொல்காப்பியத்தின் படி ஆண் மகன் உரமுடையவனாகவும் பெருமைக்குரியவனாகவும் காட்டப்படுகின்றான். ஆனால் பெண்ணோ அச்சம், மடம், நாணம் என்ற இயல்புகளைக் கொண்டு அழகுடையவளாக இரக்கம் உடையவளாக மெல்லியவளாக உணர்ச்சியை அடக்கும் ஆற்றல் அற்றவளாக, செயல்திறன் அற்றவளாக உருவகிக்கப்படுகின்றாள்.

சரி இல்லத்தலைவி குறித்து தொல்காப்பியர் என்ன கூறுகின்றார்?

***கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்***
***மெல்லியற் பொறையும் நிறையும்***
***வல்லிதின் விருந்து புறந்தருதலும்***
***சுற்றம் ஓம்பலும்***
***(தொல்காப்பியம்-பொருள்-கற்பு-11)***

-என்று இல்லத்தலைவியை தொல்காப்பியர் வரையறுக்கின்றார்.

அதாவது,இல்லறத்தில் பெண் ஒரு பதிவிரதையாகவும், நல்ல ஒழுக்கம் உள்ளவளாகவும், பெண்மையும், பொறுமையும், மனக்கட்டுப் பாடு உடையவளாகவும், விருந்து உபசரித்துச், சுற்றம் ஓம்புகின்றவளாகவும் இருக்கவேண்டும் என்று தொல்காப்பியர் கூறுகின்றார்.

இவை மட்டுமல்ல கணவன் என்பவன் மனக்கட்டுப்பாடு இல்லாமல் பரத்தையர்களிடம்-விலைமாதர்களிடம்-சென்று வரும்போதும் அவனது மனைவியானவள் சிரித்த முகத்துடன் கணவனை வரவேற்பவளாகத் தன்னை உருவாக்கிக் கொள்ளவேண்டும் என்றும் தொல்காப்பியர் தெரிவித்துள்ளார். பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்திலும் இத்தகைய கருத்துக்கள் தொனிக்கிறது.

சரி, தொல்காப்பியத்தைத் தவிர பிற தமிழ் இலக்கிய நூல்கள் என்ன சொல்கின்றன?

உதாரணத்துக்குப் புறநானூறில் ஒரு பாடலைப் பார்ப்போம். பூதபாண்டியன் என்ற அரசன் இறந்து விடுகின்றான். அப்போது அவனது மனைவியும் நாட்டின் அரசியுமான அவனது மனைவி பெருங்போப்பெண்டு என்பவள் இந்தப் பாடலைப் பாடுகின்றாள். இதுவரை காலமும் வந்த ஆய்வுகள் பலவும் கணவன் மீது மனைவி கொண்ட உயரிய அன்பினைக் காட்டுவதாகவே சொல்லி வந்துள்ளன. ஆனால் இந்தப்பாடலை ஒரு பெண்ணியப் பார்வையூடாகப் பார்க்கும்போதுதான் அக்காலத்துச் சமுதாயக் கொடுமைகள் தெளிவாகப் புலப்படுகின்றன.

***அனல்வரிக் கொடுங்காய் வாள் போழ்ந்திட்ட,***
***காழ் போனல்விளர் நறு நெய் தீண்டாது,***
***அடையிடைக் கிடந்த கழிப்பிழி பிண்டம்,***
***வெள்ளாய் சாந்தோடு புளிப்பெய்து,***
***அட்டவேளை வெந்தை வல்சியாக,***
***நீ பரற்பெய் பள்ளிப்பாய் இன்று வதியும்***
***-(புறநானூறு 246)***

இந்தப்பாடலின் கருத்தென்ன?

வெள்ளரி விதை போன்ற நெய்யற்ற நீர்ச்சோறு, எள்ளுத்துவை, புளியைக் கூட்டி சமைத்த வேளை இலை ஆகியவற்றை உண்டும், பாயில்லாமல் பருக்கைக் கற்கள் மேல் படுத்தும் கைம்மை நோற்க விரும்பும் பெண்ணல்ல நான்! எனக்கு ஈமத்தீயில் பாய்ந்து இறப்பதே மேலானதாகும்.!

:- என்பது இப்பாடலின் கருத்தாகும். கணவனை இழந்த பின்பு பெண்கள் வாழுகின்ற விதவை வாழ்வு எவ்வளவு கொடுமையானது, கடுமையானது என்பதை இப்பாடலின் உட்கருத்துச் சொல்கின்றது .தவிரவும் இப்பாடலில் கணவன்-மனைவியின் அன்பு நிலை குறித்து ஒரு வரியி லும் சொல்லப்பட வில்லை.

இதேபோலவே சிலப்பதிகாரத்தைப் பெண்ணிய நோக்கில் ஆய்வு செய்யும்போது பல சமுதாயக் கொடுமைகள் புலனாகின்றன. தனது கணவனான கோவலன் மாதவியிடம் சென்றபோது அவனது நடத்தை தவறு என்று கண்ணகி சுட்டிக் காட்டவில்லை.

அவன் தனது செல்வம் யாவற்றையும் இழந்தபோதும் கண்ணகி அவனைத் தடுக்கவில்லை. அவன் மாதவியை வெறுத்துத் திரும்பியபோது கண்ணகி தனது சிலம்பைக் கோவலனிடம் கொடுத்ததானது அவனது கெட்ட நடத்தையை நியாயப்படுத்துவதாக உள்ளது. அதாவது கற்புக்கரசி என்பவள் தனது கணவன் எந்தத் தவறு செய்தாலும் சுட்டிக் காட்டக் கூடாது. பெண்ணிய நோக்கில் பார்க்கும்போது கண்ணகி தன்னை அடிமையாக ஆட்படுத்திக் கொண்டாள் என்றும் ஆணினுடைய மேலாண்மைக்குத் துணை நின்றாள் என்றும் குற்றம் சாட்டத் தூண்டுகின்றது.

இதேபோல கண்ணகி தனது கணவன் அநியாயமாகக் கொலை செய்யப்பட்டான் என்பதை அறிந்தவுடன் வீறு கொண்டு எழுந்து அரசனிடம் சென்று வாதிட்டு நீதியை நிலைநாட்டும் போது இங்கே இவளைப் பெண் விழிப்புணர்ச்சிக்கு வித்திடுபவளாகவும் காணமுடிகின்றது. இருவேறுபட்ட நிலைகளை இங்கே காண்கின்றோம்.

இப்படியாக கற்பு என்ற சொல்லை வைத்து பெண்ணை இன்னமும் அடிமையாக்குகின்றது. எமது இனம் கற்பின் பெயரால் கடும் மூடநம்பிக்கைகளை மதம் சார்ந்த சடங்கு நெறிகளை பகுத்தறிவுக்கு ஒவ்வாத கருத்துக்களை இலக்கிய நூல்களும் புராண நூல்களும் பரப்பின.

கற்பு என்பதற்குப் பலவிதமான பொருள்கள் சொல்லப்பட்டன. கன்னிமையைக் காத்தல், பதிவிரதா தர்மத்தைப் பேணுதல் என்ற கருத்தாக்கங்கள் பரவலாக்கப்பட்டுள்ளன. சங்கக் காலம் எனக் கருதப்படும் காலத்தில் கற்பு என்பது கணவனுக்கு உண்மையாக நடப்பதாகும். பின்னர் வந்த புராண காலத்தில் கணவனின் அடிமை மனைவியாவாள் என்ற கருத்தாக்கம் கற்பு என்பதன் பெயரால் உருப்பெற்றது. கற்பு என்ற கருத்தாக்கம் பெண்ணை அடக்கி அடிமைப்படுத்தி உடைமைப் பொருளாக்கி இருட்டுலகில் தள்ளி விட்டது என்ற நவீனப் பெண்ணியவாதிகள் கடுமையாகச் சாடி வருகின்றார்கள்.

ஆண்-பெண் இருபாலாரும் சரி சமமமான சுதந்திரத்துடன் வாழவேண்டும் என்ற நிலைமை ஏற்பட வேண்டுமென்றால் கற்பு என்பதன் அடிப்படை இலட்சியமும் கொள்கையும் மாற்றப்பட்டு ஆண்-பெண் அனைவருக்கும் ஒரே நீதி ஏற்பட வேண்டும் என்ற பெரியாரின் கருத்து பெண்ணியத்திற்கு ஏற்ற ஒன்றாகவே காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளி திருமணம்

புத்தூர் விஸ்வம்.



சனங்கள் எதிர்பார்த்தற்கு மேலாக ராமு சிறப்பாகக் கோயில் நிர்வாகத்தை நடத்தினார். பழைய சுண்ணாம்புச் சுவர்களை இடித்துத் தள்ளி புதிய கட்டடங்களாக்கி மூன்றாவது வருடத்தில் கும்பாபிஷேகமும் செய்து வைத்தான். பேச்சுத் திறமை, அன்பு, கனிவு, தளராத ஊக்கம் போன்ற குணங்களால் பலரது பாராட்டுதல்களையும் பெற்றான். "உனக்கென்ன வேணியான் உன் மகன் அருமையாகக் கோவில் நடத்துகிறான்" என்று தந்தையான வேணியானை நண்பர்கள் புகழ்ந்தனர். இது பெரியவர் வேணியானுக்குப் பரம திருப்தி. தறிகெட்டு ஓடிய காளையை அடக்கி ஒரு வழிப்படுத்தியதில் மகிழ்ச்சி. மகனுக்கு ஒரு கல்யாணத்தை செய்து பார்க்க ஆசைப்பட்டார் வேணியான்.

தந்தை, தங்கை வேணியான் சிவநேத்திர பரம்பரையில் வந்தவர். பரம்பரையாக கோயில் நிர்வாகம் செய்த அனுபவமுள்ளவர். மகன் ராமச்சந்திரன் படித்துப் பட்டதாரியாகி பிரதேச செயலர் அலுவலகத்தில் கலாசார உத்தியோகத்தர் பதவியிலிருந்தாலும் சமூக சேவையிலும் துடிப்பாக ஈடுபட்டான்.

தந்தை மகன் ஆற்றும் உதவி முடிந்து மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி தொடங்கும் கட்டத்தில் ராமுவின் கல்யாணப் பேச்சுத் தொடங்கியது. மகனைப் பற்றிய புகழ்ச்சிகளால் ஈன்ற பொழுதிற் பெரிது வந்த தாயார் முத்தம்மாவும் மகன் விருப்பத்தை கேட்டுத் தான் செயற்பட வேண்டுமென தந்தைக்கு ஆலோசனை வழங்கினாள்.

மகனின் திருமணத்தின் நிமித்தம் எல்லாத் தரகர்களிடமும் சாதகக் குறிப்புகளைக் கொடுக்க வேணியான் விரும்பவில்லை. குலம் கோத்திரம் தெரியாமல் கண்டவனிடமும் பேசவிடக் கூடாதென்பது அவரது பிடிவாதம். தேடி வருபவர்களிடம் 'உன்ரை குறிப்பைத் தா நான் ஐயாவிடம் காட்டிக் கேட்கிறான் பிறகுவா" என்று தவணை கொடுப்பார். "ஒரு கல்யாணம் நடத்த ஆயிரம் செருப்புக்கள் தேயும்" என்ற பழமொழியை இவர் நிரூபித்துவிடுவார். சிலர் நடந்ததில் அலுத்துக் களைத்து சிவ சிவா என்று விட்டு விடுவார்கள். 'அதுவும் போச்சு அரிகரா இதுவும் போச்சு சிவ சிவா" என்று பேசாமல் போனவர்கள் ஏராளம் புறு புறுத்துக் கொண்டு போனவர்கள் தாராளம்.

தந்தையாரிடம் தனது திருமணப் பேச்சின் நிமிர்த்தம் பலர் வந்து போவது ராமுவுக்கு வெறுப்பாக இருந்தது. தந்தையார் நிற்கும் சமயமாகப் பார்த்து "அம்மா நான் காவிவேட்டி கட்டப் போறன். இங்கை வாறவங்களின்ரை தொந்தரவு கூடிப் போச்சு" என்று கூறி நின்றான் "ஏதோ கொப்பரோடை கதைச்சு ஒரு நல்ல முடிவுக்கு வாமோனை. காணி பூமி, நகை நட்டு, கை நிறையப் பொருள் பண்டம் வாங்க வேண்டாமோ?" என்று அங்கலாய்ப்புடன் கூறினாள் முத்தம்மா.

"அம்மா நீ காணி, பூமி, பொருள், பண்டம் என்று நில். அவர் குலம்,கோத்திரம், சாதகம் என்று நிக்கட்டும். உதுகள் எல்லாம் ஒன்றாய் கிடைக்கிறதெண்டால் திருக் கைலாயத்திலிருந்து பார்வதிதேவி தான் இறங்கி வர வேண்டும்" என்றான் ராமு.

ராமு இவ்வாறு கூறும் போது அவனது மனதில் உமாவின் தோற்றம். தன்னோடு யாழ். பல்கலையில் படித்த காலத்திலிருந்து அவளது காட்சிகள், நினைப்புக்கள் நிழற்படமாக தொடர்ந்தது.

உமா நல்ல மா நிறம். சற்றுக் கறுப்பு என்றாலும் கட்டழகி. குறுகுறு என்ற குத்தலான பார்வை அவளைப் பார்த்தவர்கள் கண்ணெடுக்க சில நிமிடங்களாகும். பெண்ணுக்கு பெண்ணே மயங்கும் இயல்பான ஒரு பேரழகு என்பார்களே. அது அவளிடம் காணப்பட்டது. அவளது தந்தை வேணியானுக்கு தூரத்து உறவு. அந்தக் காலத்தில் கம வேலை நிமித்தம் முல்லைத்தீவு சென்றவர். அங்கேயே தனது இஷ்டம் போல ஒரு பெண்ணைக் கட்டிக் கொண்டார். சாதி சனத்தை விட்டுக் குறைந்த இடத்துக்குப் போனவன். உவனோடை கொண்டாட்டம் வேண்டாம் என்று வேணியானின் ஆக்கள் ஒதுக்கினர்.

உமா முள்ளியவளை வித்தியானந்தாவில் படித்து யாழ்.பல்கலைக் கழகத்துக்குப் பிரவேசித்தாள். முதல் வாரம் றாக்கிங் நேரத்தில் ராமுவுக்கு அறிமுகமானவள். அவளது கவர்ச்சியான அழகும் இனிய பேச்சும் அவனைக் கவர்ந்திழுத்ததில் வியப்பில்லை. அவளது தந்தை தனது ஊரைச் சேர்ந்தவர் என்பது மேலும் ஒரு பிடிப்பைக் கொடுத்தது. "வேரோடி விளாத்தி முளைத் தாலும் தாயடி தந்தையடி தப்பாது" என்ற உறவு முறைக்குள் நெருக்க மாக்

பழகினர். பல்கலையில் படிக்கும் போது எத்தனையோ ஒன்று கூடல்கள், விழாக்கள், கொண்டாட்டங்கள், இனிய அனுபவங்கள், பட்டமளிப்பு விழா கவலையோடு பிரிந்து சென்ற நாள்கள் அனைத்தும் இன்றும் நினைக்க நினைக்க ராமுவின் நெஞ்சில் ஞாபகங்கள் நீரூற்றும் ஞாபகங்கள் தீ மூட்டும் ஞாபகங்கள் தாலாட்டும்" என்ற பாடல் வரிகளை நினைவூட்டின.

ராமு படித்த காலத்திலிருந்தே சொற்பொழிவுகள் விவாத மேடைகள் சுழல் பட்டிமன்றங்கள் என்று பலதும் கரை கண்டவன். அதனால் கோயில் தலைவராக இருந்த காலத்தில் கோயில் பிரசங்க மேதையாகினான். மாவட்டத்தின் பெருந்திருவிழாக்களில் கருத்தாழமும் கற்பனையும் மலிந்த சமூக சீர்திருத்த சமயப் பிரசங்கங்களிலும் பேர் புகழ் பெற்றான். முள்ளியவளை காளியம்மன் கோயில் மண்டலாபிஷேகத்தின்போது பாரதக் கதையையும் தற்கால சம்பவங்களையும் இணைந்து தொடர் பிரசங்கமாற்றினான். அந்தச் சந்தர்ப்பத்தில் உமாவின் வீடு செல்லவும் அவளோடு மீண்டும் கதைத்துப் பேசும் சந்தர்ப்பம் கிட்டியது. அவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

உமாவின் தந்தை "தம்பி நல்லாப் பிரசங்கம் பண்ணுறியள் பிரசங்கிமார் பலபேர் வெளி வேடம். வாய்ச் சவடல் மட்டும்தான் பேச்சுக்கும் செயலுக்கும் மாறுபாடு காணலாம். நீர் அப்படியில்லை நான் ஊருக்கு வந்த போது கேள்விப்பட்டன். ஒழுங்கும் ஆசாரமும் செயல் முறையிலும் இருக்கும்" என்று புகழ்ந்தார். "நீங்க ஒரு பெரிய மனுசன் என்னைப் போய் புகழுறியள். சந்தர்ப்பம் சூழ்நிலை கிடைத்தாலும் ஒழுக்கமாக நடப்பவன்தான். உயர்ந்தவன்" என அடக்கமாகப் பதில் அளித்தான். ராமு அப்போது அவளது கண்கள் வீட்டுப் பின்பக்கமாக பாரைக் கருவாடு காயப் போட்டிருந்ததையும் அவதானித்தான். இதைக் கண்ட பெரியவர் தம்பிக்குப் போகும் போது நல்ல பாரைக் கருவாடு கட்டித் தாறன்" என்றார் ஐயோ நாங்க சுத்த தாவர போசனம் என்றான் ராமு. உமா சிரித்துக் கொண்டே "விரத நாள்களில் நாங்களும் தாவர போசனிகள் தான்" என்றாள். "அப்போ பிறகு எப்படிக் காலம் தள்ளப் போறியள்" என்றான் ராமு. "தங்கள் சித்தமே அடியாள் பாக்கியம். மரக்கறியையே மரக்கறியாக எண்ணிக் கொள் வேன்" என்று நகைச்சுவையாக பதில் அளித்தாள் உமா.

"தம்பி ராமு நான் உங்கள் அப்பாவின் உறவினர்தான். அந்தக் காலத்தில் கமத்தொழில் நிமித்தம் முள்ளியவளை வந்தனான். உமாவின் அம்மாவைக் காதலித்துக் கைப்பிடித்தேன். சரியாக இப்போ உமா இருப்பதைப் போலத் தான் தாயிருந்தாள். என்னோடு பத்து வருடங்கள் ஆனந்தமாகக் குடித்தனம் நடத்தினாள். உமாவுக்கு எட்டு வயதான போது பாம்பு தீண்டி இறந்து விட்டாள். உமா தனது சிற்றண்ணையோடுதான் வளர்ந்து வந்தாள். எங்களுக்கு வேறு பிள்ளைகள் கிடையாது என்று தன் கதை கூறினார். பக்கத்தில் நின்ற உமாவும் சோகத்தில் கண்களைத் துடைத்துக் கொண்டாள். "இறைவன் என்ன நினைக்கிறானோ அதன் படியே எல்லாம்" நடக்கும். நமது கையில் ஒன்றும் இல்லை. எமை ஆளும் ஈசன் செயல் என்றும் நாம் அமைதி கொள்ள வேண்டும்" என்ற பிரசங்க வார்த்தைகளே ராமுவின் தேறுதல் வார்த்தைகளாயின.

"டேய் என்ன பகல் கனவு காணுகிறாய்" என்று தந்தை வேணியான் உரப்பிய போது தான் ராமு சுய நினைவுக்கு வந்தான். "அப்பிடி ஒன்றுமில்லையப்பா சும்மா விவாகம் பேசி ஆக்கள் வந்து போறது எனக்குப் பிடிக்கேல்லை" என்று நறுக்காகப் பதில் அளித்தான் ராமு.

"அப்ப தம்பிக்கு தேவலோகத்திலை இருந்து ஒரு பெண் இறங்கி வருவாளே? ஊரிலை உலகத்திலை பேசாமல் எப்படிச் செய்யிறது" என்றார் தந்தை வேணியான். "இல்லையப்பா தம்பி தேர்த்திருவிழா அன்று பேசிய வள்ளி திருமணம் கதை கேட்டனியளே, தேவலோகத்திலிருந்து வள்ளி நம்பிராசனுக்கு மகளாக வரேல்லையே? அப்பிடித்தான் என்ரை தம்பிராசனுக்கும் ஒரு வள்ளி வராமலே போகப் போறாள்" என்று தாய் முத்தம்மா வக்காலத்து வாங்கினாள். 'நித்தம் நித்தம் மாறுகின்ற எதத்தனையோ நெஞ்சில் நினைத்தவற்றில் நடந்தது தான் எத்தனையோ" என்று பாடியவாறு ராமுவின் நண்பன் லவன் வந்தான். மாமி சென்ற வாரம் நானும் முல்லைத்தீவு போனனான். உங்க மகன் தொடர் சொற்பொழிவில் ஒரு கலக்கு கலக்கினார். அங்கேயும் வள்ளி திருமணம் அரங்கேறியது என்று ஒரு பீடிகை போட்டான்.

ராமு லவனைப் பார்த்து கண் சிமிட்டி ஏதோ சைகை காட்டினான். தந்தை வேணியான் "என்னடாப்பா கண்ணாலை கதை பேசிறியள்" என்று உறுக்கினார். "இல்லை மாமா மாமி சொன்னபடி வள்ளி திருமணம் நடந்து" போச்சு எனறு மீண்டும் அவனை உசுப் பேத்தினான்.

அந்த நேரம் பார்த்து ராமுவின் கைத்தொலைபேசி கிணு கிணுத்தது. யாரோ ஒரு பெண் குரல் பேசுவது தெளிவாகக் கேட்டது. "நன்றி சொல்ல வேண்டும் இறைவனுக்கே நல்ல படி செய்தான் இன் அமுதே" என்று இனிய குரலில் பாடலும் கேட்டது.

லவன் மீண்டும் கண்சிமிட்டி சைகைகள் காட்டினான். சிவ கோத்திர கங்கை வேணியானுக்கும் நெற்றிக் கண் மட்டும் இருந்திருநதால் லவன் எரிந்து சாம்பலாகியிருப்பான். என்ன செய்வது "எடே பொடியள் இந்த வேணியானுக்கு வேட்டு வைச்சுப் போட்டியளே என்று ஒரு காட்டுக் கத்தல் கத்தினார். தாய் முத்தம்மாவோ அந்த சந்தோசத்தோடு வள்ளி திருமணத்தைக் காணத் தயாராகினாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "நாங்களும் ஹீரோக்கள்தான்"

"இந்திய அணியின் வெற்றியில் அனைத்து மூத்த வீரர்களுக்கும் பங்குள்ளது என்பதை மறந்துவிடக்கூடாது. நாங்களும் ஹீரோக்கள்தான்" இவ்வாறு கூறியிருப்பவர் வேறு யாருமல்ல. இந்திய அணியின் நட்சத்திர வீரராக இருந்த யுவராஜ் சிங். இந்திய அணியின் நட்சத்திர வீரர் யுவராஜ் சிங் 2011ஆண்டு நடந்த உலகக் கிண்ணத் தொடரில், தொடர் நாயகன் விருதைத் தட்டிச் சென்றார். அதன் பின் ஏற்பட்ட நுரையீரல் புற்று நோயிலிருந்து மீண்ட இவர், 2012ஆம் ஆண்டுக்கான '20/20' உலகக் கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் இடம் பெற்றார்.
எனினும் சிறந்த பெறுபேறுகளை வெளிக்காட்டாததால் இந்திய அணியிலிருந்து தற்போது நீக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மனம் திறந்து பேசிய யுவராஜ்சிங்,
"எதிர்வரும் உலகக் கிண்ண அணியில் நான் இருந்தாலும், இல்லாவிட்டாலும் இந்தியா திறமையான அணியையே தேர்ந்தெடுக்கும். அதேநேரம் அதில் இளமை மற்றும் அனுபவம் கலந்திருக்கும் என்று நம்புகிறேன்.
இந்த தேர்வின் போது, வீரர்களின் முந்தைய சாதனைகளை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் ஒருபோதும் கூறப்போவது இல்லை. ஆனால் கடந்த காலத்தில் அந்த வீரர்கள் பெற்றுத்தந்த வெற்றி மற்றும் தேசத்துக் காக என்ன சாதித் தனர் என்பதை மறந்து விடக் கூடாது.
அண்மையில் இளம் வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப் படுத்துகின்றனர். இந்திய அணி சம்பியன்ஸ் தொடர் மற்றும் சிம்பாப்வே தொடரில் அசத்தியது மகிழ்ச்சி தருகிறது. இது இந்திய கிரிக்கெட்டுக்கு நல்ல சகுனம் தான்.
அடுத்த உலகக்கிண்ணத் (2015) தொடருக்கு இன்னும் ஒன்றரை ஆண்டுகள் உள்ளன. இந்நிலையில் நாளை என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியாது. இருப்பினும் விரைவில் இந்திய அணியில் இடம் பெற முயற்சிப்பேன். என்னைப் பொறுத்தவரை அதற்காக என்ன வேண்டுமானாலும் செய்வேன். அதனால் தான் பிரான்ஸ் சென்று பயிற்சியில் ஈடுபட்டேன். இதன் மூலம் நல்ல உடற்தகுதியை பெற்றுள்ளேன். என்னுடன் வந்த ஜாகிர் கான், உடல் எடையில் 6 கிலோ குறைத்துள்ளார். நாங்கள் இருவரும் நல்ல நண்பர்கள். அதனால் பயிற்சியின் போது ஒருங்கிணைந்து செயற்பட உதவியாக இருந்தது" என்று கூறுகின்றார் யுவராஜ்.



"முந்தைய சாதனைகளை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் ஒருபோதும் கூறப்போவது இல்லை. ஆனால் கடந்த காலத்தில் அந்த வீரர்கள் பெற்றுத்தந்த வெற்றி மற்றும் தேசத்துக் காக என்ன சாதித் தனர் என்பதை மறந்து விடக் கூடாது.

# குடுமிப்பிடி சண்டை



சாய்னா நேவால்




ஜுவாலா கட்டா

இந்திய பூப்பந்து வீராங்கனைகளான சாய்னா நேவால் மற்றும் ஜுவாலா கட்டா இருவரும் கட்டிப் புரண்டு சண்டையிடாத குறையாக மோதியுள்ளனர் சமூக வலைத்தளமான டுவீட்டரில்.
முன்னாள் பூப்பந்து வீரரான தௌபீக் ஹிதாயத்துக்காகவே சண்டையிட்டுள்ளனர் இந்த இரு வீராங்கனைகளும். அண்மையில் இந்தியன் பூப்பந்தாட்ட லீக் தொடரில் பங்கேற்கும் வீரர்களுக்கான ஏலம் நடைபெற்றது. முன்னாள் உலக சம்பியனான தௌபீக் ஹிதாயத் அந்த ஏலத்தில் அதிக விலை போகவில்லை. அதனால் நொந்து போன தௌபீக் ஹிதாயத், "போட்டி ஏற்பாட்டாளர்கள் வெளிநாட்டு வீரர்களை சரியான முறையில் வழி நடத்தவில்லை. ஏலத்தில் வெளிநாட்டு வீரர்களை விட இந்திய வீரர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டு, அதிக தொகைக்கு ஏலம் விடப்பட்டுள்ளனர். போட்டி அமைப்பாளர்கள் உலக தர வரிசையை கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. இதுவே எனது முதலும் கடைசியுமான இந்திய பூப்பந்துப் போட்டியாகும்" என்று குமுறியிருந்தார்.
அதற்கு சாய்னா பதிலளிக்க கிளம்பியது டுவீட்டர் சண்டை.
"தான் ஓய்வு பெற்றதை முதலில் ஹிதாயத் உணர வேண்டும். எனவே பெரிய விலைக்கு வாய்ப்பில்லை என்பதையும் உணர வேண்டும். ஹிதாயத் நிச்சயம் பெரிய வீரர்தான், அதில் மாற்றுக் கருத்தே கிடையாது. ஆனால் தனக்கு என்ன கிடைத்துள்ளதோ அதைக் கொண்டு திருப்திப்படுவதே சிறந்தது. உள்ளூர் வீரர்களுக்கு வாய்ப்பளிக்கவே இந்தத் தொடர் என்பதை அவர் நினைவில் கொள்ள வேண்டும்" என்று டுவீட்டரில் திருவாய் மலர்ந்தார் சாய்னா. இதைப் பார்த்து வெகுண்டெழுந்த ஜுவாலா, "ஹிதாயத் மிகச் சிறந்த வீரர்களில் ஒருவர். அவர் ஓய்வு பெற்று விட்டர் என்று எப்படி அவரை ஓரம் கட்ட முடியும். அவரது கருத்துகளுக்கும், விருப்பத்திற் கும் மதிப்பளிக்காமல் போக முடியுமா? விளையாட்டில் நீங்கள் எவ்வளவு பெரியவராக இருந்தாலும் பரவாயில்லை. உங்களது சக வீரர்கள், வீராங்கனைகளுக்கும் மதிப்பளிக்க வேண்டுமல்லவா... யாரும் ஹிதாயத் குறித்து இப்படிப் பேசுவது சரியல்ல.
நான் இங்கு பணம் பற்றிப் பேசவில்லை. ஓய்வு என்று சொல்லி யாரையும் மதிப்புக் குறைத்துப் பார்க்கக் கூடாது. மரியாதையும், கௌரவமும் தான் இங்கு முக்கியம், பணம் அல்ல. அவர் செய்த சாதனைகளை மறந்து விடாதீர்கள் என்று பாய்ந்துள்ளார் ஜுவாலா. ஆனால் ஹிதாயத்தோ நிம்மதியாக தொடரில் விளையாடி வருகின்றாராம்.(ற)

# ஜடேஜாவுக்கு வந்த ஆசை

சூதாட்டத்தில் பிரபல்யமான அஜய் ஜடேஜாவுக்கு மீண்டும் கிரிக்கெட் மீது ஆசை பிறந்துள்ளது. அவர் தான் ரஞ்சிக் கிண்ணத் தொடரில் விளையாட தயாராக இருக்கின்றேன் என்று தற்போது அறிக்கை வெளியிட்டுள்ளார்.
1992ஆம் ஆண்டு சர்வதேச ஒருநாள் மற்றும் டெஸ்ட் ஆட்டங்களில் முதன்முதலில் களமிறங்கிய இந்திய கிரிக்கெட் வீரர் அஜய் ஜடேஜா 2000ஆம் ஆண்டு வரை விளையாடினார்.
42 வயதான இவர் இதுவரை 15 டெஸ்ட் (576 ஓட்டங்கள்), 196 ஒருநாள் (5359 ஓட்டங்கள்) ஆட்டங்களில் விளையாடி உள்ளார்.
அதன்பின் சூதாட்டக் குற்றச்சாட்டில் சிக்கிய இவருக்கு ஐந்து ஆண்டுகள் ஆட்டங்களில் விளையாட தடை விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து மேன்முறையீடு செய்த அவருக்கு, 2003ஆம் ஆண்டு புதுடில்லி நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் தடை நீக்கப்பட்டு உள்ளூர் மற்றும் சர்வதேச ஆட்டங்களில் விளையாடலாம் என்று தெரிவிக்கப்பட்டது.
அதையடுத்து 2005ஆம்ஆண்டு ரஞ்சிக் கிண்ணத்துக்கான ராஜஸ்தான் அணியின் அணித்தலைவர் மற்றும் பயிற்சியாளராக களமிறங்கினார்.
தற்போது வந்துள்ள ஆசையின் காரணமாக ஆறு ஆண்டுகளுக்கு பின் மீண்டும் அடுத்தாண்டு நடக்கவுள்ள ஏழாவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
இது குறித்து அஜய் ஜடேஜா கூறுகையில்,
"இந்தியாவில் நடக்கும் ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் விளையாடும் எண்ணம் கிடையாது. ஏனெனில் '20/20' போட்டியில் விளையாடுவதற்கேற்ப உடற்தகுதி என்னிடம் இல்லை.
எனவே ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் போது, தொலைக் காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளராகவே தொடர விரும்புகிறேன். அதேவேளையில் உள்ளூர் தொடர்களில் ஒன்றான வரலாற்று சிறப்புமிக்க ரஞ்சிக் கிண்ணத் தொடரில் அரியானா அணிக்காக விளையாட விரும்புகிறேன். வாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில் இளம் வீரர்களுடன் இணைந்து விளையாட தயாராக உள்ளேன்." என்று தெரிவித்துள்ளார். (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயம் 25 08 2013 ஞாயிற்றுக்கிழமை

# தேர்தலில் ஆர்வம் ஏதுமின்றி மத்திய மாகாண மக்கள்




● ஆர்.சனத்

மத்திய மாகாணசபைத் தேர் தல் களம் இன்னும் சூடுபிடிக்க வில்லை. சோபையிழந்து காணப்படுகின்றது. வாக்களிப்பதில் எவ் வித நாட்டமுமின்றி ஏனோ தானோ என்ற மனோநிலையிலேயே மக்கள் இருக்கின்ற னர்.

வாக்குரிமை பறிபோனாலும் பரவா யில்லை; வாக்களிக்கப்போவதில்லை என்று அநேகர் தம் அதிருப்தியையும், அவநம் பிக்கையையும் எம்மிடம் வெளிப் படுத்தினர்.

மத்திய மாகாணசபைத் தேர்தல் கள நிலவரம் தொடர்பில் ஆராய்வதற்கென கண்டி, நுவரெலியா, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் ஒரு திடீர் சுற்றுப்பயணம் செய்தோம்.

தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் எனப் பல்லினத்தவர்களையும் நேரில் சந்தித்துக் கலந்துரையாடியபோது அவர்கள் இந்த அர சியலில் விரக்தி அடைந்திருக்கின்றனர் என்று தெரிந்தது.

### வாக்களிப்பில் ஏன் ஆர்வமில்லை?

ஏன் வாக்களிக்காமல் இருக்கத் தீர்மா னித்துள்ளார் என்று கண்டியைச் சேர்ந்த அங்காடித்தெரு வியாபாரிகள் சங்கத்தின் உறுப்பினர் என்.எம். தர்மதாச விளக்குகிறார்.

"கடந்த காலங்களில் எமக்கு வழங்கிய உறுதிமொழிகளை அரசியல்வாதிகள் இன் னும் நிறைவேற்றவில்லை. ஆளுந்தரப் பாக இருந்தாலும் சரி, எதிரணியாக இருந்தாலும் சரி இருதரப்பும் ஒரே குட் டையில் ஊறிய மட்டைகளே.

கொளுத்தும் அகோர வெயிலில் நாங்கள் காய்கின்றோம். அவர்கள் பென்ஸ் காரில் வீதி உலா வருகின்றனர். சொகுசு வாழ்க் கையில் சுகங்காணும் பிரகிருதிகளால் வாக் காளப் பெருமக்களுக்கு எந்தப் பயனும் கிடையாது. எனவே, எவருக்கும் வாக்களிக் கமாட்டோம். அரசியலே வெறுத்துப்போய் விட்டது. வாக்களிப்பதால் எங்களுக்கு என்ன பயன்?

எவராவது பணம் கொடுத்தால் வாக்கு அட்டைகளை வழங்குவதற்குத் தயாராக வுள்ளோம். நீங்கள் பணம் கொடுத்தால் உங்களுக்குக்கூட அவற்றை வழங்கு வோம். இந்த நிலைக்கு நாம் தள்ளப்பட் டுள்ளோம்" - என்றார்.

அதிர்ச்சி அளிக்கும் அவரது வாக்கு மூலம் இன்றைய அரசியல்வாதிகள் குறித்து மக்களின் மன வெளிப்பாடாகத் தெரிகி றது.

"எங்களது குடும்பத்தில் 15 வாக்குகள் இருக்கின்றன. எவருக்கும் போடவேண் டாம் எனக் குடுப்பத்தினருக்குக் கூறி விட்டேன். இந்த முறை ஊர்ப்பக்கம் அவர்கள் முடிந்தால் வரட்டும் பார்ப்போம்." - என்று கோபப் படுகிறார் கண்டி யைச் சேர்ந்த நஷார்.

கண்டி மாவட்டத்தில், கம்பளை, கஹட்ட பிட்டிய, இல்லவத்துர, புஸல்லாவை, அட்டபாகை, தெல்பிட்டிய, மெல்போர்ட், களுகல்லை, தெல் தோட்டை, பேராதனை, கெலி ஓய, வெலிகல்ல, வட்டதெனிய ஆகிய பிரதேசங்களில் வாழும் மக்கள் பலரும் தேர்தல் தொடர்பில் "இம்முறை வாக்க ளிக்கமாட் டோம்!" என்று தான் திரும்பத் திரும்பத் தெரிவித்தனர்.

கண்டி வாழ் மக்களின் மனோ நிலை தான் இப்படி இருக்கின்றது. சரி! தேர்தல் தொடர்பில் நுவரெலியா மாவட்ட மக்க ளின் நிலைப்பாடு எவ்வாறு இருக்கின் றது என்று பார்க்க பயணித்தோம். அங்கு வாழும் மக்களும் நம்பிக்கை இழந்து விரக்தி நிலையி லேயே உள்ளனர் .

அதிலும் குறிப்பாக, தோட்டப்புறத்து மக்கள் " வாக்களித்தும் கண்டபலன் என்ன? என்ன பிரயோசனம்?" என்றே சரமாரியாகக் கேள்விக் கணைகளைத் தொடுக்கின்றனர்.

ஹட்டன் மல்லியப்பு தோட்டத்துக்குச் சென்றி ருந்தவேளை செல்லையா என்ப வர் என்னு டன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். அப்போது மேலும் பலரும் அங்கு வந்து, தமது குறைகளைப் பட்டியலிட்டுக் காட்டி னர்.

"எங்களுடைய லயத்தைப் பாருங்கள்... பல வருடங்களாக இப்படியேதான் இருக் குது. ஓட்டுப்போட்டும் என்ன பயன்? இந்த முறை நாம் போடமாட்டோம்." என்றனர் ஹட்டன் மல்லியப்பு தோட்டத்து மக்கள். நுவரெலியா, ரம்பொடை, தலைந்தன்னை, லபுகல்ல, கொத்மலை, தலவாக்கலை, பொகவந்தலாவை ஆகிய பகுதிகளில் வாழும் பலரிடம் பேசினேன். அவர்களும் இதே கருத்தையே தெரிவித்தனர்.

### கள்ளுக்குடிக்க சுதந்[illegible] இம்முறை வாக்களிக்க[illegible]

கொட்டக்கலை நாட்டாமைகளும் இம்முறை

## "ஆண்களுக்கு சாராயம் கிடைக்கிறது எமக்கு 2 கிலோ அரிசி தரலாமே"

பெண் ஒருவரின் ஆலோசனை இது

தேர்தலில் வாக்களிக்க விரும்பவில்லை. ஆனால், அவர்களின் பிரச்சினையோ வேறு.

"இரவும் பகலுமா உழைக்கிற எங்களுக்கு ஒரு போத்தல் கள்ளுக்கூட நிம்மதியா குடிக்க முடியல. பொலிஸில புடிக்கிறாங்கள். ரயில் ரோட்டுல நடந்தால் 5 ஆயிரம் தண் டம். எங்களுக்கு எந்த உதவியும் இல்ல. இன்னும் லயத்துலதான் வாழ்றோம். பிற கெதுக்குங்க நாங்க ஓட்டுப் போடனும்.....?" என்பது அவர்களது ஆதங்கம்.

மாத்தளை மாவட்டத்திலும் இதே நிலை தான். "எங்களுடைய பிள்ளைகளெல்லாம் படிச்சி பெரியாளாகிட்டார்கள். எனவே, இனி எங்களுக்கு ஓட்டுக் கார்டு முக்கியமில்லை. ஓட்டு போட்டாலும் ஒன்றுதான். போடாவிட்டாலும் ஒன்றுதான்" என்று குறிப்பிட்டார் மாத்தளை பஸ்நிலையத் தில் நின்றுகொண்டி ருந்த இராசமாணிக்கம்.

### ஐ.தே.கவை விமர்சிக்கும் மக்கள்

அதேவேளை, கண்டி, மாத்தளை மாவட் டத்தில் வாழும் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியைக் கடுமையாக விமர்சிக்கின்றனர்.

எதிர்க்கட்சி பலமில்லாததால் அவர்கள் நடத்தும் பரப்புரைக் கூட்டத்துக்குக்கூடப் போகமுடிய வில்லை என்று கூறுகின்றார் சி.ஜீ.பிரேமரத்ன.

"நாங்கள் பரம்பரையாகவே யூ.என்.பி. காரர்கள். அவர்களால் வெற்றி பெறமுடிய வில்லை. வாக்களித்து என்னதான் பயன்? எப்படியும் அவுங்தானே வரப்போறாங்க. நம்ப ஆக்கள் உருப்படமாட்டாங்க துரை" என்றார் ஜயமால புரவைச் சேர்ந்த தெய் வானை.

மாத்தளை, கண்டி வாழ் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியை விமர்சித்தாலும், நுவரெ லியா மாவட்ட மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இம்முறை வெற்றிவாய்ப்பு இருக்கின்றது என்று நம்பிக் கையுடன் கூறுகின்றனர்.

### தொண்டா- திகா குழு மோதலால் [illegible] மக்கள் பதற்றத்தில்

நுவரெலியா மாவட்டத்தில் நான்கு தேர்தல் தொகுதிகள் இருக்கின்றன. அவற்றில் நுவரெ லிய- மஸ்கெலிய தேர்தல் தொகுதியிலேயே அதிக வாக்குகள் (2,84,684) இருக்கின்றன.

இந்தத் தேர்தல் தொகுதியிலேயே கொட்ட கலை இருக்கின்றது.

அண்மையில் இங்கு ஏற்பட்ட மோதலால், தேர்தல் தொடர்பில் அச்ச நிலையிலேயே மக்கள் இருக்கின் றனர். இரண்டு தோணிகளில் கால்வைத்த சுரண் டல் பேர்வழிகளுக்கும் மண்ணின் மைந்தர் களுக்குமான மோதல் இதுவென இளைஞர்கள் ஆரவாரித்தனர்.

### நுவரெலியாவில் வன்முறை வெடிக்கும் அபாயம்

"மீட்டிங்'குக்குப் போனால் சண்டையா தான் இருக்கு. தமிழனும் தமிழனும் அடிச் சிக்கி றாங்களே... வெக்கமா இல்லையா இவங்களுக்கு? நாங்க சொன்னமென்னு நீங்க எழுதுனீங்கனா... சொன்ன எங்கள நாளைக்கு வந்து சுட்டுப் போட்டிடுவாங்க தம்பி.

இவங்களுக்கு மக்கள் முக்கியமில்லை. யாருக்கு பென்ஸ்கார் வேணுங்கிறது தான் முக்கியம்" என்று கொட்டகலை வாழ் மக்கள் தெரிவித்தனர். தயவுசெய்து பெயரையோ படத்தையோ போடவேண்டாம் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

"தமிழர்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டு தமிழ் பிரதிநிதித்துவம் குறையவேண்டும் என்பதற் காகவே அரசு தொண்டாவுக்கும் திகாவுக்கும் இடையில் மோதலை ஏற்படுத்திவிட்டுள்ளது.

இனிவரும் காலத்தில் இரு தரப்பு மோதல் உக்கிரமடையலாம். கடந்த முறை கொலன் னாவையில் போன்று இம்முறை நுவரெலியா மோதல் களமாக மாறும் அபாயமுள்ளது" என்று கொட்டகலை சமூக ஆர்வலர்கள் குறிப்பிடு கின்றனர். அவர்களும் தங்களுடைய பெயரைக் குறிப்பிட மறுத்து விட்டனர்.

### மத்திய மாகாண சபைத் தேர்தலில் குடும்ப ஆதிக்கம்

அதேவேளை, மத்திய மாகாண சபைத் தேர்தலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறை என்றுமில்லாதவாறு அமைச்சர்களின தும், நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் உறவினர்கள் களமிறக் கப்பட்டுள் ளனர்.

கண்டி மாவட்டத்தில் அமைச்சர் மஹிந் தானந்த அளுத்கமகே தனது மைத்துனரான வீரசிங்க அளுத்கமகேவை புதிதாகக் களமிறக்கியுள்ளார். பிரதமரின் மகனுக்கும் வாய்ப் பளிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில், அமைச்சர்க ளான எஸ்.பி. திஸாநாயக்க, சி.பி. ரத்நாயக்க ஆகியோர் தமது சகோதரர்களையும் ராதாகிருஷ்ணன் தனது மகனையும், திகாம் பரம் எம்.பி. இரு உறவினர்களையும் கள மிறக்கியுள்ளனர்.

இவ்வாறு அரசியல் கட்சிகள் ஒவ்வொன் றும் தமக்கு நெருங்கியவர்களுக்கு வாய்ப்ப ளித்திருப்பது தொடர்பில் மக்கள் மத்தியில் எவ்வித எதிர்ப்பும் இல்லை.

"வாரிசு, குடும்ப அரசியல் அன்றுதொட்டு இன்றுவரை இருந்துதானே வருகிறது. அவர்களைத் தெரிவுசெய்வதும் நாம்தானே. யார் அரசியலுக்கு வந்தாலும் பரவாயில்லை. எங்களுக்கு சேவைதான் முக்கியம். அது நடைபெறுவதில்லையே" என்று மட்டுமே மக்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பில் "மக்கள் மத்தியில் விழிப் புணர்வு இல்லாவிட்டால் எதையும் செய்ய முடியாது" என்று பதில் வழங்கினர் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள்.

**போஸ்டர்களுக்கு பஞ்சமில்லை**


கண்டி மாவட்டத்தில். கம்பளையிலிருந்து புஸல்லாவை செல்லும்வரை பிரதமரின் மகனின் போஸ்டர்களே அதிகளவு ஒட்டப்பட் டுள்ளன.

போஸ்ட்டர்களை அகற்றுவதுபோல் பொலிஸார் பாசாங்கு செய்துள்ளனர் என்று தெரிகிறது. ஆளுந்தரப்பு உறுப் பினர்களின் முகங்கள், இலக்கங்கள் ஆகியவை தெரியும் விதமாகவே போஸ் டர்கள் கிழிக்கப்பட்டுள்ளன. பல இடங்களில் கட்டவுட்கள் அகற்றப் படவில்லை.

மறுபுறம் கம்பளையிலிருந்து நாவலப் பிட்டிய எல்லை முடியும் வரை அமைச்சர் மஹிந்தா னந்த அளுத்கமகேயின் இளைய சகோத ரரதும், மைத்துனரி னதும் போஸ்டாகளே அதிகளவு காணப் படுகின்றன.

நுவரெலியா மாவட்டத்தில் தொண்ட மான், திகாம்பரம் ஆகியோரின் கட்சிகளில் போட்டி யிடும் வேட்பாளர்களின் போஸ் டர்கள் தோட் டப்புறங்களை ஆக்கிரமித் துள்ளன. இவை தேர்தல் விதிகளை அப்பட்ட மாக மீறும் செயல் எனக் கண்காணிப்பு அமைப்புகள் சுட்டிக்காட் டினாலும் அது பற்றி யாரும் அலட்டிக் கொள்ள வில்லை.

மாலையில் பொலிஸார் போஸ்டர்களைக் கிழிப்பதும் மீண்டும் கட்சி ஆதரவா ளர்கள்



"வாரிசு, குடும்ப அரசியல் அன்றுதொட்டு இன்றுவரை இருந்துதானே வருகிறது. அவர்களைத் தெரிவுசெய் வதும் நாம்தானே. யார் அரசியலுக்கு வந்தாலும் பரவாயில்லை. எங்களுக்கு சேவைதான் முக்கியம். அது நடைபெறு வதில்லையே"

இரவோடிரவாக போஸ்டர்களை ஒட்டு வதுமான வேடிக்கை மத்திய மாகா ணத் தேர்தல் களத்தில் காணப்படுகின்றது.

எம்முடன் உரையாடியவர்களுள் சில ருக்குத் தேர்தல் எப்போது என்றும், இது மாகாணசபைத் தேர்தலா அல்லது நாடாளுமன்றத் தேர்தலா என்றும் புரியவில்லை.

தேர்தலில் போட்டியிடாத பொன்சேகா, மனோ கணேசனுக்கே தாம் வாக்களிக்க வுள்ளனர் என்றுகூடச் சிலர் தெரிவித்தனர்.

"ஆளுந்தரப்பில் போட்டியிடும் வேட்பா ளர் பெயரையும், எதிரணியில் போட்டியிடும் வேட்பாளர் பெயரையும் சுட்டிக்காட்டி இவர் களுக்கே இம்முறை நான் வாக்களிப் பேன்" என்று புஸல்லாவையிலிருந்து பெரட்டாசி செல்லும் பஸ்ஸுக்காகக் காத்துக்கொண்டிருந்த வீரையா குறிப்பிட்டார்.

தேர்தல் தொடர்பிலும் வாக்களிக்கும் முறை குறித்தும் சிலருக்கு இன்னும் தெளிவில்லை என்பதே இதன்மூலம் தெரியவருகின்றது. எனவே, தேர்தல் அமைப்புகளும், சமூக அமைப் புகளும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக் கைகளை இன்னும் தீவிரப்படுத்த வேண் டும்.

**தேர்தல் முடிந்ததும் வேலைக்காக காத்திருக்கும் இளைஞர் பட்டாளம்**

தேர்தல் பரப்புரையின்போது வேட்பாளர் கள் உறுதிமொழிகளை அள்ளி வீசியுள்ளனர் என் பதை இளைஞர்களின் கருத்துகள் பிரதிபலிக் கின்றன.

'ரோட்டு' போட்டுத் தருவதாகக் கூறி னார்கள்; தகரம் வாங்கித் தருவதாக உறுதி யளித்தார்கள்; வீட்டுப் பத்திரம் பெற்றுத் தருவதாகத் தெரிவித் தார்கள்; வாசிகசாலை, மைதானம் அமைத்துத் தருவதாகச் சொன் னார்கள் என்று உறுதிமொழிப் பட்டியலை அடுக்கிக்கொண்டே செல்கின்றனர்.

படித்த இளைஞர்கள் சிலர் தேர்தல் முடிவ டைந்ததும் அரசவேலை பெற்றுத்தருவதாக ஐயா கூறினார் என்றும், அதற்காகத் தாம் தேர்தலில் இறங்கி வேலைசெய்யவுள்ளனர் என்றும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

" கடந்த முறையும் இப்படித்தான் சொன் னார்கள், ஆனால் இன்னும் நாங்கள் வேலையில்லாமல் தானே இருக்கின்றோம் " என்று விரக்தியு டன் கூறும் இளைஞர்களும் இல்லாமல் இல்லை. யுவதிகள் கருத்துக் கூறுவதற்கு வெட்கப்பட்டனர். தேர்தல் தொடர்பில் புன்னகையே அவர்களின் பதில் களாகக் கிடைக்கின்றன.

**சாராயம் வேண்டாம் அரிசி தாருங்களேன் ஐயா!**

தேர்தல் சூடுபிடிக்காததால் மக்கள் வெள்ளத் தைத் திரட்டுவதற்கு வேட்பாளர்கள் அதிக நிதியை செலவிட வேண்டியதாகவுள்ளது.

உணவு, மதுபானம், பணம் என சலுகைகளை வழங்கினாலேயே ஓரளவாவது மக்கள் வருகின் றனர் என்று ஆளுந்தரப்பு வேட்பாளர் ஒருவரின் விருப்பு இலக்கம் அடங்கிய கையேட்டை ஹட்டனில் விநியோகித்துக் கொண்டிருந்த ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.

"கூட்டத்துக்கு வரும் ஆண்களுக்கு சாராயம் வழங்கப்படுகின்றது. நாங்கள் குடிக்கமாட் டோம். எங்களுக்கு அரிசி 2 கிலோவாவது வழங்கினால் நல்லதுதானே " என்ற யோச னையை முன்வைத் தார் கண்டி மடுல் கலையைச் சேர்ந்த பெண்மணி கே.மனோன் மணி. வேட்பாளர்கள் கட்டாயம் கவனத்தில் எடுக்க வேண்டிய யோசனை இது.

**நுவரெலிய தேர்தல் களத்தை கலக்கும் 'கசிப்பு'**

இத்றகிடையில், நுவரெலியாவில் தோட்டப் புறங்களில் பரப்புரைக் கூட்டங்களுக்குச் செல்லும் தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசியல் கட்சிகள் கசிப்பு வழங்குகின்றன என்றும், தேர்தல் தினத் தன்று உணவு சகிதம் அரைப் போத்தல் சாராயம் வழங்குவதற்கு சில கட்சிகள் தீர்மானித்துள்ளன என்றும் பெயர் குறிப்பிடவிரும்பாத நுவரெலியா மாவட்ட ஆசிரியர் ஒருவர் குற்றஞ்சாட்டினார்.

மஸ்கெலியா, நோர்வூட், ரம்பொடை பகுதி களிலேயே கசிப்பு வழங்கும் கலாசாரத்தைக் கட்சிகள் ஆரம்பித்து வைத்துள்ளன என்றும் அவர் கூறினார்.

"கசிப்புக்கும் சாராயத்துக்கும் அடிமையான சமூக மல்ல நாம்! இம்முறை நிச்சயம் மாற்ற மொன்றை நிகழ்த்திக் காட்டுவோம்!! " என்று சற்றுக் கோபத் துடன் ஆவேசமாகப் பேசினார் மற்றொரு ஆசிரியர்.

ஆனால், அற்பசொற்ப சலுகைகளுக்காக சோரம் போகின்றவர்களும் இருக்கத்தான் செய்கின் றனர் என்பதைச் சுட்டிக்காட்டவும் அவர் தவற வில்லை.

**பரப்புரை மேடைகளில் குமரிகளின் குத்தாட்டம்**


மலையகத்தில் இன்னும் முக்கியமான தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் ஆரம்பமாகவில்லை. முக்கிய இடங்களில் நடைபெறும் பரப்புரைக் கூட்டங்களின் போது ஆதரவாளர்களைக் குஷிப்படுத்துவதற்கு சில கட்சிகள் சங்கீத மழை பொழிவதற்கான ஏற்பாடு களையும் செய்து வருகின்றனவாம்.

இதன்போது தெற்கிலிருந்து செல்லும் குமரி களின் குத்தாட்டங்களும் இடம்பெறவுள்ளன என்று மக்கள் ஆங்காங்கே பேசிக்கொண்டி ருந்தனர்.

தபால்மூல வாக்களிப்பில் ஆளுந்தரப்பு வேட் பாளர்களை ஆதரிக்குமாறு அரச ஊழியர் களுக்கு அழுத்தம் பிரயோகிகப்பட்டுள்ளது என்று அரச ஊழியர்கள் சிலர் தெரிவித்தனர்.

பெயரைச் சொன்னால் பதவி பறியோய்விடும் என்ற அச்சத்தால் பெயரைக் குறிப்பிட அவர்கள் விரும்ப வில்லை. எது எப்படியிருந்தபோதிலும், மத்திய மாகாண சபையை அரசே கைப்பற்றும் என்பது பலரது எதிர்பார்ப்பாக உள்ளது. எனவேதான் அவர்கள் குறிப்பாகத் தமிழர்கள் வாக்களிப்பதில் ஆர்வம் காட்டவில்லை.

"கொளுத்தும் அகோர வெயிலில் நாங்கள் காய்கின்றோம். அவர்கள் பென்ஸ் காரில் வீதி உலா வருகின்ற னர். சொகுசு வாழ்க்கையில் சுகங்காணும் பிரகிருதிகளால் வாக் காளப் பெருமக்களுக்கு எந்தப் பயனும் கிடையாது. எனவே, எவருக்கும் வாக்களிக் கமாட்டோம். அரசியலே வெறுத்துப்போய் விட்டது. வாக்களிப்ப தால் எங்களுக்கு என்ன பயன்?"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அந்தக் காலத்து தேர்தல்கள்

எஸ்.எம்.கோபாலரத்தினம்

அரசியல் செல்வாக்கும் அமைச்சரவையில் அங்கம் வகித்தவருமான ஒரு முஸ்லிம் பெரியாருடன் பங்காளியாக வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த ஒரு முஸ்லிம் நண்பருக்கும் அரசியலில் இறங்க வேண்டுமென்ற ஆசை 1960 ஆம் ஆண்டில் ஏற்பட்டது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பிரசாரக் கூட்டங்களுக்குச் சென்ற அந்த நண்பருக்கு தமிழ் அரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட வேண்டுமென்ற விருப்பம் அதிகரித்தது. கட்சியில் நீண்ட காலம் சேவை செய்தவர்களிருக்கையில் புதிதாக வந்த இவருக்கு இடமில்லை என்று சொல்லிவிட்டார்கள். ஆனாலும் தமிழர்சாருடன் ஒட்டி உறவாடியதால் சுயேச்சையாகத் தேர்தலில் நின்றாலும் சில சமயம் வெற்றிக்கனி கைக்கு வருமென்று நினைத்தார். எனது மைத்துனருக்குத் தெரிந்த அந்த நண்பர் என்னையும் சந்தித்தார். தேர்தலில் போட்டியிடும் ஆசையை வெளி யிட்ட அவர் தனக்குத் தேர்தல் விஞ்ஞா பனம் தயாரித்துத் தருமாறு கேட்டார். தமது கொள்கை இலட்சியங்கள் பற்றித் தெரிவித்தார். நான் அவருக்கு அவர் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரித்துக் கொடுத்தேன்.




தேர்தல் விஞ்ஞாபனம் தயாரித்துக் கொடுத்தால் அதற்குரிய கூலியும் பெற்றுக்கொள்வேன்.
அந்த நண்பர் தமிழரசுக் கட்சிக் கூட்டங்களுக்கு தேர்தல் முடிந்த பின்னரும் சென்று பங்குபற்றுவார்.
1960 மார்ச் மாதம் நடந்த தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்ட அந்த நண்பர் வெற்றிபெறவில்லை. பின்னர் கட்சியின் முழுநேரத் தொண்டனாக தமிழ் உணர்வுடன் உழைத்தார். வடக்கு, கிழக்கில் எந்த இடத்தில் கட்சியின் பொதுக் கூட்டங்களிலும் கலந்து கொண்டதைப் பார்த்திருக்கிறேன். அரசியலில் ஈடுபட்டதால் வர்த்தகத்தில் பங்காளியாக இருந்த நிலையை இழந்தார். வர்த்தகத்தில் பெரும் நஷ்டத்துக்குள்ளானார். மீண்டும் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளனாகப் போட்டியிட்டதாக அறிந்தேன். ஆயினும் எந்தத் தேர்தலிலும் அவர் வெற்றிபெற்றதாக நான் அறியவில்லை. கட்சியின் சில பொதுக் கூட்டங்களில் சந்தித்திருக்கின்றேன். பின்னர் அவர் பற்றிய தகவல் எனக்குக் கிடைக்கவில்லை. நானும் ஓரிடத்தில் நிலையாக இருக்கவில்லை. இந்தியாவில் பத்து வருடங்களும் பின்னர் ஆறு வருடங்களும் தங்கியிருக்கின்றேன். ஜேர்மனி, பிரான்ஸ், லண்டன் ஆகிய நாடுகளிலும் சில காலம் பயணம் செய்திருக்கிறேன். முஸ்லிம் நண்பர் பற்றிய தகவல் கிடைக்காத தற்கு எனது பயணங்களும் காரணமாயி ருக்கலாம்.

### வேறொரு நிகழ்வு

ஜேம்ஸ்.ரி.இரத்தினம் என்பவர் ஒரு பேரறிஞர். உலகத் தமிழாராய்ச்சி மன்றத்திலும் உறுப்பினராக இருந்தவர். அவரை யாழ்ப்பாணத்தில் 1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மூன்றாம் திகதி தொடங்கி பத்தாம் திகதி வரை உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் நான்காவது மாநாட்டில் பல்வேறு இடையூறுகளுக்குள் கலந்து கொண்ட வெள்ளையர்கள் யாழ்ப்பாணத்தில் ஒரு நாள் சுற்றுலா சென்றபோது இவரையும் ஒரு வெள்ளைக்காரர் என்று நினைத்த நிகழ்வுகளுமுண்டு. பிரதம மந்திரியாக பண்டாரநாயக்கா 1956 இல் பதவியேற்றதைத் தொடர்ந்து ஜேம்ஸ்.ரி.இரத்தினம் அவர்கள் அன்றைய ட்ரிபியூன் வார இதழில் எழுதிய ஒரு கட்டுரையில், பண்டாரநாயக்கா நீலப்பெருமாள் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று எழுதியிருந்ததால் இக் கட்டுரையின் முதல் பகுதியை நான் மொழி பெயர்த்து எழுதியிருந்தேன். அன்றைய பிரதமர் பற்றிய கட்டுரையாதலால் அக் கட்டுரையைத் தொடர்ந்து பிரசுரிக்க வேண்டாமென்று நிர்வாக அதிபர் ஈஸ்வர ஐயர் தடைபோட்டுவிட்டார்.
இந்த ஜேம்ஸ் இரத்தினமும் 1960 மார்ச் மாதத் தேர்தலில் கொழும்பு தெற்குத் தொகுதியில் போட்டியிட முன்வந்தால் தனது நோக்கம், கொள்கை பற்றி ஒரு தாளில் தட்டச்சு செய்து என்னிடம் வந்தார். காதர் தான் சொல்லியிருக்க வேண் டும். தேர்தல் விஞ்ஞாபனம் தயா ரித்துத் தர வேண்டுமென்றால் காலை வேளையாதலால் எனக்கு வேலை அதிக மிருக்கவில்லை. உடனேயே தயாரித்துக் கொடுத்தேன். எவ்வளவு பணம் தர வேண்டுமென்றார் ஐம்பது ரூபாய் என் றேன். முப்பதுதான் கொண்டு வந்தேன் என்று தந்துவிட்டுப் போனார். கொழும்புதெற்கு ஜே.ஆர்.ஜெயவர்த்தனா போட்டியிட்ட தொகுதி ஜேம்ஸ் இரத்தினம் மற்றும் பல வேட்பாளர்களும் வெற்றியீட்டவில்லை.
1960 மார்ச் தேர்தலிலும் ஜூலை மாதத் தேர்தலிலும் தமிழரசுக் கட்சியும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் ஒன்றை ஒன்று தாக்கிப் பிரசாரம் செய்ததால் யாழ். மேயராக இருந்த அல்பிரட் தங்கராசா துரையப்பா இடையில் நின்று வெற்றிபெற்றார்.

வாசகர்களுக்கு
23.06.2013 உதயன் சூரிய காந்தி சிறப்பம்சத்தில் வெளிவந்த அந்த நாள் ஞாபகம் பகுதியில் ஐக்கிய இலாப நிதிச் சங்க பொறுப்பாளர் கனகசபை என்பவர் தற்கொலை செய்துள்ளதாக கட்டுரையாசிரியர் குறிப்பிட்டதை தவறானது என்று அவரது பேரனான க.உமைபாலன் என்பவர் தெரியப்படுத்தியுள்ளார். உண்மையில் கனகசபை என்பவர் இயற்கை மரணமே தழுவினார் என்றும் இதற்கு பலர் இன்னமும் சாட்சியமாக உள்ளனர் என்றும் அவர் விளக்கியுள்ளார்.

# “துடக்கு”



அதிகாலை ஐந்து மணிக்கு அலாரம் வைத்து
ஆலயமணி டாண் டாண் என இசை எழுப்ப
அருண்டு சுருண்டு பதைத்து எழுந்து
காலைக் கடமைகளைக் கடுகதியில் முடித்து
மூச்சிரைக்க முழந்தாள் வலிக்க
முள்ளந்தண்டு நொந்தது தான் கண்டசுகம்

தோய்த்துலர்ந்த ஆடையுடுத்து
துவட்டிய குறையில் வாரிமுடித்து
கரங்களில் பூக்கூடை தவழ கட கட
என மலர்கள் பறித்து ஆலய
தரிசனம் செய்யச் சென்றிடின்,
அங்கேயோ பல தடைக்கற்கள்

கண்கண்ட தெய்வத்துக்கும்
கரிசனையுடன் புத்திரர்களுக்கும்
நாமார்ச்சனை செய்வதற்கும்
அங்கே பல தடைகள்

எது எவ்வாறோ பறித்து வந்த புதுமலர்கள்
பலரினது கரம் மாறி பத்திரமாக
இறைவன் பதம் சேர
அப்பாடா ...என்று உயிர் வந்தது அடியவளுக்கு

பெயர் நட்சத்திரத்துடன் பெரிதாக எழுதி
வந்த சிட்டையினை ஐயரிடம்
சேர்ப்பிப்பது எவ்வாறு.... சிந்தித்து
மனமுடைந்து விழி திறந்து நோக்குகையில்
வாயிலிலே ஒரு கன்னி வாங்கி உதவி செய்தாள்

ஐயரிடம் சிட்டை அழகாகச் சேர்ந்தது கண்டு
பட்ட கஷ்டத்தின் பலன் பாதி கிடைத்து விட்ட திருப்தி
பாங்கு அவள் மனதில பூஜைகள்,
தீப ஆராதனைகளைத் தொடர்ந்து
திக்குத்திக்காய் பக்தர் கூட்டம் தீப ஒளியை விழிகள் நாட
எட்டி எட்டி உயர்ந்து பார்த்தாள்

எட்டாத போது அமர்ந்து விட்டாள் தரையினிலே
ஒளி காணா துயரினிலே
நெஞ்சம் விம்மியது
நாடி நரம்புகள் புடைத்தெறிந்தன

முருகா இதென்ன கூத்து
ஆறறிவு படைத்த மானிடரா நாங்கள்
எங்குமிலாததோர் கலாசாரமா
உன் ஆலயத்தில்
ஊர் முழுவதும் முருகாலயம் இருக்க
அயலிலே உள்ள குமரா உனை விடுத்து
பல மைல்கள் கடப்பதிலே
பயன் உண்டோ பாரில் என
உனை நாடி வந்த பலனா இது

உள்ளம் படும் அவலங்களை
உனை நெருங்கி உரத்து அழ
உரிமை தரா உள்ளங்களைத்
திருத்திடப்பா உன் அருளால்

மனம் குமுற
மௌனமாக வாயிலில் வணங்கி முடித்து
போதுமப்பா இனி உன் தரிசனம் என்று
புறப்பட இருந்த வேளை
அருகினிலே ஒரு அடியவன்
அன்பொழுக வழிபட்டு நின்றான்

துணை கிடைத்த மன நிறைவில்
பாதங்கள் நகர மறுக்க
உள் இருந்து வந்தான்-ஓர்
அடியவனின் அன்பு நண்பன்

ஏன் நண்பா, வெளியிலே தரிசனம் என
ஏக்கத்துடன் அவன் வினாவ
துடக்கு நண்பா எனக்கு என்றான்
படக்கென்றது பாவி இவள் மனம்
மகளுக்கு மகன் பிறந்து
மாதம் ஒன்று ஆகவில்லை
மகிழ்ச்சியுடன் அடியவன் தொடர
துவண்டு போனாள் வஞ்சி இவள்

ஆழக் கிணற்றில் அள்ளி இறைத்து
அளவுக்கதிகமாய் சுத்தத்துடன்
அருள் வேண்டி வந்தவளும்
அடியவனும் ஒன்றாகி விட்டனரே

சரி, பிழை எதுவானாலும்
அந்த அடியவனின் மகத்துடக்கு
ஒரு திங்களில் முடிந்துவிடும் ஆனால்
அடியவள் இவள் துடக்கு
ஆயுள்வரை தொடர்ந்திடுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களைக் குழப்பி வரும் பால்மா தடை விவகாரம்

இலங்கையில் அண்மைக் காலமாக பொது மக்களிடையே சலசலப்பை ஏற்படுத்திய பால்மா விற்பனைத் தடை பல்வேறு சர்ச்சைகளை கிளப்பும் விடயமாக இன்று மாறியிருக்கின்றது. ஏனைய சில பால்மாக்கள் மீதும் தடைகள் பாயலாம் என நம்பப்படுகிறது.

டீ.சீ.டீ. எனப்படும் டய்சைனட் டயமைட் எனும் இரசாயன பதார்த்தம் கலக்கப்பட்டுள்ளதாக வெளியான குற்றச்சாட்டை அடுத்தே இந்தப்பால்மாக்கள் இலங்கையில் விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டிருப்பதாக தெரிய வருகின்றது. பொன்டேரோ. பி.எம்.மொஹமட் அலி ஆகிய நிறுவனங்களுக்கு இந்த அறிவிப்புகள் உத்தியோகபூர்வமாக அனுப்பப்பட்டுள்ளதாகவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

நியூசிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்படும் இவ்வகை பால்மாக்களில் உண்மையாகவே டீ.சி.டீ. எனப்படும் இரசாயனப் பதார்த்தம் கலக்கப்பட்டுள்ளதா என்பது பற்றிய முடிவு ஆய்வு முடிவுகள் வெளியான பின்னரே தெரிய வரும். இருந்த போதிலும் அப்பால்மாக்களின் தடை விவகாரத்தில் இலங்கை சுகாதார அமைச்சு உரிய நடவடிக்கை களை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

தற்போது குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள பால்மாக்களின் தொகுதிகள் இரசாயன ஆய்வுக்காக இரசாயன தொழில்நுட்ப நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

குறித்த குற்றச் சாட்டு நிரூபிக்கப்பட்டால் பால்மாக்களை சந்தையில் இருந்து அகற்ற நிறுவனத்தினர் தயாராக இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் ஏனைய பிரதேச மட்ட சுகாதார திணைக்களங்கள் இந்த விடயத்தில் தொடர்ந்தும் ஆழ்ந்த உறக்கத்திலேயே இருக்கின்றன. இது தொடர்பான உத்தரவுகள் தமக்கு மேல்மட்டத்திடமிருந்து கிடைக்கப் பெறவில்லை எனவும் அவ்வாறு கிடைக்கப் பெற்றால் தான் உரிய நடவடிக்கைகளை எடுக்க முடியும் எனவும் அவர்கள் தொடர்ந்தும் தம்மை நியாயப்படுத்தி வருகின்றன. மேல்மட்டம் தடை என்கிறது; கீழ்மட்டம் உத்தரவுகள் கிடைக்கவில்லை என்கிறது என்பது இலங்கையின் நிர்வாகப் போக்கிற்கு சிறந்த எடுத் துக்காட்டு. எடுத்ததற்கெல்லாம் மேல் மட்டத்தில் கேட்டு தமது விசுவாசத்தைக் காட்டும் அதிகாரிகள் ஏன் இந்த விடயங்களில் மேல் மட்டத்தின் உத்தரவுகளுக்கு காத்திருக்க வேண்டும். மயிலே மயிலே இறகுபோடு என்று கூறி. மயில் இறகு போடும் வரை ஏன் காத்திருக்க வேண்டும்? பொது மக்களைக் காப்பாற்றும் நன்னோக்கத்துக்காக மேல் மட்டத்துடன் கலந்தாலோசித்து தாமாகவே நடவடிக்கை எடுக்க முன்வரலாமல்லவா?

இதேவேளை சில விநியோகஸ்தர்களும் அது தொடர்பான நிறுவனங்களும் ஆய்வு முடிவு கள் வெளியாகும் முன்னரே தமது உற்பத்திகள் 100 வீதம் தரமானவை என துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து தமது பொருள்களை இன்னமும் விற்பனை செய்து வருவது குறிப்பிடத்தக்கது. இத்தரப்புக்கள் மீது ஏன் சுகாதார திணைக்களத்தினரால் நடவடிக்கை எடுக்க முடியாது? எல்லோரும் உத்தரவுகளுக் காகவே பணி புரிபவர்களா? மக்களுக்காக யாருமே இல்லையா?

ஆனால் நடைமுறையில் இங்குள்ள விநியோக மற்றும் சந்தைப்படுத்தல் நிறுவனங்கள் தாம் சந்தைப் படுத்தி வைத்திருக்கும் உற்பத்திப் பொருள்களை தடைகளை மீறி இன்னமும் வியாபார நிலையங்களுக்கும் சந்தைகளுக்கும் தாராளமாக விநியோகித்து வருவதான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருக்கின்றன. தடைபற்றிய அறிவிப்பு வெளியான அடுத்த நாள் கூட குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப் பட்டுள்ள பால்மாக்கள் தமது கடைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டதைச் சில வர்த்தகர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.


அமைச்சின் தடை யுத்தரவையெல்லாம் மீறி இப்பால்மாக்கள் சந்தைகளுக்கு விநியோகிப்பது சட்டப்படி குற்றம் என்பதை ஏன் அந்த விநியோகஸ்தர்கள் சிந்திக்கவில்லை. தாம் விநியோகிக்கும் உற்பத்தி பொருள்கள் உண்மையாகவே உடல் உபாதைகளை ஏற்படுத்தும். டீ.சி.டீ. எனப்படும் இரசாயனப் பதார்த்தம் கலக்கப் பட்டிருந்தால் அவற்றை கொள்வனவு செய்யும் பொதுமக்களின் நிலை என்ன?

இதேவேளை. இவற்றில் தான் இரசாயன பதார்த் தம் கலக்கப்பட்டிருக்கலாம் என தெரிவித்து சில தொகுதி எண்களும் சுகாதார அமைச் சால் வெளியிடப்பட்டுள்ளன.

அத்தொகுதி எண்களில் அடங்கும் பால்மாக்கள் இரசாயன தொழில்நுட்ப நிலைகளுக்கு அனுப்பி வைக் கப்பட்டிருப்பதாகவும். அவற்றில் சில பொது மக்களுக்கு ஏற்கனவே விநியோகிக் கப்பட்டு இருப்பதாகவும் அவற்றை பொது மக்கள் மீண்டும் ஒப்படைக்குமாறும் கேட்கப்பட்டிருக்கிறார்கள். இந்தநிலையில் ஏற்கனவே விநி யோகிக்கப்பட்டுள்ள பால்மாக்களை பொது மக்கள் பயன்படுத்தியிருந்தால் அவர்களது கதி என்ன?



## சொற்சிலம்பம் - போட்டி இல: 280



அனுப்புபவர் பெயர்:..............................

விலாசம்:..............................

..............................

கையொப்பம்:..............................

### இடமிருந்து வலம்

1. இணங்கு
4. பாதைக்கு குறுக்காக நீர் பாய்வது இதன் வழியே
6. பார்வைக்கு கிட்டுதல்
8. பகுதி
10. அதிக
12. பலம்
13. அரற்றுதல்
15. தூர்த்தன்
17. சேர்
18. விளக்கில் வீழும் பூச்சி
19. சகல
20. பனி மூசிப் பெய்யும் மாதம்
21. குறிப்பிட்ட ஒன்றைவிடுத்து மேலதிகமாக
23. பல வருடங்கள்

### மேலிருந்து கீழ்

1. உழைத்துப் பெறு
2. சமயம்
3. மூன்று
4. பாடமாக்குதல்
5. தமது
7. சகோதரிகளின் கணவன்மாரிடையேயான உறவு
9. பார்வைக்கு வைக்கும் நிகழ்வு
11. வலிமை உடையவன்
13. நீங்குதல்
14. கூறு
16. கிரீடம்
18. விமானம் ஓட்டி
19. அடைக்கலம்
22. நெஞ்சறைப் பகுதி.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 278 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) பிரசவம் (4) சதா (6) மலை (7) அரண் (8) மாதர் (10) அகண்ட (11) தரித்திரம் (13) தரிசு (14) ஆம் (15) அன்பு (16) அலை (17) பரு (18) ராகம் (20) சிவிகை (21) விமானம்

**மேலிருந்து கீழ்**

(1) பிரமாதம் (2) சமர்த்தன் (3) வலை (4) சரண் (5) தாண்டவம் (7) அகம் (9) தரி (10) அரசு (12) திரிபுரா (14) ஆலை (15) அருவி (16) அம்மா (17) பசி (19) ரோம்

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 280**
நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (04.09.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.280இல்வெற்றி பெறுவோர்களது விபரம் 08.09.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 278 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**ஸ்ரீரங்கன் சிவஜா,**
'சிவபுரம்' நீதிமன்ற வீதி, கொடிகாமம்.

**2 ஆம் பரிசு**
**மு.விஷ்ணுசோபன்,**
பட்டிக்குடியிருப்பு, நெடுங்கேணி.

**3 ஆம் பரிசு**
**செல்வன் ந.பத்மபிரியன்,**
'பிரியவாசம்' இ.17, ஐயனார் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
**யோ.யக்சயன்,**
மே/பா, மா.நடராசா, மூளாய் தெற்கு, சுழிபுரம்.

**5 ஆம் பரிசு**
**டக்ஷ்சி தேவராஜன்,**
அண்ணாமலை வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

**பாராட்டுப் பெறுவோர்**

**லோகேஸ்வரன் அனோஜினி,**
இல.21, (5/4) 1 ஆம் சப்பல் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு.

**சி.பாவரசன்,**
யா/ அராலி முருகமூர்த்தி வித்தியாலை, அராலி.

**செ.நாகராணி,**
மேதர்ஸ் லேன்,மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூட்டோ கொலையில் முஷாரப்புக்கு தொடர்பு

## குற்றக்கூண்டில் நிற்கிறார் முன்னாள் பாக்.சர்வாதிகாரி

உலக நடப்புகள் ஒரு பார்வை


ரெங்கன்

★ கொலைக் குற்றச்சாட்டில் முன்னாள் பாக். அதிபர்

★ பாக்- சீன மோதலுக்கு கட்டியம் கூறும் நிகழ்வு

★ மும்பை தாக்குதல் புத்திஜீவி பொலிஸாரின் வலையில்

★ பாக்- இந்திய எல்லையில் தொடர்கிறது புகைச்சல்



பாகிஸ்தானின் முடிசூடா மன்னர் போன்று ஒரு காலத்தில் ஆட்சி புரிந்தவரான முன்னாள் ராணுவ ஆட்சியாளர் பர்வேஸ் முஷாரப் இப்பொழுது கொலைக் குற்றஞ்சாட்டப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் ராவல்பிண்டியிலுள்ள பயங்கரவாதத்துக்கு எதிரான நீதிமன்றத்தில் 2007 ஆம் ஆண்டு முன்னாள் பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவி பெனாஸிர் பூட்டோ கொலை செய்யப்பட்ட வழக்கில் பர்வேஸ் முஷாரப் மீது கொலைக் குற்றஞ்சாட்டப்பட்டது. கொலை, கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியமை மற்றும் கொலைக்கு உதவி புரிந்தமை ஆகிய மூன்று குற்றங்கள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன. கடந்த வாரமே தமது 70 வது பிறந்த தினத்தைக் கொண்டாடியவரான பர்வேஸ் முஷாரப் தம் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளார்.

இந்தக் குற்றச் சாட்டுகளுக்கு ஆதாரமில்லை. வழக்கு பற்றி நாங்கள் அஞ்சவில்லை. நாங்கள் சட்ட நடைமுறைகளை நீதிமன்றில் கைக்கொள்வோம் என்று அவருக்காக நீதிமன்றில் பிரசன்னமாகியிருந்த வழக்கறிஞர் கூறினார்.

2007 ஆம் ஆண்டு பூட்டோ கொலை செய்யப்பட்டதைத் தவிர்த்திருக்க முடியும். முஷாரப்பின் அரசு அவருக்குப் போதிய பாதுகாப்பை வழங்கியிருக்கவில்லை என்று 2010 ஆம் ஆண்டு ஐ.நா. ஆய்வு அறிக்கையொன்றில் தெரிவித்திருந்தது.

பாகிஸ்தானில் அதிகாரப் பதவியிலிருந்த அதிபர் ஒருவர், அதுவும் முன்னாள் ராணுவ தலைவர் ஒருவர் கொலைக் குற்றஞ் சாட்டப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப் பட்டிருப்பது இதுவே முதல் தடவை.

சுருட்டு புகைக்கும், விஸ்கி பாவிக்கும் பழக்கமுடையவரான பர்வேஸ் முஷாராப் பதவியிலிருந்த காலத்தில் குறைந்தது மூன்று தடவைகள் அல்கொய்தா பயங்கரவாத அமைப்பின் கொலை முயற்சி யிலிருந்து தப்பியவர்.

நான்கு ஆண்டுகள் டுபாயிலும் லண்டனிலும் நாடு கடந்து வாழ்ந்து வந்தவரான அவர், கடந்த மார்ச்சில் நாடு திரும்பிய போது நாட்டை தீவிரவாதத்திலிருந்தும் பொருளாதார சீர்குலைவிலிருந்தும் காப்பாற்றுவதற்காக தேர்தலில் போட்டியிட வந்திருப்பதாக அறிவித்திருந்தார் ஆனால் அவர் எதிர் பார்த்தபடி ஒரு வீரருக்குரிய வரவேற்பு கிடைக்கவில்லை. மாறாக கேலியும் கிண்டலும் கடுமையான விமர்சனங்களுமே கிடைத்தன. போதாக் குறைக்கு பல குற்றவியல் வழக்குகளையும் எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.

தலிபான்கள் அவரைக் கொலை செய்யப் போவதாக அறிவித்தார்கள். மீண்டும் பதவியில் அமரும் அவரது ஆசையை உள்ளூர் ஊடகங்கள் கேலி செய்தன. மே மாதம் நடந்த தேர்தலில் அவர் போட்டியிடவிருந்ததை நீதிமன்றம் அவரை தகுதியற்றவராக அறிவித்தது. 1999 ஆம் ஆண்டு அவ ராலேயே பதவி நீக்கம் செய்யப்பட்ட வரான நவாப் ஷெரீப் மக்கள் ஆதரவை பெற்று பதவியைக் கைப்பற்றினார். வீட்டுக் காவலில் வைக்கப்பட்டு தனிமையில் வாழும் நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளார் முஷாரப்.

அரசியல் அமைப்பை உதாசீனம் செய்தமை மற்றும் தேசத் துரோகம் புரிந்தமைக்காக அவர் மீது விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று நவாப் ஷெரீப் அரசு கோரி யுள்ளது. 2007 ஆம் ஆண்டு பிரதம நீதியரசரை பதவி நீக்கம் செய்யும் வரை அவருக்கு பெரிய எதிர்ப்பு எதுவும் இருக்கவில்லை. அதன் பின்னர் நாடு முழுவதுமே அவருக்கு எதிர்ப்புகளும் ஆர்ப்பாட்டங்களும் எழுந்தன. அதனால் அவசர கால நிலை பிரகடனப்படுத்தப்பட வேண்டியேற்பட்டது. 2007 டிசெம்பரில் பூட்டோ கொலையுண்டதையடுத்து தேச நிலைமை மேலும் சீர் குலைந்தது. 2008 ஆம் ஆண்டுத் தேர்தலில் அவரது நட்புச் சக்திகள் தோல்வியை சந்தித்தன. அதே ஆண்டு ஒகஸ்டில் அவர் மீது குற்ற விசாரணை யொன்றை நடத்த புதிய அரசு முயற்சி எடுத்த நிலையில் வெளிநாட்டுக்கு சென்றார். கடந்த மார்ச்சில் நாடு திரும்பும் வரை அங்கேயே இருந்தார்.

### கிழக்குச் சீனக் கடலில் மோதல் ஏற்படும் அபாயம்

கிழக்குச் சீனக்கடல் பகுதியில் அமைந்துள்ள எண்ணெய், மற்றும் நிலவாயு வளங்களுடன் மீன் வளமும் அதிகமாகக் காணப்படும் ஒரு தீவு குறித்து சீனாவுக்கும் ஜப்பானுக்கு மிடையில் ஏற்பட்டுள்ள உரிமைக் கோரிக்கையானது இரு நாடுகளுக்குமிடையில் உரிமைப் போராக மாறிவிடக் கூடிய ஆபத்து அதிகரித்து வருவதாக சர்வதேச அவதானிகள் அச்சம் வெளியிடத் தொடங்கியுள்ளார்கள்.

சீனாவின் கிழக்கில் இந்தத் தீவுகள் காணப்படுகின்றன. ஜப்பானியர்களால் செங்காக்கு என்றும் சீனர்களால் ஓயு என்றும் வழங்கப்படும் இத் தீவுகள் சீனாவுக்கு கிழக்கு பகுதியில் பசுபிக் சமுத்திரத்தில் கிழக்கு சீனக் கடல் பகுதியில் காணப்படுகின்றன. மீன் வளங்களும் எண்ணெய் மற்றும் நிலவாயு வளங்களும் நிறைந்து காணப்படும் இத் தீவுகளுக்கு சீனாவும் ஜப்பானும் உரிமை கொண்டாடுவதுடன் இரு தரப்பினரும் விமானங் கள் மற்றும் கப்பல்கள் மூலம் கண்காணிப்புக்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இந்த செயற்பாடுகளில் ஏதும் தற்செயலாக தவறிழைக்கப்படுமானால் அப் பகுதியில் பெரும் போர் ஒன்று வெடிக்கலாம் என்ற அச்சம் தோன்றியுள்ளது.

இதற்கிடையில் அண்மையில் ஜப்பானிய தேசியவாதிகளின் குழுவொன்று அப் பகுதி ஜப்பானுக்குரியது என்பதை எடுத்துக்காட்டுவதற்காக படகுகள் மூலம் அப்பகுதிக்கு பிரயாணம் மேற்கொண்டது. ஜப்பானிய தேசியவாதிகள் குழுவைச் சேர்ந்த சுமார் 20 பேர் அடங்கிய குழுவொன்று 5 படகுகளில் அங்கு பிரயாணம் மேற்கொண்டது.

கன்பாரே நிப்போன் (உறுதியாகதில் ஜப்பான்) என்றழைக்கப்படும் இந்தக் குழுவினர் தமது பயணம் பற்றிக் கூறுகையில் மக்கள் குடியேற்றம் இல்லாத செங்காக்கு தீவுகளில் தரை இறங்குவது எமது நோக்கமில்லை. ஆனால் சீனாவுக்கு ஒரு செய்தியை விடுக்க விரும்புகிறோம் என்று கூறினர். கடந்த சனிக்கிழமையன்று ஒக்கினாவாவிலிருந்து புறப்பட்ட அக் குழுவின் தலைவராக செயல்படுபவரான வலதுசாரி படப்பிடிப்பாளரான சாட்டோடு மிஸுஷிமா கூறுகையில் நாங்கள் தீவிரத் தன்மையான எதனையும் செய்யப் போவதில்லை. ஆனால் ஜப்பானியர் எம் மாதிரியானவர்கள் என்று காட்ட விரும்புகின்றோம் என் றார்.

### அல்கொய்தா பயங்கரவாதி பிடிபட் டார்

மும்பையில் 1993 ஆம் ஆண்டு இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்பு சம்பவங்களின் பின்னணியில் செயற்பட்டவர் அறிவுபூர்வமாக பங்களிப்பு செய்தவர் என்று கருதப்படும் ஒருவரை இந்தியப் பொலிஸார் கடந்த வாரம் சனிக்கிழமையன்று கைது செய்துள்ளனர்.

இந்தியாவுக்கும் நேபாளத்துக்கும் இடையிலுள்ள எல்லைப்பகுதியில் இவர் இந்திய பாதுகாப்பு படைகளின் விசேட பிரிவொன்றினால் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் இது இந்திய பாதுகாப்பு படைகளின் மாபெரும் சாதனை என்றும் புதுடில்லி பொலிஸ் கமிஷனர் எஸ்.என். சிறிவாஸ்ட்டவா கூறியுள்ளார்.

70 வயதான அப்துல் கரீம் ரூண்டா என்றழைக்கப்படும் இந் நபர் பாகிஸ்தானில் நிலை கொண்டுள்ள தடை செய்யப்பட்ட லஸ்கர் - இ- தொய்பா இயக்கத்தின் ஓர் உறுப்பினர் என்று தெரிய வந்துள்ளது. இவர் பிரபலமான பயங்கரவாதி என்றும் லஷ்கர். இ.தொய்பா அமைப்பின் வெடிகுண்டு நிபுணர் என்று கிறிஸ்டாவா தெரிவித்துள்ளார்.

மும்பாயில் 1993 ஆம் ஆண்டு குறைந்தது 250 பேரை பலி கொண்ட தொடர் குண்டு வெடிப்பையடுத்து ரூண்டாவை பொலிசார் தேடி வந்துள்ளார்கள். இந்தியாவின் பொருளாதார மையங்களில் ஒன்றான மும்பை யில் 1993 ஆம் ஆண்டு ஹோட்டல்கள், காரியாலயங்கள் கட்டடங்கள் மற்றும் வங்கிகளை இலக்கு வைத்து தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன.

முஸ்லிம் மசூதியொன்று தரை மட்டமாக்கப்பட்டமைக்கு எதிர் நடவடிக்கையாக மும்பை குண்டு தாக்குதல் நடத்தப்பட்டிருந்ததாக கருதப்பட்டது. ரூண்டா மும்பை சம்பவத்துடன் மட்டுமன்றி புது டில்லியில் 1997 ஆம், 98 ஆம் ஆண்டுகளில் இடம் பெற்ற குண்டு தாக்குதல் சம்பவங்களிலும் அறிவுபூர்வமான பங்களிப்புகளை இவர் செய்திருந்தார் என்று பொலிஸார் கூறினார்கள்.

1994 ஆம் ஆண்டு பங்களாதேஷிற்கு தப்பி ஓடிய அங்கு தீவிரவாத இளைஞர்களுக்கு குண்டு தயாரிப்பில் பயிற்சியளித்துள்ளார் என்றும் பின்னர் பாகிஸ்தானுக்கு சென்றுவிட்டு சிறிது காலத்தின் பின் இந்தியாவுக்குத் திம்பியிருந்தார் என்றும் பொலிஸார் கூறினார்கள் ரூண்டா அண்மையில் நேபாள எல்லையில் பிடிபடுவதற்கு முன் சமீப காலத்தில் எங்கு வசித்துள்ளார் என்பதை பொலிசார் தெரிவிக்கவில்லை. அதே சமயம் மும்பை தொடர் குண்டு தாக்குதல் நடத்தப்படுவதற்கான திட்டமிட்டவர் என்று கருதப்படும் பயங்கரவாதி தாவூத் இப்ராகிம் இன்னமும் தலைமறைவாகவே இருந்து வருகிறார்.

### இந்திய - பாக் எல்லையில் தொடர்கிறது புகைச்சல்

இந்திய - பாகிஸ்தான் எல்லையில் இரு தரப்புப் படைகளுக்குமிடையில் ஏட்டிக்கு போட்டி என்ற முறையில் நடைபெற்று வரும் தாக்குதல்கள் முற்றுப் பெறாமல் புதிய பரி மாற்றங்களை நோக்கி நகர்வதாக அவதானிகள் கருதுகிறார்கள் மிக அண்மையில் நடைபெற்றுள்ள ஒரு சம்பவத்தில் இந்திய படைகள் சுட்டதில் பாகிஸ்தான் ராணுவ அதிகாரி ஒருவர் மரணமாகியிருப்பதுடன் இன்னொரு சிப்பாய் பலத்த காயங்களுக்குள்ளாகியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இமாலய பிரதேசத்தில் இரண்டு அணு ஆயுத நாடுகளும் உரிமை கொண்டாடி வரும் காஷ்மீர் பிரதேசத்தின் எல்லைப்பகுதியில் இரு படைகளுக்குமிடையில் சமீப நாள்களாக அடிக்கடி மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. எல்லைப்பகுதியில் இந்த மாத முற்பகதியில் இந்திய எல்லை பாதுகாப்புப் படைகள் மீது பதுங்கியிருந்து நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் இந்திய வீரர்கள் ஐந்து பேர் கொல்லப்பட்டார்கள்.

இந்தப் படுகொலைகளுக்கு பாகிஸ்தான் ராணுவமே குற்றஞ்சாட்டியிருந்த போதிலும் அதில் தமது படைகள் எந்த விதத்திலும் சம்பந்தப்படவில்லையென்று பாகிஸ்தான் மறுத்து வந்துள்ளது. கடந்த புதன்கிழமை இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் பாகிஸ்தான் ராணுவத்தின் கேப்டன் தரத்திலான சார்பிராஸ் என்பவர் மரணமாகியுள்ளார். இன்னொரு சிப்பாய் காயமடைந்துள்ளார். எது வித ஆத்திரமூட்டலும் இல்லாத நிலையில் இந்திய டைகள் சுட்டதாக பாகிஸ்தான் கூறியது. பாகிஸ்தான் தரபபில் பதிலடி கொடுக்கப்பட்ட தாகவும் தெரிவிக்கப்பட்டது.

எலலைப் பகுதியில் பாகிஸ்தான் போர் நிறுத்த மீறல்களை மேற் கொண்டு வருவதற்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி அண்மையில் கூறியிருந்தது குறிப் பிடத்தக்கது.

### இரசாயன ஆயுதங்களும் படுகொலைகளும்

சிரியாவில் இரசாயன ஆயுதங்கள் பெருமளவில் பாவிக்கப்பட்டிருப்பது குறித்து ஐ.நா. ராஜதந்திரி வட்டாரங்கள் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளன.

சிரியாவில் அரசுக்கு எதிராகப் போராடி வருபவர்கள் மீது ஒரு சாராரும், அரசுப்படைகள் மீது இன்னொரு சாராரும் இரசாயன ஆயுதங்களை பிரயோகித்து தாக்குதல் நடத்தியிருப்பதாகக் குற்றஞ்சாட்டி வந்துள்ளார்கள். அனால் முதலில் யார் இரசாயன ஆயுதங்களை பாவித்தார்கள் என்பதை எவரும் அறுதியிட்டு சொல்ல முற்படவில்லை. எதுவானாலும் மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினர் மீதும் குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டுள்ளன.


இப்பொழுது கடைசியாக வந்துள்ள செய்திகளின்படி இரசாயன ஆயுதங்களால் ஏற்படக்கூடிய மிக மோசமான நிலைமைகள் வெளிவந்துள்ளன. இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்படுபது குறித்த குற்றச் சாட்டுகளை ஆய்வு செய்வதற்காக ஐ.நா பரிசோதகர்கள் குழுவொன்று டமாஸ்கஸ் வந்து சேர்ந்த அதே வேளை, இரசாயன ஆயுத பாவனை காரணமாக 280 பேர் பரிதாபமாக உயிர் இழந்துள்ள செய்தி வெளியாகியுள்ளது.

இந்த தாக்குதல்கள் குறித்து ஐ.நா பரிசோதகர்கள் ஆய்வு நடத்துவார்கள் என்றாலும் இதனை யார் செய்தார்கள் என்பது பற்றி பற்றி அவர்கள் ஆய்வார்களா என்பது தெரியவில்லை. சிரியாவின் தலைநகரை சுற்றியுள்ள விவசாய பெரும் நிலப் பகுதியில் கவுட்டா என்ற இடத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றதாக கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
25/08/2013

# மின் உற்பத்தியில் புதிய தொழில்நுட்பம் மின்சாரத்தை தேடி ஓடும் அவசியமில்லை!



இனிமேல் மின்னேற்றம் தீர்ந்துவிட்டால் மின்சாரத்தை தேடி ஓட வேண்டியதில்லை. இருந்த இடத்திலிருந்து கைபேசிகளுக்கு மின்னேற்றம் செய்து கொள்ளலாம். எம்மைச் சுற்றி எந்நேரமும் அலைவரிசைகள் இருக்கிறது என்பதை நாம் அறிவோம். எங்கோ ஒலிபரப்பாகும் ரேடியோவை கேட்க முடிகிறது. அதே போல் எங்கோ ஒளிபரப்பாகும் காணொலியையும் எம்மால் பார்க்க முடிகிறது. அதுமட்டுமா Wifiயின்மூலம்மடிக்கணினியில்இணையத்தை பயன்படுத்தலாம். இவ்வாறு பல அலைவரிசைகள் எம்மைச் சுற்றி எப்பவுமே காணப்படுகின்றன. காரணம் இதில் எலக்ரோன்கள் உள்ளன. இதனைப் பாவித்து G பற்றரிகளை மின்னேற்றம் செய்யும் சிப் ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள்.

இதனை கைபேசியில் புகுத்தினால் நாம் அவசரத்துக்கு மின்னேற்றம் செய்ய அலைய வேண்டியது இல்லை. பற்றரி மின்னேற்றம் குறைந்தால் ஒரு பட்டனை அழுத் தால் போதும். சார் ஜரு டன் இணைத்தது போல அது மின் னேற் றம் செய்யஆரம்பித்துவிடும். அதிக மின்சாரத்தை அது உற்பத்திசெய்யாவிட்டாலும் பரவாயில்லை. அவசரத்துக்கு உதவும் வகையில் அது மின் சாரத்தைத் தயாரித்து பற்றரியை மின்னேற்றம் செய்யும் திறன் கொண்டது. அதிலும் நாம் நல்ல சிக்கனல் கிடைக்கும் இடங்களில் இருந்தால், அங்குள்ள Routers, காணொலி சமிக்ஞைகள் மற்றும் ரேடியோ சமிக்ஞைகளின் கதிர்களை அது பாவித்து மின்சாரத்தை உற்பத்தி செய்து விடும்.

இதுபோன்ற சாதனங்கள் விரைவில் சந்தைகளில் வர உள்ளன. இது மிகவும் அதி சயமான கண்டு பிடிப்பு தான் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரயிலுக்கு ஆடை அணிவித்த விசித்திர படைப்பாளி!

படைப்பாளிகளின் படைப்புகள் விசித்திரமானவை. இந்தப் படைப்புகளின் சுவாரஸ்யம், விநோதம், படைப்பாற்றல் ஆகியவற்றை பொறுத்தே மக்களிடம் இவை வரவேற்பைப் பெறுகின்றன. போலந்து நாட்டின் ஒலேக் என்ற பெண் ஒரு ஆடை வடிவமைப்பாளர். அவர் தனது படைப்பாற்றலை சற்று வித்தி யாசமாகச் சிந்தித்துள்ளார். மனிதர்களுக்கு ஆடையொன்றைத் தயாரிப்பதை விட ரயில் ஒன்றுக்கு ஆடை வடிவமைத்து தயாரிப்பதற்கு அவர் திட்டமிட்டுள்ளார். இந்தச் சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுத்த ஒலேக்கின் படைப்பாற்றலுக்கு நல்ல வரவேற்பும், பாராட்டுகளும் கிடைத்துள் ளன. இந்த ரயிலுக்கு ஆடையை அணிவிப் பதற்கு மட்டும் ஒலேக்கின் குழுவினருக்கு இரண்டு தினங்கள் செலவாகின. கண்ணைக் கவரும் இவரது படைப்பாற்றலை இங்கே காணலாம்.




# உயரமான பகுதிகளில் மனிதனின் எடை குறைகிறது



பூமியின் அனைத்துப் பகுதிகளிலும் மனிதனின் உடல் எடை ஒரே மாதிரியாக இருப்பதில்லை என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலிய கர்டின் பல்கலைகழக விஞ்ஞானிகள் மனிதனின் உடல் எடைக்கும், புவி ஈர்ப்பு விசைக்கும் இடையே உள்ள தொடர்பு குறித்து ஆய்வு நடத்தினர். இந்த ஆய்வில், பூமியின் புவி ஈர்ப்பு விசை வெவ்வேறு இடங்களில் மாறுபடுவதால் மனித உடல் எடையும் மாறுவது தெரியவந்துள்ளது.

இதுகுறித்து ஆய்வாளர் கிறிஸ்டியன் ஹர்ட் கூறுகையில், சீரான கோள வடிவில் பூமி இல்லை. இதில் பல்வேறு உயர்ந்த குன்றுகளும், பள்ளத்தாக்குகளும், ஆழமான கடல்களும் உள்ளன.

இந்த அனைத்து பகுதிகளிலும் புவி ஈர்ப்பு விசை சீராக இருப்பதில்லை. இதற்கு ஏற்றாற் போல் மனிதனின் உடல் எடையும் மாறுபடுகிறது. அதாவது, பூமியின் ஒரு பகுதியிலிருந்து உயரமான மலைப் பகுதிக்கு செல்லும் ஒருவருக்கு உடல் எடை கணிசமான அளவு குறைகிறது.

தென் அமெரிக்காவின் பெரு நாட்டில் உள்ள நிவேடோ ஹுயாஸ்கரன் மலைப்பகுதியில் மிகக் குறைந்த புவி ஈர்ப்பு விசையும், ஆர்க்டிக் கடல் பகுதியில் அதிக அளவிலான புவி ஈர்ப்பு விசையும் பதிவாகின.

ஆர்டிக் கடல் பகுதியில் இருக்கும் நபரின் உடல் எடை நிவேடோ மலைப்பகுதிக்கு செல்லும் போது ஒரு சதவீதம் குறைகிறது.

ஆர்டிக் கடல் பகுதியில் 100 மீற்றர் உயரத்திலிருந்து குதிக்கும் நபர், நிவேடோ மலைப்பகுதியில் 100 மீற்றர் உயரத்திலிருந்து குதிக்கும் போது நிலப்பகுதியை அடைய 16 மில்லி நொடிகள் தாமதமாகிறது. குதிக்கும் நபர் ஒரு சதவீத உடல் எடையை இழப்பதே இதற்கு காரணம். பூமியின் வெவ்வேறு இடங்களில் இவ்வகை எடை மாறுபாடு ஏற்படினும், மனிதனின் நிறையில் எவ்வித மாற்றமும் ஏற்படுவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






மலர்களின் மகரந்தங்களை கொண்டு தேனீக்களால் சேகரிக்கப்பட்டு, மனிதர்களால் தேனீக்களிடம் இருந்து பறிக்கப்படும் அருமருந்தே தேன். அதனை அரு மருந்து என்று சொல்வதற்கு காரணம் இல்லாமல் இல்லை. நிறைய மருத்துவ குணங்களை உள்ளடக்கிய பழுப்பு நிற திரவமே தேன் ஆகும். தேனை பரவலாக வயிற்றின் நண்பன் என்று கூட சொல்வார்கள். இதற்கு காரணம் வயிறு, பித்தப்பை சம்மந்தமான நோய்களுக்கெல்லாம் மருந்தாக விளங்குவதே ஆகும். தேனில் நோய் தீர்க்கும் பண்புகள் மற்றும் இயற்கை வளங்கள் நிறைந்து உள்ளதால், தேன் சரும பாதுகாப்பு மற்றும் பல மருத்துவ பயன்பாடுகளுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. இனி மேல் தேனை அதிகம் பயன்படுத்துங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அதிநவீன கார்



காலத்திற்கு காலம் அதிகரித்துவரும் போக்குவரத்து நெருக்கடிகள், இட நெருக்கடிகள் போன்றவற்றைக் கருத்திற்கொண்டு பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. இவற்றின் ஓர் அங்கமாக, குறைந்த இடவசதியிலும் நிறுத்திவைக்கக் கூடிய (ArmadillodT) என்ற அதிநவீன கார் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.
KAIST இலுள்ள கிறீன் ரான்ஸ்போர்ட்டேஷன் என்ற நிறுவனத்தில் பேராசிரியராக பணியாற்றும் IndSoo Suh என்பவர் அவரது குழுவினருடன் இணைந்து மேற்கொண்ட ஆராய்ச்சியின் விளைவாக இக் கார் உருவாக்கப்பட்டுள்ளது.

Sri Lanka Telecom
ஒரே தேசம். ஒரே குரல்.

தினமும் லப்ரொப் ஒன்றை வெல்லுங்கள்




SLT வழங்கும் நிலையான, தடங்கலற்ற, அதிவேக புறோட்பேண்ட் இணைப்புடன் புத்தம் புதிய லப்ரொப்களை வெல்லும் வாய்ப்பு.
அத்துடன் மேலும் பல விசேட சலுகைகள்!

- ஆரம்பக் கட்டணம் எதுவுமின்றி 2 புறோட்பேண்ட் இணைப்புகள் அத்துடன் இரு Wi-Fi ரவுட்டர்கள் விசேட விலை ரூ.2,990/- க்கு.
- புதிய புறோட்பேண்ட் இணைப்பு அல்லது Double Play இணைப்பிற்கு ஆரம்பக் கட்டணத்தில் 50% கழிவு அத்துடன் Wi-Fi ரவுட்டர் விசேட விலை ரூ.1,990/- க்கு.
- Double Play PEO TV இணைப்பை Triple Play ஆக தரமுயர்த்தும்போது ஆரம்பக் கட்டணம் இல்லை, முதலிரு மாத மாதாந்தக் கட்டணத்தில் ரூ.499/- கழிவு அத்துடன் உங்கள் வயர் ரவுட்டருக்கு பதிலாக Wi-Fi ரவுட்டரைப் பெற்றுக்கொள்ளலாம்.

விரையுங்கள்! புதிய புறோட்பேண்ட் இணைப்பைப் பெற்றுக்கொண்டு இவ் விசேட சலுகைகளை அனுபவியுங்கள்.

2013 செப்டெம்பர் 20 வரை மட்டுமே.
நிபந்தனைகளுக்கு உட்பட்டது. அரச வரிகள் விதிக்கப்படும்.

1212 ஐ அழையுங்கள்
மேலதிக விபரங்களை செவிமடுக்க, ஃபெக்ஸ் மூலம் பெற அல்லது புதிய புறோட்பேண்ட் இணைப்பிற்காக பதிவு செய்ய அழையுங்கள்.

www.slt.lk | Email: 1212@sltnet.lk | Web chat: www.slt.lk (My SLT - Chat with us) | Like us on




BROADBAND
Powered by Megaline
WP/GT/3924 PHOENIX O&M (C/11351)

## ஒரு நாளைக்கு 4 குவளை தேநீர் அருந்துபவர்களின் இதயம் பாதிக்கப்படுமாம்

ஒரு நாளைக்கு, நான்கு குவளை தேநீர் அருந்துபவர்களின் இதயம் பாதிக்கப்படுவதாக அமெரிக்க ஆய்வாளர்கள் அதிர்ச்சித் தகவல்கள் வெளியிட்டு உள்ளனர். இதுகுறித்து, கலிபோர்னியாவைச் சேர்ந்த ஆய்வாளர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:
உலகில் அதிகம் பேர், கோப்பி அருந்தும் பழக்கத்துக்கு அடிமையாகி உள்ளனர். கோப்பி அருந்தும் பழக்கம் அதிகரிப்பதால், உடல் சார்ந்த பிரச்சினைகள் அதிகம் ஏற்படுகிறது. ஒரு நாளைக்கு, நான்கு குவளை கோப்பி குடிக்கும் பழக்கம் உடைய, 40 ஆயிரம் பேரிடம் நடத்திய ஆய்வில், பல அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகி உள்ளன. அவர்களில், 50 சதவீதத்துக்கும் மேலானோரின் உடல் நிலை கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. அதிகம் கோப்பி குடிப்பவர்களின் இதயம் எளிதில் பலவீனம் அடைகிறது. 17 ஆண்டுகள் தொடர்ந்து நடத்திய ஆய்வில், 2,500 இற்கும் மேற்பட்டோர் தேநீர் குடிக்கும் பழக்கத்தால் உயிரிழந்து உள்ளனர். 55 வயதிற்கு உட்பட்டவர்களே இதில் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். தேநீர் அருந்தும் பழக்கம் உடைய இளைஞர்கள், உடல் அளவில் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். ஒரு வாரத்திற்கு, 28 குவளை கோப்பி அருந்து பவர்களின் இதயம் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. கோப்பி அருந்தும் பழக்கம் உடையவர்களில், 32 சதவீதம் பேர், இதய நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இதயத்தைப் பாதிக்கும் எந்தப் பொருளும், கோப்பியில் இருப்பதாக இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை

## தன்னம்பிக்கை இழக்காத கண்பார்வையற்ற வாலிபரின் சாதனை

அதிவேகமாக மோட்டார் சைக்கிளை ஓட்டி கண்பார்வையற்ற வாலிபர் சாதனை படைத்துள்ளார். ஸ்கொட்லாந்தின் எடின்பர்க்கை சேர்ந்த ஸ்டாரட்கன் (வயது 39) கண்பார்வையற்றவர். கடந்த 11 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட விபத்தில், தோள் பட்டை எலும்பு உட்பட முதுகில் 2 இடங்களிலும் எலும்பு நொறுங்கியது.
இதனால் அவரது உடலின் வலது புறத்தில் பக்கவாதம் ஏற்பட்டு உடல் ஊனமுற்றவர் ஆனார். இருப்பினும் தன்னம்பிக்கையை இழக்காத ஸ்டாரட்கன், மோட்டார் சைக்கிள் ஓட்டுவதில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்.
இவரது தந்தை ஜியோப், இவருக்கு முன்னால் மோட்டார் சைக்கிளில் சென்றபடி வழிகாட்டுவார். இன்டர்காம் மூலம் தந்தை கொடுக்கும் தகவலின் படி மோட்டார் சைக்கிளை நிறுத்து வார். இவ்வாறு தொடர்ந்து பயிற்சி பெற்ற இவர், சமீபத்தில் ஷன்பர்க் நகரில் மணிக்கு 167.1 மைல் வேகத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டி சாதனை படைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்களுக்கு போட்டியாக நீந்த களம் இறங்கிய குரங்குகள்

சுவிஸ் நாட்டில் மனிதர்களுக்கு போட்டியாக நீந்துவதற்கு சிம்பன்சி மற்றும் உரங்கொட்டான் குரங்குகளுக்குபயிற்சிகொடுத்து இருஆராய்ச்சியாளர்கள் சாதனை படைத்துள்ளனர்.

பொதுவாக குரங்கு இனமானது மிருகக்காட்சி சாலைகளில் மனிதர்களின் பார்வைக்காக அடைத்து வைக்கப்படுகின்றன.

ஆனால் இந்த வகை இனமும் மனிதர்களுக்கு இணையாக நீச்சல்பயிற்சியில் சிந்தித்து செயற்படும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து பென் பல்கழைக் கழகத்தின் பரிணாமம் மற்றும் தொற்றுநோய் ஆராய்ச்சியாளர் நிக்கோல்பெண்டர் (Nicole Bender) கூறுகையில், குரங்குகளுக்கு முதலில் இரண்டு மீற்றர் ஆழமான பகுதியில் கயிறு கட்டி நீச்சல் பயிற்சி அளிக்கப்பட்டது.

சில வாரங்களுக்கு பின்பு அவைகள் தானகவே மேற்பரப்பில் நீந்தத் தொடங்கிவிட்டன. தற்போது நீச்சல் மற்றும் டைவ் அடிப்பது போன்ற செயல்களில் மும்முரமாக சிம்பன்சி மற்றும் மனிதகுரங்குகள் ஈடுபட்டு வருகின்றன.

மேலும் குரங்குகள் நீச்சல் மற்றும் டைவ்விங் அடிப்பது குறித்து ஏற்கனவே குறிப்புகள் எடுக்கப்பட்ட போதும் அவை படமாக வெளியிடப்படவில்லை. தற்போது அமெரிக்காவின் மானிடவியல் ஆராய்ச்சி பதிப்பானது இந்த ஆராய்ச்சியைப் படமாக வெளியிட்டுள்ளது என நிக்கோல் பெண்டர் தெரிவித்துள்ளார்.








## ஆடுகளுக்கான ஓட்டப்போட்டி

ஆடுகளுக்கான வருடாந்த ஓட்டப்போட்டி ஸ்கொட்லாந்தின் மொவ்வட் நகரில் இடம்பெற்றுள்ளது. கோலாகலமாக இடம்பெற்ற இப்போட்டியில் பல உள்ளூர் இடையர்கள் பலரும் அவர்களது ஆடுகளைப் பந்தயத்தில் களமிறக்கினர். ஆடுகளின் முதுகில் அதனை ஒருவர் ஓட்டிச்செல்வது போல பொம்மைகளை இணைத்து ஓடுபாதையில் ஓடவிடப்பட்டன. இதன்போது வீதியின் இருபுறமும் நின்று பார்வையாளர்கள் அவற்றை உற்சாகப் படுத்தினர். இந்த ஆடுகளின் ஓட்டப்போட்டியில் இறுதிப் போட்டியில் வெற்றிபெற்ற வீ ஆர்ச்சீ என்ற ஆடு. ஆண்டின் வேகமாக ஓடும். ஆடாகத் தெரிவானது. ஆடுகளுக்கான ஓட்டப்பந்தயம் கடந்த வருடம் முதன் முறையாக நடைபெற்றது. இதனை பல்லாயிரக்கணக்கானோர் கண்டு மகிழ்ந்தனர். அதுபோலவே இம்முறையும் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இதற்குச் சிறந்த ஒத்துழைப்பு வழங்கிய உள்ளூர் இடையர்களுக்கு ஏற்பாட்டுக் குழுவினர் நன்றி தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Track your future success

Join us to meet 19 prestigious UK universities at St John's College Jaffna in September

- Aston University
- The university of Bath
- University of Bolton
- Buckingham University
- University of East Anglia
- The University of Edinburgh
- Keele University
- University of Kent
- University of Leeds
- University of Leicester
- Loughborough University
- The University of Manchester
- The University of Nottingham
- Queen Mary, University of London
- The University of Sheffield
- University of Southampton
- University of Surrey
- University of Warwick
- University of York

**Virtual Exhibition in Jaffna:**
**Date: Saturday 14 September 2013**
**Time: 9.00 a.m. to 11.00 a.m**
**Venue: St John's College, Main Street, Chundikuli, Jaffna**
**Admission: by prior appointments only**

A UK education offers unparalleled value to those wanting to build their careers or continue their personal development. It is an investment for life for students as well as those who seek to employ them.

There are lot of reasons why students consider UK as a study destination, some of those are:

- High academic standards maintained by the UK institutions
- International recognition of qualifications
- Overseas work opportunities after graduation
- Wide variety of courses and subject areas offered by UK institutions
- Better job opportunities for graduates with a UK qualification in their own countries
- UK's multicultural society makes you feel at home
- Research opportunities and scholarships offered by UK institutions

For more information and appointments, contact Education UK team on 4521521, 4521576 and 4521577.

www.educationuk.org/srilanka

# இன்சுலின் அளவை சீராகப்பேண இயற்கை வழிகள்

இன்சுலின் என்பது கணையத்தில் சுரக்கப்படும் ஒரு ஹோர்மோன். இந்த ஹோர்மோன்தான் உடலில் உள்ள சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்து கிறது. இந்த இன்சுலினானது குறைய ஆரம்பித்தால், இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு அதிகரித்து, நீரிழிவு நோயை ஏற்படுத்திவிடும். ஆகவே உடலை நீரிழிவு நோய் தாக்காமல் இருக்க வேண்டுமெனில், இன்சுலினின் அளவை சீராக பராமரிக்க வேண்டும். பொதுவாக இது எளிதான காரியம் அல்ல. இது மிகவும் கடினமானது. ஆனால் சரியான வாழ்க்கை முறை, உணவுகள் போன்றவற்றை மேற்கொண்டு வந்தால், நிச்சயம் இன்சுலினை சீராக வைத்துக் கொள்ளலாம்.

இன்சுலின் அளவை சீராக வைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய சில செயல் களைப் பார்ப்போம்.

### சரியான எடை

உடல் எடை அளவுக்கு அதிக மாக இருந்தால், இன்சுலின் உற்பத்தியில் குறைபாடு ஏற்படும். எனவே உடல் எடையை சரியாக பராமரிக்க வேண்டும். அதற்கு சரியான உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.



### சுறுசுறுப்பான நடை

தினமும் 30 நிமிடம் சுறுசுறுப்பான நடையை மேற்கொண்டால், இன்சுலின் சரியாக சுரக்கப்பட்டு, உடல் முழுவதும் சீராக செல்லும்.

### பூசணிக்காய்

பூசணிக்காய் இனிப்பான உணவுப் பொருளாக இருந்தாலும், இதில் கிளை சீமிக் சுட்டி குறை வாக உள்ளது. மேலும் பூசணிக்காயில் உள்ள ஒரு சில நொதியங்கள் இன்சுலின் சுரப்பை சீராக வைத்துக் கொள்ளும்.



### நார்ச்சத்துள்ள உணவுகள்

நார்ச்சத்து அதிகம் உள்ள உணவுகள் நீரி ழிவு நோயாளிகளுக்கு மிகவும்சிறந்தது. மேலும் இதனை சாப்பிட்டால், அடிக்கடி பசி ஏற்படாமல் இருப்பதோடு, உடலில் சர்க்கரையின் அளவு அதிகரிப்பதும் குறை யும். எனவே ப்ராக் கோலி, பசலைக்கீரை போன்ற உணவுகளை அதிகம் சேர்ப்பது நல் லது.



### வெண்டைக்காய்

இரவில் படுக்கும் போது வெண்டைக் காயை நீரில் நறுக்கி போட்டு, காலையில் எழுந்து அந்த நீரைப் பருகினால், இரத்தத் தில் உள்ள சர்க்கரை யின் அளவு குறைவ தோடு, இன்சுலின் குறைபாடும் நீங்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமியை நோக்கி வரும் சூரியப்புயலால் தொலைத்தொடர்பு பாதிக்கப்படலாம்

சூரியனில் இருந்து வெளிப்பட்ட 'சூரியப் புயல்' பூமியை நோக்கி வருகிறது எனவும், இதனால் பூமிக்கு நேரடி பாதிப்பு இல்லை என்றாலும்; தொலைத்தொடர்பு சாதனங்களுக்கு பாதிப்பு ஏற்படலாம் என்றும் நாசா ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சூரியப்புயல் நிகழ்வு பல ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஒரு நிகழ்வுதான். சூரியனின் மேற்புறத்தில் பல்வேறு வேதியியல் மாற்றங்களால், சூரியக் கதிர்கள் பெருமளவில் கொந்தளித்து காணப்படும். சூரிய காந்தப் புயல் மூன்று விதத்தில் நிகழும்.

முதலில் மின்காந்தத் தூண்டல் கதிர்வீச்சும், இரண்டாவதாக, புரோட்டன்கள் நிறைந்த அதிர்வலையால் கதிர்வீச்சும் மூன்றாவதாக, சூரியனின் கரோனா என்ற மேற்புறத்தில் இருந்து எழும் பிளாஸ்மா கதிர்வீச்சும் அடுத்தடுத்து பூமியை நோக்கி வரும். சூரியனில் இருந்து கடும் வெப்பம் வெளிப்பட்டு, பூமியை நோக்கி வருகிறது. இது வினாடிக்கு 570 மைல் என்ற வேகத்தில் வெளிவருகிறது. பூமியை வந்தடைவதற்கு ஒன்று முதல் மூன்று நாள்கள் ஆகும். இதனால் பூமிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. ஆனால் உலக நாடுகள் விண்வெளியில் அதிகளவிலான செயற்கைக்கோள்களை நிலை நிறுத்தியுள்ளன.








இது வினாடிக்கு 570 மைல் என்ற வேகத்தில் வெளிவருகிறது. பூமியை வந்தடைவதற்கு ஒன்று முதல் மூன்று நாள்கள் ஆகும். இதனால் பூமிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

இச்செயற்கைக்கோள்கள் மூலம் தான் தொழில்நுட்ப பயன்பாட்டை நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். பூமியில் இருந்து வெளிவரும் சூரியப்புயலால், செயற்கைக்கோள்கள் பாதிப்படையும். அபாயம் ஏற்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் சிறிய அளவிலான சூரியப்புயல் பூமியைத் தாக்கியுள்ளது. இதனால், எவ்வித பாதிப்பும் ஏற்பட்டதில்லை. ஆனால் 1989ம் ஆண்டு சூரியப்புயல் கனடாவைத் தாக்கியது. இது அங்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
25/08/2013

# குழந்தை இல்லாத பெண்களுக்கு ஆவாரை

திருமணமாகி பல ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லாத பெண்க ளுக்கு ஆவாரை பயன்படுகிறது. அதாவது, கருப்பட்டியுடன் ஆவாரைப் பூவைச் சேர்த்து உண்டு வந்தால், பெண்க ளுக்கு மலட்டுத் தன்மை நீங்கும். விரைவில் கர்ப்பம் உண்டாகும் வாய்ப்பு ஏற்படும். மேலும் ஆவாரைப் பூவை வாயில் அடக்கி வைத்திருக்க கண்ணில் ஏற்படும் படலம் தீரும். ஆவாரை பிஞ்சை அரைத்து வெந்நீரில் கலந்து உட்கொள்ள நீர்க்கட்டு குணமா கும். ஆவாரம்பட்டை, அத்திப்பட்டை, நாவல்பட்டை இவை மூன்றையும் சம அளவு பொடி செய்து தேனில் 5-10 நாள்கள் சாப்பிட வெள்ளை நோய், நீரிழிவு நீங்கும்.






# உலகின் மிக நீளமான கூந்தல் கொண்ட ஜோர்ஜியா பெண்

உலகில் எத்தனையோ சாதனையாளர்கள் குறித்து செய்திகள் வந்திருக்கக்கூடும். அனால், நீளத் தலைமுடி குறித்த சாதனையாளர் இந்தப் பெண் ஒருவராகத்தான் இருக்கமுடியும். இவரது சாதனையை முறியடிக்க வேறு எவரேனும் வருவார்களா என்பது சந்தேகத்திற்குரிய விட யம் ஆகும். ஜோர்ஜியா நாட்டின் அட்லாண்டா நகரில் தனது மகனுடனும், இரண்டாவது கணவருடனும் வசித்து வருபவர் ஆஷா மண் டேலா. 50 வயதாகும். இவர் கடந்த 25 வருடங்களாகத் தனது முடியைக் கத்தரிக்காமல் கவனமுடன் பாதுகாத்து வருகின்றார்.

2008ஆம் ஆண்டில் நீளமான கூந்தலுக்கான முதல் பெண்ணாக இவர் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றார். அடுத்த வருடம் இவரது ஒரு முடிக்கற்றையின் நீளம் 19 அடி,6 அங்குலமாக இருந்தது. இதனால், இவரே இவரது சாதனையை முறியடித்தவராக அறியப் பட்டார். அதற்கு அடுத்த வருடம் இதுபோல் பின்னப்பட்டிருக்கும் முடிக்கற்றைகள் மிக நீளமாக வளரும் தன்மை கொண்டிருப்பதால் கின்னஸ் புத்தகமே அந்த சாதனையைக் குறிப்பிடுவதை நிறுத்திவிட்டது.

சிறுசிறு பின்னல்களாக தனது முடியை அலங் கரித்துக் கொள்ளும் ஆஷா வெளியில் செல்லும் போது குழந்தைகளை சுமந்து செல்லுவது போன்ற குறுக்குத் துணியைத் தோளில் கட்டிக்கொண்டு அதில் தனது முடியை சுருளாக்கி வைத்துக் கொள்கின்றார். சென்ற வாரம் அளந்தபோது இவரது முடிக்கற்றையின் நீளம் 55அடி, 7 அங்குலமாக இருந்துள்ளது. 39 இறாத்தல் எடை கொண்ட இவரது முடி இவருக்கு ஏராளமான ரசிகைகளைப் பெற்றுத்தந் துள்ளது. இவரது முடி ஒன்பதாவது உலக அதிசயம் என்றும் இவரை நடமாடும் சரித்திரம் என்றும் இவரது ரசிகைகள் அழைக்கின்றனர்.

இரண்டு முறை மாரடைப்பு வந்தபோதும், புற்று நோயால் தாக்கப்பட்டு மருத்துவம் செய்து கொண்ட போதும் இவரது முடி கொட்டவில்லை. மருத்துவர்கள் இத்தனை நீளமான முடி சுகாதாரத்துக்குக் கெடுதல் என்று கூறியுள்ள போதிலும், இதனைக் கத்தரிப்பதில் ஆஷாவுக்கு விருப்பமில்லை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org